# அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் A+(CGPA:3.64) தகுதியும் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப் பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது




காரைக்குடி– 630003.

## தொலைநிலைக்கல்வி இயக்ககம்

## பி.ஏ வரலாறு

## மூன்றாம் பருவம்

10833

# ஐரோப்பிய வரலாறு கி.பி. 1789 முதல் 1945 வரை

Copy Right Reserved

For Private use only

**Author:**
**Dr. S. Rajavelu**
Adjunct Faculty
Department of History
Alagappa University
Karaikudi

**"The Copyright shall be vested with Alagappa University"**

**All rights reserved. No part of this publication which is material protected by this copyright notice may be reproduced or transmitted or utilized or stored in any form or by any means now known or hereinafter invented, electronic, digital or mechanical, including photocopying, scanning, recording or by any information storage or retrieval system, without prior written permission from the Alagappa University, Karaikudi, Tamil Nadu.**

**Reviewer:**
**Dr. AR. Saravanakumar**
Department of History Head i/c
Department of History
Alagappa University
Karaikudi

## SYLLABI-BOOK MAPPING TABLE

**ஐரோப்பிய வரலாறு கி.பி. 1789 முதல் 1945 வரை**

| | Syllabi | Mapping in Book |
|---|---|---|
| **அலகு -1** | நெப்போலியன் போனபர்ட் உள்நாட்டு நிர்வாகம்- போர்கள் - கண்டத்திட்டம் -தோல்வி - வியன்னா மாநாடு | 1-16 |
| **அலகு -2** | புனித உடன்படிக்கை - ஐரோப்பிய கூட்டமைப்பு – 1830 மற்றும் 1848 ஆம் ஆண்டுப் புரட்சிகள் – மூன்றாம் நெப்போலியன் சாதனைகள் - ஐரோப்பாவில் தேசிய இயக்கம். | 17-44 |
| **அலகு -3** | இத்தாலியின் ஐக்கியம் - ஜெர்மனியின் ஐக்கியம் - பிஸ்மார்க் - வரலாறு மற்றும் சாதனைகள் | 45-71 |
| **அலகு -4** | கிழக்குப்பிரச்சினை - கிரேக்க விடுதலைப்போர் | 72-78 |
| **அலகு -5** | துருக்கி - எகிப்தியப்போர் | 79-84 |
| **அலகு -6** | கிரிமியப்போர் - இர்'ய - துருக்கியப்போர் - இளம் இத்தாலியர் இயக்கம் | 85-97 |
| **அலகு -7** | பால்கன் போர்கள் - முதல் உலகப்போர் - காரணங்கள் - போக்கு - விளைவுகள் | 98-114 |
| **அலகு -8** | பாரிஸ் அமைதி மாநாடு – அமைதி உடன்படிக்கைகள் - உட்ரோ வில்சனின் 14 அம்சக் கோட்பாடுகள். | 115-124 |
| **அலகு -9** | 1917 ஆம் ஆண்டு இர்'யப்புரட்சி - காரணங்கள் - போக்கு - விளைவுகள் - லெனின் | 125-139 |
| **அலகு -10** | சர்வதேச சங்கம் - அமைப்பு – செயல்பாடு - சாதனைகள் - தோல்வி | 140-149 |
| **அலகு -11** | ஜெர்மனியில் நாசிக்கொள்கையின் எழுச்சி - இத்தாலியில் பாசிசத்தின் எழுச்சி – ரோம் - பெர்லின் டோக்கியோ அச்சு நாடுகள் | 150-174 |
| **அலகு -12** | இரண்டாம் உலகப்போர் | 175-180 |
| **அலகு -13** | காரணங்கள் - போக்கு - விளைவுகள் - அமைதி உடன்படிக்கைகள் | 181-191 |
| **அலகு -14** | ஐக்கிய நாடுகள் சபை – ஐ.நா.வின் அமைப்பு - சாதனைகள் - தோல்வி - சிறப்பு நிறுவனங்கள் | 192-204 |

## பொருளடக்கம்


**அலகு – 1 நெப்போலியன் சீர்திருத்தங்கள்** 1 - 16

1.0 அறிமுகம்

1.1 நோக்கங்கள்

1.2 நெப்போலியனின் இளமை வாழ்க்கை

1.3 பேரரசராக நெப்போலியன்

1.4 இரானுவ நடவடிக்கைகள்

1.4.1 ஹேம்போபோர்மியா உடன்படிக்கை -1797

1.4.2 இங்கிலாந்திற்கு எதிரான செயல்பாடுகள்

1.4.3 ஆஸ்திரியஇ இத்தாலிப் படையெடுப்பு

1.4.4 ஆமின்ஸ் அமைதி உடன்படிக்கை

1.5 நெப்போலியனின் சட்டத்தொகுப்பு

1.6 கண்டத் திட்டம்

1.7 நெப்போலியனின் படையெடுப்பு

1.8 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

1.9 சுருக்கவுரை

1.10 முக்கிய கருத்துப்படிமங்கள்

1.11 தன்மதிப்பீட்டு வினாக்கள்

1.12 மேலும் படிக்க

**அலகு 2 ஐரோப்பிய கூட்டமைப்பு** 17-44

2.0 அறிமுகம்

2.1 நோக்கங்கள்

2.2 புனித உடன்பாடு

2.3 ஐரோப்பிய கூட்டமைப்பு

2.3.1 ஏ-லா-சபேல் கூட்டம்

2.3.2 ஐரோப்பியக் கூட்டமைப்பின் தோல்விக்கான காரணங்கள்

2.4 1830 ஆம் ஆண்டுப் புரட்சி

2.4.1 புரட்சிக்கான காரணங்கள்

2.4.2 புரட்சியின் விளைவுகள்

2.5 1848 ஆம் ஆண்டுப் புரட்சி

2.5.1 புரட்சியின் போக்கு

2.5.2 புரட்சியின் விளைவுகள்

2.6 மூன்றாம் நெப்போலியன்

2.6.1 மூன்றாம் நெப்போலியன் வாழ்க்கைக் குறிப்புகள்

2.6.2 குடியரசுத் தலைவராக நெப்போலியன்

2.6.3 உள்நாட்டுக்கொள்கை

2.6.4 வெளிநாட்டுக் கொள்கை

2.7 ஐரோப்பாவில் தேசிய இயக்கம்

2.8 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

2.9 சுருக்கம்

2.10 முக்கிய கருத்துப்படிமங்கள்

2.11 தன்மதிப்பீட்டு வினாக்கள்

2.12 மேலும் படிக்க

**அலகு -3 இத்தாலிஇ ஜெர்மனி ஐக்கியங்கள்** **45-71**
3.0 அறிமுகம்
3.1 நோக்கங்கள்
3.2 இத்தாலியின் ஐக்கியம்
3.2.1 ரிசார்ஜிமென்டோ
3.3 மாசினி
3.4 ஜெர்மனியின் ஐக்கியம்
3.4.1 கிரிமியப் போர்
3.4.2 ஆஸ்திரியாவுடன் போர்
3.4.3 நேப்பிள்ஸ்இ சிசிலிஇ மற்றும் போப்பின் அரசுகள் இணைப்பு
3.4.5 வெனிஷியாவை இணைத்தல்
3.4.6. ரோம் வெற்றியும் - ஐக்கியத்தின் நிறைவும்
3.5. ஜெர்மனியின் ஐக்கியம்
3.5.1 ஜெர்மனியின் ஐக்கியத்திற்கு வழிவகுத்த சூழ்நிலைகள்
3.5.2 ஜெர்மானிய இணைவு வெற்றி பெற பிஸ்மார்க் தொடுத்த 3 போர்கள்
3.5.3 பிராஸ்பர்ட் உடன்படிக்கை
3.6 பிஸ்மார்க்
3.6.1 பிஸ்மார்க்கின் வாழ்க்கைக்குறிப்பு
3.6.2 பிஸ்மார்க் கொள்கை
3.6.3 பிஸ்மார்க்கும் ஜெர்மானியின் ஐக்கியமும்
3.6.4 அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்கள்
3.6.5 பிஸ்மார்க்கும் சமதர்மக்கொள்கையும்
3.7 பேரரசர்களின் உடன்படிக்கை
3.8 பிஸ்மார்க்கின் வீழ்ச்சி
3.8.1 மதிப்பீடு
3.9 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்
3.10 சுருக்கவுரை
3.11 முக்கிய வார்த்தைகள்
3.12 தன்மதிப்பீட்டு வினாக்கள்
3.13 மேலும் படிக்க

**அலகு 4 கிழக்குப் பிரச்சினை** **72-78**
4.0 அறிமுகம்
4.1 நோக்கங்கள்
4.2 கிழக்குப் பிரச்சினைக்கான காரணங்கள்
4.3 கிரேக்க விடுதலைப்போர்
4.3.1 கிரேக்க விடுதலைப் புரட்சிக்கான காரணங்கள்
4.4 ஏட்ரியாநோபிள் உடன்பாடு
4.5 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்
4.6 சுருக்கம்
4.7 முக்கிய கருத்துப்படிமங்கள்
4.8 தன்மதிப்பீட்டு வினாக்கள்
4.9 மேலும் படிக்க

**அலகு 5 துருக்கி - எகிப்தியப் போர்** **79-84**
5.0 முன்னுரை
5.1 நோக்கங்கள்
5.2 மெகமத் அலி விவகாரம்
5.3 உன்கையர்ஸ்கெலசி உடண்பாடிக்கை
5.4 இலண்டன் உடன்படிக்கை
5.5 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்
5.6 சுருக்கவுரை
5.7 முக்கிய கருத்துப்படிமங்கள்
5.8 தன்மதிப்பீட்டு வினாக்கள்
5.9 மேலும் படிக்க

**அலகு 6 கிரிமியப் போர்** **85-97**
6.0 அறிமுகம்
6.1 நோக்கங்கள்
6.2 கிருமியப் போர்
6.3 ரஷ்ய-துருக்கியப் போர்
6.4 1878ஆம் ஆண்டு சான்ஸடெபானோ உடன்பாடு
6.5 1878 ஆம் ஆண்டு பெர்லின் ஏற்பாடு (மாநாடு)
6.6 இளம் துருக்கியர் இயக்கம்
6.7 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்
6.8 சுருக்கவுரை
6.9 முக்கிய வார்த்தைகள்
6.10 தன்மதிப்பீட்டு வினாக்கள்
6.11 மேலும் படிக்க

**அலகு -7 பால்கன் போர்கள்இ முதலாம் உலகப்போர்** **98-114**
7.0 அறிமுகம்
7.1 நோக்கங்கள்
7.2 முதல் பால்கன் போர் )1912-13)
7.2.1 இலண்டன் உடன்பாடு )1913)
7.3 இரண்டாம் பால்கன் போர் )1913)
7.3.1 புகாரெஸ்ட் உடன்பாடு )1913)
7.3.2 பால்கன் போரின் விளைவுகள்
7.4 முதல் உலகப்போர்
7.4.1 இரகசிய உடன்படிக்கைகள்
7.4.2 இராணுவக் கொள்கை
7.4.3 ஜெர்மனியின் எழுச்சி
7.4.5 குறுகிய தேசப்பற்று
7.4.6 ஏகாதிபத்தியம்
7.4.7 பத்திரிகைகள்
7.4.8 மொராக்கோ நெருக்கடி
7.4.9 ரஷ்யா போரிலிருந்து விலகுதல்
7.4.10 போரின் விளைவுகள்
7.5 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான

விடைகள்
7.6 சுருக்கவுரை
7.7 முக்கிய வார்த்தைகள்
7.8 தன்மதிப்பீட்டு வினாக்கள்
7.9 மேலும் படிக்க

**அலகு 8 பாரிஸ் உடண்படிக்கை** **115-124**

8.0 முன்னுரை
8.1 நோக்கங்கள்
8.2 வெர்சைல்ஸ் உடன்படிக்கை
8.3 அமைதி உடண்படிக்கைகள்
8.3.1 ஜெயிண்ட் ஜெர்மன் உடன்படிக்கை (1919)
8.3.2 நியூலி உடன்படிக்கை (1919)
8.3.3 டிரயனான் உடன்படிக்கை 1920
8.3.4 செவ்ரஸ் உடன்படிக்கை 1920
8.3.5 லாசன்னே உடன்பாடு (1923)
8.4 உட்ரோ வில்சனின் 14 அம்சக்கொள்கை
8.5 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்
8.6 சுருக்கம்
8.7 தன்மதிப்பீட்டு வினாக்கள்
8.8 கருத்துப்படிமங்கள்
8.9 மேலும் படிக்க

**அலகு 9 1917ஆம் அண்டு ரஷ்யப்புரட்சி** **125-139**

9.0 முன்னுரை
9.1 நோக்கங்கள்
9.2 புரட்சிக்கான காரணங்கள்
9.2.1 ரோமனோ மரபினரின் வல்லாட்சி
9.3 பெப்ரவரிப் புரட்சியின் போக்குகள்
9.4 அக்டோபர் புரட்சி
9.4.1 லெனினின் வருகை
9.5 ரஷ்யப்புரட்சியின் விளைவுகள்
9.6 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்
9.7 சுருக்கம்
9.8 முக்கிய கருத்துப்படிமங்கள்
9.9 தன்மதிப்பீட்டு வினாக்கள்
9.10 மேலும் படிக்க

**அலகு 10 சர்வதேச சங்கம்** **140-149**

10.0 அறிமுகம்
10.1 நோக்கங்கள்
10.2 பன்னாட்டுக் கழகம்
10.2.1 சங்கத்தின் தோற்றம்
10.2.2 பன்னாட்டுக் கழகம் நோக்கங்கள்
10.2.3 பன்னாட்டுக் கழகம் அமைப்பு
10.3 பன்னாட்டக் கழக நீதிமன்றம்

10.4 மண்டேட் முறை
10.5 பன்னாட்டுக் கழகத்தின் சாதனைகள்
10.6 பன்னாட்டுக் கழகத்தின் தோல்வி
10.7 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்
10.8 சுருக்கவுரை
10.9 முக்கிய வார்த்தைகள்
10.10 தன்மதிப்பீட்டு வினாக்கள்
10.11 மேலும் படிக்க

**அலகு -11 ஜெர்மனியில் நாசிசத்தின் தோற்றம்** 150-174

11.0 அறிமுகம்
11.1 நோக்கங்கள்
11.2 நாசிசத்தின் தோற்றம்
11.3 ஹிட்லரின் வாழ்க்கைக் குறிப்பு
11.3.1 நாசிசம் தோன்றுவதற்கான காரணங்கள்
11.3.2 ஹிட்லரின் கொள்கைகள்
11.3.3 ஹிட்லரின் நிர்வாகம்
11.3.4 இராணுவம்
11.3.5 வெளிநாட்டுக்கொள்கை
11.3.6 வெளிநாட்டுக் கொள்கையின் நோக்கங்கள்
11.4 ரோம் பெர்லின் டோக்கியோ அச்சு ஒப்பந்தம்
11.5 இத்தாலியில் பாசிசம்
11.5.1 இத்தாலியில் பாசிசம் தோன்றுவதற்கான காரணங்கள்
11.5.2 பாஸிசத்தின் கொள்கைகள்
11.5.3 முஸோலியின் உள்நாட்டுக் கொள்கை
11.5.4 முஸோலினியின் வரலாற்று சுருக்கம்
11.5.5 முஸோலினியும் போப்பும்
11.5.6 முஸோலினியின் வெளிநாட்டுக் கொள்கை
11.5.7 இரண்டாம் உலகப்போரும் முஸோலினியின் வீழ்ச்சியும்
11.6 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்
11.7 சுருக்கவுரை
11.8 முக்கிய வார்த்தைகள்
11.9 தன்மதிப்பீட்டு வினாக்கள்
11.10 மேலும் படிக்க

**அலகு 12 இரண்டாம் உலகப் போர் (1939 - 1945)** 175-180

12.0 முன்னுரை
12.1 நோக்கங்கள்
12.2 இரண்டாம் உலகப்போரிற்கான தன்மைகள்
12.3 அரசியல் கோட்பாடுகள்
12.4 வார்சே உடன்படிக்கை
12.5 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்
12.7 சுருக்கவுரை

12.8 முக்கிய வார்த்தைகள்
12.9 தன்மதிப்பீட்டு வினாக்கள்
12.10 மேலும் படிக்க

**அலகு 13 இரண்டாம் உலகப்போர்: காரணங்களும் போக்கும்** விளைவுகளும் **181-191**
13.0 அறிமுகம்
13.1 நோக்கங்கள்
13.2 இரண்டாம் உலகப்போருக்கான காரணங்கள்
13.3 போரின் போக்குகள்
13.3.1 அமெரிக்காவும் போரும்
13.3.2 கிழக்குப் பகுதியில் போர்
13.3.4 ஹிட்லரின் முடிவு
13.3.5 முஸோலினி முடிவு
13.3.6 போட்ஸ்டேம் மாநாடு
13.3.7 ஜப்பானின் தோல்வியும் போரின் முடிவும்
13.4 இரண்டாம் உலகப் போரின் விளைவுகள்
13.5 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்
13.6 **சுருக்க**வுரை
13.7 **முக்கிய** வார்த்தைகள்
13.8 தன்மதிப்பீட்டு வினாக்கள்
13.9 மேலும் படிக்க

**அலகு -14 ஐக்கிய நாடுகள் சபை** **192-204**
14.0 அறிமுகம்
14.1 நோக்கங்கள்
14.2 ஐக்கியநாடுகள் சபையின் தோற்றம்
14.2.1 ஐ.நா. சபையின் நோக்கங்கள்
14.3 ஐக்கிய நாடுகள் அவை அமைப்பு முறை
14.3.1 பொதுச்சபை
14.3.2 பாதுகாப்பு சபை
14.3.3 பொருளாதார மற்றும் சமூக சபை
14.3.4 பொறுப்பாண்மைக்குழு
14.3.5 பன்னாட்டு நீதிமன்றம்
14.3.6 தலைமைச் செயலகம்
14.4 ஐக்கிய நாடுகள் அவையின் சாதனைகள்
14.5 ஐ.நா.சபையின் சிறப்பு நிறுவனங்கள்
14.5.1 பன்னாட்டுத் தொழிலாளர் கழகம்
14.5.2 உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம்
14.5.3 உலக சுகாதார நிறுவனம்
14.5.4 உலக வானிலை ஆராயச்சி நிறுவனம்
14.5.5 ஐ.நா. கல்வி அறிவியல் மற்றும் பண்பாட்டுக் கழகம்
14.5.6 ஐ.நா. சபையின் பன்னாட்டு குழந்தைகள் நெருக்கடி கால நிதியம்
14.5.7 பன்னாட்டு பொருளாதார நிதியம்
14.6 ஐ.நாவின் தோல்வி

14.7 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

14.8 சுருக்கவுரை

14.9 முக்கிய வார்த்தைகள்

14.10 தன்மதிப்பீட்டு வினாக்கள்

14.11 மேலும் படிக்க

# முன்னுரை

இந்திய வரலாற்றில் கி.பி. 1707 முதல் 1947 வரையிலான இடைப்பட்ட காலம் மிகவும் முக்கியமானதாகும்.

பின்னர் வர்த்தகம் செய்த ஐரோப்பியர்களின் வருகை, இந்தியாவை நீண்ட காலமாக ஆட்சி செய்த ஆங்கிலேயர்களின் படையெடுப்புக்கு வழிவகுத்தது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், இந்தியா தனது பொருளாதார வளத்திற்காக பெரிதும் சுரண்டப்பட்டது.
எனினும், அவர்களின் ஆட்சி இந்தியாவில் சமூகம், கல்வி, வணிகம் மற்றும் நீதித்துறை சார்ந்த துறைகள் போன்ற பல்வேறு துறைகளில் சீர்திருதங்களுக்கு வழிவகுத்தது. இரண்டாம் உலகப்போரும் உலக யுத்தமும் மக்கள் மத்தியில் தேசியம் என்ற உணர்வை தூண்டியதில் முக்கிய பங்கு வகித்தது.

நாட்டின் விடுதலைக்காக பல்வேறு சுதந்திரப் போராளிகள் போராடினார்கள். இறுதியாக, 1947 ஆகஸ்டு 15 அன்று இந்தியா சுதந்திரம் பெற்றது. 1950 ஜனவரி 26 ஆம் நாள் இந்திய அரசியலமைப்புச் சட்டம் அமல்படுத்தப்பட்டபோது குடியரசாக மாறியது.

இந்திய வரலாறு (கி.பி. 1707 முதல் 1947 வரை) என்னும் இப்புத்தகம் தொலைதூர கற்றல் மாணவரை மனதில் கொண்டு எழுதப்பட்டுள்ளது. இது ஒரு தெளிவான, குழப்பமற்ற மொழியை பயன்படுத்தி ஒரு பயனர் - நட்பு வடிவத்தில் வழங்கப்படுகின்றது. ஒவ்வொரு அலகும் ஒரு முன்னுரையுடன் தொடங்குகிறது, அதன் பிறகு நோக்கங்களின் வெளிப்பாட்டை உணர்த்துகிறது. இதில் விரிவான உள்ளடக்கம் பின்னர் ஒரு எளிய மற்றும் கட்டமைக்கப்பட்ட முறையில் வழங்கப்படும், உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக, மாணவரின் புரிதலை சோதிக்க உதவுகிறது. சுருக்கம், முக்கிய கருத்துப்படிமங்கள், தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள் அடங்கிய தொகுத்துரைத்தல் ஒவ்வொரு அலகின் இறுதியிலும் வழங்கப்படுகிறது.

# தொகுதி I நெப்போலியன் போனபார்ட் சீர்திருத்தங்கள் மூன்றாம் நெப்போலியன் போனபார்ட் முடிய

# அலகு 1 நெப்போலியன் சீர்திருத்தங்கள்

**கட்டமைப்பு**

**1.0 அறிமுகம்**

1.1 நோக்கங்கள்

1.2 நெப்போலியனின் இளமை வாழ்க்கை

1.3 பேரரசராக நெப்போலியன்

1.4 இராணுவ நடவடிக்கைகள்

1.4.1 ஹேம்போபோர்மியா உடன்படிக்கை -1797

1.4.2 இங்கிலாந்திற்கு எதிரான செயல்பாடுகள்

1.4.3 ஆஸ்திரிய, இத்தாலிப் படையெடுப்பு

1.4.4 ஆமின்ஸ் அமைதி உடன்படிக்கை

1.5 நெப்போலியனின் சட்டத்தொகுப்பு

1.6 கண்டத் திட்டம்

1.7 நெப்போலியனின் படையெடுப்பு

1.8 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

1.9 சுருக்கவுரை

1.10 முக்கிய கருத்துப்படிமங்கள்

1.11 தன்மதிப்பீட்டு வினாக்கள்

1.12 மேலும் படிக்க

## 1.0 அறிமுகம்

உலகில் தோன்றிய மாபெரும் வெற்றியாளர்களுள் ஒருவராக நெப்போலியன் போனபார்ட் கருதப்படுகிறார். அவரது பெயரும் அவரது காலமும் பிரான்சு நாட்டில் மட்டுமன்றி உலக வரலாற்றிலும் உன்னத இடத்தைப் பெற்றுள்ளது. அவர் அதீத சக்தி உள்ள மனிதராகவும் தன்னம்பிக்கையும் அச்சமற்றமராகவும் விவேகம் நிறைந்தவராகவும் விளங்கினார். தன்னுடைய படைவீரர் ஒவ்வொருவர் மீதும் தனிப்பட்ட வகையில் மிகுந்த அக்கறை

கொண்டு விளங்கியதுடன் தன் படைப்பிரிவின் பெயர்களையும் அவற்றில் பணியாற்றிய படைவீரர்களின் பெயர்களையும் நினைவில் வைத்திருக்கும் ஆற்றல் மிக்கவராக விளங்கினார்.

### 1.1 நோக்கங்கள்

இந்த அலகை படித்து முடித்த பின்பு உங்களால்

- ✓ நெப்போலியன் படையெடுப்பு நடவடிக்கைகளை விவாதிக்க முடியும்
- ✓ நெப்போலியனின் நிரிவாகத்திறனை விளக்கமுடியும்
- ✓ நெப்போலியனின் தோல்விக்கான காரணங்களை வரையறுக்க இயலும்
- ✓ வியன்னா மாநாட்டு ஏற்பாடுகளை விவரிக்க இயலும்

## 1.2 நெப்போலியனின் இளமை வாழ்க்கை

நெப்போலியன் 1769 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 15 ஆம் நாள் கார்சிகா தீவில் அயாக்கியோ எனும் இடத்தில் பிறந்தார். பிரான்சு கார்சிகா தீவினை இத்தாலியின் ஜெனோவாவிடமிருந்து விலைக்கு வாங்கியிருந்தது. எனவே நெப்போலியன் பிரன்சு நாட்டின் குடிமகனாக விளங்கினார். தனது 17 ஆவது வயதில் பிரெஞ்சு இராணுவத்தில் சேர்ந்தார். 1789 ஆம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சி ஏற்பட்ட காலத்தில் நெப்போலியன் 20 வயதுடையவராகவே விளங்கினார். இராணுவத்தில் படிப்படியாக உயர்ந்த அவருக்கு பிரெஞ்சு புரட்சியாளர்களும் தேசியக்குழுவினரின் இனைந்து ஐரோப்பா முழுவதும் புரட்சிக் கருத்துக்களை பரப்பும்படி அறிவுறுத்தியமைக்கு எதிராக ஐரோப்பிய நாடுகள் ஒன்றினைந்து பிரான்சைத் தாக்க முனைந்தன. இதனை நெப்போலியன் தனது படையெடுப்பால் வென்றதுடன் 1795 அக்டோபர் திங்களில் அரசிற்கு எதிராக கிளர்ச்சி செய்த வெண்டிமாரை ஒடுக்கி புகழ் பெற்றார். இந்த வெற்றியின் பயனாக நெப்போலியன் இராணுவத்தில் உயர் பதவி வழங்கப்பட்டது. 1796 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 9 ஆம் நாள் ஜோசப்பின் என்ற விதவையை மனந்தார்.

## 1.3 பேரரசராக நெப்போலியன்

இத்தாலியப் படையெடுப்பிற்குப் பின் நெப்போலியன் வலிமை மிக்கவராக கருதப்பட்டார். 1802 இல் நெப்போலியன் தன்னை நிரந்தர கான்செலாக அறிவித்தார். 1804 இல் செனட் நெப்போலியனை பேரரசராக ஆக்கியது. பதவியேற்பு விழாவிற்கு போப் 7இம் பயஸும் வந்திருந்தார். இனால் மரபிற்கு புரம்பாக நெப்போலியன் போப்பை புறக்கணித்து தானாக முடிசூட்டிக்கொண்டார். எனவே நெப்போலியன் தானாக முடிசூட்டிக் கொண்டார் என்று சொல்லப்படுகிறது. அவர் ஒருமுறை பிரான்சின்

மணிமகுடம் தரையில் கிடந்ததைக் கண்டு தன் வாளால் அதனை எடுத்தேன் என்று குறிப்பிட்டுள்ளார். நெப்போலியன் 1813 ஆம் ஆண்டு லிப்சிக் போரில் தோற்கடிக்கப்படும் வரை பேரரசராக விளங்கினார். எல்பா தீவில் இருந்து தப்பி வந்த நெப்போலியன் 1815இல் இறுதியாக வாட்டர் லூப் போரில் தோல்வியடையும் வரை மேலும் 100 நாட்களுக்குப் பிரான்சின் பேரரசராகத் திகழ்ந்தார்.

### (அ) டிராபால்கர் போர் -1805

நெப்போலியன் பிரான்சிற்கு ஒரு வலிமை மிக்க இரானுவம் வேண்டும் என்பதை உணர்ந்திருந்தார். இங்கிலாந்தின் மீது படையெடுப்பதற்கு முன்பாக வீரர்களும் படைத்தளவாடங்களும் செல்வதற்கான பல கப்பல்கள் தேவை என்பதை நன்கறிந்தார். இரானுவ வீரர்கள் பெருமளவில் அவரது படைப்பிரிவுகளில் இருந்தாலும் கடலைக் கடப்பதற்கான போதிய கப்பல்கள் இல்லாதது பிரான்சிற்கு இடையூறாக இருந்தது. மேலும் கப்பல்படையும் அவருக்கு சாதகமாக அமையவில்லை. ஆனால் இங்கிலாந்து எவற்றையும் சமாளிக்கும் நிலையில் தனது படைகளை முன்னெச்சரிக்கையுடன் வைத்திருந்தது. டிரபால்கர் என்ற இடத்தில் ஏற்பட்ட போரில் ஆங்கிலப்படைத்தளபதி நெல்சன் பிரபு தனது உயிரை இழந்தாலும் ஆங்கிலப் படைகள் பிரெஞ்சுக் கடற்படையை அழித்ததுடன் நெப்போலியன் இப்போரில் பெரும் தோல்வியை சந்திக்க நேர்ந்தது. ஸ்பெயினின் கடற்படையும் இப்போரில் தோலிவியைத்தழுவியது. கடல் ராணி என அழைக்கப்பட்ட இங்கிலாந்து இப்போரில் தனது கடல் மேலாண்மையை நிலைநாட்டியது.

### (ஆ) ஆஸ்தரிலிட்ஸ் போர்-1805

கடற்போரில் ட்ராபால்கரில் தோல்விகண்ட நெப்போலியன் 1805 இல் ஆஸ்தரிலிட்ஸ் ஏனும் இடத்தில் ர’யாவையும் ஆஸ்திரியாவையும் வென்று தரைப்போரில் பிரான்சின் மேலாண்மையை நிலை நாட்டினார். 1806 இல் ஆஸ்திரியாவிற்கும் பிரான்சிற்குமிடையே பிரெஸ்பர்க் உடன்பாடு ஏற்பட்டது. நெப்போலியன் தனது சகோதரர் ஜோசப் போனபார்ட்டை நேப்பிள்ஸின் மன்னர் ஆக்கினார். அவரது மற்றொரு சகோதரர் லூயி நெப்போலியன் ஹாலந்தின் மன்னராக்கப்பட்டார். 1806 இல் புனித ரோமானியப் பேரரசை அகற்றினார். அதற்குப் பதிலாக அப்பகுதியில் ரைன் இணைப்பு அரசை (நேசக்கூட்டமைப்பு) ஏற்படுத்தினார்.

1806 இல் நெப்போலியன் பிர’யாவை ஜீனா மற்றும் ஆரெஸ்பாப்ட் ஆகிய இடங்களில் தோல்வியுறச் செய்தார். 1806 இல் அவரது வெளியுறவுக் கொள்கையில் ஒரு புதிய மாற்றத்தைத் தந்த பெர்லின் ஆணையை வெளியிட்டார். அதுவே வரலாற்றில் மிகவும் பிரபலமாகப் பேசப்படும் கண்டத்திட்டம் ஆகும்.

**(இ) டில்சிட் உடன்படிக்கை 1807**

அடுத்து நெப்போலியன் தன் கவனத்தை ர்'யா மீது திருப்பினார். ரஸ்யாவும் பிர்'யாவும் நட்பு நாடுகளாக இருந்தன. இயலு என்ற இடத்தில் நடந்த போரில் நெப்போலியன் ர்'யாவை தொடர்ந்து தாக்கி இறுதியாக பிரிட்லெண்ட் என்னும் இடத்தில் 1807 ஆம் ஆண்டு தோற்கடித்தார். இதன் விளைவாக அரசர் சீசர் பிரான்சுடன் டில்சிட் உடன்படிக்கையை மேற்கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டார். உடன்படிக்கையின் விளைவாக ஆஸ்திரியா இங்கிலாந்தின் பொருள்கள் இறக்குமதி செய்வது தவிர்க்கப்பட்டது. மேலும் ர்'யாவும் பிரான்சும் ஐரோப்பாவை கூறு போட்டுக் கொண்டன.

டில்சிட் உடன்படிக்கையின் விளைவாக 1806 ஆம் ஆண்டுவாக்கில் நெப்போலியன் புகழின் உச்சயில் இருந்தார். பிரான்சின் பேரரசராக விளங்கியதுடன் இத்தாலியின் மன்னராகவும் அவர் விளங்கினார். ஜெர்மினியில் அவரது ஆதிக்கம் மேலோங்கி இருந்தது.சுவிட்சர்லாந்தில் அவரது விருப்பமே சட்டமாக விளங்கியது. அவரது மூன்று உடன்பிறப்புகளும் இத்தருனத்தில் மன்னராக ஆக்கப்பட்டனர். எனவே இக்காலகட்டத்தில் பிரான்சை சுற்றி நட்பு நாடுகளே அமைந்திருந்தன. அவை அவரது உறவினர்களால் ஆட்சி செய்யப்பட்டன. ஐரோப்பாவின் திறமை மிக்க பேரரசராக அவர் விளங்கினார். அவரால் ஆஸ்திரியாவும் பிர்'யாவும் பழிவாங்கப்பட்ட நிலையில் இருந்தன ர்'யா அவருடன் நட்புறவைக் கொண்டது. இங்கிலாந்து மட்டுமே அவரது முதன்மை எதிரியாக விளங்கியது

## 1.4 இராணுவ நடவடிக்கைகள்

நெப்போலியன் 1796 ஏப்ரல் முதல் 1797 ஏப்ரல் முடிய இத்தாலியப் படையெடுப்பில் ஈடுபட்டு இறுதியில் வெற்றி கண்டார். இவ்வெற்றியே இவரது புகழுக்குக் காரணமாக விளங்கின. இவர் ஆஸ்திரியா சார்டினியா ஆகிய நாடுகளின் படைகளை தனது சிறிய படையின் உதவியுடன் எதிர்த்து வெற்றி பெற்றார். இந்நாடுகளின் படைகள் நெப்போலியனின் படைகளை விட இருமடங்கு உடையது. சார்டினியாவின் வெற்றிக்குப்பின் நீஸ் மற்றும் சவாய் ஆகிய பகுதிகளைக் கொடுக்க சார்டினியா முன் வந்தது. சார்டினியா வெற்றியைத் தொடர்ந்து நெப்போலியன் தனது கவனத்தை ஆஸ்திரியர்கள் மீது செலுத்தினார். அவர் லோடி பாலத்தைக் கடந்து மிலான் நகரை தனது படைகளுடன் முற்றுகை இட்டார். முற்றுகையில் ஆஸ்திரியர்கள் விட்டு லம்பார்டிப் பகுதியை விட்டுத் துரத்தப்பட்டனர்.

(அ) மண்துவா மற்றும் வெனிஸ் பகுதிகளைக் கைப்பற்றல்

நெப்போலியன் மந்துவாவைக் கைப்பற்றி வெற்றி வாகை சூடினார். ஆஸ்திரியர்கள் இப்பகுதியிலிருந்தும் பின்வாங்கினர். மண்துவாவை எவ்வாறேனும் மீட்கும் முயற்சியில் பலமுறை ஈடுபட்ட ஆஸ்திரியா இறுதியில் தோல்வியையே தழுவியதுடன் படைகளும் பெருத்த சேதத்தை அடைந்தது. வெனீஸ் நகரம் கைப்பற்றப்பட்டது.

(ஆ) போப்பாண்டவருக்குரிய பகுதிகளைக் கைப்பற்றல்

இத்தாலியப் படையெடுப்பின் அங்கமாக போப்பாண்டவருக்கு உட்பட்ட பிரதேசங்களையும் கைப்பற்றும் முயற்சியில் நெப்போலியன் ஈடுபட்டார். இதன் விளைவாக போப் ஆண்டவர் நெப்போலியனுடன் தொலெண்டினோ என்னும் இடத்தில் ஓர் உடண்படிக்கையை மேற்கொண்டார். இதன் விளைவாக இத்தாலி புதிய குடியாட்சி ஒன்றை பிரான்சின் பாதுகாப்புடன் ஏற்படுத்திக் கொண்டதுடன் நடுநிலையுடன் செயல்படுவதாகவும் உறுதிமொழி அளித்தது.

### 1.4.1 ஹேம்போபோர்மியா உடன்படிக்கை -1797

நெப்போலியனின் படைகள் ஆல்ப்ஸ் மலையைக் கடந்து வியன்னாவிற்கு அருகே சென்று தாக்குதலுக்கு முற்பட்டது. இந்த திடீர் தாக்குதலை எதிர்ப்பர்க்காத ஆஸ்திரியப் பேரரசர் இரண்டாம் பிரான்சிஸ் அச்சமடைந்ததுடன் 1797 இல் ஹேம்போபோர்மியோ உடன்படிக்கையை நெப்போலியனுடன் செய்து கொண்டார். இந்த உடன்படிக்கையின் ப்டி பிரான்ஸிற்கு ஆஸ்திரியா பெல்ஜியத்தையும் அயோனியத் தீவுகளையும் தாரை வார்த்தது. இதன் விளைவாக பிரான்ஸ் தனது ஆதிக்கம் ரைன் வரை நீட்டிக்கப்பட்டது. அத்துடன் நெப்போலியண் மற்றும் இத்தாலியால் உருவாக்கப்பட்ட ஆல்பைன் குடியரசுவையும் லிகுரியன் குடியரசுவையும் ஆஸ்திரியா ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்கு உள்ளானது. இதற்கு ஈடாக பிரான்சு இத்தாலியின் வெனிசியாவுடன் இஸ்திரியா, டால்மாதியா ஆகிய பகுதிகளை நிர்வாகிக்கும் உரிமையை ஆஸ்திரியாவிற்கு அளித்தது.

ஹேம்போபோர்மியா உடன்படிக்கையின் வழியாக ஐரோப்பிய நாடுகளின் எல்லைகள் மாற்றியமைக்க வேண்டிய நிலைக்கு உள்ளானது. பிரான்ஸ் ஐரோப்பாவின் மிகப் பெரும் சக்தியாக உருமானது. பிரான்சிற்கு எதிரான ஐரோப்பிய நாடுகள் எவையும் இல்லை என்ற நிலை இதன் மூலம் உருவானதுடன் நெப்போலியனுக்கும் பெரும் புகழை ஏற்படுத்திக்

கொடுத்தது. பிரான்ஸில் அனைவராலும் பேசப்படும் மனிதராக அவர் உயர்ந்தார்.

### 1.4.2 இங்கிலாந்திற்கு எதிரான செயல்பாடுகள்

ஆஸ்திரியா நாடு அடங்கி விட்டபின் பிரான்ஸின் அடுத்த குறிக்கோளாக இங்கிலாந்து விளங்கியது. பிரான்ஸின் நிருவாக அமைப்பு நெப்போலியனின் புகழை சிறிதும் விரும்பாத நிலையில் அவரை பழிவாங்கும் முகமாக இங்கிலாந்திற்கு எதிராகப் போர் தொடுக்கமாறு பனித்தது.இங்கிலாந்தின் மீது நேரிடையாக நில வழியாக நெப்போலியனால் படையெடுக்க இயலாத நிலையில் நெப்போலியன் தமக்கு வலிமை வாய்ந்த கடற்படை வழங்குமாறு வேண்டினார். அது கிடைக்காத நிலையில் எகிப்தின் மீது படையெடுக்க அனுமதியைப் பெற்றார். கிழக்கில் எகிப்தை வெல்வதின் மூலம் இங்கிலாந்தின் ஆதிக்கத்தையும் வனிக உறவையும் ஓரளவு கட்டுப்படுத்த இயலும் என நெப்போலியன் கருதினார். இவரது கருத்திற்கு பிரான்ஸ் இயக்குநரகமும் செவி மடுத்து அனுமதியை வழங்கியது.

(அ) எகிப்து படையெடுப்பு

நெப்போலியன் டூலன் நகரை விட்டு கடல் மார்க்கமாக 1798 இல் எகிப்தின் மீது படையெடுத்தார். மத்தியத் தரைக்கடல் பகுதியிலிருந்த ஆங்கிலேயர்களின் கடல்படையை திசை திருப்பும் நோக்கத்தில் இப்படையெடுப்பை அவர் நிகழ்த்தினார். எகிப்திலிருந்து இந்தியாவிற்கும் வந்து இந்தியாவில் ஆங்கிலேயர் ஆதிக்கத்தை மாராத்தியர் மற்றும் திப்புசுல்தான் ஆகியோர் உதவியுடன் வெளியேற்ற அவர் நினைத்தார். மேலும் துருக்கியர் மீதும் படையெடுக்கும் எண்ணத்தில் அவர் இருந்தார்.

(ஆ) பிரமீடுப் போர்கள்

மேற்குறித்த திட்டத்துடன் நெப்போலியன் எகிப்தினை மே திங்கள் 1798 இல் வந்தடைந்தார். வழியில் மால்டாவை வென்றார். அதே ஆண்டு நைல் நதியின் சமவெளியில் பிரமிடுகள் போரில் வெற்றி பெற்றார். துரதிஸ்டவசமாக அவ்வாண்டிலேயே நைல் நதிப்போரில் நெப்போலியனை ஆங்கிலக் கடற்படைத் தளபதி நெல்சன் தோற்கடித்தார். இத்தோல்வியால் பிரான்சின் கப்பற்படை அழிக்கப்பட்டது. நெப்போலியனின் இத்தோல்வி பிரான்சிற்கு சரிவை ஏற்படுத்தியது. எகிப்திய மக்களும் நெப்போலியனுக்கு எதிராக்க் கலகத்தில் ஈடுபட்டனர். இப்போரில் நெப்போலியன் தனித்து விடப்பட்ட நிலையில் சாதுர்யமாக எகிப்திலிருந்து தாயகத்திற்கு 1799 இல் தப்பி ஓடினார். எனினும் எகிப்தியப் படையெடுப்பை பிரான்சு நெப்போலியனின் வெற்றியாகக் கருதியது.

(,) இயக்குநரகத்தின் தோல்வி

பிரான்சில் நெப்போலியன் இல்லாத காலங்களில் இயக்குநரக்த்தின் மீது மக்களுக்கு அதிருப்தி ஏற்பட்டது. அரசு நிருவாகத்தை டைரக்டரி ஏனும்

நிர்வாக அமைப்பினால் திறமையாக நடத்த இயலவில்லை. பிரெஞ்சுப்புரட்சியின் மகவு என்று கருதப்பட்ட நெப்போலியன் அந்த சூழலை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டதுடன் ஆட்சிமாற்றித்திற்குத் தக்க நேரத்தை தெரிவு செய்து இரகசியமாகாத் தன்னை தயார் ஆயத்தப்படுத்திக் கொண்டார். நாட்டின் அரசியல் நிலையை கூர்ந்து கவனித்து வந்த அவர் எவ்வித ஆர்ப்பாட்டமும் இன்றி எக்குழுக்களுக்கும் இடம் அளிக்காமல் 1799 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 19 ஆம் நாள் டைரக்டரி எனப்படும் இயக்குநரகத்தை பதிவியிலிருந்து இறக்கி அந்நாட்டின் முதல் சான்சலாக தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டார். இந்த பதவியில் அவர் 1799 முதல் 1804 வரை இருந்தார்.

(ஈ) கான்சலேட்

இதனை அடுத்து உடனடியாக ஒரு புதிய அரசியல் அமைப்பு ஊருவாக்கப்பட்டது. புதிய அரசியல் சட்டத்தின்படி 3 உறுப்பினர்களையுடைய கான்சலேட் (அலுவலகம்) எனும் புதிய நிர்வாக அமைப்பும் உருவாக்கப்பட்டது. இவர்களை செனட் தெரிவு செய்யும். அல்லது 10 ஆண்டுகள் உறுப்பினர்களாக இருப்பவர் இப்பதவியில் தெரிவு செய்யப்படுவர். இவர்களுள் முதல் கான்சலுக்கு நாட்டில் அமைதி நிலவவும் பிற நாடுகளின் மீது போர் தொடுக்கவும் உரிமை வழங்கப்பட்டது. அத்துடன் அமைச்சர்களையும் தூதுவர்களையும் பிற நிருவாக இரானுவ உயர் அலுவலர்களையும் நியமிக்கும் உரிமை பெற்றவரக அவர் விளங்கினார். மற்ற இரண்டு கான்சேலேட்கள் பெயரளவிற்கு மட்டுமே அதிகாரம் படைத்தவர்களாக விளங்கினர்.நாட்டில் எல்லாவித அதிகாரங்களையும் மக்களின் தலைவராகவும் அரசியல் அமைப்பின் தலைவராகவும் முதன்மை கான்சலேட்டே விளங்கினார்.

நெப்போலியன் முதல் கான்சலேட்டாக பணிபுரியக் கிடைத்த வாய்ப்பினை நன்கு பயன்படுத்திக்கொண்டு பிற இரண்டு கான்சல்களான சீயஸ் மற்றும் டுகோ ஆகியோரை பதவியிலிரந்து நீக்கிவிட்டு தன் நிலையை மேலும் வலுவாக்கிக்கொண்டார். 1800 இல் அவரே பிரான்சின் முதன்மை நிர்வாகியாக உருவானார். அக்காலகட்டத்தில் தான் அவர், நிர்வாகத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்தியதோடு அல்லாமல் பிரான்சில் பல சீர்திருத்தங்களையும் மேற்கொண்டார்.

### 1.4.3 ஆஸ்திரிய இத்தாலியப் படையெடுப்பு

நெப்போலியன் முதன்மை கான்சலாக ஆன் பின் வெளிநாட்டுக்கொள்கையில் மிகவும் தீவிரம் காட்டினார். தனக்கு எதிராக உருவாக்கப்பட்ட இரண்டாம் கூட்டணிக்கு ஏதிராக செயல்படத் தொடங்கினார். ர்'ய மன்னர் முதலாம் ஆலெக்சாண்டரை தம் பக்கம் சேர்த்துக்கொண்டார். எனவே இக்கூட்டணியிலிருந்து ர்'யா விலகியது. கூட்டனியில் ஆஸ்திரியா மற்றும் இங்கிலாந்து மட்டுமே எஞ்சி இருந்தது.

1800 இல் தன் முக்கிய ஏதிரியான ஆஸ்திரியாவை மாரங்கோ மற்றும் ஹோகன்லின்டன் ஆகிய இடங்களில் நடந்த போர்களில் தோற்கடித்தார். இப்போர்களில் தளபதியாக மோரியோ என்பவரை நெப்போலியன் அனுப்பினார். 1801இல் ஆஸ்திரியாவுடன் செய்து கொள்ளப்பட்ட லூனவில்லி உடன்பாட்டின் மூலம் முன்பு செய்து கொண்ட கேம்போபோர்மியா ஊடன்படிக்கையை மீண்டும் உறுதி செய்தார். இத்தாலியின் முக்கிய அரசுகளில் ஓன்றான நேப்பிள்ஸ் பிரான்சுடன் அமைதி உடன்பாடு செய்து கொண்டது.

### 1.4.4 ஆமின்ஸ் அமைதி உடன்படிக்கை

இங்கிலாந்து மட்டுமே நெப்போலியனுக்கு தனித்து நிற்கவேண்டியதாயிற்று. நிண்ட நாட்கள் இழுபறியுடன் யார் பக்கமும் எவ்வித வெற்றியோ தோல்வியோ இல்லாமல் இரு நாடுகளும் 1802இம் ஆண்டு ஆமின்ஸ் ஆமைதி ஊடன்பாட்டை செய்து கொண்டன. இங்கிலாந்து தான் வென்ற பகுதிகள் அனைத்தையும் பிரான்சிற்கும் அதன் நட்பு நாடுகளுக்கும் திருப்பித் தருவதாக உறுதியளித்தது. ஆனால் இலங்கையையும் மேற்கு இந்தியத் தீவுகளில் ஓன்றான டிரினிடாட்டியும் தருவதற்கு மறுத்துவிடடது. பிரான்சு நேப்பிள்ஸ் மற்றும் போப்பாண்டவரின் ஆட்சிக்குட்பட்ட இத்தாலியப் பகுதியிலிருந்து வெளியேறுவதற்கு ஒத்துக்கொண்டது.

## 1.5 நெப்போலியனின் நிருவாகத் திறமை

1802 இல் நெப்போலியன் தன்னை நிரந்தர கான்செலாக அறிவித்தார். 1804 இல் செனட் நெப்போலியனை பேரரசராக ஆக்கியது. பதவியேற்பு விழாவிற்கு போப் 7 ஆம் பயஸும் வந்திருந்தார். ஆனால் மரபிற்குப் புரம்பாக நெப்போலியன் போப்பை புறக்கணித்து தானாக முடிசூட்டிக்கொண்டார். எனவே நெப்போலியன் தானாக முடிசூட்டுக்கொண்டார் என்று சொல்லப்படுகிறது. அவர் பிரான்சின் மணிமகுடம் தரையில் கிடந்ததைக் கண்டு தன் வாளால் அதை எடுத்ததாகக் குறிப்பிட்டுள்ளார். பிரான்சின் நிருவாகக் குழுக்களை தொடர்ந்து செயல்படும்படி கூறினார். அவர்கள் ஆண்டின் 15 நாட்கள் மட்டுமே கூடி வரிவிதிப்பு முறைகளை மதிப்பீட்டனர். சிறிய பகுதிகளின் மேயர்களை அரசின் ஒப்புதல் பெற்ற ஆளுநர்கள் (ீசநகநஉவள) தேர்வுசெய்தனர். இம்மேயர்கள் அப்பகுதி வாழ் மக்களின் பொருளாதாரவாழ்வினைக் கவனித்து வந்தது. அதே போன்று பெரிய பகுதிகளின் மேயர்களை மத்திய அரசாங்கமே நியமித்தது.

நெப்போலியன் பிரான்சின் தலைமைச் செயலகத்தை மேம்பாடு அடையச் செய்தார். மராட் என்பவரின் கீழ் இருந்த மாநில அமைச்சகத்தின் கீழ் தலைமைச் செயலகம் செயல்பட்டது. இதன் வழியாக அமைச்சரவையை நெப்போலியனால் எளிதாகக் கண்காணிக்க முடிந்தது.நெப்போலியன் 15

ஆண்டுக்காலம் பிரான்சின் ஆட்சியாளராக இருந்தார். ஆவரது நிர்வாகச் சீர்திருத்தங்கள் அடிப்படையில் பிரான்சின் வரலாற்றில் முக்கியமான ஓன்றாக விளங்கியது. அவரது சீர்திருத்தங்கள் வரலாற்றில் அவருக்கு அழியாத இடத்தை ஈட்டித் தந்தன.

நெப்போலியனின் நிர்வாகத்தின் முக்கிய அம்சம் நாட்டின் அதிகாரத்தை ஒருமுகப்படுத்தியதாகும். அதிகாரங்கள் அனைத்தும் மைய அரசிடம் குவிக்கப்பட்டன. 1800 இல் நிர்வாகம் முழுவதும் பாரிஸ், (மைய) அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ்கொண்டுவரப்பட்டன. சட்டம் இயற்றும் அதிகாரம், செயல்படுத்தும் அதிகாரம், நீதிபரிபாலனம் செய்யும் அதிகாரம் அனைத்தும் மன்னரிடமே இருந்தன. ஆளுநர்களின் கீழ் இருந்த மாவட்டங்களும் மன்னரின் கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டன. ஆளுநர்கள் (பிரிபெக்ட்ஸ்) துணை ஆளுநர்கள் (சப் பிரிபெக்ட்ஸ்) அரசருக்குப் பதில் கூறக் கடமைப்பட்டவர்கள்.

(அ) நிதி

நெப்போலியன் முதல் கான்சலாகப் பணியாற்றியபொழுதே நிதித்துறையில் பல சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டார். நிதித் துறையில் இருந்த குழுப்பங்களை அகற்றி நாட்டின் நிதிநிலைமையைச் சீர்செய்தார். நிதித்துறையில் இருந்த பல குறைபாடுகள் ஆகற்றப்பட்டன. மிகவும் கவனமாக வரிவசூல் செய்யப்பட்டது. நாட்டின் வருவாய் அதனால் பெருகிற்று. ஊழல் செய்த அலுவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார்கள். அரசாங்கச் செலவைக் குறைத்துடன் நெப்போலியனின் தன்னுடைய செலவுகளையும் வெகுவாக குறைத்தார். பிரான்சின் நிதி நிலையைப் பெருக்க தோற்கடிக்கப்பட்ட நாடுகள் பிரெஞ்சு ராணுவத்திற்கான செலவுத் தொகையை தருமாறு கட்டாயப்படுத்தப்பட்டன. நாட்டின் நிதிநிலை உயர்விற்கு இதுவும் ஒரு காரனமாக இருந்தது. 1800 இல் ”பிரான்சு வங்கியை” இவர் நிறுவினார். உலகின் மிகச்சிறந்த வங்கி நிறுவனங்களுள் ஒன்றாக இவ்வங்கி விளங்கியது.

(ஆ) கல்வி

நெப்போலியனின் கல்விச் சீர்திருத்தங்கள் சிறப்புடையன. கல்வித்துறை அரசின் கட்டுப்பாட்டின் கீழ்கொண்டுவரப்பட்டது. தொடக்க, இடைநிலை, உயர்நிலை மற்றும் சிறப்புப் பள்ளிகள பல நாட்டில் திறக்கப்பட்டன. சிறப்பு பள்ளிகளில் தொழில், நிர்வாகம் மற்றும் இராணுவ சேவை தொடர்பான பாடங்கள் நடத்தப்பட்டன. அனைத்து முக்கியமான நகரங்களிலும் உயர்நிலைப் பள்ளிகள் திறக்கப்பட்டன. நன்கு கற்றவர்கள் ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டனர். நாடு முழுவதும் ஓரே மாதிரியான கல்வியை அளிக்கும் நோக்கில் பிரெஞ்சுப் பல்கலைக்கழகம் ஓன்று நிறுவப்பட்டது. பல்வேறு நிலைகளில் பணிபுரிய வேண்டிய

ஆசிரியர்களுக்கு நகரில் பயிற்சிப் பள்ளி ஒன்றும் நிறுவப்பட்டது. கிறித்துவ சமயத்தின் அறக்கருத்துக்களைக் கல்வியின் அடிப்படையாகக் கொள்ளுமாறு அனைத்துப் பள்ளிகளும் கேட்டுக்கொள்ளப்படடன. கல்விநிறுவனங்கள் அனைத்தும் அரசருக்கு விசுவாசமாக இருக்கவேண்டுமென்று வலியுறுத்தப்பட்டன. பெண்கல்வி அவசியத்தை நெப்போலியன் வலியுறுத்தினார். எனவே பெண்கல்வி ஊக்குவிக்கப்பட்டது. பெண்களுக்கு கணிதம் வரலாறு புவியியல் மற்றும் மொழிப்பாடங்கள் கற்பிக்கப்பட்டன. நெப்போலியன் அரசியல் அறிவியல் கற்பிப்பதை விரும்பவில்லை. பெண்களுக்குத் தையல் பின்னல் காலுறை தயாரித்தல் நடனம் வீட்டு நிர்வாகம் தாவரவியல் இயற்பியல் வேதியியல் ஆகியன கல்விக்கூடங்களில் கற்பிக்கப்பட்டன.

(இ) நன்மதிப்பு பட்டங்கள்

பிரெஞ்சுப் புரட்சியின் விளைவாக நாட்டில் வழங்கப்பட்ட பல மதிப்புறு பட்டங்கள் நீக்கப்பட்டிருந்தன. அரசரின் விசுவாசத்தைப் பெருக்கவும் சிறந்த பணிபுரிந்தவர்களை ஊக்கப்படுத்தும் வகையிலும் நெப்போலியன் 1802 ஆம் ஆண்டு மதிப்புமிகு படையணி என்ற பட்டத்தை தகுதி பெற்றவர்களுக்கு வழங்க ஆவன செய்தார். இதன் மூலம் நிருவாகத்திலும் இராணுவத்திலும் சமயத்திலும் திறமையாக உழைத்தவர்களுக்கும் மேம்பட்டவர்களுக்கும் இந்த நன்மதிப்பு பட்டங்கள் வழங்கப்பட்டன.

(ஈ) பொதுப்பணித்துறை

பொதுப்பணித்துறை நெப்போலியனின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்த துறையாக விளங்கியது. பல பொதுப்பணிகள் நாடு முழுவதும் நிறைவேற்றப்பட்டன. அப்பணிகளை மேற்கொள்ள போர்கைதிகளைப் பயன்படுத்தியதால் பெரும் அளவில் நிதியை செலவு செய்வது குறைக்கப்பட்டது. நெப்போலியன் பிரான்சில் 229க்கும் மேற்பட்ட சாலைகளை அமைத்தார். அவை இராணுவப் போக்குவரத்திற்குப் பெரிதும் பயன்பட்டன. நாட்டில் பெருமளவில் தகவல் தொடர்பை விரிவுபடுத்தினார். நாட்டின் தலைநகர் பாரிஸ், நேப்பில்ஸ், மிலான், ரோம் போன்ற பல ஐரோப்பிய நகரங்களுடன் இவை இணைக்கப்பட்டன. புதிய பாலங்கள் பல கட்டடப்பட்டன. கால்வாய்கள் மற்றும் போக்குவரத்துக் கால்வாய்கள் பல உருவாக்கப்பட்டன. முக்கியமான துறைமுகங்கள் விரிவுபடுத்தப்பட்டு வர்த்தக மற்றும் இராணுவ நோக்கங்களுக்காக அரண்களுடன் அவை பாதுகாக்கப்பட்டன.இவற்றின் மூலம் மக்களுக்கு வேலை வாய்ப்பு பெருகியதுடன் வாணிகமும் வேளான்மையும் பெருகின.

(உ) தொழில்

நாட்டின் பொருளாதார வளத்திற்கு நெப்போலியன் நடவடிக்கைகளை மேற்கொண்டார். நெப்போலியனின் கண்டத்திட்டம் நாட்டின் பொருளாதார

நிலையை அழித்தது என்பது உண்மையெனினும் நாட்டின் தொழில் துறையை மேம்படுத்தப் அவர் பெரும் முயற்சிகளை மேற்கொண்டார்.உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் தொழிலதிபர்களுக்குக் கடன் வழங்கப்பட்டது.

(ஊ) கலை

பல்வேறு நடவடிக்கைகளுக்கு இடையிலும் நெப்போலியன் கவின்கலைகளைக்கும் ஊக்கமளித்தார். கட்டிடக்கலை, சிற்பக்கலை ஓவியக்கலை ஆகியவை நெப்போலியனின் ஆதரவைப் பெற்றன. அரசு மாளிகைகள் பெரிதாக்கப்பட்டு அழகுபடுத்தப்பட்டன. பாரிஸ் நகரம் கவின்மிகு நகரமாக உருவாக்கப்பட்டது. நெப்போலியனின் வெற்றிகளைக் கொண்டாடும் வகையில் பாரிஸ் நகரில் வெற்றிவளைவு ஒன்றும் கட்டப்பட்டது. இத்தாலி போன்ற வெல்லப்பட்ட நாடுகளில் இருந்து பல கலைப்பொருள்களும் படைப்புகளும் நெப்போலியனால் பிரான்சிற்குக்கொண்டு வந்து பாதுகாக்கப்பட்டது.

## 1.6 நெப்போலியனின் சட்டத்தொகுப்பு

சட்டத்துறையில் மேற்கொண்ட சீர்திருத்தங்களுக்காக நெப்போலியன் வரலாற்றில் என்றும் நினைவுகொள்ளப்படுகிறார். பிரான்சு நாட்டின் சட்டத்தைத் தொகுத்து அளித்தமை அவரது சீர்த்திருத்தங்களுள் மிகவும் சிறப்பானது எனலாம். தற்காலப் பிரான்சின் பொதுச்சட்டத்திற்கு நெப்போலியனின் சட்டங்கள் அடிப்படையாகத் திகழ்கின்றன என்பதை அறியும் பொழுது அவரது சட்டத்துறைச் சீர்திருத்தங்களின் முக்கியத்துவம் தெரிய வருகிறது. பிரான்சிற்கு ஒரு பொதுச்சட்டமும் மற்றும் சிறந்த நீதி முறையை நல்கிய பெருமையும் நெப்போலியனையே சேரும்.

சட்டத்துறை சீர்திருத்தப்பணி 1800 இல் இருந்து 1810 வரை நடைபெற்றது. நால்வர் கொண்ட சட்ட நிபுணர்களின் குழு ஒன்று அமைக்கப்படடது. இவர்களின் வழி சட்டங்கள் இயற்றப்பட்டு அவை ஐந்து தொகுப்புகளாக ஊருவாக்கப்பட்டன. அவை

- ✓ எரியல் (சிவில்) சட்டத்தொகுப்பு
- ✓ எரியல் செயல்முறை சட்டத்தொகுப்பு
- ✓ குற்றவியல் செயல்முறை சட்டத் தொகுப்பு
- ✓ தண்டனைச் சட்டத் தொகுப்பு
- ✓ வணிகவியல் சட்டத் தொகுப்பு

ஏன்பவையாகும். பிரான்சில் மட்டுமின்றி நெப்போலியனால் வெல்லப்பட்ட நாடுகளிலும் நெப்போலியன் சட்டத்தொகுப்பு செயல்படுத்தப்பட்டது. நெப்போலியனின் பிரஞ்சுச் சட்டங்கள் உலகத்திலேயே மிகவும் போற்றுதற்குரியதாகவும் அறிவு சார்ந்தவையாகவும் கருதப்படுகின்றன. 1808

ஆம் ஆண்டு குற்றவியல் செயல்முறை சட்டத் தொகுப்பும் தண்டனைச் சட்ட்த்தொகுப்பு 1810 ஆம் ஆண்டும் வெளியிடப்பட்டது. உலகின் மிகச் சிறந்த சட்டத் தொகுப்புகளை அளித்தமையால் நெப்போலியன் இரண்டாம் ஜஸ்டினியன் எனவும் வழங்கப்படுகின்றார்.

## 1.7 கண்டத் திட்டம்

எப்படி இருப்பினும் அவரால் இங்கிலாந்தை வெல்ல இயலவில்லை. 1805 இல் நடைபெற்ற ட்ரபால்கர் போரில் எவ்வாறெனும் இங்கிலாந்தை தோற்கடிக்க நினைத்த அவரால் தோல்வியையே சந்திக்க நேர்ந்தது. எனவே அவர் முதலில் கடைக்காரர்களின் நாடாக அவரால் கருதப்பட்ட இங்கிலாந்தைப் பட்டினிபோட்டு பணியவைக்கத் தீர்மானித்தார். இந்நோக்குடன் அவர் கண்டத்திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

(அ) பெர்லின் ஆணை -1806

1806 இல் பிர'யா ஆஸ்திரிய ஆகிய நாடுகளின் மீது அவர் கொண்ட வெற்றியை அடுத்து பெர்லின் ஆணையை வெளியிட்டு. அவ்வாணையின் மூலம் இங்கிலாந்தின் வணிகக்கப்பல்களுக்கு எதிராக ஐரோப்பியத் துறைமுகங்களை மூடுமாறு கட்டளையிட்டார். மேலும் ஐரோப்பிய நாடுகள் இங்கிலாந்துடன் வியாபாரம் செய்யக்கூடாது என்றும் எச்சரித்தார்.

(ஆ) வார்சா(1807) மிலான் (1807) பாண்டைன்பிளு (1810) ஆணைகள்

பெர்லின் ஆணையை அடுத்து கண்டத்திட்டத்தை மேலும் வலியுறுத்தும் நோக்கில் வார்சா (1807) மிலான் (1807) பாண்டைன்பிளு (1810) ஆகிய ஆணைகளையும் பிறப்பித்தார். ர'யா கண்டத்திட்டத்தை ஏற்றுக்கொண்டது. பிர'யா, வெஸ்ட்பேலியா உட்பட பெரும் நிலப்பகுதியை இழந்தது. நெப்போலியனின் சகோதரர் ஜெரோம் வெஸ்ட்பேலியாவின் மன்னர் ஆக்கப்பட்டார். நெப்போலியனுக்கு எதிராக அமைக்கப்பட்ட மூன்றாவது கூட்டணி முடிவுக்கு வந்தது. இக்காலகட்டத்திலும் இங்கிலாந்தை மட்டுமே நெப்போலியனால் வெல்ல இயலவில்லை. இங்கிலாந்து கண்டத்திட்டத்தை எதிர்க்க முடிவு செய்தது. நெப்போலியனின் கண்டத்திட்டத்திற்கு ஏதிராக 1807 இல் அமைச்சரவை ஆணைகளை வெளியிட்டது. அவ்வாணைகள் மூலம், பிரான்சுடன் வியாபாரத்தில் ஈடுபடும் நாடுகளின் கப்பல்களை இங்கிலாந்து கைப்பற்றும் என்று அந்நாடு அறிவித்தது.

கண்டத்திட்டம் ஐரோப்பாவின் பல்வேறு நாட்டு மக்களுக்கும் ஓரு பெரும் தொல்லையாக இருந்தது. அது ஐக்கிய அமெரிக்காவின் வர்த்தகம் மற்றும்ம வணிகத்தையும் கூடப்பாதித்தது. உலக நாடுகள், பிரிட்டி' பொருட்கள் இல்லாமல் தம் வாழ்க்கையை நடத்த இயலாது எனும் நிலை உருவாயிற்று. ஆனால் உலகின் மிகப்பெரும் குடியேற்ற வல்லரசாகத்

திகழ்ந்த இங்கிலாந்து தன் பிரச்சனைகளைத் தானாகவே தீர்த்துக்கொண்டது. சுருங்கச்சொல்லின் கண்டத் திட்டம் நெப்போலியனுக்கு முழுத்தோல்வியாகவே அமைந்தது எனலாம்.

(இ) கண்டத்திட்டத்தின் விளைவுகள்

கண்டத்திட்டத்தின் விளைவாக எதிர்மறையாக இங்கிலாந்து வணிகத்தில் பெரிதும் இலாபம் கண்டது. முதலில் போர்ச்சுகல், நெப்போலியனின் கண்டத்திட்டத்தைப் புறக்கணித்தது. இது தீபகற்பப்போரில் நெப்போலியனை ஈடுபடுத்தியது. நெப்போலியன் போர்ச்சுகல்லை எளிதில் வென்றார். அடுத்து ஐபீரியத் தீபகற்பத்தைச் சேர்ந்த மற்றொரு நாடான ஸ்பெயினை வென்று, அந்நாட்டு மன்னரை முடிதுறக்குமாறு பணித்தார். நெப்போலியனின் சகோதரர் ஜோசப்போனபார்ட் ஸ்பெயின் மன்னராக்கப்பட்டார். இவ்வாறாக ஐபீரியத் தீபகற்பம் (ஸ்பெயின் மற்றும் போர்ச்சுகல்) பிரான்சின் கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டுவரப்பட்டன. ஆனால், அந்நாடுகளின் மக்கள் நெப்போலியனின் செயல்களைக் கண்டு கடுஞ்சினமுற்று அவருக்கு ஏதிராகக் கிளர்ந்தெழுந்தனர்.

அத்தருணத்தில் கிரேட்பிரிட்டன் நெப்போலியனுக்கு எதிராக ஐபீரியத் தீபகற்பத்தில் தீவிரமாகச் செயல்படுவது எனும் முடிவுக்கு வந்தது. வெல்லிங்டன் என்று அறியப்படும் ஆர்தர் வெல்லஸ்லியின் தலைமையில் ஒரு படையை நெப்போலியனுக்கு எதிராக ஐபீரியத் தீபகற்பத்திற்கு அனுப்பியது. அவர் அங்கே 1809 ஆம் ஆண்டு முதல் 1814 வரை போரிட்டார். பிரான்சிடமிருந்து போர்ச்சுகல்லை அவர் விடுவித்தார். பின் ஸ்பெயின் நாட்டினுள் நுழைந்த அவரது படை பிரெஞ்சுப் படைகளைப் பல இடங்களில் தொடர்ந்து வென்றது. நெப்போலியன் ஸ்பெயின் மீது ஏடுத்த படையெடுப்புக்கள் அவரது அரசியல் வாழ்வை அழித்த ஸ்பெயின் புண்ணாகக் கருதப்படுகிறது.

## 1.8 நெப்போலியனின் படையெடுப்பு

(அ) நெப்போலியனும் ஆஸ்திரியாவும்

ஐபீரியத் தீப கற்பத்தில் நெப்போலியனுக்கு ஏற்பட்ட தோல்வியானது ஆவருக்கு ஏதிராக செயல்பட ஆஸ்திரியாவிற்கு ஏக்கம் தந்தது. 1809 இல் ஆஸ்திரியர்கள் நெப்போலியனுக்கு ஏதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். ஆனால் ஆஸ்திரியா வாக்ரா ஏனும் இடத்தில் தோல்வியுற்றது. ஆஸ்திரியப்பேரரசர் பிரான்சிஸ் 1810இல் நெப்போலியனுடன் ஓர் உடன்பாடு செய்து கொண்டார். நெப்போலியன் ஆஸ்திரிய இளவரசி மேரிலூயியை மணந்தார்.

(ஆ) நெப்போலியனின் ர'யப்படையெடுப்பு (1812)

போர்ச்சுகல், ஸ்பெயின், ஆஸ்திரியா ஆகிய நாடுகளைப் போல ர'யாவும் நெப்போலியனின் கண்டத்திட்டத்திற்கப் பணிய மறுத்தது. பல்வேறு காரணங்களுக்காக ர'ய மன்னர் முதலாம் அலக்ஸாண்டர் நெப்போலியனுக்கு எதிராகச் செயல்பட்டார். நெப்போலியன் 6 இலட்சம் போர்வீரர்களைக் கொண்ட ஒரு மாபெரும் படையுடன் 1812 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் ர'யாவின் மீது படையெடுத்தார். நெப்போலியனை ஏதிர்த்துப்போரிடுவதை ர'யர்கள் தவிர்த்து வந்தார்கள். ர'யப்படை எடுப்பு நெப்போலியனின் அழிவிற்கு ஆடிகோலியது. நெப்போலியன் முதன் முறையாக தரைப்போரில் பெரும் அழிவை சந்திக்கவேண்டியிருந்தார். போராடினோ எனும் இடத்தில் நடைபெற்ற போரில் இருதரப்பினரும் பேரிழப்பை அனுபவித்தனர். நெப்போலியன் தலைநகர் மாஸ்கோவை அடைந்தார். இனால் முன்பாகவே ர'யர்கள் தலைநகரைவிட்டு வெளியேறியிருந்ர். ஈர'யமன்னர் முதலாம் ஆலெக்ஸாண்டர் ஊடன்பாட்டை நிராகரித்தார். பெரும் துன்பத்திற்கு இளான நெப்போலியன் தாய்நாடு திரும்பத் திட்டமிட்டார். தாய்நாடு திரும்பும் வழியில் ஈர'யர்களால் ஆவரது படைகள் தாக்கப்பபட்டன. ஆவரது போர்வீரர்களில் 5000 போர் மாண்டனர். ஏஞ்சிய 40,000 வீரர்களுடன் அவர் பிரான்சை நோக்கி விரைந்தார். இர'யப்படையெடுப்பு நெப்போலியனின் வீழ்ச்சியின் தொடக்கம் ஆகும்.

(இ) லீப்சிக்போர் (1813)

நெப்போலியன் இர'யாவிலிருந்து பின்வாங்கியதையடுத்து ஜெர்மானிய அரசுகள் அவருக்கு எதிராகத் திரண்டன. 1813ல் இங்கிலாந்தின் வெளியுறவு அமைச்சர் காசிலரேயின் முயற்சியினால் 4வது கூட்டணி உருவாயிற்கு. இங்கிலாந்தின் தலைமையில் பிர'யா, ர'யா, ஆஸ்திரியா ஆகியவை அணி திரண்டன. நெப்போலியன் 1813இம் இண்டு அக்டோபரில் லீப்சிக் (ஜெர்மனி) போர்களத்தில் தோற்கடிக்கப்பட்டார். இப்போர் நாடுகளின் போர் என்றும் அழைக்கப்படுகிறது. நெப்போலியன் பிரான்சிற்கு விரட்டப்பட்டார். அவர் தலைநகர் பாரிசை நோக்கி விரைந்தார். அவரது ஏதிரிகள் அவரைச் சுற்றி வளைத்தனர். 1814ஈல் அவர் முடிதுறக்குமாறு கட்டாயப்படுத்தப்பட்டார். செனட் மன்றம் அவரைப் பதவியில் இருந்து நீக்கியது. நெப்போலியன் அவரது பகைவர்களிடம் சரண் அடைந்தார். அவர் எல்பாக்தீவிற்கு நாடுகடத்தப்பட்டு சிறைவைக்கப்பட்டார். புரட்சியின் பொழுது சிரச்சேதம் செய்யப்பட்ட 16ம் லூயியின் சகோதரரான 18ம் லூயி பிரான்சின் மன்னராக முடிசூட்டப்பட்டார்.

(ஈ) வாட்டர்லூ போர் (1815)



எல்பா தீவிலிருந்து தப்பித்து நெப்போலியன் மீண்டும் பிரான்சை அடைந்தார். அரசர் 18ஆம் லூயி இங்கிலாந்தில் தஞ்சம் புகுந்தார். பிரஞ்சுக்காரர்கள் நெப்போலியனைத் தம் மன்னராக மீண்டும் ஏற்றுக்

கொண்டனர். அவர் பிரான்சை மீண்டும் 100 நாட்களுக்கு ஆட்சி செய்தார். அவர் ஒரு பெரும் படையை மீண்டும் திரட்டினர். ஐரோப்பாவை வெல்லும் எண்ணத்துடன் பெல்ஜியத்திற்குள் முதலில் நுழைந்தார். அதை அறிந்த ஐரோப்பிய நாடுகள் அஞ்சி மீண்டும் நெப்போலியனுக்கு எதிராக ஒன்று திரண்டன. ஐரோப்பிய நாடுகளின் கூட்டுப்படை இங்கிலாந்தின் தளபதி வெல்லிங்டன் மற்றும் பிர'ய தளபதி புளுச்சர் ஆகியோர் தலைமையில், நெப்போலியனை 1815 இல் வாட்டர்லூ எனும் இடத்தில் இறுதியாக வென்றன. கைது செய்யப்பட்ட நெப்போலியன், செயின்ட் ஹெலினா தீவிற்கு நாடுகடத்தப்பட்டு சிறைவைக்கப்பட்டார். 1821இல் அவர் அங்கு காலமானார்.

உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்

1. பெர்லின் ஆணை என்றால் என்ன?

2. ஹேம்போபோர்மியா என்றால் என்ன?

## 1.9 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

☐ பெர்லின் ஆணை என்பது 1806 இல் பிர'யா, ஆஸ்திரிய ஆகிய நாடுகளின் மீது அவர் கொண்ட வெற்றியை அடுத்து, பெர்லின் ஆணையை வெளியிட்டு. அவ்வாணையின் மூலம் இங்கிலாந்தின் வணிகக்கப்பல்களுக்கு எதிராக ஐரோப்பியத் துறைமுகங்களை மூடுமாறு கட்டளையிட்டார். மேலும் ஐரோப்பிய நாடுகள் இங்கிலாந்துடன் வியாபாரம் செய்யக்கூடாது என்றும் எச்சரித்தார்.

☐ நெப்போலியனின் படைகள் ஆல்ப்ஸ் மலையைக் கடந்து வியன்னாவிற்கு அருகே சென்று தாக்குதலுக்கு முற்பட்டது. இந்த திடீர் தாக்குதலை எதிர்ப்பர்க்காத ஆஸ்திரியப் பேரரசர் இரண்டாம் பிரான்சிஸ் அச்சமடைந்ததுடன் 1797 இல் ஹேம்போபோர்மியோ உடன்படிக்கையை நெப்போலியனுடன் செய்து கொண்டார் என்பதுக் குறிப்பிடத்தக்குத

## 1.10 சுருக்கவுரை

☐ நெப்போலியன் 1796 ஏப்ரல் முதல் 1797 ஏப்ரல் முடிய இத்தாலியப் படையெடுப்பில் ஈடுபட்டு இறுதியில் வெற்றி கண்டார்.

☐ நெப்போலியன் மந்துவாவைக் கைப்பற்றி வெற்றி வாகை சூடினார். ஆஸ்திரியர்கள் இப்பகுதியிலிருந்தும் பின்வாங்கினர்.

☐ இத்தாலியப் படையெடுப்பின் அங்கமாக போப்பாண்டவருக்கு உட்பட்ட பிரதேசங்களையும் கைப்பற்றும் முயற்சியில் நெப்போலியன் ஈடுபட்டார்.

☐ ஹேம்போபோர்மியா உடன்படிக்கையின் வழியாக ஐரோப்பிய நாடுகளின் எல்லைகள் மாற்றியமைக்க வேண்டிய நிலைக்கு உள்ளானது. பிரான்ஸ் ஐரோப்பாவின் மிகப் பெரும் சக்தியாக உருமானது. பிரான்சிற்கு எதிரான ஐரோப்பிய நாடுகள் எவையும் இல்லை என்ற நிலை இதன் மூலம் உருவானதுடன் நெப்போலியனுக்கும் பெரும் புகழை ஏற்படுத்திக் கொடுத்தது.

☐ நெப்போலியன் எகிப்தினை மே திங்கள் 1798 இல் வந்தடைந்தார். வழியில் மால்டாவை வென்றார். அதே ஆண்டு நைல் நதியின் சமவெளியில் பிரமிடுகள் போரில் வெற்றி பெற்றார்.

☐ நாட்டின் பொருளாதார வளத்திற்கு நெப்போலியன் நடவடிக்கைகளை மேற்கொண்டார். நாட்டின் தொழில் துறையை மேம்படுத்தப் அவர் பெரும் முயற்சிகளை மேற்கொண்டார்.உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் தொழிலதிபர்களுக்குக் கடன் வழங்கப்பட்டது.

## 1.11 முக்கிய வார்த்தைகள்

ஹேம்போபோர்மியா உடன்படிக்கை, கான்சலேட், ஆமின்ஸ் அமைதி உடன்படிக்கை, எரியல் (சிவில்) சட்டத்தொகுப்பு, எரியல் செயல்முறை சட்டத்தொகுப்பு, குற்றவியல் செயல்முறை சட்டத் தொகுப்பு, தண்டனைச் சட்டத் தொகுப்பு, வணிகவியல் சட்டத் தொகுப்பு, டிராபால்கர் போர், ஆஸ்தரிலிட்ஸ் போர், டில்சிட் உடன்படிக்கை, கண்டத் திட்டம், பெர்லின் ஆணை, லீப்சிக்போர், வாட்டர்லூ போர்.

## 1.12 தன்மதிப்பீட்டு வினாக்கள்

சுருக்கமான கேள்விப் பதில்கள்
1. நெப்போலியனின் சட்டத்தொகுப்பு பற்றி விளக்குக?
2. டில்சிட் உடன்படிக்கை பற்றி குறிப்பு வரைக?

விரிவான கேள்விப் பதில்கள்
1. நெப்போலியனின் சாதனைகளைப் பற்றிக் கட்டுரை வரைக?
2. கண்டத்திட்டத்தைப் பற்றி மதிப்பிடுக?

## 1.13 மேலும் படிக்க

• C.J.H. Hayes>et.(1916). History of Europe. New York: Macmillan Company
• C.D.M. Ketelbey. (1994). A History of Modern Times from 1789. Oxford: Oxford University Press
• V.D.Mahajan. (1975). History of Modern Europe Since 1789. New Delhi: S.Chand& Co(Pvt LTD)

# தொகுதி II நெப்போலியன் போனபார்ட் சீர்திருத்தங்கள் மூன்றாம் நெப்போலியன் போனபார்ட் முடிய

# அலகு 2 ஐரோப்பிய கூட்டமைப்பு

**கட்டமைப்பு**

2.0 அறிமுகம்

2.1 நோக்கங்கள்

2.2 புனித உடன்பாடு

2.3 ஐரோப்பிய கூட்டமைப்பு

2.3.1 ஏ-லா-சபேல் கூட்டம்

2.3.2 ஐரோப்பியக் கூட்டமைப்பின் தோல்விக்கான காரணங்கள்

2.4 1830 ஆம் ஆண்டுப் புரட்சி

2.4.1 புரட்சிக்கான காரணங்கள்

2.4.2 புரட்சியின் விளைவுகள்

2.5 1848 ஆம் ஆண்டுப் புரட்சி

2.5.1 புரட்சியின் போக்கு

2.5.2 புரட்சியின் விளைவுகள்

2.6 மூன்றாம் நெப்போலியன்

2.6.1 மூன்றாம் நெப்போலியன் வாழ்க்கைக் குறிப்புகள்

2.6.2 குடியரசுத் தலைவராக நெப்போலியன்

2.6.3 உள்நாட்டுக்கொள்கை

2.6.4 வெளிநாட்டுக் கொள்கை

2.7 ஐரோப்பாவில் தேசிய இயக்கம்

2.8 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

2.9 சுருக்கம்

2.10 முக்கிய கருத்துப்படிமங்கள்

2.11 தன்மதிப்பீட்டு வினாக்கள்

2.12 மேலும் படிக்க

## 2.0 அறிமுகம்

வியன்னா மாநாடு 1915 இல் முடிவுற்றது. அதே ஆண்டில் ஐரோப்பாவில் மேலும் முக்கியமான நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அவற்றுள் ர்'ய மன்னர்

முதலாம் அலெக்சாண்டரின் முயற்சியால் உருவாக்கப்பட்ட புனித உடன்பாடும் ஒன்றாகும். அலெக்சாண்டருக்குமுன்பே பிரெஞ்சு மன்னர் 4 அம் ஹென்ரியின் (1589-1610) அமைச்சர் சல்லி என்பவர் ஐரோப்பாவில் அமைதியை நிலைநாட்டும் நோக்கில் ஒர் அமைப்பை உருவாக்கும் எண்ணத்தைக் கொண்டிருந்தார். ஆனால், பூர்போன் வம்சத்தைத் தொடங்கிய ஹென்றியின் அமைச்சர் சல்லியின் நோக்கம் 1610 ஆல் நிகழ்ந்த ஹென்றியின் அகால மரணத்தை அடுத்து தோல்வியில் முடிந்தது.

## 2.1 நோக்கங்கள்

இந்த அலகை படித்து முடித்த பின்பு உங்களால்

☐ ஐரோப்பிய புனித உடன்பாடு உருவாவதற்கான காரணங்களை அறிய முடியும்

☐ 1830 ஆம் ஆண்டின் ஜீலைப் புரட்சியைப் பற்றி விரிவாகக் காணலாம்

☐ 1848 ஆம் ஆண்டு பிப்ரவரியில் ஏற்பட்ட புரட்சியைப் பற்றி விவாதிக்க இயலும் மூன்றாம் நெப்போலியனின் செயல்பாடுகளையும் வெற்றிகளையும் முழுமையாக அறிய இயலும்

☐ ஐரோப்பிய தேசிய இயக்கத்தையும் அதற்கான காரணங்களையும் அறியலாம்.

## 2.2 புனித உடன்பாடு

1815 ஆல் நெப்போலியன் இறுதியாக தோற்கடிக்கப்பட்டார். அதன்பின் ஐரோப்பாவின் தலைமை பிரான்சிடமிருந்து ஆஸ்திரியாவிற்கு மாறியது. அதே நேரத்தில் பிர'யாவும் ர'யாவும் ஐரோப்பிய அரசியலில் குறிப்பிடத்தக்க அளவு செல்வாக்குடன் திகழ்ந்தன. ர'யப் பேரரசர் முதலாம் அலெக்சாண்டர் புனித உடன்பாட்டிற்கான திட்டத்தை முன் வைத்தார். இர'யா, பிர'யா, ஆஸ்திரியா ஆகிய மூன்று நாடுகளும் ஒரு முக்கூட்டு உடன்பாட்டை செய்து கொண்டன. அதுவே ஐரோப்பிய வரலாற்றில் பெரிதும் பேசப்படும் 1815ஆம் ஆண்டு புனித உடன்பாடு ஆகும். கிறிஸ்துவ கோட்பாடுகளைப் பரப்புவதும் ஐரோப்பாவின் பழைமை வாதத்திற்கு எதிராக தோன்றும் தேசிய இயக்கங்களுக்கு எதிராக செயல்படுவதும் புனித உடன்பாட்டின் முக்கியமான நோக்கங்களாகும், பன்னாட்டு அரசியலில் நீதிநெறியை (அவர்கள் நோக்கில்) நிலை நாட்டும் முயற்சியில் புனித அணி தோல்வியடைந்தது. ர'ய அரசர் முதலாம் அலெக்சாண்டரின் மரணத்துடன் புனித உடன்பாடு அழிந்தது. ஐரோப்பாவின், அன்றைய சூழ்நிலையில் முதன்மை நாடாக இருந்த கிரேட் பிரிட்டன், புனித உடன்பாட்டில் ஆர்வம் காட்டவில்லை. அதன்

கோட்பாடுகளில் பிரிட்டனுக்கு ஆர்வம் இல்லை. பிரிட்டனின் வெளியுறவு அமைச்சர் காஸ்லிஸ்ரேயின் கூற்றுப்படி புனித உடன்பாடு தியானத்தால் உண்மையையும் பரம்பொருள்களையும் காணலாம் என்ற மேலான நம்பிக்கையும் வேற்றுமையும் ஆகும் ஆஸ்திரியா அமைச்சர் மெட்டர்னிக் புனித உடன்பாட்டை பயனற்ற பேரொலி என்பார்.

புனித உடன்பாட்டின் கோட்பாடுகள் ஒரு போதும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. எனவே, கிறிஸ்தவக் கோட்பாடுகளை அரசியலில் நடைமுறைப்படுத்தும் அலெக்சாண்டரின் முயற்சி தோல்வி அடைந்தது. புனித உடன்பாடு வேறு இங்கிலாந்து, ர'யா, பிர'யா, ஆஸ்திரியா, ஆகிய நாடுகள் செய்து கொண்ட நால்வர் உடன்பாடு வேறு. புனித உடன்பாட்டிலிருந்து நால்வர் அணி தோன்றவில்லை என்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

## 2.3 ஐரோப்பியக் கூட்டமைப்பு

19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கு நெப்போலியனின் பெரும் சவாலாகவே இருந்தார். ஆனால் அவர் அநேகமாக அனைத்து ஐரோப்பிய நாடுகளின் அதிருப்திக்கும்ஆளாகி இருந்தார். 1815ஆம் ஆண்டில் அவர் இறுதியாக தோல்வியை சந்திக்க வேண்டியருந்தது. 1813ஆம் ஆண்டு அவர் பெரும் தோல்வியை அவரது வாழ்க்கையில் முதலாவதாக சந்திக்க வேண்டியிருந்தது. அவர் லீப்சிக் அல்லது நாடுகிளல் போரின் தோல்வியுற்றார். லீப்சிக் என்னும் இடத்தில் நெப்போலியன் தோல்வியுற்றவுடன், 1814இல் ஐரோப்பாவின் நான்கு பெரும் நாடுகளான பிரிட்டன் பிர'யா, ர'யா, ஆஸ்திரியா ஆகியன சௌமாண்ட் எனும் இடத்தில் ∴ர் இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டன. ஆஸ்திரியாவின் அமைச்சர் கௌனிட்ஸ், மரியா தெரஸா ஆட்சியின்போதே (1740-80) ஐரோப்பாவில் அமைதியை நிலைநாட்ட ஐரோப்பிய நாடுகளின் அணி அல்லது ஐரோப்பிய கூட்டமைப்பின் அவசியத்தை வலியுறுத்தியதாக சொல்லப்படுகிறது. ஐரோப்பாவின் நான்கு பெரும் நாடுகளும் சௌமாண்ட் உடன்பாட்டின்படி குறைந்தது இருபது ஆண்டுகளுக்கு ஒற்றுமையுடன் இருந்து, மீண்டும் ஐரோப்பாவின் அரசியல் முறை சீர்படுத்த ஒத்துக்கொண்டன.

வியன்னா மாநாடு, இயன்றளவு புரட்சிக்கு முந்தைய ஐரோப்பாவை மீண்டும் கொணர்வதில் வெற்றியடைந்தது. ஐரோப்பிய நாடுகள், எதிர்காலப்புரட்சியை நினைத்து அஞ்சின. எனவே, நான்கு பெரிய நாடுகளான கிரேட் பிரிட்டன், ஆஸ்திரியா, பிர'யா, ர'யா ஆகியன 1815இல் நால்வர் அணியை உருவாக்கின. நால்வர் அணியின் நோக்கம் பிரான்சிற்கு எதிராக செயலாற்றுவதும், ஒற்றுமையுடன் இருந்து ஐரோப்பாக் கண்டத்தின் நலனைக் காப்பதும் ஆகும். நால்வர் உடன்பாட்டின் மூலம் அந்நாடுகள் அவ்வப்பொழுது மாநாடுகளை நடத்தி தம்நோக்கங்களைச் சாதிக்கச்

சம்மதித்தன. இவ்வாறாக ஐரோப்பியக் கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டது. 19 நூறறாண்டில், மாநாடுகள் நடத்தி, இராஜதந்திரமாக செயல்படுவது ஒரு முக்கிய அம்சமாக கருதப்பட்டது என்று பல வரலாற்று வல்லுநர்கள் கருதுவர்.

ஐரோப்பாவில் அந்நூற்றாண்டில் அது ஒரு முக்கியமான பரிசோதனையாகவே இருந்தது. எனவே, நால்வர் அணிக்காலம், ஐரோப்பிய வரலாற்றில் மாநாடுகள் காலமாகவே கருதப்படுகிறது. நான்கு நாடுகளும் வெவ்வேறு இடங்களில் அவ்வப்பொழுது கூடி அன்றைய அரசியல் நிலையை விவாதித்தன. பிறகு பிரான்சு நால்வர் உடன்பாட்டில் சேர, அது ஐவர் உடன்பாடாக மாறிற்று. அந்த அணி நடத்திய மாநாடுகளில் ஆஸ்திரியாவின் தலைமை அமைச்சர் சார்லஸ் மெட்டர்னிக் பெரும் பங்காற்றினார். ஐரோப்பியக் கூட்டமைப்பின் உறுப்பு நாடுகள். 1) ஏ-லா-சபேல் (1818) 2) டிராப்போ (1820) 3) லெய்பா (1821) 4) வெரோனா (1822) ஆகிய இடங்களில் நான்கு மாநாடுகள் கூட்டின 1822ஆம் ஆண்டு வெரோனா மாநாட்டிற்குப் பின் ஐரோப்பிய கூட்டமைப்புச் சிதைந்தது.

### 2.3.1 ஏ-லா-சபேல் கூட்டம்

1818இல் ஐரோப்பியக் கூட்டமைப்பின் முதல் கூட்டம் ஏ-லா-சபேல் எனும் இடத்தில் நடைபெற்றது. அம்மாநாட்டைவிட சிறந்த வேறொரு மாநாட்டைதான் ஒரு போதும் கண்டதில்லை என்று, மெட்டர்னிக் வர்ணித்தார். கூட்டமைப்பின் உறுப்பு நாடுகள் ஐரோப்பிய விவகாரங்களைத் தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தன. அம்மாநாட்டில் இடம்பெற்ற முக்கியப்பிரச்சனை பிரான்ஸ் தொடர்பானதே ஆகும். பிரான்ஸ் தரவேண்டிய போர் ந'ட ஈட்டுத் தொகை முழுவதையும் தந்திருந்தது. எனவே, நெப்போலியனுக்கு எதிராக போரிட்ட கூட்டு நாடுகள் - 1818ஆம் ஆண்டு மாநட்டில் பங்குகொண்ட நாடுகள் பிரான்சிஸ் தாம் நிறுத்தி வைத்திருந்த படைகளை விலக்கிக்கொள்ள முடிவெடுத்தன. மேலும், பிரான்சை ஐரோப்பிக் கூடடமைப்பில் ஓர் உறுப்பினராக இணைத்துக்கொள்ள சம்மதித்தன. பிரான்சு ஓர் உறுப்பினராக சேரவே, நால்வர் அணி, ஐவர் அணியாக உருவாயிற்று. ர'யா, பிரான்சை சேர்த்துக்கொள்வதை விரும்பாதபோதிலும், இங்கிலாந்தும், ஆஸ்திரியாவும்,பிரான்சிற்கு அணியில் சேர தம் ஆதரவை நல்கின.

1818ஆம் ஆண்டு மாநாடு, நார்வே டென்மார்க் ஆகிய நாடுகளின் உரிமையைச் சுவீடன் நாட்டு மன்னர் அலட்சியப்படுத்தியதற்கான காரணத்தை கேட்டது. மொனாக்கோ நாட்டு மன்னரை அவர் நாட்டின் நிர்வாகத்தை மேம்படுத்துமாறு கட்டளையிட்டது. ஹெஸ்ஸியின் தேர்வாளர், மன்னர் பட்டத்தை தான் ஏற்கவேண்டிய அனுமதியை மாநாடு நிராகரித்தது. பேடன் என்னும் சிற்றரசின் வாரிசு உரிமைப் பிரச்சனையை விவாததிற்கு

எடுத்துக்கொண்டது. மேலும் ர‍்'யா, ஆஸ்திரியா ஆகிய நாடுகளின் யூதர்களின் நிலைமையும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இலத்தின் அமெரிக்க (தென் அமெரிக்கா) நாடுகள் (குடியேற்றங்கள்) ஸ்பெயினை எதிர்த்துக் கிளர்ச்சியில் இருந்தன. கிரேட் பிரிட்டன் தென் அமெரிக்கநாடுகளுடன் பெருமளவில் வர்த்தகம் செய்து வந்தது. தம் நாட்டு நலனை காக்கும் நோக்கில் பிரிட்டனின் வெளியுறவு அமைச்சர் குடியேற்ற (தென் அமெரிக்க) நாடுகளின் பிரச்சனையை விவாதிக்கும் பொழுது ஸ்பெயினுக்கு எதிராகவே செயல்பட்டார். ஆனால், ஏனைய நாடுகள், ஸ்பெயின் நாட்டின் தென் அமெரிக்கா குடியேற்றங்களில், பிரிட்டன் தம் வர்த்தக நலனிற்காக ஆர்வம் காட்டியதை சகித்துக்கொள்ளவில்லை. ஐரோப்பியக் கூட்டமைப்பின் உறுப்பு நாடுகளுக்கிடையே நிலவிய வேறுபட்ட அணுகுமுறை காரணமாக, இலத்தீன் அமெரிக்க விவாகரத்தின் மீது திடமான ஒரு முடிவை எடுக்க இயலாமல் போயிற்று. அது போலவே இலத்தீன் அமெரிக்க குடியேற்றங்களில் நிலவி வந்த அடிமை வியாபாரத்தை ஒடுக்க கிரேட் பிரிட்டன் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்தன. இர‍்'யாவிற்கும் கிரேட் பிரிட்டனுக்குமிடையே நிலவிய கருத்து வேற்றுமை காரணமாக மத்திய தரைக்கடல் பார்பரிக் கடற்கொள்ளைக்காரர்கள் மீது உறுதியான நடவடிக்கையை எடுக்க இயலாமல் போயிற்று. பார்பரிக் கடற்கொள்ளையர் தொடர்ந்து தம் தொழிலை செய்து வந்தனர்.

ஐரோப்பிய கூட்டமைப்பின இரண்டாம் மாநாடு 1820இல் டிராப்பாவில் கூடிற்று. 1789ஆம் ஆண்டுப் புரட்சியின் விளைவாக, நேபிள்ஸ், போர்ச்சுகல், ஆகிய நாடுகளில் புரட்சி வெடித்தது. 1820இல் புரட்சியில் ஈடுபட்ட மக்கள் தாராள அரசியல் அமைப்புச் சட்டங்களைக் கோரினர். மாநாட்டின் 5 நாடுகளுக்குமிடையே கருத்து வேறுபாடு நிலவினும், நேப்பிள்ஸில் (இத்தாலி) தோன்றிய சிக்கல் உடனடியாகத் தீர்க்கப்படவேண்டிய ஒன்றாகவே அந்நாடுகளுக்கு தோன்றியது. ஆஸ்திரியாவிற்கு இத்தாலியில் ஏராளமான பலன் இருந்தது. எனவே, இத்தாலியின் முக்கியமான பகுதிகள் சிலவற்றை தன் நிர்வாகத்தின் கீழ் நேரடியாகவும் மறைமுகமாகவும் கொண்டிருந்த ஆஸ்திரியா, இத்தாலியச் சிக்கலைத் தீர்க்க அனுமதிக்கப்பட்டது. மேலும் 1820 ஆம் ஆண்டு மாநாடு டிராப்பா தீர்மானத்தின் மூலம் ஒரு நாட்டின் உள்நாட்டுப்பிரச்சனையில் இன்னொரு நாடு தலையிடுவதை அங்கீகரித்தது. ஆனால் கிரேட் பிரிட்டன் அதை எதிர்த்துக் கண்டனக் குரல் எழுப்பியது.

அதுபோலவே ஸ்பெயினிலும் போர்ச்சுகல் நாட்டிலும புரட்சிகள் வெடித்தன. மக்கள் தாராள அரசியல் சட்டத்தை வேண்டினர். வழக்கம்போல், புரட்சியைக் கண்டிப்பது மாநாட்டின் வழக்கமாயிற்று. ஆனால் தலைவர்கள் அனைவரும் பொறாமை எண்ணத்துடனேயே அப்பிரச்சனையை அணுகினர். எனவே, புரட்சிப் பகுதியில் நடவடிக்கையை

மேற்கொள்வதில் அவர்கள் வேறுபட்டு நின்றனர். புரட்சி ஏற்பட்ட பகுதியில் ஒரு நாட்டின் அதிகார வளர்ச்சியை மற்றொரு நாடு சகிக்கவில்லை. இவ்வாறாக ஐரோப்பியக் கூட்டமைப்பின் அழிவுவரை வேற்றுமை மனப்பான்மை தொடர்ந்தது.

1821இல் இத்தாலியைச் சேர்ந்த நேப்பிள்ஸிலும் பீட்மாண்டிலும் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. லோபாவில் கூடிய 3ம் மாநாடு கிளர்ச்சிகளை அடக்க முடிவெடுத்தது. மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவின்படி ஆஸ்திரிய ராணுவம் கிளர்ச்சிகளை அடக்கியது. மாநாட்டின் முயற்சியின் விளைவாக பெர்னார்ட் நேப்பிள்ஸின் மன்னராக்கப்பட்டார்.

1822இல் இத்தாலி நாட்டின் வெரோனாவில் ஐவர் அணியின் உறுப்பு நாடுகள் ஐரோப்பியக் கூட்டமைப்பின் இறுதி மாநாடாகிய நான்காம் மாநாட்டைக் கூட்.டின. 1820இல் தோன்றிய ஸ்பெயின் நாட்டிட பிரச்சனை அதுவரை நீடித்தது. அந்நேரத்தில் ஸ்பேனியர் தாராள அரசியல் சட்டம் ஒன்றைக் கோரினர். ஆனால் அந்நாட்டு மன்னர் பெர்டினாண்ட்யை மக்கள் கோரிக்கையை ஏற்க விரும்பாதவறாக பிரான்சின் மன்னர், தன் வம்சத்தைச் சேர்ந்த (பூர்போன்) பதினெட்டாம் லூயியின் உதவியை நாடினார். பிரான்ஸ், வெரோனா மாநாட்டில் தான் ஸ்பெயின் நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடப்போவதாக அறிவித்தது. பிரான்சின் அந்த முடிவை பிர'யா, இர'யா, ஆஸ்திரியா ஆகிய நாடுகள் ஆதரித்தன. ஆனால், கிரேட் பிரிட்டன் அந்த விவகாரத்தில் ஒரு தனிக்கொள்கையைப் பின்பற்றியது. பிரான்சு தன் அண்டை நாடான ஸ்பெயினில் ஏற்பட்ட தாராள தன்மையுடைய புரட்சியை அடக்கி மீண்டும் அங்கு முடியாட்சியை நிலைநாட்டியது.

வெரோனா மாநாட்டின் முன் மற்றொரு பிரச்சனையும் இருந்தது. அப்போது துருக்கியப் பேரரசின் சிதைவும் தொடங்கியது. கிரேக்க கிறித்தவ மக்கள் துருக்கி முஸ்லீம்களின் ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டனர். அந்தப் பிரச்சனையும் வெரோனா மாநாட்டில் விவாதத்திற்கு வந்தரது. இர'யா, பால்கன் பகுதியில் பெரும் ஆர்வம் கொண்டிருந்ததால் அந்த பிரச்சனையில் தான் மட்டும் தனித்துச் செயல்பட விரும்பியது. அதற்கு இர'யாவின் சுயநலமும் காரணமாகும். அனால், இங்கிலாந்தும் ஆஸ்திரியாவும் ர'யாவை எதிர்த்தன. ஆகையினால் கிரேக்கப் பிரச்சனை மேலும வெரோனாவில் விவாதிக்கப்படவில்லை.

### 2.3.2 ஐரோப்பியக் கூட்டமைப்பின் தோல்விக்கான காரணங்கள்

பல்வேறு தடவைகள் முன்பே கூறப்பட்டிருப்பது போல், கூட்டமைப்பின் நாடுகள் ஒத்த கருத்துடையனவாக இருக்கவில்லை. அக்காலத்தில் இங்கிலாந்து நாட்டில் மட்டுமே, வரம்பிற்கு உட்பட்ட முடியாட்சியின் கீழ் மக்களாட்சியின் வளர்ச்சிக்குப் பெரும் ஆதரவு இருந்தது. ஆனால் கூட்டமைப்பின் ஏனைய நாடுகளான ஆஸ்திரிய, இர'யா, பிர'யா ஆகியன

தாராளக் கோட்பாட்டை விரும்பவில்லை. அவை சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் போன்ற கருத்துக்களுக்கு எதிராகச் செயல்பட்டன. இங்கிலாந்து மட்டுமே ∴ரளவிற்கு இக்கருத்துக்களை ஆதரித்தது. கூட்டமைப்பின் ஐந்து நாடுகளும் சிறிய நாடுகளின் நலனை ஒரு பொழுதும் கருத்தில் கொள்ளவில்லை. மேலும், ஒவ்வொரு நாடும் சுயநலத்துடன் செயல்பட்டதும், கூட்டமைப்பின் தோல்விக்கு ஒரு முக்கிய காரணமாகும். உறுப்பு நாடுகளிடம் நிலவிய பொறாமைக்குணமும் ஐரோப்பிய கூட்டமைப்பின் தோல்விக்குக் காரணமாகும்.

## 2.4 1830 ஆம் ஆண்டுப் (ஜூலைப்) புரட்சி

வியன்னா மாநாட்டின் 3 முக்கிய கோட்பாடுகளில் ஒன்றான முன்னிலை மீட்சியின் அடிப்படையில் பிரான்சில் மீண்டும் பூர்போன் வம்சம் ஆட்சிக்குக் கொண்டு வரப்பட்டு, சிரச்சேதம் செய்யப்பட்ட 16ஆம் லூயின் சகோதரர் 18ஆம் லூயி பிரெஞ்சு மன்னராக முடிசூட்டபபட்டார். 1813இல் லீப்சிக் போர்களத்தில் நெப்போலியன் தோற்கடிக்கப்பட்டதை அடுத்து ஆட்சியில் 1814இல் அமர்த்தப்பட்ட அவர், நெப்போலியன் மீண்டும் எல்பாவிலிருந்து தப்பி வந்து, ஆட்சியைக்கைப்பற்றிப் பிரான்சை ஆட்சி செய்த 100 நாட்கள் போக (வாட்டர் லூப் போர் தோல்வி வரை) 1824ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்தார். அவர் தாராளக் கோட்பாடுடைய மன்னராக இருந்தார். பிரெஞ்சுப் புரட்சியை அவர் மறக்கவில்லை. மக்களின் ஆதரவை பெறும் நோக்கில் நெப்போலியனின் சீர்திருத்தங்களை அவர் பின்பற்ற முடிவு செய்தார். எனவே ஒரு சாசனத்தின் மூலம் பிரிட்டி‘ பாராளுமன்றத்தை முன் உதாரணமாகக் கொண்டு பிரான்சிலும் ஒரு பாராளுமன்றத்தைக் நிறுவ வழி செய்தார். நாட்டு மக்களுக்கு உரிமைக்கு உத்திரவாதம் தரப்பட்டது. ஆகையினால் 18ஆம் ஆண்டு லூயியின் ஆட்சிக்காலத்தில் பிரான்சில் பிரச்சனை ஏதுமின்றி, அனைத்து செயல்களுக்கும் சுமூகமாக நடந்தேறின.

1824இல் 18ஆம் லூயி காலமானார். அவரை அடுத்து அரியணையேறிய சார்லஸ் 1830 வரை ஆட்சியிலிருந்தார். 18ஆம் லூயியைப்போல் அல்லாமல் அவரது அரசியல் அணுகுமுறை காரணமாக மக்களின் வெறுப்பை பெருமளவில் சம்பாதித்துக்கொண்டார் 18ஆம் லூயியினால் அளிக்கப்பட்ட உரிமைகளுக்கு எதிராக செயல்பட்டார். தெய்வீக உரிமைக் கோட்பாட்டில் பெரும் நம்பிக்கை உடையவராக 10 ஆம் சார்லஸ் இருந்தார். பல்வேறு நிகழ்ச்சிகள் காரணமாக 1830 இல் பிரான்சில் ஒரு புரட்சி வெடித்தது. அது வரலாற்றில் ஜூலைப்புரட்சி என்று அழைக்கப்படுகிறது.

### 2.4.1 புரட்சிக்கான காரணங்கள்

**(அ) வெண்பயங்கரம்**

1815 ஆம் ஆண்டில், நெப்போலியன் இறுதியாக வாட்டர்லூப் போரில் தோல்வியுற்ற செய்தி பிரான்சை எட்டியது. தீவிரவாதிகள் உடனடியாக

வன்முறையில் இறங்கினர். பூர்போன் மரபை ஆதரித்த அத்தீவிரவாதிகள் போனபார்ட் மரபினை கடுமையாகத் தாக்கினர். அதுபோலவே கத்தோலிக்கர்கள் பிராட்டஸ்டெண்டுகளைத் தாக்கினர். சுருங்கச் சொல்லின் நாடு முழுவதும் வன்முறையும் கொலையும் தாண்டவமாடின. இந்நிகழ்ச்சியே வெண் பயங்கரம் அல்லது வெள்ளைப்பயங்கர ஆட்சி என்று பெயர் பெற்றது.

**(ஆ) முடியாட்சியை ஆதரித்த பிரபுக்கள்**

பிரெஞ்சுப் பிரபுக்கள் வலிமையான முடியாட்சியை ஆதரித்தார்கள். அவர்கள் 18ஆம் லூயியின் தாராளக் கொள்கையை விரும்பவில்லை. மதகுருமார்களும் 18ஆம் லூயியின் சீர்திருத்தங்களை வெறுத்தனர். சலுகை பெற்ற வகுப்பினராக கருதப்பட்ட பிரபுக்களும் மதகுருமார்களும் புரட்சிக்கு முந்தைய (1789) உரிமைகளையும் சலுகைகளையும் பெற நினைத்தனர். அந்நாட்டு பாராளுமன்றமாகிய நே‘னல் அசெம்ப்ளியில் அவர்கள் செல்வாக்கு ஓங்கியிருந்தது. அவர்கள் ஏகாதிபத்திய ஆட்சியை விரும்பினர்.

**(இ) சார்லஸ் (1824-30)**

18ஆம் லூயி 1824இல் காலமானார். அவரை அடுத்து அவரது சகோதரர் ஆர்டாய் கவுண்ட் என்று அழைக்கப்பட்ட 10ஆம் சார்லஸ் ஆட்சிக்கு வந்தார். அவர் ஒரு பிற்போக்குவாதி, சீர்திருத்தங்களை விரும்பாதவர். 1830இல் ஜுலைப்புரட்சி வெடிப்பதற்கு அவரே முதன்மைக் காரணமானவர். 10ஆம் சார்லஸின் போக்கை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு பிரெஞ்சுப் பிரபுக்களும் மதகுருமார்களும், பிரான்சில் சர்வாதிகார ஆட்சியை நிலைநாட்ட முயற்சி மேற்கொண்டனர். ஆனால் மக்களாட்சி கோட்பாடுகளில் பெரும் நம்பிக்கை வைத்திருந்த பிரெஞ்சு மக்கள் 10ஆம் சார்லஸின் பிற்போக்கு கொள்கைக்கு எதிராக கடுமையாகச் செயல்பட்டு அவரை பதிவியிலிருந்து விரட்டினர்.

**(ஈ) வில்லெல் அமைச்சரவை**

1821இல் அமைச்சரவையை அமைத்த வில்லெல் 1827 வரை பதிவியில் நீடித்தார். அவரது அமைச்சரவையில் வலுவான குடியாட்சியின் ஆதரவாளர்கள் அதிக இடம் பெற்றிருந்தனர். அவர் பத்திரிக்கை சுதந்திரத்திற்கு எதிரானவர். அரசனுடைய அனுமதி இல்லாமல் எந்த செய்திகளும் வெளியிடப்படவில்லை. பத்திரிக்கை தணிக்கை கடுமையாகச் செயல்படுத்தப்பட்டது. மக்கள் உரிமைகள் தடை செய்யப்பட்டன. மத்திய வகுப்பினர் பெருமளவில் பாதிக்கப்பட்டனர். தொழிலதிபர்கள் கோபமுற்றனர். எதிர்ப்புக் கடுமையாகவே, வில்லெல் பதவி நீக்கம் செய்யப்பட்டார். அரசர் புதிய தேர்தலுக்கு ஆணையிட்டர்.

**(உ) மார்டினாக் அமைச்சரவை (1828-29)**

புதிய தேர்தல், மிதவாதிகளுக்குச் சாதகமாக அமைந்தது. அவர்கள் அதிக பெரும்பாண்மையுடன் புதிய தேர்தலில் வென்று மார்ட்டினா தலைமையில் அமைச்சரவையை அமைத்தனர். அவ்வமைச்சரவை 1829 வரை நீடித்தது. அனுபவமும் திறமையும் வாய்ந்த அவர் தாராளக் கொள்கையில் நம்பிக்கை உடையவர். அவர் பத்திரிக்கைத் தணிக்கையை அகற்றி, ஓட்டுரிமையை விரிவுபடுத்தினார். அவர் தல நிர்வாகத்தில் நம்பிக்கை கொண்டவர். அமைச்சரவையின் நடவடிக்கைகளையும், சட்டத்தையும் அரசர் செயல்படுத்தவில்லை. எனவே மார்டிக்னாக் பதிவியை விட்டு விலக புதிய தேர்தலுக்கு அறிவிப்புச் செய்யப்பட்டது.

**(ஊ) போலிக்னாக் அமைச்சரவை**

பிரபுக்கள் குடும்பத்தைச் சேர்ந்த போலிக்னாக் புதிய அமைச்சரவைக்கு தலைமை ஏற்றார். அவர் ஒரு மத வெறியர், பிற்போக்குவாதி, ஆனால் அவருக்குப் பாராளுமன்றத்தின் கீழ்சபையில் பெரும்பான்மை ஆதரவு இல்லை. பாராளுமன்ற ஆட்சியை விரும்பாத அவர் மன்னரின் சர்வதிகாரத்திற்கு ஆதரவாக இருந்தார். மக்கள் அவரது நிர்வாகக் காலத்தில், முன்பு பெற்ற உரிமைகளை இழக்கும் அச்சத்திற்கு ஆளாயினர். தாராளக் கொள்கையில் நம்பிக்கைக் கொண்ட தியர்ஸ் போன்ற தலைவர்கள் அரசர் மற்றும் தலைமை அமைச்சர் போலிக்னாக் இருவரின் பிற்போக்குக்கொள்கைகளை எதிர்க்க முடிவு செய்தனர். அமைச்சரவை தோற்கடிக்கப்பட்டது. அரசர் அதற்கு பழிவாங்கும் நோக்கில் பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையைக் கலைத்தார். புதிய தேர்தல் நடத்தப்பட்டது. தேர்தல் முடிவில் அரசர்க்கு எதிர்ப்பு அதிகாமாயிற்று.

**(எ) புரட்சியின் போக்கு**

அமைச்சர் போலிக்னாக்கின் தூண்டுதலின் பேரில், அரசர் சார்லஸ் 1830 ஜுலையில் 4 அவசரச் சட்டங்களை பிறப்பித்தார். அவற்றிற்குச் செயிண்ட் கிளவுட்ஸ் ஆணைகள் என்ற பெயரும் உண்டு. அந்த அடக்குமுறைச் சட்டங்களினால் பிரென்சுப் பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் அவை கலைக்கப்பட்டது. பத்திரிக்கை சுதந்திரம் தடை செய்யப்பட்டது. பாராளுமன்றத்தின் ஆயுள்காலம் 7 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளாக் குறைக்கப்பட்டது. இவ்வாக்குரிமை கட்டுப்படுத்தப்பட்டு புதிய தேர்தலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

பிரெஞ்சு மக்களுக்கு 10ஆம் சார்லஸின் அடக்குமுறை சட்டங்கள் ஒரு பெரும் சவாலாக இருந்தன. தலைநகர் பாரீஸ் வாசிகள் அச்சட்டங்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். பாதுகாப்பு சேனையும் அரசுப் படையும் புரட்சியாளர்களுடன் சேர்ந்து கொண்டார்கள். புரட்சித் தலைவர் லபாயத்தின் தலைமையில் அரசு ஒன்று அமைக்கப்பட்டது. 3

நாட்கள் நடைபெற்ற சண்டையில் சுமார் 300 பேர் மாண்டனர். மன்னர் சார்லஸ் அவரது பேரன் சேம்போர்ட் கவுண்டிற்கு வாய்ப்பளித்து பதவியை விலகினார். ஆனால் , தையர்ஸ், ஜஹசாட், டேலிரேண்ட், போன்ற தலைவர்கள் ஆர்லியன்ஸ் பிரபு லூயி பிலிப் ஆட்சிக்கு வருவதையே ஆதரித்தார்கள். அவரும் அரியணையேறச் சம்மதித்தார். 10ஆம் சார்லஸ் தன் குடும்பத்தாருடன் இங்கிலாந்தில் அடைக்கலம் புகுந்தார். இதுவே, 30ஆம் ஆண்டு ஜுலைப் புரட்சியின் கதையாகும்.

### 2.4.2 புரட்சியின் விளைவுகள்

பிரெஞ்சு நாட்டு வரலாற்றில் ஜுலைப்புரட்சி முக்கியத்துவம் பெற்ற ஒன்றாகும். அந்நாட்டு அரசியல் முறையில் பூர்போன் வம்சத்தை அடுத்து ஆர்லியன்ஸ் வம்ச ஆட்சிக்கு அப்புரட்சி வழிவகுத்தது. அரசியல் சட்டத்தில் சிறு மாற்றங்கள் செய்யப்பட்டன. முடியாட்சி மீண்டும் கொண்டுவரப்பட்டது. ஆனால் நெருக்கடி காலம் தவிர, மற்ற நேரத்தில் அவசர ஆணைகளை பிறப்பிக்கும் அரசரது உரிமை பரிக்கப்பட்டது. பாராளுமன்றத்தின் அவைகள், சட்டம் தொடர்பான நடைமுறைகளைத் தொடங்கும் அதிகாரத்தைப் பெற்றன. இது ஜனநாயக நெறிமுறைக்கு கிடைத்த வெற்றி எனலாம். வாக்குரிமை விரிவாக்கப்பட்டது. அதுபோல் பத்திரிக்கை சுதந்திரம மீட்கப்பட்டது. கத்தோலிக்கம் பிரான்ஸின் அரசு சமயமாக ஆக்கப்பட்டத.

மன்னர் மக்களின் விருப்பப்படி ஆட்சி செய்ய வழி ஏற்படுத்தப்பட்டது. அரசர் பிரெஞ்சு மக்களின் மன்னர் என்று அழைக்கப்பட்டார். தெய்வீக உரிமைக் கோட்பாட்டிற்கு பின்னடைவு ஏற்பட்டது. சுருங்கக்கூறின் பிரான்சில் வரம்பிற்குட்பட்ட முடியாட்சி அமைக்கப்பட்டு, மக்களுக்க அடிப்படை உரிமைகள் அளிக்கப்பட்டன. ஐரோப்பாவின் காவலராகக் கருதப்பட்ட ஆஸ்திரியாவின் தலைமை அமைச்சர் சார்லஸ் மெட்டர்னிக்கின் பிற்போக்கு கொள்கைக்கு எதிரானதாகப் புரட்சி அமைந்தது. மேலும் புரட்சி, பெல்ஜியம், போலந்து, இத்தாலி, மற்றும் ஜெர்மானியப் பகுதிகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. பாராளுமன்றத்தின் தாயகமாக அழைக்கப்படும் இங்கிலாந்து நாடடின் பாராளுமன்ற சீர்திருத்தங்கள் மீது 1830 ஆம் ஆண்டு ஜுலை புரட்சி பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கதாகும்.

## 2.5. 1848 ஆம் ஆண்டுப் புரட்சி

1830ஆம் ஆண்டு ஜுலைப் புரட்சியின் ஒரு முக்கிய விளைவாக லூயி பிலிப் பிரெஞ்சு மன்னர் ஆனார். அவருடைய ஆட்சிக்கு ஜுலை முடியாட்சி என்று பெயரும் உண்டு. அவர் 18 ஆண்டுகள் ஆட்சியில் இருந்தார். அவர் நிர்வாகத்தின் பொழுது மத்திய வகுப்பினரின் நிலை உயர்ந்து காணப்பட்டது. அவர் விரும்பியது போல் பிரெஞ்சு மக்களின் மன்னர்

என்று அவர் அழைக்கப்பட்டார். பழைய குடியாட்சியின் சின்னங்களை அவர் விரும்பவில்லை. முடியாட்சியின் சின்னங்களான கிரீடம், செங்கோல் ஆகியவற்றை அவர் தூக்கி எறிந்தார். தொடக்கத்தில் அவர் தன்னை ஒரு ஜனநாயகவாதியாகவே காட்டிக்கொண்டார். தன் குழந்தைகளை சாதாரண பள்ளிகளுக்கே அனுப்பினார். பொருட்கள் வாங்குவதற்கு, கடைகளுக்கு அவரே சென்றார்.

நாட்டின் தேசியக் கொடியில் மீண்டும் மூவர்ணம் பயன்படுத்தப்பட்டது. ஓரளவிற்கு முற்போக்கு கோட்பாடுகளை பின்பற்றினார். அவற்றை செயல்படுத்தவும் முயன்றார். வாக்குரிமைக்கான தகுதியை குறைத்து, வாக்காளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தினார். ஆனால், காலப்போக்கில், அவரால் மக்கள் விருப்பத்திற்கு ஏற்ப ஆட்சி செய்ய இயலவில்லை. அவரது அரசியல் வாழ்க்கையின் பிற்பகுதியில் அவர் தன் கொள்கைகளை மாற்றிக்கொண்டார். எனவே நாளுக்கு நாள் மக்கள் எதிர்ப்பு அதிகரித்து, இறுதியில் புரட்சி வெடித்தது. அவர் பதவியை இழந்தார். லூயி பிலிப் இங்கிலாந்து சென்று அடைக்கலம் புகுந்தார். 2ஆம் முறையாக 1848இல் பிரான்சில் குடியரசு ஆட்சி நிறுவப்பட்டது. 1848ஆம் ஆண்டுப் புரட்சிக்கான காரணங்களை முதலில் ஆய்வது விரும்பத்தக்கது.

**(அ) காரணங்கள்**

1848ஆம் ஆண்டு பிப்ரவரிப் புரட்சிக்கு காரணங்கள் பல. அவற்றுள் சில-

அரசியில் கட்சிகள்

ஆட்சியின் தொடக்கத்தில், மன்னர் லூயி பிலிப்பை மக்கள் விரும்பியபோதிலும் அவரது ஆட்சியின் இறுதியில் மக்கள் மத்தியில் அதிருப்தி நிலவியது மன்னதை எதிர்த்து பல அரசியியல் கட்சிகள் மக்களை நடத்தி சென்றன. பூர்போன் வம்சம் ஆட்சியை விரும்பிய நியாயவாதிகள் (லெஜிடிமிஸ்ட்ஸ்) நெப்போலியனின் வம்ச ஆட்சியை விரும்பிய போனபார்ட்டு கட்சியினர், குடியரசுக் கட்சியினர், கத்தோலிக்க கட்சி, தேசியவாதிகள் என பிரெஞ்சுக்காரர்கள் பல கட்சியினராகப் பிரிந்து நின்றனர்.

**(ஆ) ஒழுங்குமுறைவாதிகள் (லெஜிடிமிஸ்ட்)**

1846 ஆம் ஆண்டு வாக்கில், மன்னர் லூயி பிலிப், மக்கள் மத்தியில் செல்வாக்கு அற்றவர் ஆனார். அனைத்து தரப்பினரும் அவரை வெறுத்தனர். ஒழுங்குமுறைவாதிகள் லூயிபிலிப்பின் ஆட்சியை புரட்சிகரமானதாகவும் மத்திய வகுப்பிற்கு ஆதரவானதாகவும் எண்ணினர். 1830ஆம் ஆண்டு ஜுலைப் புரட்சியினால் பதவி இழந்த அரசர் பத்தாம் சார்லஸின் பேரன் சாம்போர்ட் கவுண்ட் பெற வேண்டிய நியாயமான ஆட்சியை லூயி பிலிப் அபகரித்துக்கொண்டதாக அவர்கள் கருதினர்.

**(இ) குடியரசுக் கட்சி**

குடியரசு வாதியினர் பிரான்சில் குடியாட்சியை நிறுவ விரும்பினர். அவர்கள் வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை எனும் கொள்கையை ஆதரித்தனர். அவர்கள் லூயி பிலிப்பை முழுதும் வெறுத்து அவரது ஆட்சியை அகற்றத் தக்க நேரத்திற்காக காத்திருந்தனர்.

**(ஈ) போனபார்ட்டினர்**

நெப்போலியனின் ஆதரவாளர்கள் அவரது போனபார்ட் வம்ச ஆட்சியை விரும்பினர். நெப்போலியன் காலத்து அரசை மீண்டும் அமைக்க எண்ணினர். அந்த நேரத்தில் நெப்போலியனின் குறைபாடுகளை அவர்கள் பெரிதாக நினைக்கவில்லை. நெப்போலியனின் சாதனைகள் தம் நாட்டிற்கு பெருமை சேர்த்ததாக எண்ணினர். லூயி பிலிப், நெப்போலியனின் உடலை செயிண்ட் ஹெலினா தீவிலிருந்து பிரான்ஸிற்குக் கொண்டு வந்து, பாரீஸில் மீண்டும் அடக்கம் செய்ததை ஈண்டு சுட்டுவது விரும்பத்தக்கதே. மன்னர், லூயிபிலிப் மேலும் நெப்போலியனின் சாதனைகளைப் பாராட்டும் வண்ணம் நெப்போலியன் வெற்றி வளைவு ஒன்றை அமைத்தார். நெப்போலியன் வெற்றி பெற்ற போர்க்களங்கள் வீதிகளின் பெயர்களாக வரலாற்றில் இடம் பெற்றன.நெப்போலியனின் புராணம் பிரெஞ்சு தேசியவாதிகளை ஊக்குவித்தது. அதுபோன்ற ஒரு சூழலில் நெப்போலியனின் உடன்பிறந்தார் மகன் லூயிநெப்போலியன், நெப்போலியனின் பெருமைகளை எழுதினார். அதன் காரணமாக லூயி பிலிப்பின் ஆட்சி செல்வாக்கற்றதாயிற்று.

**(உ) கத்தோலிக்கர்**

மார்ட்டின் லூதரின் சமயச் சீர்திருத்த இயக்கம் தொடங்கியதிலிருந்தே பிரான்சு கத்தோலிக்க நாடாகவே திகழும் தனித்தன்மையுடையது ஆயிற்று. அந்நாட்டு கத்தோலிக்கர்கள் அமைச்சர் ஹைஸாட்டின் ஊழல் மிகு நிர்வாகத்தை வெறுத்தனர். ஹைஸாட் ஒரு ஹியூகனோ (பிரெஞ்ச் பிராடெஸ்டன்ட்) என்பதால் அவர்கள் வெறுப்பு அதிகமாயிற்று. சமயத்துறையில் அரசாங்கம் பின்பற்றிய தாராளக் கொள்கையை அவர்கள் விரும்பவில்லை. மேலும் கத்தோலிக்கர்கள் உழைக்கும் வர்க்கத்தின் நலனில் ஆர்வம் காட்டினர்.

**(ஊ) தேசப்பற்றாளர்**

லூயி பிலிப்பின் வெளியுறவுக்கொள்கை பணிவுள்ளதாக இருந்தது. மன்னர் பிலிப், இங்கிலாந்து நாட்டின் வெளியுறவுக் கொள்கைக்கு பணிந்து நடப்பதாக தேசப்பற்றாளர் கருதினர். எனவே அவர்கள் நாட்டின் பெருமையும் சிறப்பையும் நிலை நாட்ட விரும்பினர். நெப்போலியன் காலத்து பிரான்சை மீண்டும் உருவாக்க விரும்பினர். நாட்டின் பெருமையை நிலைநாட்ட தகுதியுடையவராக அவர்கள் கருதப்பட்ட

அவர்களின் தலைவர் தையர்ஸ் பதிவியிலிருந்து நீக்கப்பட்டதை அறிந்து அவர்கள் வெகுண்டனர். அமைச்சர் ஹைஸாட்டின் நிர்வாகத்தை மிகவும் கடுமையாக எதிர்த்த அவர்கள் அரசரின் வெளியுறவுக் கொள்கையை கண்டித்தனர். பொதுவாக இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரியாவுடனான பிரெஞ்சு உறவை பெரிதும் தேசிய வாதிகள் வெறுத்தனர்.

**(எ) சீர்திருத்தவாதிகள்**

சீர்திருத்தவாதிகள் மதவாதச் சீர்திருத்தங்களை வேண்டினர். வாக்குரிமையை விரிவாக்க எண்ணினர். ஊழலை அகற்ற விரும்பினர். ஆனால், அரசரும் அமைச்சரும் சீர்திருத்தவாதிகளின் சாதாரணக் கோரிக்கைகளை நிறைவேற்றி அவர்களை திருப்தி செய்ய எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. மாறாக அரசு சீர்திருத்தவாதிகளுக்கு எதிராக காவல்தறையைப் பயன்படுத்தி கூட்டங்களை கலைத்தது. பத்திரிக்கை தணிக்கை தீவிரமாக்கப்பட்டது.

**(ஏ) சமதர்மவாதிகள் (சோசலிஸ்ட்ஸ்)**

19ஆம் நூற்றாண்டில், சமதர்மக்கோட்பாடு பெருமளவில் வளர்ச்சியுற்றது. இங்கிலாந்தில் தோன்றிய தொழில்புரட்சி, பிரான்சு உட்பட ஐரோப்பிய நாடுகள் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது தொழில் புரட்சி சமூகத்தை முதலாளி மற்றும் தொழிலாளி என இரண்டு வர்க்கமாகப் பிரித்தது. முதலாளி, தொழிலாளி உறவு ஒரு கோட்பாடாகவே ஆழ வேருன்றியிருந்தது. சமதர்மக்கோட்பாடு மற்றும் சமதர்ம இயக்கம் ஆகியன உலகின் பல நாடுகளில் விவாதப் பொருளாயின. பிரான்சில் செயிண்ட் சைமன், பௌரியர், கேபட், லூயி பிளாங், பிரௌதான், ராபர்ட், ஓவன் போன்றோர் உழைக்கும் வர்க்கத்திற்காக போராடினர்.

அறிவியல் மற்றும் பொறியியல் அறிஞர்களைக் கொண்ட கூட்டுறவு அரசை சைமன் ஆதிரித்து பேசினர். அதுவே உழைக்கும் வர்க்கத்திற்கு உதவும் என்று அவர் நம்பினர். பௌரியர் கூட்டுறவுச் சமுதாயங்களை ஆதரித்தார். லூயி பிளாங் அனைத்து தொழிலாளர்களுக்கும் வாழ்க்கை அவசியமான ஊதியம் அளிக்க அரசாங்கம் உறுதியளிக்க வேண்டுமென்றார்.

பிரௌதான் ஒரு தீவிரவாதி. அவர் தனியுடைமையை எதிர்த்தார். அனைவரும் தானாக முன்வந்து அமைக்கும் கூட்டுறவை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய நிர்வாக அமைப்பை அவர் ஆதரித்தார். சுருங்கக்கூறின், சமதர்மவாதிகளின் பிரச்சாரம், மன்னர் லூயி பிலிப்பை எதிர்த்து மக்கள் புரட்சியில் இறங்கத் தூண்டிற்று.

**(ஐ) ஹைஸாட்**



1840 இல் இருந்து ஹைஸாட் லூயி பிலிப்பின் தலைமை அமைச்சராகப் பணியாற்றினார். அவர் அத்துடன், அரசரிடம் ஆலோசகராகவும் இருந்தார்.

தொழிலாளர்களின் கிளர்ச்சியை ஒடுக்கியவர் அவரே. நாட்டுப்பிரச்சனை குறித்து அவர் கவலைப்படவில்லை. தியர்ஸ் என்னும் மக்கள் ஆதரவு பெற்ற ஒருவர் பிரதிநிதித்தவ சபையின் தலைவராக இருந்தார். அமைச்சர் ஹைஸாட்டிற்கும் தியர்ஸிக்கும் கருத்து வேறுபாடுகள் நிறைந்திருந்தன. 1848ஆம் ஆண்டுத் தொடக்கத்தில், சட்டமன்ற தேர்தல் தொடர்பான சீர்திருத்தங்கள் வேண்டி நாடு முழுவதும் கிளர்ச்சிகள் நடந்தன. அத்தருணத்தில் தலைமை அமைச்சர் ஹைஸாட் மக்கள் இயக்கத்தைக் கண்டித்து உரையாற்றினார். அது அரசாங்கத்திற்கு எதிராக அனைத்துக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து போராட வழி வகுத்தது.

### 2.5.1 புரட்சியின் போக்கு

கிளர்ச்சியாளர்கள் தலைமை அமைச்சரின் உரைக்கு எதிர்ப்புத் தெரிவிக்க முடிவு செய்தனர். வாக்குரிமையை விரிவுபடுத்தி வாக்காளர் எண்ணிக்கையை அதிகப்படுத்தி, புதிய தேர்தல் மூலம் மக்களாட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்கத் தீர்மானித்தனர். அவர்கள், தம் நோக்கத்தை வென்றடய தியர்ஸ், லாமர்டைன் போன்ற தலைவர்களின் தலைமையில் சீர்திருத்த விருந்துகளுக்கு ஏற்பாடு செய்தனர். 1848ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் அது போன்ற விருந்து ஒன்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. தலைநகர் பாரிசில் அது நடந்தது. ஆனால் அவ்விருந்திற்கான கூட்டத்தை அரசாங்கம் தடை செய்தது. தொழிலாளர்களும், மாணவர்களும் சீர்திருத்தம் வேண்டி கிளர்ச்சியில் ஈடுபட்டனர். பிப்ரவரி 23ஆம் நாள் தேசிய பாதுகாப்புபடையினர், அமைதியை நிலைநாட்ட அரசாங்கத்தால் பணிக்கப்பட்டார்கள். ஆனால், அரசாங்கத்தின் படை கிளர்ச்சியில் ஈடுபட்ட மக்களுடன் சேர்ந்து கொண்டது.

புரட்சியாளர்கள் அமைச்சர் ஹைஸாட்டின் ராஜினாமாவைக் கோரினார். அமைச்சரின் வீட்டு முன் ஆர்ப்பாட்டம் செய்தனர். அரசாங்கப் போர்வீரர்கள் கூட்டத்தை நோக்கி சுட்டனர். துப்பாக்கி சூட்டில் 23 பேர் கொல்லப்பட்டனர், 30 பேர் காயமுற்றனர். ஆர்ப்பாட்டக்காரர்கள், இறந்தோர் உடலைச் சுமந்து பாரிஸ் மக்களிடம் காட்டி ஆதரவு திரட்டினர். இவ்வாறு புரட்சி நடைபெற்றது. ஹைஸாட் பதவி விலகினார். மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். அவர் அரசரையும் பதவிலியிருந்து அகற்ற முடிவு செய்தனர். அரசர் நிலைமையை தன் கட்டுப்பாட்டில் கொண்டு வரும் முயற்சியில் தோல்வியுற்றார். இறுதியாக அவர்கள் பேரன் பாரிஸ் கவுண்டிற்கு ஆதரவாக பதவி விலகி, இங்கிலாந்திற்கு ஓடி அடைக்கலம் புகுந்தார். பாரிஸ் கவுண்டின் உரிமையை நிராகரித்த புரட்சியாளர், பிரான்சில் 2ஆம் குடியரசை நிறுவினர்.

### 2.5.2 புரட்சியின் விளைவுகள்

1848ஆம் ஆண்டு புரட்சி ஜெர்மானிய அரசுகளிலும் சில விளைவுகளை ஏற்படுத்தியது. புரட்சியாளர்கள் மக்கள் உரிமையாளர்களும், புதிய அரசியியல் சட்டத்தையும் கோரினர். அவர்கள், மேலும் ஜெர்மானிய ஏக்கியத்திற்கு ஆதரவாக குரல் எழுப்பினர். பவேரியா, ஹனோவர், சாக்ஸனி ஆகிய ஜெர்மானிய அரசுகளில் புரட்சி ஓரளவிற்கு வெற்றி பெற்றது. இர'ய மன்னர் முதலாம் நிககோலஸின் ஆதரவுடன் முதலில் புரட்சியை ஒடுக்க முயற்சித்த பிர'ய மன்னர் பிரடரிக் வில்லியம், புரட்சி வலுவாகவே சில உரிமைகளை வழங்கினார். 1848இல் ஜெர்மானிய தேசியவாதிகள் பிராங்பார்ட் நகரில் கூடி ஏக்கிய ஜெர்மனிக்கு ஒரு புதிய அரசியல் அமைப்பை தயாரிக்க முயற்சி செய்தனர். ஆனால், அம்முயற்சி பிர'ய மன்னரால் தடுத்து நிறுத்தப்பட்டது.

புரட்சி இத்தாலியின் மீது பாதிப்பை ஏற்படுத்தியது. சிசிலி போன்ற இத்தாலிய அரசுகள் புரட்சியின் தாக்கத்துக்கு உட்பட்டன. ஆஸ்திரியாவின் மேலாண்மையை எதிர்த்து லம்பார்டி மற்றும் வெனிஸீயா மக்கள் கிளர்ச்சி செய்தனர். ஆஸ்திரியா படை அங்கிருந்து வெளியேற்றப்பட்டது. வெனிஸியாவில் குடியரசு ஒன்று நிறுவப்பட்டது. பீட்மாண்டிலும் கிளர்ச்சி தோன்றியது. அதன் மன்னர் மக்களுக்கு பல சலுகைகளை வழங்கினார். இத்தாலியில் பீட்மாண்ட் - சார்டினியா மன்னர் புரட்சிக்கு தலைமை தாங்கினார். ஆனால் அவர் ஆஸ்திரியா படையினால் தோர்க்கடிக்கப்பட்டார். பின் ஆட்சிக்கு வந்த சார்லஸ் ஆல்பர்டின் மகன் விக்டர் இமானுவேல் 2 இத்தாலிய ஒறுமைப்பாட்டைச் சாதிக்கும் சிறப்பினைப் பெற்றார். 1848ஆம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சி, பிரான்சில் மிக முக்கியமான விளைவுகளை ஏற்படுத்தியது. மன்னர் லூயிபிலிப் பதவி விலகி அடைக்கலம் புகுந்தார். பிரான்சில் 2வது முறையாக குடியரசு ஒன்று நிறுவப்பட்டது. மாவீரன் நெப்போலியனின் அண்ணன் மகன் லூயி நெப்போலியன் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரது நிர்வாகத்தின் தொடக்க காலத்தில் பிரான்சில் பல சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## 2.6 மூன்றாம் நெப்போலியன் (1848-1870)

பிரெஞ்சு மாவீரன் நெப்போலியன் போனபார்ட் 1813இல் லீப்சிக் என்ற போர்க்களத்தில் தோற்கடிக்கப்பட்டார். அவரை அடுத்து புரட்சியின் போது சிரச்சேதம் செய்யப்பட்ட மன்னர் 16ஆம் லூயியின் சகோதரர் 18ஆம் லூயி 1814இல் முடிசூட்டப்பட்டார். நெப்போலியன் எல்பாத் தீவிலிருந்து தப்பித்து மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றி 100 நாட்கள் ஆட்சி செய்தார். 18ஆம் லூயி அந்த 100 நாடகள் தவிர 1814 முதல் 1824 இல் அவர் இறக்கும் வரை பிரான்சை ஆட்சி புரிந்தார். அவரை அடுத்து ஆட்சிக்கு வந்த அவரது சகோதரர் 10-ஆம் சார்லஸ் 1830 வரை ஆட்சி செய்தார். ஜுலைப்

புரட்சியில் அவர் பதவி இழக்கவே, அவருடைய உறவினர் லூயி பிலிப் ஆட்சிக்கு வந்தார். 1848ஆம் ஆண்டு பிப்ரவரிப் புரட்சியினால் அவர் பதவி இழந்தார். அவர் இங்கிலாந்துக்குச் சென்று அடைக்கலம் புகுந்தார். பிரான்சில் புதிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டது. 1848 -இல் 2வது முறையாகப் பிரான்ஸ் ஒரு குடியரசு ஆயிற்று. மாவீரன் நெப்போலியன் போனபார்ட்டின் சகோதரனின் மகன் லூயி நெப்போலியன் (நெப்போலியன் மகன், 2ஆம் நெப்போலியன் முன்பு இறந்து விட்டார்) 2-ஆம் குடியரசின் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பினைப் பெற்றார்.

### 2.6.1 மூன்றாம் நெப்போலியன் வாழ்க்கைக் குறிப்புகள்

3-ஆம் நெப்போலியன் என்று அழைக்கப்படும் லூயி நெப்போலியன் 1808-இல் பாரிசில் நெப்போலியனுடைய சகோதரர் லூயி போனபார்ட்டின் மகனாகப் பிறந்தார். 1815-இல் நெப்போலியன் வாட்டர் லூ போர்க்களத்தில் இறுதியாக தோற்கடிக்கப்பட்டார். எனவே, 3ஆம் நெப்போலியன் குழந்தையாக இருந்தபொழுது அவரது குடும்பம் சுவிட்சர்லாந்தில் அடைக்கலம் புகுந்தது. அதன் பிறகு நெப்போலியன் இத்தாலிக்குச் சென்றார். அஙகே ரோமாபுரிக்குச் சென்ற அவர் 1830இல் கார்பொனரி எனும் புரட்சி இயக்கத்தில் சேர்ந்தார். 1832இல் நெப்போலியன் மகன் 2ஆம் நெப்போலியன் காலமானார். அவரது மரணத்திற்குப்பின் போனபார்ட் மரபின் வாரிசாகப் பதவி ஏற்கும் வாய்ப்பு இவருக்கு மட்டுமே இருந்தது. 1836இல் நெப்போலியன் பேரரசை நிறுவத் தனக்கிருந்த உரிமையை வலியுறுத்தினார். அரசாங்கத்தினால் கைது செய்யப்பட்ட அவர் (மன்னர் லூயி பிலிப்பினால்) ஐக்கிய அமெரிக்காவிற்கு அனுப்பப்பட்டார். 1839இல் அவர், நெப்போலியனின் எண்ணங்கள் எனும் நூலை எழுதினார். 1840இல் நெப்போலியனுடைய உடல் மீண்டும் பிரான்சுக்குக் கொண்டுவரப்படவேண்டுமென்று பிரச்சாரம் செய்தார். அதை அடுத்துக் கைது செய்யப்பட்டுச் சிறை வைக்கப்பட்டார். 1845இல் பீரங்கிப் படையின் வரலாறு எனும் நூலை எழுதினார். 1846இல் பிரான்சிலிருந்து இங்கிலாந்திற்குத் தப்பினார். 1848இல் பிப்ரவரிப் புரட்சி வெடித்தபொழுது மீண்டும் பிரான்சை அடைந்தார். 1848இல் சில தடைகளுக்குப் பின் பிரெஞ்சுக் குடியரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1852 இல் தன்னைப் பேரசராகப் பிரகடனம் செய்தார். 1870இல் செடான் போர்க்களத்தில் பிர'யாவால் தோற்கடிக்கப்படும் வரை பிரான்சை ஆட்சி செய்தார். நெப்போலியன் பிஸ்மார்க்கால் கைது செய்யப்பட்டார். 1871இல் பிரான்சில் 3ஆம் குடியரசு நிறுவப்பட்டது.

### 2.6.2 குடியரசுத் தலைவராக நெப்போலியன் (1848-1852)

1842இல் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நெப்போலியன் நாட்டு மக்களின் நண்பராகச் செயலாற்றினார். மக்களிடத்தில் தம் செல்வாக்கை வளர்த்துக் கொள்வதில் ஆர்வம் காட்டினார். உழைக்கும்

வர்க்கத்தின் காவலானகத் தன்னைக் காட்டிக்கொண்டார். தொழிற்சாலைகளை மேம்படுத்தினார். ரயில் பாதைகள் அமைக்கப்பட்டன. கத்தோலிக்கர்களை அநுசரித்துச் சென்றார். அவர்கள் பல நன்மைகள் பெற்றனர். 1848இல் போப்பாண்டவர் தன் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளைத் தக்க வைத்துக்கொள்ள உதவினார். 1850இல் முதியோர் காப்பீட்டுத் திட்டத்திற்கு வழிவகுத்தார். மாவீரன் முதலாம் நெப்போலியனின் புகழ்பாடுவதில் அதிக ஆர்வம் காட்டினார். பிரெஞ்சுச் சட்டமன்றம் அந்நாட்டத் தேர்தல் விதிகளை மாற்றி அமைத்ததால் ஏழை மக்கள் வாக்குரிமையை இழந்தனர். வறியோரின் நலன் நாடுபவராக மீண்டும் தன்னைக் காட்டிக்கொண்ட நெப்போலியன் 1851இல் சட்டமன்றத்தைக் கலைத்தார். தனது எதிரிகளைக் கைது செய்தார். பொதுமக்கள் ஆதரவுடன் புதிய அரசியியல் சட்டம் ஒன்றைத் தயாரித்தார். அதன்பின் அவருக்கான எதிர்ப்பை நசுக்கினார். 1852இல் பொது ஜன வாக்கெடுப்பு மூலம் தன்னைப் பிரான்சின் பேரரசராக அறிவித்துக் கொண்டார். 3ஆம் நெப்போலியன் எனும் பட்டத்துடன் முடிசூடிக்கொண்டார்.

(அ) பேரரசர் நெப்போலியன் (1852-1870)

1870 வரை நெப்போலியன் பிரான்சின் பேரரசராக ஆட்சி செய்தார். பேரரசராகப் பணியாற்றிய காலத்தில் உள்நாட்டு நிர்வாகத்திலும் வெளிநாடுக் கொள்கையிலும் முக்கியப் பங்காற்றினார்.

### 2.6.3 உள்நாட்டுக்கொள்கை

தொடக்க காலத்தில் நாட்டு மக்களின் நன்மைக்காகப் பெருமளவில் செயல்பட்டார். மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை ஓரளவுக்கு நிறைவேற்றினார். நாட்டில் நிலவிய அராஜகத்தை அடக்கி அமைதியைத் திறமையுடன் நிலை நாட்டினார். பிரான்சின் தொழில் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார். பொதுப்பணி வேலைகள் சிறப்பாகச் செய்யப்பட்டன. சாலைகள் அமைக்கப்பட்டன. கால்வாய்கள் பல தோண்டப்பட்டன. துறைமுகங்கள் நன்கு அமைக்கப்பட்டன.

தகவல் தொடர்பு துறையிலும் மன்னர் கவனம் செலுத்தினார். வேளாண்துறை வளர்ச்சிக்குப் பெரும் நடவடிக்கைகளை மேற்கொண்டார். தொழிலும் வணிகமும் ஊக்குவிக்கப்பட்டன. கம்பிப்பாதை அமைக்கும் திட்டம் (ரயில்வே) முழுவதும் நிறைவேறியது. பல நிலவங்கிகளுடன் இரண்டு மத்திய வங்கிகளும் திறக்கப்பட்டன. வேளாண்குடி மக்கள் நலனில் அதிக ஆர்வம் காட்டினார். கோதுமை, திராட்சை பெருமளவில் பயிரிடப்பட்டன. வேளாண்மைச் சங்கங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. சதுப்பு நிலங்கள் விவசாய நிலங்களாக மாற்றப்பட்டு வேளாண்மையின்கீழ் பெரும் நிலப்பகுதி கொண்டு வரப்பட்டது. கால்நடைவளர்ப்பு பெருமளவில் ஊக்குவிக்கப்பட்டது.

பாரீஸ் நகரம் புதுப்பிக்கப்பட்டது. சுகாதாரத்தைப் பேணிக் காக்கப் பெரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தலைநகரில் கட்டிடங்கள் பல உருவாக்கப்பட்டன. பாரீஸ் உலகின் மிகச்சிறந்த கவின்மிகு கவர்ச்சியான நகரமாக மாற்றப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. நெப்போலியன் மனிதாபிமானப் பணிகள் பல மேற்கொண்டார். இல்லாதோருக்கு உதவும் வகையில் மருத்துவமனைகள், புகலிடங்கள், உணவகங்கள் அமைக்கப்பட்டன. தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்தித் தரப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். விபத்து, முதியோர் காப்பீட்டுத் திட்டங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன. தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களும் தொழிற்சங்கங்களும் அமைக்க அனுமதிக்கப்பட்டனர். வேலை நிறுத்தம் செய்யும் உரிமை அங்கீகரிக்கப்பட்டது. சுருங்க்கூறின் உழைக்கும் வர்க்கத்தில் தானும் ஒருவன் என்று காட்டிக்கொள்வதில் பெரும் ஆர்வம் காட்டினார். பொறியியல் அறிஞர்களோடு சாதாரண ரயில் வண்டிகளில் நெப்போலியன் பயணித்தார்.

தொழிலாளர்களுடனும் கைவினைஞர்களுடனும் கலந்து பழகினார். தொழிலாளர்களுக்கு உதவி தொகையும் சகாய உணவிற்கும் உத்திரவாதம் கிடைத்தது. அவர்களுக்கு விடுமுறையும் அளிக்கப்பட்டது. நெப்போலியன் தன் நாட்டுக் கத்தோலிக்க மக்களுடன் சுமூகமான உறவை வைத்துக் கொள்வதில் தன் அறிவுநுட்பத்தை வெளிப்படுத்தினார். நாட்டு மக்களின் (பெருமபான்மையினர் கத்தோலிக்கர்) நல்லெண்ணத்தை பெறும் நோக்கில்தான் 1849இல் போப்பாண்டவர் ரோம் நகரை மீட்கப் பிரெஞ்சு இராணுவத்தை அனுப்பினார். பல்கலைக் கழகங்கள் உள்ளிட்ட கல்வி நிலையங்கள் அனைத்தையும் கட்டுப்படுத்தும் உரிமையை மதகுருமார்களுக்கு அளித்தார். மேலும் கத்தோலிக்கர்களின் ஆதவைப் பெறும் நோக்கில்தான் பாலஸ்தீனக் கத்தோலிக்க துறவிகளுக்கு ஆதரவாக கிரீமியப் போரில் பங்கு கொண்டார்.

நெப்போலியன் 1860ஆம் ஆண்டு வரை ஏறக்குறைய ஒரு சர்வதிகாரியாகவே இருந்தார். அதிகாரங்கள் அனைத்தும் அவரிடமே இருந்தன. பத்திரிகைகளும் அவர் கட்டுப்பாட்டில் இருந்தன. மக்கள செயல்பாடுகளைக் கவனிக்க இரகசிய காவல் படையை உருவாக்கினார். சட்டத்துறையும் அவரது கட்டுப்பாட்டில் இருந்தது. தேர்தல் அமைப்பும் கூட அவர் வசம் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. 1860இல் அரசு விவகாரங்களில் மாற்றம் ஏற்பட்டது. அரசியியல் சட்டம் தாராள மாற்றங்களுடன் புதுப்பிக்கப்பட்டது. சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் விவாத உரிமைப் பெற்றார்கள். பாராளுமன்ற நடவடிக்கைகள் செய்திதாள்களில் வெளியிடப்பட்டன. நிர்வாகத் தலைவர் அவரது செயல்பாடுகளைச் சட்டமன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டி வந்தது.

இவ்வாறு பல சலுகைகைள் நெப்போலியனால் அளிக்கப்பட்ட போதிலும் குடியரசுக் கட்சி 1863ஆம் ஆண்டு தேர்தலில் பாரீஸ் நகரில்

அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றது. அரசாங்கம் பிரிபெக்ட் எனும் ஆளுநர்களின் அதரவுடன் பெரும்பான்மையைப் பெற்றிருந்த போதிலும் நெப்போலியனுக்கான எதிர்ப்பு வலுவாக இருந்தது. 1866இல் ஆலிவர் தாராளக் கொள்கையை உடைய பேரரசு ஒன்றை ஆதரிக்கும் நோக்கில் புதிய அரசியல் கட்சி ஒன்றை நிறுவினார். பேரரசர் நெப்போலியன் பத்திரிக்கைத் தணிக்கையை ஓரளவிற்கு நிறுத்தினார். பொதுக்கூட்டங்கள் நடத்தும் உரிமை அனுமதிக்கப்பட்டது. அமைச்சர்கள் சட்டமன்றத்திற்குப் பொறுப்பானவர்களாக ஆக்கப்பட்டனர். 1869 இல் புதிய கட்சியின் தலைவர் ஆலிவர் பாராளுமன்றத்திற்குப் பொறுப்பு வாய்ந்த புதிய அமைச்சரவை ஒன்றை அமைத்தார்.

மேலும் சில சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. கவுன்சிலர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. மேயர்கள் கவுன்சிலர்களால் தேர்வு செய்யப்பட்டனர். இலவச ஆரம்பக் கல்வியை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் சிறார் பணி முறைப்படுத்தப்பட்டது. கிராமப்புறங்களில் மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு சேமிப்பு வங்கிகள் திறக்கப்பட்டன. இவை அனைத்தம் மக்கள் சம்மதத்துடன் செய்யப்பட்டன. 1870இல் செடான் போர்க்களத்தில் 3ஆம் நெப்போலியன் தோற்கடிக்கப்பட்டார். பிர்‘யப் படையிடம் (ஜெர்மனி) நெப்போலியன் சரணடையப் பிரான்சின் இரண்டாம் பேரரசு அகற்றப்பட்டது. அதே ஆண்டில் 3ஆம் குடியரசு நிறுவப்பட்டது.

### 2.6.4 வெளிநாட்டுக் கொள்கை

நெப்போலியன் ஒரு தீவிரமான வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றினார். அதனால் பிரான்சு பல போர்களைச் சந்திக்க வேண்டியது ஆயிற்று. நெப்போலியன் தான் அமைதியை விரும்புவதாகக் கூறிக்கொண்ட போதிலும் உண்மையிலேயே அவர் ஒரு ஆக்கிரமிப்புக் கொள்கையையே பின்பற்றினார்.

ஒரு தேசியவாதியாகச் செயல்பட்ட நெப்போலியன் தம் நாட்டின் ஒருமைப்பாட்டிற்காகப் போராடிய இத்தாலி, ஜெர்மனி, மக்களுக்குக் கருணை காட்டினார். அதுபோலவே தம் விடுதலைக்காகப் போராடிய போலந்து நாட்டு மக்களுக்குத் தன் ஆதரவைத் தெரிவித்தார். மேலும் நெப்போலியன் குடியேற்ற நாடுகளை உருவாக்க விரும்பினார். ஆகையினால் பல நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் அவர் தலையிட வேண்டியிருந்தது. நெப்போலியன் அல்ஜீரியாவைப் (ஆப்பிரிக்க கண்டம்) பிரெஞ்சுப் பேரரசுடன் சேர்த்துக் கொண்டார். ஆசியக் கண்டத்திலும் பிரெஞ்சுச் செல்வாக்கை நிலை நாட்டினார்.

குடியேற்றக் கொள்கையில் தம் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் இங்கிலாந்துடன் நட்புறவை வளர்த்துக்கொண்டார். ஐரோப்பிய நாடுகளின் வர்த்தகத்திற்காகச் சீனா பல துறைமுகங்களைத்

திறந்து விடுமாறு கட்டாயப்படுத்தப்பட்டது. இந்தோ-சீனாவில் நெப்போலியன் பிரெஞ்சு ஆதிக்கத்தை நிறுவினார். 1863இல் கம்போடியாவில் பிரெஞ்சு காப்பு அரசு ஏற்படுத்தப்பட்டது.

(அ) ரோம்

1849இல் நெப்போலியன் போப்பாண்டவருக்கு ஆதரவாக ரோம் நகரத்திற்குப் பிரெஞ்சுப் படை ஒன்றை அனுப்பி வைத்தார். அப்படை 1848ஆம் ஆண்டு புரட்சி மூலம் ஏற்படுத்தப்பட்டிருந்த குடியரசு ஆட்சியை அகற்றி மீண்டும் போப்பாண்டவரின் ஆட்சியை ரோம் நகரத்தில் ஏற்படுத்தியது. போப்பாண்டவருக்கு ஆதரவாக அந்த படை 1870வரை ரோம் நகரத்திலேயே நிலை கொண்டு இருந்தது. பிரெஞ்சு நாட்டின் குடிமக்களின் பெரும்பான்மையினராக இருந்த கத்தோலிக்கரின் நல்லெண்ணத்தைப் பெறும் நோக்கில் நெப்போலியன் இந்த நடவடிக்கையை மேற்கொண்டார்.

(ஆ) கிரீமியப் போர் (1854-56)

துருக்கிக்கும், ர்'யாவிற்கும் இடையே கிரீமியப்போர் நடைபெற்றது. பாலஸ்தீனத்தில் உள்ள புனித இடங்களை நிர்வகிப்பது தொடர்பாக ரோமாபுரிக் கத்தோலிக்கத் திருச்சபைக்கும், கிரேக்க வைதீகத் திருச்சபைக்கும் இடையே ஏற்பட்ட சமய பிரச்சனையே கிரீமியப் போருக்கு முக்கிய காரணமாகும். முன்பே குறிப்பிடப்பட்டிருப்பது போல் நெப்போலியன் தன் நாட்டுக் கத்தோலிக்க மக்களின் நல்லெண்ணத்தைப் பெறும் நோக்கில் பாலஸ்தீன விவகாரத்தில் தலையிட்டார். அப்பொழுது பாலஸ்தீனம் துருக்கியின் ஆட்சியின் கீழ் இருந்தது. துருக்கிக்கு உட்பட்ட கிழக்குப் பகுதியில் வாழ்ந்த கிறித்துவர்களின் காப்பாளராகச் செயல்படும் உரிமையைப் பெற்றார். ஆனால் ர்'ய மன்னர் முதலாம் நிக்கோலஸ் அதை எதிர்த்தார். அவரும் துருக்கியின் நிர்வாகத்தின் கீழ் இருந்த கிழக்குப் பகுதியில் ர்'யாவின் செல்வாக்கை வளர்க்க விரும்பினார். அந்நோக்கத்தில் துருக்கியின் தலைநகர் கான்ஸ்டாண்டி நோபிலுக்கு துருக்கி சுல்தானிடமிருந்து சில சலுகைகளைப் பெறுவதற்காகத் தன்னுடைய தூதுவர் மென்ஸ்கோவை அனுப்பினார் மேலும் பல ஆண்டுகளாகத் துருக்கியின் ஆட்சிக்கு உட்பட்ட சிலாவ் இன மக்களின் காவலானாகத் தான் இருந்ததாக இர்'யா கூறிவந்தது.

பாலஸ்தீனம் தொடர்பாக நடந்து வந்த நிகழ்ச்சிகளை அறிந்த இங்கிலாந்து கிழக்குப் பகுதியில் ர்'யாவின் செல்வாக்கைக் கண்டு அச்சம் கொண்டது. ஆகையினால் இங்கிலாந்து, பிரெஞ்சுக் காரர்களுக்கு தன் ஆதரவைத் தெரிவித்தது. இச்செயல்களே கிரீமியப் போருக்கு இட்டுச் சென்றன. ஒரு பக்கம் ர்'யா இருக்க எதிர்புறத்தில் துருக்கிக்கு ஆதரவாகப் பிரான்ஸ் இங்கிலாந்து உட்பட ஏரோப்பாவின் முக்கிய நாடுகள் இருந்தன.

கம்பெனி இந்தியாவின் தலைமை ஆளுநரான டல்கௌசிப் பிரபுவும் இங்கிலாந்திற்கு ஆதரவாக இந்தியப்படை ஒன்றை அனுப்பி இருந்தார். கிரீமியப் போரில் ர'யா தோற்கடிக்கப்பட்டது. 1856இல் 3ஆம் நெப்போலியன் பாரீஸ் மாநாட்டிற்குத் தலைமை ஏற்றார். 1856இல் பாரீஸ் உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது. அதன் மூலம் அமைதி ஏற்பட்டது. கர்வம் கொண்ட 3ஆம் நெப்போலியன் மகிழ்ச்சியடைந்தார். கிரீமியப்போர் மேலும் அவர் செல்வாக்கை உயர்த்தியது.

(,) நெப்போலியனும் இத்தாலியும்

1870ஆம் ஆண்டுக்கு முன்பாக இத்தாலி ஒரு புவியில் சொல்லாகவே இருந்தது. சில தேசியவாதிகளாலும், சார்டினிய மன்னராலும் இத்தாலிய மக்கள் தேசீய ஒருமைப்பாட்டிற்காகப் போராடிக் கொண்டிருந்தார்கள். 3ஆம் நெப்போலியன் இத்தாலிய விவகாரத்தில் தலையிட்டார். பெரிதும் வலுவானதுமான சார்டினியா அரசு இத்தாலிய தேசிய இயக்கத்திற்குத் தலைமை தாங்கியது.

சார்டினியா, ஆஸ்திரியாவை இத்தாலியிலிருந்து வெளியேற்றினால்தான் இத்தாலியை ஐக்கியப்படுத்த முடியும் என்ற நிலை இருந்தது. சார்டினியாவின் தலைமை அமைச்சர் கவுண்ட் காவூர் இத்தாலிய ஐக்கியத்தைச் சாதிக்கும் நோக்கத்தில் 3ஆம் நெப்போலியனுடன் பிளம்பியர்ஸ் என்னுமிடத்தில் 1858இல் ஓர் உடன்பாடு செய்து கொண்டார். ஆஸ்திரியாவை எதிர்த்துச் சார்டினியாவிற்கு உதவுவதாக அவர் உறுதி அளித்தார். அதற்க விலையாக நெப்போலியன் இத்தாலியப் பகுதிகளான நீஸ் மற்றும் செவாய் ஆகியவற்றைக் கேட்டார். இத்தாலிய ஐக்கியம் நிறைவேறவேண்டும் என்றால் ஆஸ்திரியாவால் ஆளப்பட்ட லம்பார்டி, வெனிசியா ஆகியவற்றைச் சார்டினியா கைப்பற்ற வேண்டியிருந்தது. காவூர் ஆஸ்திரியாவை எதிர்த்துப் போரிடத் தன் இராணுவத்தை வலுவாக்கினார். சார்டினியா படைக்குறைப்புச் செய்ய வேண்டும் எனும் ஆஸ்திரியாவின் வேண்டுகோளை அவர் நிராகரித்தார். எனவே 1859இல் ஆஸ்திரியா சார்டினியாவிற்கு எதிராகப் போர் பிரகடனம் செய்தது.

1858ஆம் ஆண்டு உடன்பாட்டின்படி நெப்போலியன் சார்டினியாவின் உதவிக்கு வந்தார். ஆஸ்திரியா, மேஜென்டா, சால்பெரினோ ஆகிய இடங்களில் தோற்கடிக்கப்பட்டு லம்பார்டியின் இருந்து வெளியேற்றப்பட்டது. திடீரென ஐக்கிய இத்தாலியின் தலைமையை அடைய சார்டினியாவின் எழுச்சியை அறிந்த நெப்போலியன் அச்சம் கொண்டு மனம் மாறிப் போரில் இருந்து தனது படையை விலக்கிக்கொண்டு 1859இல் வில்லா பிராங்கா என்ற இடத்தில் ஆஸ்திரியாவுடன் உடன்பாடு செய்து கொண்டார். உடன்பாட்டின்படி ஆஸ்திரியா வெனிசியாவைத் தக்க வைத்துக்கொண்டது. ஆனால், லம்பார்டியின் பெரும் பகுதியைச் சார்டினியாவிடம் ஒப்படைத்தது. 1858ஆம் ஆண்டு உடன்பாட்டின்படி நெப்போலியன் சார்டினியாவிடமிருந்து

நீஸ், செவாய் ஆகியவற்றைப் பெற்றார். நெப்போலியனின் இத்தாலிய கொள்கையைக் கண்டு இத்தாலிய மக்கள் கோபம் கொண்டனர். அயல் நாட்டினரும் சினம் கொண்டனர்.

(ஈ) ருமேனியா

துருக்கியிடமிருந்து சுயாட்சி உரிமையைப் பெற்ற மால்டேவியா, வாலேச்சியா ஆகிய பகுதிகள் ஒன்றுபட்டு ஒரே ஆட்சியின் கீழ் திகழ உரிமை அளிக்குமாறு ஐரோப்பிய நாடுகளைக் கட்டாயப்படுத்தினார். இவ்வாறு அந்த இரண்டு பகுதிகளும்1861இல் இணைக்கப்பட்டு ருமேனியா என்ற நாடு உருவாயிற்று.

(உ) போலந்து

18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிர்'யா, இர்'யா, ஆஸ்திரிய ஆகிய நாடுகள் போலந்து நாட்டைப் பங்கு போட்டுக் கொண்டன. 1795இல் ஐரோப்பிய வரைபடத்தில் போலந்து எனும் தனி நாடு இல்லாமல் போயிற்ற. ஒரு தேசியவாதி எனும் முறையில் 3ஆம் நெப்போலியன் போலந்து நாட்டு மக்களுக்குத் தன் ஆதரவைத் தெரிவித்தார். பிரெஞ்சுத் தாராளவாதியினர் போலந்து நாட்டின் விடுதலைக்கு ஆதரவாக நின்றனர். போலந்தும் ஒரு கத்தோலிக்க நாடு என்பதால் பிரான்சைச் சேர்ந்த கத்தோலிக்கர்களும் போலந்து மக்களுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

1863இல் போலந்து மக்கள் இர்'யாவை எதிர்த்துத் தம் விடுதலைக்காகக் கிளர்ச்சி செய்தனர். ஆனால், நெப்போலியன் போலந்தியர் கிளர்ச்சியின் பொழுது அவர்களுக்கு உதவி செய்யவில்லை. பிர்'யாவும் ஆஸ்திரியாவும் இர்'யாவிற்குத் தம் ஆதரவை நல்கும் என்று நெப்போலியன் அஞ்சியதே அதற்குக் காரணமாகும். அப்படி ஒரு நிகழ்ச்சி நடக்குமேயானால் அது பிரான்சிற்கு அழிவை ஏற்படுத்தும் என்று எண்ணினார். போலந்து நாட்டு மக்கள் நசுக்கப்பட்டனர். பிரெஞ்சுக் கத்தோலிக்கர்களும் தாராளக் கொள்கையினரும் ஏமாற்றம் அடைந்தனர். தன் நாட்டு மக்களிடம் நெப்போலியன் பெயரை கெடுத்துக்கொண்டார்.

(ஊ) மெக்ஸிகோ

அமெரிக்க கண்டத்தில் ஸ்பெயின் பல குடியேற்றங்களை ஏற்படுத்தி இருந்தது. 1823இல் ஸ்பெயின் நாடடின் ஒரு குடியேற்றமான மெக்ஸிகோ விடுதலை அடைந்தது. விடுதலை பெற்ற மெக்சிகர்கள் ஒரு நிலையான அரசாங்கத்தை ஏற்படுத்தவில்லை. அதே நேரத்தில் புனித அணியைச் சேர்ந்த பிர்'யா, ஆஸ்திரியா ஆகிய நாடுகள் மெக்சிகோவில் மீண்டும் ஸ்பெயினின் ஆட்சியைக் கொண்டு வர முயற்சி செய்தார்கள். ஆனால் அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கையான மன்றோ கோட்பாடு புனித அணியின் முயற்சியை முறியடித்தது. அன்றைய அமெரிக்கக் குடியரசுத் தலைவரான மன்றோ புகழ்பெற்ற மன்றோ கோட்பாட்டின் மூலம் இலத்தீன்

அமெரிக்காவில் ஐரோப்பிய நாடுகளில் தலையீடு அமெரிக்க ஐக்கிய நாட்டின் அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் ஆபத்தை உண்டாக்கும் என்று பிரகடனம் செய்தார். அத்தருணத்தில் மெக்சிகோவின் குடியரசுத் தலைவர் ஜுவராஸ் இங்கிலாந்து, ஸ்பெயின், பிரான்சு ஆகிய நாடுகளுக்கு மெக்சிகோ தரவேண்டிய கடனைத் திருப்பித் தர மறுத்தார். ஐரோப்பிய நாடுகள் தம் எதிர்பைக் காட்டின. பிரான்சு ஆஸ்திரிய நாட்டுப் பேரரசர் பிரான்சிஸ் ஜோசப்பின் சகோதரர் மாக்சிமிலியன் தலைமையில் மெக்சிகோவிற்குப் படை ஒன்றை அனுப்பியது. அந்தப் பிரெஞ்சுப் படை ஜுவராசைப் பதவியிலிருந்து அகற்றியது. மாக்சிமிலியான் தன்னை மெக்சிகோவின் ஆட்சியாளராக அறிவித்தார். அமெரிக்க ஐக்கிய நாடுகள் மன்றோ கோட்பாட்டைப் பயன்படுத்தி மெக்சிகோவிலிருந்து வெளியேறுமாறு கட்டாயப்படுத்தியது. வெளியேறத் தயங்கிய மேக்ஸ்மிலியான் 1867-இல் சுட்டுக்கொல்லப்பட்டார். 3ஆம் நெப்போலியனின் மெக்சிக்கோ கொள்கை முழுவதும் தோல்வியடைந்தது.

(எ) நெப்போலியனும் - ஆஸ்திரிய பிர'யப் போரும் (1866)

1866இல் ஆஸ்திரிய பிர'யப் போர் தொடங்கியது. சடோவா (கோன்னிக்கிராட்ஸ்) என்ற இடத்தில் ஆஸ்திரியா தோற்கடிக்கப்பட்டது. ஆஸ்திரியாவை எதிர்த்துப் பிர'யா பெற்ற வெற்றி 3ஆம் நெப்போலியன் திட்டத்தை தவறாக்கியது. ஜெர்மனி எப்பொழுதும் துண்டு துண்டாக இருக்க வேண்டும் என்று நினைத்த நெப்போலியன் ஏமாற்றமடைந்தார். ஆஸ்திரியாவை எதிர்த்து பிர'யா அடைந்த வெற்றி பிரான்சிற்கு ஒரு சவால் என்று எண்ணினார். தனது இராஜதந்திரத் தோல்விக்குப் பிரான்சைப் பழிவாங்க முடிவெடுத்தார். அதுவே 1870-71 பிராங்கோ - பிர'யப் போருக்கு அழைத்துச் சென்றது.

(ஏ) பிராங்கோ-பிர'யப்போர் (1870-71)

முதலாம் வில்லியத்தின் ஆதரவுடன் பிஸ்மார்க்கின் தலைமையில் ஜெர்மனியின் ஐக்கியம் இறுதி நிலையை நெருங்கிக்கொண்டிருந்தது. ஜெர்மனியின் ஐக்கியத்திற்குத் தலைமை தாங்கிய பிர'யாவின் வளர்ச்சி கண்டு நெப்போலியன் பொறாமைக் கொண்டார். நெப்போலியன் பிர'யா தொடர்பான போர்களில் பிரான்சின் நடுநிலைக்காகப் பிர'யாவிடமிருந்து பேலட்டினேட் லக்சமபர்க், பெல்ஜியம் ஆகியவற்றை விலையாகப்பெற விரும்பினார். பிர'யாவின் தலைமை அமைச்சர் பிஸ்மார்க் நெப்போலியன் கோரிக்கைகளை ஏற்க மறுத்துப் பிரான்சை நசுக்கத் தகுந்த சூழ்நிலையை எதிர்நோக்கி இருந்தார். அவர் எதிர்நோக்கிய வண்ணம் 1869இல் ஸ்பெயினில் புரட்சி ஒன்று ஏற்பட்டது. ஐரோப்பிய நாடுகள் பிர'யாவின் ஆளும் வம்சமான கோகன்-ேலென் மரபைச் சேர்ந்த லியோபால் என்பவரை ஸ்பெயின் மன்னராக ஆதரித்தனர். அதை நெப்போலியன் ஏற்கவில்லை. ஒரே வம்சத்தின் ஆட்சியின் கீழ் பிர'யா, ஸ்பெயின் ஆகிய இரு நாடுகளும்

இருக்குமேயானால் இரண்டும் இணைந்து ஒரு வலுவான நாடாகிப் பிரான்சின் பாதுகாப்பிற்கு ஆபத்தை விளைவிக்கும் என்று அஞ்சி லியோபால்டை எதிர்த்தார். மேலும் ஐரோப்பாவில் அதிகாரச் சமநிலையை அது சீர்குலைக்கும் என்று எண்ணினார். பிர'யா லியோபால்டிற்குத் தீவிரமாகத் தன் ஆதரவைத் தெரிவித்தது. இதுவே பிர'யாவிற்கும் பிரான்சிற்கும் இடையே போருக்கு உடனடி காரணமாயிற்று.

1870இல் செடால் போர்களத்தில் பிர'ய இராணுவம் பிரெஞ்சுக்காரர்களை வென்றது. நெப்போலியன் கைது செய்யப்பட்டார். தலைநகர் பாரீஸ் ஜெர்மானியர்களால் கைப்பற்றப்பட்டது. 1871இல் பிராங்பர்ட் உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது. அதன்படி போர் முடிவுற்றது. பிரான்ஸ் ஜெர்மனியிடம் அல்சேஸ், லொரைன், ஆகிய பகுதிகளை இழந்தது. மேலும் பிரான்ஸ் ஜெர்மனிக்கு ஒரு பெரும் தொகையைப் போர் ந்'ட ஈடாகத் தரவேண்டியிருந்தது. 1870இல் செடான் போர்க்களத்தில் நெப்போலியன் தோற்க பிரான்சின் 2ஆம் பேரரசு வீழ்ந்தது. அதே ஆண்டில் அந்நாட்டில் 3 ஆம் குடியரசு நிறுவப்பட்டது. நெப்போலியனின் அரசியல் வரலாறு அத்துடன் முடிவுக்கு வந்தது.

## 2.7 ஐரோப்பாவில் தேசிய இயக்கம்

15,16 ஆம் நூற்றாண்டுகளில் இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின் ஆகியன ஐரோப்பாக் கண்டத்தில் தேசிய அரசுகளாகத் தோன்றின. ஆனால் 19ஆம் நூற்றாண்டிலும் இந்தியாவைப் போல இத்தாலி, ஜெர்மனி ஆகிய 2 நாடுகளும் சிற்றரசுகளாகச் சிதறுண்டு கிடந்தன. சில பெரும் தலைவர்கள் சில ஆட்சியாளர்கள் மற்றும் தேசப்பற்று மிக்க மக்களின் உதவியுடன் மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக இத்தாலி, ஜெர்மனி ஆகிய நாடுகள் 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஐக்கியப்படுத்தப்பட்டது.

(அ) இத்தாலி ஐக்கியம் (1870)

பழைய கால இத்தாலி பெரும் சிறப்புடன் திகழ்ந்தது. கி.மு.753இல் ரோம் நகரம் நிறுவப்பட்டது. ரோம் நகரைத் தலைநகராகக் கொண்டு 3 கண்டங்களைச் சேர்ந்த அநேக நாடுகளை உட்கொண்ட பேரரசு ஒன்று நிறுவப்பட்டது. ஜெர்மானியர்களின் படையெடுப்பு உட்பட பல காரணங்களால் ரோமப் பேரரசு பல சிற்றரசுகளாகச் சிதைந்தது. நெப்போலியனின் இத்தாலிய வெற்றி ஒரு குறுகிய காலத்திற்கு மட்டும் அந்நாட்டை ஒன்றுபடுத்தியது. 1815ஆம் ஆண்டு வியன்னா மாநாடு இத்தாலியைச் சிறு நாடுகளாகச் சிதைக்க இத்தாலி அடுத்த அரை நூற்றாண்டு காலத்திற்கு ஒரு புவியியல் சொல்லாகவே இருந்து வந்தது. நெப்போலியனுக்கு முற்பட்ட ஐரோப்பாவை மீண்டும் கொண்டு வரத் தீர்மானித்த வியன்னா மாநாட்டு தலைவர்கள் இத்தாலியைப் பல சிற்றரசுகளாகப் பிரித்துப் பல ஆட்சியாளர்களிடம் தந்தார்கள்.

வியன்னா மாநாடு பீட்மாண்ட் - சார்டினியா அரசை உருவாக்கியது. அந்த அரசு இத்தாலியின் அரச வம்சத்தைச் சேர்ந்த முதலாம் விக்டர் இமானுவேலுக்குத் தரப்பட்டது. மேலும் சார்டினிய அரசிற்கு நீஸ், சவாய், ஜெனோவா ஆகிய அரசுகளும் கொடுக்கப்பட்டன. சார்டினியாவே இத்தாலிய அரசுகளில் வலுவானதாகத் திகழ்ந்தது. அதுபோலவே லம்பார்டி - வெனிசியா அரசும் தோற்றுவிக்கப்பட்டது. அந்த அரசு ஆஸ்திரியப் பேரரசின் நிர்வாகத்தின் கீழ் வைக்கப்பட்டது. நேப்பிள்ஸ்-சிசிலி பூர்போன் வம்சத்து அரசரின் கீழத் தனி அரசாக உருவாக்கப்பட்டது. அதனால், இத்தாலியில் பிரெஞ்சுச் செல்வாக்கு நிலைநாட்டப்பட்டது. பார்மா, மொடேனா, டஸ்கனி ஆகியவை ஆஸ்திரியாவின் மறைமுக ஆட்சியின் கீழ் வைக்கப்பட்டன.

மேரிலூயி, பார்மாவின் ஆட்சியாளர் ஆனார். ஆஸ்திரிய இளவரசியான அவர் நெப்போலியனின் மனைவி ஆவார். டஸ்கனி, மொடேனா ஆகியன ஆஸ்திரியாவின் காப்ஸ்பர்க் வம்சத்திற்குத் தரப்பட்டன. சுருங்கக் கூறின் இத்தாலியில் ஆஸ்திரியாவின் செல்வாக்கு அதிகரித்தது. போப்பாண்டவருக்கு ரோமக்னா உட்படப் போப்பின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகள் என்று அழைக்கப்படும் அரசுகள் தரப்பட்டன. இத்தாலியச் சிறு அரசுகளின் ஆட்சியாளர்கள், கொடுங்கோலர்களாகவே இருந்தனர். நெப்போலியனின் சீர்திருத்தங்களை அகற்றிய அவர்கள் இத்தாலிய மக்களின் உரிமைகளை நசுக்கினார்கள்.

(ஆ) நெப்போலியன் படையெடுப்பின் தாக்கம்

நெப்போலியனுடைய ஆட்சி, இத்தாலியில், இத்தாலி ஐக்கியம் தொடர்பான நிகழ்ச்சிகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. நெப்போலியனின் இத்தாலியப் படையெடுப்பும் அதன்பின் அங்கே அவரது நிர்வாகமும் இத்தாலிய மக்கள் மத்தியில் தேசிய உணர்வு வளரக் காரணமாயின. மக்கள் மனதில் தேசிய உணர்வை மேலும் பரப்ப இரகசியக் கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டன. கார்பொனரி என்பது இரகசியக் கழகங்களுள் குறிப்பிட வேண்டிய ஒன்றாகும் பிரபுக்கள், பாதிரியார்கள், விவசாயிகள், இராணுவ அதிகாரிகள் உட்பட இத்தாலியப் பகுதியில் இருந்த அனைத்து வகுப்பினரும் கார்பொனரி இரகசியச் சங்கத்தில் சேர்ந்தனர்.

(இ) நேப்பிள்ஸ் புரட்சி

இத்தாலியின் விடுதலைக்காகவும் ஒருமைப்பாட்டிற்காகவும் அழைக்கப்பட்ட இரகசியச் சங்கங்கள் பல இடங்களில் கிளர்ச்சி செய்தன. 1820இல் நேப்பிள்ஸில் புரட்சி வெடித்தது. 1815இல் நேப்பிள்ஸின் (சிசிலியும்) மன்னரான முதலாம் பெர்டினான்ட் சிசிலியின் தாராள அரசியல் சட்டத்தை மதிப்பதாக அளித்த உறுதிமொழியைக் கைவிட்டு 1816இல் அரசியல் அமைப்பை ரத்து செய்தார். அதுவே புரட்சிக்கு இட்டுச்சென்றது. 1820ஆம் ஆண்டு ஸ்பெயினில் ஏற்பட்ட புரட்சி இத்தாலி முழுவதும் பரவியது.

நேப்பிள்ஸ் மக்கள் (இராணுவத்தின் ஆதரவுடன்) ஸ்பெயின் நாட்டு அரசியல் சட்டததைப் போலத் தங்களுக்கும் ஃர் அரசியல் அமைப்பை வேண்டினர். பெர்டினான்ட் புரட்சியாளர்களுக்கு சில சலுகைகளை வழங்கினார். எப்படியிருப்பினும் 1820இல் டிராப்போவில் கூடியிருந்த ஐரோப்பியக் கூட்டிணைவு நாடுகளுக்கு இரகசியச் செய்து ஒன்றை அனுப்பினார். தான் தன் நாட்டைவிட்டு தப்பிப் போவதாகவும் மீண்டும் நேப்பிள்ஸில் முடியாட்சி ஆஸ்திரியாவின் உதவியுடன் நிறுவப்படவேண்டும் என்றும் ஐரோப்பியக் கூட்டு அமைப்பிற்குத் தெரிவித்தார். 1820இல் அவர் லெய்பாவிற்குக் கிளம்பியவுடன் நேப்பிள்ஸிற்கு ஆஸ்திரியப் படை ஒன்று அனுப்பப்பட்டது. புரட்சி அடக்கப்பட்ட பெர்டினாö்ன்ட் மீண்டும் ஆட்சியில் அமர்த்தப்பட்டார். அரசியல் அமைப்பு இரத்துச் செய்ப்பட்டது.

(ஈ) பீட்மாண்டில் புரட்சி

1821இல் பீட்மாண்டில் புரட்சி வெடித்தது. மக்கள் நேப்பிள்ஸில் ஏற்பட்ட புரட்சியை அடக்க வந்த ஆஸ்தியப் படையைத் தாக்க இருந்தனர். அப்புரட்சியும் தோல்வியுற்றது. விக்டர் இமானுவேல் தன்னுடைய சகோதரர் சார்லஸ் பெலிக்ஸிற்கு ஆதரவாகப் பதிவயை இராஜினாமாச் செய்தார். சார்லஸ் ஆல்பர்ட் என்பவரைப் பீடமாண்டின் அரியணையில் அமைர்த மக்கள் மேற்கொண்ட முயற்சி வெற்றி பெறவில்லை.

(உ) லம்பார்டியில் புரட்சி

லம்பார்டியிலும் புரட்சி ஒன்று வெடித்தது. ஆனால் அப்புரட்சி ஆஸ்திரியாவால் வெற்றிகரமாக நசுக்கப்பட்டது. புரட்சியின் தலைவர்கள் ஆஸ்திரியாவில் சிறை வைக்கப்பட்டனர். நூற்றுக்கணக்கான அரசியல் கைதிகள் லம்பார்டியில் சிறை வைக்கப்பட்டனர்.

உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்

1. ஏ-லா-சபேல் என்றால் என்ன?

2. வெண்பயங்கரம் என்றால் என்ன?

## 2.8 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

☐ 1818இல் ஐரோப்பியக் கூட்டமைப்பின் முதல் கூட்டம் ஏ-லா-சபேல் எனும் இடத்தில் நடைபெற்றது. அம்மாநாட்டைவிட சிறந்த வேறொரு மாநாட்டைதான் ஒரு போதும் கண்டதில்லை என்று, மெட்டர்னிக் வர்ணித்தார். கூட்டமைப்பின் உறுப்பு நாடுகள் ஐரோப்பிய விவகாரங்களைத் தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தன. அம்மாநாட்டில் இடம்பெற்ற முக்கியப்பிரச்சனை பிரான்ஸ் தொடர்பானதே ஆகும்.

☐ 1815 ஆம் ஆண்டில், நெப்போலியன் இறுதியாக வாட்டர்லூப் போரில் தோல்வியுற்ற செய்தி பிரான்சை எட்டியது. தீவிரவாதிகள் உடனடியாக வன்முறையில் இறங்கினர். பூர்போன் மரபை ஆதரித்த அத்தீவிரவாதிகள் போனபார்ட் மரபினை கடுமையாகத் தாக்கினர். அதுபோலவே கத்தோலிக்கர்கள் பிராட்டஸ்டெண்டுகளைத் தாக்கினர். சுருங்கச் சொல்லின் நாடு முழுவதும் வன்முறையும் கொலையும் தாண்டவமாடின. இந்நிகழ்ச்சியே வெண் பயங்கரம் அல்லது வெள்ளைப்பயங்கர ஆட்சி என்று பெயர் பெற்றது.

## 2.9 சுருக்கவுரை

☐ பாராளுமன்றத்தின் தாயகமாக அழைக்கப்படும் இங்கிலாந்து நாட்டின் பாராளுமன்ற சீர்திருத்தங்கள் மீது 1830 ஆம் ஆண்டு ஜுலை புரட்சி பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கதாகும்.

☐ 1830ஆம் ஆண்டு ஜுலைப் புரட்சியின் ஒரு முக்கிய விளைவாக லூயி பிலிப் பிரெஞ்சு மன்னர் ஆனார். அவருடைய ஆட்சிக்கு ஜுலை முடியாட்சி என்று பெயரும் உண்டு. அவர் 18 ஆண்டுகள் ஆட்சியில் இருந்தார்

☐ மாவீரன் நெப்போலியனின் அண்ணன் மகன் லூயி நெப்போலியன் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரது நிர்வாகத்தின் தொடக்க காலத்தில் பிரான்சில் பல சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## 2.10 முக்கிய வார்த்தைகள்

புனித உடன்பாடு, ஐரோப்பிய கூட்டமைப்பு, ஏ-லா-சபேல் கூட்டம், 1830 ஆம் ஆண்டுப் புரட்சி, 1848 ஆம் ஆண்டுப் புரட்சி, செயிண்ட் கிளவுட்ஸ், கார்பொனரி

## 2.11 தன்மதிப்பீட்டு வினாக்கள்

சுருக்கமான கேள்விப் பதில்கள்

1. 1848 ஆம் ஆண்டுப் புரட்சி பற்றி விளக்குக?

2. ஐரோப்பிய தேசிய ,யக்கம் பற்றி குறிப்பு வரைக?

விரிவான கேள்விப் பதில்கள்

1. ஐரோப்பிய கூட்டமைப்பின் சாதனைகளைப் பற்றிக் கட்டுரை வரைக?

2. புனித உடன்பாடு பற்றி மதிப்பிடுக?

## 2.12 மேலும் படிக்க


- C.J.H. Hayes.(1916). History of Europe. New York: Macmillan Company
- C.D.M. Ketelbey. (1994). A History of Modern Times from 1789. Oxford: Oxford University Press
- V.D.Mahajan. (1975). History of Modern Europe Since 1789. New Delhi: S.Chand&Co(Pvt LTD)

# தொகுதி I நெப்போலியன் போனபார்ட் சீர்திருத்தங்கள் மூன்றாம் நெப்போலியன் போனபார்ட் முடிய

# அலகு -3 இத்தாலி, ஜெர்மனி ஐக்கியங்கள்

**கட்டமைப்பு**

3.0 அறிமுகம்
3.1 நோக்கங்கள்
3.2 இத்தாலியின் ஐக்கியம்
3.2.1 ரிசார்ஜிமென்டோ
3.3 மாசினி
3.4 ஜெர்மனியின் ஐக்கியம்
3.4.1 கிரிமியப் போர்
3.4.2 ஆஸ்திரியாவுடன் போர்
3.4.3 நேப்பிள்ஸ், சிசிலி, மற்றும் போப்பின் அரசுகள் இணைப்பு
3.4.5 வெனிீயாவை இணைத்தல்
3.4.6. ரோம் வெற்றியும் - ஐக்கியத்தின் நிறைவும்
3.5. ஜெர்மனியின் ஐக்கியம்
3.5.1ஜெர்மனியின் ஐக்கியத்திற்கு வழிவகுத்த சூழ்நிலைகள்
3.5.2 ஜெர்மானிய இணைவு வெற்றி பெற பிஸ்மார்க் தொடுத்த 3 போர்கள்
3.5.3 பிராஸ்பர்ட் உடன்படிக்கை
3.6 பிஸ்மார்க்
3.6.1 பிஸ்மார்க்கின் வாழ்க்கைக்குறிப்பு
3.6.2 பிஸ்மார்க் கொள்கை
3.6.3 பிஸ்மார்க்கும் ஜெர்மானியின் ஐக்கியமும்
3.6.4 அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்கள்
3.6.5 பிஸ்மார்க்கும் சமதர்மக்கொள்கையும்
3. 7 பேரரசர்களின் உடன்படிக்கை
3.8 பிஸ்மார்க்கின் வீழ்ச்சி
3.8.1 மதிப்பீடு
3.9 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்
3.10 சுருக்கவுரை
3.11 முக்கிய வார்த்தைகள்
3.12 தன்மதிப்பீட்டு வினாக்கள்
3.13 மேலும் படிக்க

## 3.0. அறிமுகம்

உரோமின் தலைமையின் கீழ் இயங்கிய பண்டைய இத்தாலியப் பேரரசு மத்திய காலத்தில் பலப் பிரிவுகளாக சிதறுண்டன. நெப்போலியனின் படையெடுப்பிற்குப் பின் சிதறிருந்த இத்தாலிய சிற்றரசுகளை ஒன்றிணைத்தார். இவ்வொன்றிணைப்பு சிறிது காலமே நீடித்தது. இந்த பிரிவுகள் 1815 இல் வியன்னா மாநாட்டிற்கு விவாதிக்கப்பட்டது எனினும் இம்மாநாடு ஐக்கியப்படுத்தலில் தோல்வியே கண்டது. உலக நிலப்படத்தில் பல கூறுகளாக இத்தாலி பிரிக்கப்பட்ட நிலையே நீடித்து வந்தது. முதலாம் பெர்டினாண்ட் சிசிலியையும் நேப்ள்சையும் தக்க வைத்துக்கொண்டார்.இதே போன்று ரோமின் போப்பாண்டவர் தனக்கு உரிய பகுதியாக ரோமைத் தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டார். ஆஸ்திரியாவுடன் லம்பார்டியும்

வெனிசும் இணைக்கப்பட்டது. சார்டினியாவும் ஜெனிவாவும் பீட்மண்டுடன் இணைக்கப்பட்டது. இதன் மூலம் ஆஸ்திரியாவின் ஆதிக்கத்திற்கு பெரும்பாலும் இத்தாலி உள்ளானது.

## 3.1 நோக்கங்கள்

இந்த அலகை படித்து முடித்த பின்பு உங்களால்

☐ இத்தாலியின் ஐக்கியத்திற்கான காரணங்களையும் கவூர் மற்றும் கரிபால்டியின் பங்களிப்பையும் அறிய இயலும்

☐ இத்தாலிய ஐக்கியத்திற்கான இட்டுச்சென்ற நிகழ்ச்சிகளை அறிய இயலும்

☐ பிஸ்மார்க்கின் பங்களிப்பையும்ஜெர்மனியின் ஐக்கியத்தையும் விரிவாக அறியலாம்

☐ பிரங்கோ- பிரஸ்யப் போரினை அறிய இயலும்

☐ பீஸ்மார்க்கின்சீர்த்திருத்தங்களை அறிய இயலும்

## 3.2 இத்தாலியின் ஐக்கியம்

1830ஆம் ஆண்டு ஜுலைப் புரட்சி இத்தாலியன் பல பகுதிகளின் மீது அதன் தாக்கத்தை ஏற்படுத்தியது. போப்பின் அரசுகளிலிருந்து பீடமாண்ட், பார்மா மொடேனா ஆகிய இத்தாலியப் பகுதிகளுக்கு புரட்சி பரவியது. போப் ஆஸ்தியரியாவின் உதவியை நாடினார். ஆஸ்திரியப் படையின் உதவியுடன் மெட்டர்னிக்கின் கருணையால் போப் மீண்டும் ஆட்சியில் அமர்த்தப்பட்டார். 4ஆம் பிரான்சிஸ் மொடேனாவையும் மேரி லூயி பார்மாவையும் மீண்டும் பெற்றன. ஆஸ்திரிய படை வெளியேறிய பிறகு மீண்டும் புரட்சி வெடித்தது. ஆனால் அப்புரட்சி மீண்டும் பிரெஞ்சு மற்றும் ஆஸ்திரியத் துடுப்புகளின் உதவியால் அடக்கப்பட்டது. 1830இல் புரட்சிக்காரர்கள் முறைப்படியும் ஒற்றுமையாகவும் செயல்படாதால் புரட்சி தோல்வியடைந்தது. புரட்சியில் பொதுமக்கள் பங்கேற்கவில்லை. அதுவும் தோல்விக்கு ஒரு காரணமாகும். புரட்சியின் போது சில தலைவர்கள் மட்டுமே குரல் எழுப்பினர்.

### 3.2.1 ரிசார்ஜிமென்டோ (புத்துயிர்ப்பு இயக்கம்)

இவ்வியக்கம் விடுதலை மற்றும் ஐக்கியம் ஆகியவற்றை இலட்சியமாகக் கொண்டு இயங்கியது. ரோமானியர்களின பழம் பெருமையை மக்கள் மத்தியில் எடுத்து இயம்பி ஆதரவு திரட்டியது. மக்கள் உள்ளத்தில் தேசப்பற்றையும், நாட்டுணர்வையும் எட்டியது. தாராள மக்களாட்சி அரசையும், பாராளுமன்ற ஆட்சியையும் ஆதரித்தது. மத்திய வகுப்பினரின் பொருளாதார மேம்பாட்டையும் அறிவு, அறிவியல்

வளர்ச்சியையும் ஆதரித்தது. காலப்போக்கில் இத்தாலிய மக்கள் அரசியல் முதிர்ச்சி பெற்றனர். மாசினி, காவூர், கரிபால்டி ஆகிய தலைவர்கள் விடுதலை இயக்கத்தை நடத்திச் சென்றனர். சார்டினிய மன்னர் விக்டர் இமானுவேல் ஒரு வலுவான தலைமையை நல்க இத்தாலிய ஐக்கியம் நிறைவேறியது.

## 3.3 மாசினி (1805-1872)

1805இல் ஜெனோவாவில் மாசினி பிறந்தார். தொடக்கத்தில் இருந்தே இத்தாலிய ஐக்கியத்தில் ஆர்வம் கொண்டார். தாந்தே, ஷேக்ஸ்பியர், கோத்தே, யூகோ போன்ற விசித்திரமான சாகசக் கற்பனைக் கதை எழுத்தாளர்களின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டார். கார்பனரி இயக்கத்தில் சேர்ந்து இத்தாலியின் விடுதலைக்காகத் தீவிரப் பங்காற்றினார். 1830ஆம் ஆண்டு ஜுலைப் புரட்சியில் பங்கு கொண்ட அவர் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். 1831இல் இளம் துருக்கியர் இயக்கத்தைத் தொடங்கினார். அந்நாட்டு இளைஞர்கள் இத்தாலிய இயக்கத்தை நிலைநாட்டுவர் என்பதில் திடமான நம்பிக்கை கொண்டார். இளைஞர்களின் முயற்சியினால் இத்தாலியை ஐக்கியப்படுத்தி ஒரு குடியரசு ஒன்றை நிறுவமுடியும் என்று எண்ணினார். ஐரோப்பாக் கண்டத்தில் ரோமைச் சிறந்த நகராக ஆக்க விரும்பினார். சீரும் சிறப்புமாகத் திகழ்ந்த முதல் ரோம் (பழைய காலம்) சீசர்களின் ரோம் என்றும் (அகஸ்டஸ் சீசர் போன்ற அரசர்களின் இரண்டாம் ரோம் (இடைக்காலம்) போப்பாண்டவர்களின் ரோம் என்றும் மூன்றாவது ரோம் (தற்காலம்) இத்தாலிய மக்களின் ரோம் என்றும் அவர் குறிப்பிட்டார். இத்தாலிய ஐக்கியம், மற்றும் விடுதலையைச் சமயம் சார்ந்த புனிதமான ஒன்றாகவே கருதினார். நாட்டின் விடுதலைக்காக உயிர் துறக்கவும் தயாராக இருந்தார். இத்தாலி விரைவில் ஒன்றுபடவேண்டும் என்றால் இத்தாலியிலிரந்து முதலில் ஆஸ்தியாவின் செல்வாக்கை அகற்ற வேண்டும் என்று கருதினார் சுருங்கக்கூறின் மாமேதை மாசினியும் அவரது இளம் இத்தாலியர் அமைப்பில் இளைஞர்களும் இத்தாலி முழுவதும் நாட்டுப்பற்று எனும் சுடர் ஒளிவீச அரும்பாடு பட்டனர்.

### (அ) 1848ஆம் ஆண்டுப் புரட்சி

1848ஆம் ஆண்டில் பிப்ரவரியில் மீண்டம் புரட்சி ஏற்பட்டது. அப்பிப்ரவரிப் புரட்சியின் விளைவாகப் பிரான்சில் 2ஆம் முறையாகக் குடியரசு நிறுவப்பட்டது. வழக்கமாக 1848ஆம் ஆண்டுப் புரட்சியும் ஐரோப்பாவின் அநேகப் பகுதிகளில் எதிரொலித்தது. நேப்பிள்ஸ் - சிசிலியில் மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். போப்பாண்டவரின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட மக்கள் சீர்திருத்தம் வேண்டினர். டஸ்கனி, பீட்மாண்ட் அரசுகளில் மக்கள் புதிய அரசியல் சட்டம் வேண்டினர். ஆஸ்திரியாவின் தலைநகர் வியன்னாவில் புரட்சி ஏற்பட்டு ஐரோப்பாவின்

காவலர் (புரட்சிக்கு எதிரானவர்) என்று அழைக்கப்பட்ட ஆஸ்திரியாவின் தலைமை அமைச்சர் மெட்டர்னிக், இலண்டனில் அடைக்கலம் புகுந்தார். அவர் ஆடிய அரசியல் ஆட்டம் அத்துடன் முடிந்தது. மிலானிலும் புரட்சி ஏற்பட வரலாற்றில் வயது முதிர்ந்த தளபதிகளுல் ஒருவராகக் கருதப்படும், ரேடட்ஸ்கியின் தலைமையில் இருந்த ஆஸ்திரியப்படை, மிலானை விட்டு வெளியேறியது. வெனிசில் புரட்சியின் விளைவாச குடியரசு நிறுவப்பட்டது. மொடோனா, பார்மா ஆகியவற்றின் அரசர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். நெப்போலியன் வீழ்ச்சிக்குப் பிந்திய காலத்தில் இத்தாலியை ஆட்டிப்படைத்த ஆஸ்திரியா அதனால் அவமானத்திற்கு உள்ளாயிற்று, ஆஸ்திரியாவின் ஆதிக்கத்தை முழுவதும் அழிக்க இத்தாலிய மக்கள் ஆஸ்திரியாவிற்கு எதிராகப் போரிடத் தீர்மானித்தனர். ரோமில் போப்பின் ஆட்சி அகற்றப்பட்டு மாசினியின் தலைமையில் குடியாட்சி நிறுவப்பட்டது.

1848இல் சார்டினியாவின் மன்னர் சார்லஸ் ஆல்பர்ட் ஆஸ்திரியாவிற்கு எதிராக போர் அறிவித்தார். ஆனால் விரைவில் கஸ்டோசா போர்க்களத்தில் தோற்கடிக்கப்பட்டார். லம்பார்டி, வெனிசியா ஆகியன மீண்டும் ஆஸ்திரியாவின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. 1849 மார்ச்சில் ஆல்பர்ட் மீண்டும் ஆஸ்திரியாவிற்கு எதிராக போர் தொடுத்தார். நொவாரா என்ற இடத்தில் அவர் தோற்கடிக்கப்பட்டார். அத்தோல்விக்குப் பிறகு தன்மகன் 2ஆம் விக்டர் இமானுவேலுக்கு அறிவிட்டு அவர் பதவி துறந்தார். டஸ்கனியில் மீண்டம் அதன் ஆட்சியாளர் பதவிக்குக் கொண்டுவரப்பட்டார். அது போலவே பிரெஞ்சு பேரரசர் 3ஆம் நெப்போலியனின் உதவியோடு போர் மீண்டும் ரோமாபுரியை ஆஸ்திரியா லெனிசைக் கைப்பற்றியது. சார்லஸ் ஆல்பர்ட், விக்டர் , இமானுவேல், மாசினி, கரிபால்டி போன்றோரின் திறன்மிகு தலைமை இருந்த போதிலும் 1848ஆம் ஆண்டுப் புரட்சி இத்தாலியில் தோல்வி கண்டது. 1848ஆம் ஆண்டுக்குப் பிந்தைய கால இத்தாலிய விடுதலை இயக்கம் கவூரின் சீரிய தலைமையில் மன்னர் விக்டர் இமானுவேலின் உதவியுடனும், மாசினி, கரிபால்டி போன்ற மக்கள் தலைவர்களின் ஆதரவுடனும் மகத்தான வெற்றி பெற இத்தாலி 1870இல் வெற்றிகரமாக ஐக்கியப்படுத்தப்பட்டது.

### (ஆ) கவூர்

இத்தாலியின் ஐக்கியத்திற்கு அரும்பணி ஆற்றியவர்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கவர்களுள் கவூர் ஒருவர். அவர் சார்டினிய மன்னர் 2ஆம் விக்டர் இமானுவேலுக்கு, 1861 முதல் தலைமை அமைச்சராகத் திறமையைôக செயல்பட்டார். கவூர் இத்தாலியின் பிஸ்மார்க் என்று அழைக்கும் பேரினைப் பெற்றார். அவர் மாசினியின் புரட்சிக் கருத்துக்களை ஆதரிக்கவில்லை. இத்தாலிய ஐக்கியத்தை இராணுவ பலத்தின் மூலமும் அயல்நாடுகளின் ஆதரவு மூலம் மட்டுமே அடைய முடியும் என்று கருதினார். சார்டினியாவின் ஆளும் வம்சமான சவாய்

வம்சத்தின் தலைமையின் கீழ்தான் ஆஸ்திரியா, பிரான்சு ஆகிய நாடுகளின் பிரிடியிலிருந்த இத்தாலியை விடுதலை செய்ய முடியும் என்று நம்பினார்.

(,) கரிபால்டி

இத்தாலியின் ஐக்கியத்திற்கு அரும்பணி ஆற்றிய பெரும் தலைவர்களுள் கரிபால்டியும் ஒருவர். பிறந்த காலம் தொட்டே புரட்சியில் ஈடுபாடு உடையவர். மாசினியின் இளம் இத்தாலி இயக்கத்தின் ஆதரவாளர். பல புரட்சிச் செயல்களில் அவர் பங்கு கொண்டார். 1834இல் அவர் கைது செய்யப்பட்டு மரண தண்டனை அளிக்கப்பட்டார். ஆனால் அவர் தென் அமெரிக்காவுக்குத் தப்பிச் சென்றார். 1848இல் மீண்டும் புரட்சி ஏற்பட்டபொழுது இத்தாலி திரும்பினார். மீண்டம் ஆஸ்திரியப் படைகளிடமிருந்து தப்பித்து அமெரிக்க அடைந்தார். 1854இல் மீண்டம் இத்தாலி திரும்பினார். குடியரசு ஆட்சியில் நிறைந்த நம்பிக்கை உடையவராக இருந்த போதிலும் தேசிய ஒருமைப்பாட்டின் நலனைக் கருத்தில் கொண்ட தன் குடியரசுக் கொள்கைகளைக் கைவிட்டார்.

## 3.4 இத்தாலிய ஐக்கியத்திற்கு இட்டு சென்ற நிகழ்ச்சிகள்

1850ஆம் ஆண்டிற்குப்பின் இத்தாலியில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் 1870ஆம் ஆண்டில் இத்தாலிய ஐக்கியத்தில் முடிந்தன. அவற்றுள் முக்கியமானவை

- ☐ கிரிமியப்போர் (1854-56)
- ☐ ஆஸ்திரிய - சார்டினிய போர் (1859-60)
- ☐ நேப்பிள்ஸ் - சிசிலி இணைப்பு (1860)
- ☐ வெனிீயா இணைப்பு (1860)
- ☐ ரோமாபுரி வெற்றியும் ஐக்கியத்தின் நிறைவும்

### 3.4.1 கிரிமியப் போர் (1854-56)

1854இல் துருக்கிக்கும், ர்'யாவிற்கும் இடையே போர் தொடங்கியது. 1856வரை அப்போர் கிரிமியாவில் நடந்தது. அதற்கு கிரிமியப் போர் என்று பெயர். இங்கிலாந்து, பிரான்சு போன்ற முக்கிய ஐரோப்பிய நாடுகள் துருக்கிக்கு ஆதரவாகப் போரிட்டன. இத்தாலியப் பகுதியின் அன்றைய வலுமிகு நாடாகத் திகழ்ந்த சார்டினிய மன்னர் 2ஆம் விக்டர் இமானுவேலுவின் திறன்மிகு தலைமை அமைச்சரான கவூர் ர்'யாவை எதிர்த்துத் துருக்கிக்கு ஆதரவாகப் போரிடத் தீர்மானித்தார். அவர் அம் முடிவு எடுத்ததற்கு முக்கிய காரணங்கள் எதிர்காலத்தில் இத்தாலியின் ஐக்கியத்தின் பொருட்டு ஆஸ்திரியாவை எதிர்த்துத் தொடுக்கும் போருக்கு இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாடுகளின் ஆதரவைப் பெறுவதும் ஐரோப்பிய

நாடுகளின் அங்கீகாரத்தைச் சார்டினியாவிற்குப் பெற்றுத் தருவதும் ஆகும். கவூர் எதிர்பார்த்தது போலவே ர்'யா தோற்கடிக்கப்பட்டது. அமைதி உடன்பாட்டிற்காகப் பாரிஸ் நகரில் குடியேறிய ஐரோப்பிய நாடுகள் சார்டினியாவின் பங்கை மதித்து அங்கீகரித்தன. கிரீமியப் போரில் சார்டினியாவின் பங்கு அவரது அரசியல் சூழ்ச்சிக்குக் கிடைத்த வெற்றி ஆகும்.

### 3.4.2 ஆஸ்திரியாவுடன் போர் (1859-60)

கவூர் எதிர்பார்த்தது போல சார்டினியாவிற்குப் பிரான்சின் ஆதரவு கிடைத்தது. கவூர் 1858இல் பிரான்சின் 3ஆம் நெப்போலியனோடு ∴ர் உடன்பாடு செய்து கொண்டார். அந்த உடன்பாட்டின்படி (பிளம்பியர்ஸ்) நெப்போலியன் ஆஸ்திரியாவுக்கு எதிராக சார்டினியாவுக்கு உதவ முன்வந்தார். அவரது உதவிக்கு ஈடாகப் போரின் முடிவில் இத்தாலியிடமிருந்து நைஸ், சவாய் ஆகியவற்றைப் பெற இருந்தார்.

கவூர் அவரது திட்டப்படி ஆஸ்திரியாவுக்கு எதிராக வலுவான படை ஒன்றை உருவாக்கினார். அப்படையின் உதவியுடன் ஆஸ்திரியாவின் ஆட்சியின் கீழ் இருந்த வெனிீயா லம்பார்டி ஆகியவற்றை விடுவிக்க தீர்மானித்தார். ஆஸ்திரியா சார்டீனியாவை அதன் படையைக் குறைக்குமாறு கூறிற்று. அதைக் கவூர் நிராகரித்தார். ஆகையினால், 1859இல் சார்டீனியாவிற்கு எதிராக ஆஸ்திரியா போர்ப் பிரகடனம் செய்தது. நெப்போலியன் ஒரு படையுடன் சார்டீனியாவின் உதவிக்கு வந்தார். ஆஸ்திரியா மேஜன்டா சால்பரினோ ஆகிய இடங்களில் தோற்கடிக்கப்பட்டது. லம்பார்டியிலிருந்து ஆஸ்திரியா வெளியேற்றப்பட்டது. ஐக்கிய இத்தாலியின் எழுச்சியை எண்ணி நெப்போலியன் அச்சம் கொண்டார். எனவே திடீரெனத் தனது மனதை மாற்றிக்கொண்டு போரில் இருந்த தன் படையைத் திருப்பி அழைத்துக்கொண்டார். 1859இல் ஆஸதிரியாவுடன் வில்லா பிராங்கா என்ற இடத்தில் ∴ர் உடன்பாடு செய்து கொண்டார். அதன்படி ஆஸ்திரியா வெனிீயாவைத் தக்க வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டது. ஆனால் லம்பார்டியின் பெரும்பகுதியைச் சார்டினியாவிற்குத் தர ஒத்துக்கொண்டது. இந்த ஆஸ்திரிய-சார்டினியாப் போரைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட பார்மா, மொடேனா, டஸ்கனி, ரோமக்னா ஆகிய அரசுகளிலிருந்த மக்கள் ஆட்சியாளர்களை விரட்டியடித்தனர். அந்நான்கு அரசுகளும் சார்டினியாவுடன் இணைந்தன. போரின் இடையில் வெளியேறிய நெப்போலியன் சார்டினியாவிற்குத் துரோகம் செய்த போதிலும் அளிக்கப்பட்டிருந்த உறுதியின்படி நைஸ், செவாய் ஆகியவற்றைப் பெற்றார்.

### 3.4.3 நேப்பிள்ஸ், சிசிலி, மற்றும் போப்பின் அரசுகள் இணைப்பு (1860)

ஏனைய இத்தாலிய அரசுகளை இணைக்கும் தன் முயற்சிக்குக் கரிபால்டியின் உதவியை நாடுவதென கவூர் தீர்மானித்தார். 1860ஆம் ஆண்டு சிசிலி மக்கள் அரசர் 2ஆம் பிரான்சிற்கு எதிராகப் புரட்சி செய்தனர். கவூர் சிசிலிக்குக் கரிபால்டியை அவரது செஞ்சட்டை வீரர்களுடன் அனுப்பி வைத்தார். கரிபால்டி தன் 1000 செஞ்சட்டை வீரர்கள் மற்றும் சிசிலி மக்களின் உதவியுடன் நேப்பிள்ஸ்- சிசிலி அரசுகளை வென்றார். அவ்வெற்றிக்குப் பின் போப்பின் தலைமை இடமான ரோமைத் தாக்கத் திட்டமிட்டார். அதே நேரத்தில் சார்டினிய மன்னர் விக்டர் இமானுவேல் இத்தாலியின் தென் பகுதிக்குப் படை எடுத்துச் சென்றார். சார்டினியப் படை போப்பின் படையை கேசில்பிடார்டோ என்ற இடத்தில் தோற்கடித்தது. ஒரு பொதுஜன வாக்கெடுப்பு மூலம் போப்பின் ஆட்சிக்கு உட்பட்ட மக்கள் சார்டினியாவுடன் இணைவது என முடிவு செய்தனர். ரோம் நீங்கலாகப் போப்பாண்டவரின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட அரசுகள் சார்டினியாவுடன் இணைக்கப்பட்டன. சார்டினிய மன்னர் விக்டர் இமானுவேலுவைச் சந்தித்த கரிபால்டி அவர் வென்ற பகுதிகளை அவரிடம் ஒப்படைத்து அவரை இத்தாலிய மன்னராக வாழ்த்தினார். 1860 ஆம் ஆண்டில் வெனிீயா, ரோம் ஆகியவை நீங்கலாக இத்தாலியின் அனைத்துப் பகுதிகளும் ஐக்கியப்படுத்தப்பட்டன.

### 3.4.5 வெனிீயாவை இணைத்தல்

இத்தாலி, ஜெர்மனி ஆகிய இரண்டு நாடுகளிலும் தேசிய இயக்கங்கள் ஒரே காலத்தவை. 1866இல் ஜெர்மனியின் இரும்பு மனிதர் பிஸ்மார்க் ஆஸ்திரியாவைப் போருக்கு இழுத்தார். இத்தாலியின் இரும்பு மனிதர் எனும் சிறப்பிற்குரிய கவூர் ஆஸ்திரியாவிற்கும், பிர்'யாவிற்கும் இடையே நடைபெற்ற அப்போரில் பிர்'யாவிற்குத் தன் ஆதரவைத் தெரிவித்தார். பிர்'யா ஆஸ்திரியாவை வென்றது. சார்டினியா கஸ்டோசா என்ற இடத்தில் ஆஸ்திரியாவால் தோற்கடிக்கப்பட்டது. 1866 ஆகஸ்டில் போரின் முடிவில் பிரேக் உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது. அவ் உடன்பாட்டின்படி தனக்கு உதவி செய்த சார்டினியாவிற்கு (இத்தாலி) வெனிீயாவை ஆஸ்திரியாவிடமிருந்து பிர்'யா பெற்றுத் தந்தது.

### 3.4.6. ரோம் வெற்றியும் - ஐக்கியத்தின் நிறைவும்

ரோம் போப்பாண்டவரின் ஆட்சியின் கீழ் இருந்து வந்தது. பிரெஞ்சு மன்னன் 3ஆம் நெப்போலியன் போப்பாண்டவருக்கு ஆதரவாக ரோம் நகரில் 1849 முதல் பிரெஞ்சுப்படை ஒன்றை நிறுத்தி வைத்திருந்தார். மன்னர் விக்டர் இமானுவேல் ரோம் நகரை இத்தாலியின் தலைநகராக்க விரும்பினார். ஆனால் பிரான்சுடன் போரில் ஈடுபட அவர் தயங்கினார். ஜெர்மானிய ஐக்கியத்தின் இறுதிநிலையிலிருந்த பிஸ்மார்க் 1870இல்

பிரான்சைப் போருக்கு இழுத்தார். பிஸ்மார்க்கை எதிர்த்து போரிடும் நோக்கில் நெப்போலியன் ரோமில் தான் நிறுத்தி வைத்திருந்த படையைத் திருப்பி அழைத்தார். 1870-71இல் நடைபெற்ற பிராங்கோ- பிர'யப் போரில் பங்கு கொள்ளப் பிரஞ்சுப் படை விலகியவுடன் விக்டர் - இமானுவேல் ரோமாபுரியைக் கைப்பற்றினார். இவ்வாறு 1870இல் இத்தாலிய ஐக்கியம் நிறைவுபெற்றது. அழியா நகர் என்று அழைக்கப்படும் ரோம் இத்தாலியின் தலைநகராக அறிவிக்கப்பட்டது.

## 3.5. ஜெர்மனியின் ஐக்கியம்

19ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் ஜெர்மானிய இணைவு முக்கியமான ஒன்றாகும். 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஜெர்மனி சுமார் 360 சிற்றரசுகளாகச் சிதறிக் கிடந்தது. டச்சீஸ் (கோட்மன் ஆட்சிப் பகுதி) பிரின்சிபாலிட்டிஸ் (இளவரசரின் ஆட்சிப்பகுதி) எலக்டொரேட்ஸ் (தேர்வாளர் ஆட்சிப்பகுதி)என்று பல்வேறு பெயாகளால் அழைக்கப்பட்டன. கி.பி. 800 முதல் ஜெர்மனியப்பகுதியில் புனித ரோமானியப் பேரரசு முக்கியமான ஒன்றாகத் திகழ்ந்தது. அது 18ஆம் நூற்றாண்டில் மிகவும் வலுவற்ற அரசாகத் திகழ்ந்தது. 1806இல் போப்பாண்டவரின் ஆதிக்கத்தை எதிர்த்த நெப்போலியன் புனித ரோமானியப் பேரரசின் மீது வெறுப்புக் கொண்டு அதை அகற்றினார். 1000 ஆண்டுகளுக்கும் மேல் நிலைத்திருந்த புனித ரோமானியப் பேரரசு இவ்வாறு வீழ்ந்தது. அவ்விடத்தில் நெப்போலியன் 39 சிற்றரசுகளைக் கொண்ட ரைன் கூட்டிணைவை ஏற்படுத்தினார். அக்கூட்டிணைவு தேசிய உணர்வை எழுப்பத் தூண்டுதலாக இருந்தது. ஜெர்மானிய மக்கள் நாட்டுப்பற்றால் உந்தப்பட்டனர்.

1815இல் நெப்போலியன் இறுதியாகத் தோற்கடிக்கப்பட்டார். நெப்போலியனை எதிர்த்து வெற்றி பெற்ற நாடுகள் அதே ஆண்டில் வியன்னாவில் கூடின. ஐரோப்பாவின் வரைபடத்தை மாற்றி அமைத்த வியன்னா மாநாடு ஜெர்மானியப் பகுதியின் அரசியல் முறையில் ஒரு சிறிய மாற்றத்தை மட்டும் செய்தது. அது ரைன் கூட்டிணைவு என்னும் பெயரை ஜெர்மன் கூட்டிணைவு என்று மாற்றியது, ஜெர்மனி கூட்டிணைவு ஆஸ்திரியாவின் ஆதிக்கத்தின் கீழ் வைக்கப்பட்டது. பிற்போக்குவாதியும், மக்களாட்சியின் எதிரியுமாறு ஆஸ்திரியாவின் தலைமை அமைச்சராகச் செயல்பட்ட மெட்டர்னிக் ஜெர்மனியின் ஒருமைப்பாட்டிற்கு தடையாக இருந்தார். எப்படியிருப்பினும் ஜெர்மானியரின் தேசிய உணர்வு, ஜெர்மானிய அறிஞர், இலக்கியவாதிகள், முதலாம் வில்லியம் பிஸ்மார்க் போன்ற தலைவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் ஆகியவற்றின் விளைவாக 1871இல் ஜெர்மனியின் ஐக்கியம் நிறைவேறியது.

### 3.5.1ஜெர்மனியின் ஐக்கியத்திற்கு வழிவகுத்த சூழ்நிலைகள்

ஜெர்மனியின் ஐக்கியத்திற்கு பல்வேறு சூழ்நிலைகள் சாதகமாகத் திகழ்ந்தன.

1. புனித ரோமானியப் பேரரசு-1000 ஆண்டுகளுக்கு மேலாக ஜெர்மனியின் பெரும் பகுதி புனித ரோமானியப் பேரரசின் கீழ் இருந்தது. அதுவே ஜெர்மானியர்கள் ஒன்றுபட்டவர்கள் எனும் உணர்வை ஏற்படுத்தியது.

2. நெப்போலியனின் பங்கு - முன்பே விளக்கப்பட்டிருப்பது போல நெப்போலியன் போனபார்ட் 39 சிற்றரசுகளைக் கொண்ட ரைன் கூட்டிணைவை ஏற்படுத்தினார். அவரது முயற்சியினால் ஜெர்மானிய அரசுகளின் எண்ணிக்கை 360 லிருந்து 39 ஆக குறைந்தது. ஜெர்மானிய ஐக்கியம் விரைவில் முழுமைபெற அது ஓரளவிற்கு காரணமாக இருந்தது.

3. வியன்னா மாநாடு - வியன்னா மாநாடு ஐரோப்பிய நாடுகளின் அரசியல் முறையில் பல மாற்றங்களைச் செய்த போதிலும் ஜெர்மானியப் பகுதியில் பெரிய மாற்றத்தைச் செய்யவில்லை. ரைன் கூட்டிணைவு என்னும் பெயரை ஜெர்மானியக் கூட்டிணைவு என்று மட்டும் மாற்றியது. வியன்னாவின் அவ்வேற்பாடும் ஜெர்மானிய ஐக்கியத்திற்கு பெரிதம் உதவியாக இருந்தது.

4. தத்துவமேதைகள் - ஜெர்மானியத் தத்துவ மேதைகளும், எழுத்தாளர்களும், ஜெர்மானிய மக்கள் மனதில் தேசிய உணர்வை எட்டி வளர்த்தார்கள். அவர்கள் தம் எழுத்து மூலம முற்போக்கு எண்ணங்களை எழுப்பினர். ஜெர்மானியத் தேசிய இயக்கத்தில் பல்கலைக் கழகங்களும், பெரும்பங்க கொண்டன. கல்லூரி மற்றும் பல்கலைக் கழக ஆசிரியர்களும் மாணவர்களும் ஜெர்மனியின் இணைவிற்குத் தம் ஒத்துழைப்பையும் ஆதரவையும் அளிததனர்.

5. ஐரோப்பிய புரட்சிகள் - 1789 ஆம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சி அதே நாட்டில் தோன்றிய ஜுலைப் புரட்சி, பிப்ரவரி புரட்சி (1848) ஆகியன பல்வேறு ஐரோப்பிய நாடுகளின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. ஆஸ்திரியா - ஹங்கேரி, இத்தாலி, பிரான்சு ஆகிய நாடுகளில் மக்கள் அரசியல் சட்டமும் அடிப்படை உரிமைகளும் கோரினர். அது போலவே ஜெர்மானியர்களும் நாட்டுப் பற்றும், தேசிய உணர்வும் கொண்டு நாட்டின் ஐக்கியத்திற்கு அரும்பாடுபட்டனர்.

6. பிர'யாவின் எழுச்சி- ஜெர்மானியின் ஐக்கியத்திற்கு பிர'யா அரும்பாடுபட்டது. ஜெர்மனியின் இணைவிற்குப் பிர'யாவின் எழுச்சி ஒரு முக்கியமான காரணமாகும். ஜெர்மானியப் பகுதிகளுள் இருந்த அரசுகளுள் பிர'யா பலம் பொருந்திய நாடாகத் திகழ்ந்தது. 18ஆம் நூற்றாண்டிலேயே கூடி 2ஆம் பிரெடெரிக் போன்ற வலுமிக்க பேரரசர்கள் பிர'யாவில் சீர்திருத்தங்கள் பலவற்றைக் கொண்டு வந்தனர். பிர'யா ஐரோப்பிய

நாடுகளுக்கு முன் மாதிரியாகத் திகழ்ந்தது. மாமன்னன் பிரெடெரிக் பிர'யாவை ஐரோப்பாக் கண்டத்தில் முதன்மை நாடாக்க முயற்சித்தார் . பிரெடெரிக்கால் உருவாக்கப்பட்ட பிர'யா ஜெர்மனியின் இணைவிற்கு தலைமை தாங்கியது.

7. சால்வரின் எனும் சுங்க ஐக்கியம் - 1834இல் பெரும்பான்மையான ஜெர்மானிய அரசுகள் ஒன்று கூடிச் சால்வரின் என்னும் சுங்க ஐக்கியம் ஒன்றை அமைத்தன. வணிகத் துறையில் நிறுவப்பட்ட இந்த சுரங்க ஐக்கியமே ஜெர்மனியின் ஐக்கியத்தின் முதற்படியாகக் கருதப்படுகிறது. சுங்கவரியை நீக்கி, அதன் மூலம் வர்த்தக வளர்ச்சிக்கு எதிரான தடையை அகற்றி, தடையில்லா வணிகத்திற்கு வழி வகுத்தன.

8. பிராங்பர்ட் பாராளுமன்றம் - 1830ஆம் ஆண்டுப் புரட்சியைப் போல 1848ஆம் ஆண்டுப் புரட்சியும் ஜெர்மானிய அரசுகளில் தாக்கத்தை ஏற்படுத்தியது. பல அரசுகள் தாராள அரசியல் சட்டங்களை அளித்தன. பிராங்பர்ட் பாராளுமன்றத்தில் கூடிய ஜெர்மானிய அரசுகள் ஐக்கிய ஜெர்மனியின் அரியணையைப் பிர'ய மன்னர் 4ஆம் பிரெடெரிக் வில்லியத்திற்கு அளிக்கத் தீர்மானித்தன. ஆனால், ஆஸ்திரியாவின் மீது ஏற்பட்ட அச்சம் காரணமாக அதை ஏற்க அவர் தயங்கினார். பிராங்பார்ட் பாராளுமன்றத்தின் முடிவும் ஜெர்மானிய ஐக்கியத்திற்குச் சாதகமான சூழலை உருவாக்கியது.

9. முதலாம் வில்லியம் - பிர'ய மன்னர் 4ஆம் பிரெடெரிக் வில்லியம் 1861இல் காலமானார். அவரை அடுத்த அவரது சகோதரர் முதலாம் வில்லியம் அரியணை ஏறினார். இத்தாலிய ஐக்கியத்திற்குச் சார்டினியாவின் மன்னர் விக்டர் இமானுவேல் சிறந்த தலைமையை அளித்ததுபோல ஜெர்மானிய ஐக்கியத்திற்குப் பிர'ய மன்னர் முதலாம் வில்லியம் சிறப்பாகத் தலைமை தாங்கினார். அவரது சிறந்த தலைமையின் கீழ்தான் ஜெர்மானிய ஐக்கியம் நிறைவு பெற்றது. இத்தாலிய தேசிய இயக்கத்தில் சார்டினிய மன்னர்களுடன் பல தலைவர்களும் பங்கேற்று வெற்றி கண்டனர். ஆனால் ஜெர்மானிய ஐக்கியம் மன்னம் முதலாம் வில்லியத்தின் பெரும் முயற்சியினால் வெற்றி பெற்றது.

10. பிஸ்மார்க் - 1861இல் பிர'யாவின் மன்னராக முடிசூடிக்கொண்ட முதலாம் வில்லியம் சிறந்த இராஜதந்தியும் நிறைந்த ஆற்றல் பெற்ற நிர்வாகியுமான பி'மார்க் என்பவரை 1862இல் தன் தலைமை அமைச்சராக நியமிக்கும் நல்வாய்ப்பைப் பெற்றார். அது ஜெர்மனியின் வரலாற்றில் ஒரு திருப்புமுனை் புதிய சகாப்தத்தின் துவக்கம். பிஸ்மார்க் தாராளக் கோட்பாடு பாராளுமன்ற நெறிமுறைகள் ஆகியவற்றில் நம்பிக்கை வைக்கவில்லை. ஆனால் பிர'யாவின் மீதும் பிர'யா மக்கள் மீதும் அதிக நம்பிக்கை வைத்தார். இரும்பு மனிதரான பிஸ்மார்க் குருதியும், ஆயுதமும் என்ற

கோட்பாட்டினை உடையவர். ஆயுதம் ஏந்தி இரத்தம் சிந்தினால் மட்டுமே நாட்டின் ஐக்கியத்தை அடைய முடியும் என்று ஆணித்தரமாக நம்பினார். நாட்டின் ஒருமைப்பாட்டைச் சாதிப்பதே அவர் முன் இருந்த முதல் மற்றும் முக்கியப் பணி ஆகும். அதை பிர்'யாவின் தலைமையின் கீழ் சாதிக்கத் தீர்மானித்தார். அச்சாதனையை ஏற்படுத்த அவருக்குச் சிறந்த நிதி நிலையும் வலுவான இராணுவமும் தேவைப்பட்டன.

புதிய வரிகள் மூலம் அரசாங்கத்தின் நிதி நிலையை உயர்த்துவதில் பெரும் வெற்றி கண்டார். இம்முயற்சியில் ஜெர்மானிய டயட்டிற்கு எதிராக (பாராளுமன்றம்) அவர் செயல்பட வேண்டி இருந்தது. இவ்வாறு நாட்டின் நிதி நிலையை அவர் வலுவாக்கினார். அதன் பின் நிதிநிலையைப் பயன்படுத்தி பெரும்படை ஒன்றை திரட்டினார். அப்படையைப் பயன்படுத்தி 3 போர்கள் மூலம் நாட்டின் ஐக்கியத்தை நிலை நாட்டினார்.

### 3.5.2 ஜெர்மானிய இணைவு வெற்றி பெற பிஸ்மார்க் தொடுத்த 3 போர்கள்

ஜெர்மானிய இணைவிற்காகப் பிஸ்மார்க் 3 போர்களில் ஈடுபட்டார். அவை

- ☐ டென்மார்க்குடன் போர் (1864)
- ☐ ஆஸ்திரிய - பிர்'யப் போர் (1866)
- ☐ பிராங்கோ - பிர்'யப் போர் (1870-71)

(அ) டென்மார்க்குடன் போர் (1864)

டென்மார்க் வலுவான முடியாட்சியின் கீழ் தொன்றுதொட்டு இருந்து வந்த நாடாகும். டென்மார்க்கின் மன்னர் செலஸ்விக், கோல்ஸ்டீன் ஆகிய பகுதிகளின் அரசராகவும் திகழ்ந்தார். அப்பகுதிகளின் மக்கள் பெரும்பாலானோர் ஜெர்மானியக் கூட்டிணைவின் ∴ர் உறுப்பினர் ஆக்கியது. 1848ஆம் ஆண்டு பிப்ரவரிப் புரட்சி செலஸ்விக், கோல்ஸ்டீன் ஆகிய இரு சிற்றரசுகளிலும் பரவியது. அந்த இரு சிற்றரரசுகளின் மக்கள் டென்மார்க்கின் பிடியிலிருந்து விடுபட முயற்சித்தனர். டென்மார்க்கின் மன்னர் 3ஆம் பிரடெரிக் அப்பகுதிகள் இரண்டையும், தன் நாட்டுடன் இணைத்துக் கொள்ள விரும்பினர். அவரது முயற்சியை அப்பகுதிகளின் மக்கள் எதிர்த்தனர். மக்கள் கிளர்ச்சி செய்தனர். டென்மார்க் மன்னர் கிளர்ச்சியை ஒடுக்கினார். ஐரோப்பாவின் பெரிய நாடுகள் இரு சிற்றரசுகளின் அரசியல் நிலையைக் கூர்ந்து கவனித்தன. 1852இல் பிரான்சு, இர்'யா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் இலண்டனில் கூடின. அவை இலண்டன் உடன்பாட்டில் கையொப்பமிட்டன. இலண்டன் உடன்பாட்டில் மூலம் அவை இரு சிற்றரசுகளையும் டென்மார்க் தன்னுடன் இணைத்தக்கொள்வதைக் கண்டித்தன. ஐரோப்பிய நாடுகள் டென்மார்க்கின் வாரிசு இல்லாத மன்னர் மூன்றாம் பிரடெரிக்கை அடுத்து 9ஆம் கிறிஸ்டியன்

அந்நாட்டின் மன்னராவதற்கு ஒப்புதல் தந்தனர். இலண்டன் உடன்பாட்டின்படி, 1863இல் 9ஆம் கிறிஸ்டியன் 3ஆம் பிரடெரிக் காலமானதை அடுத்து டென்மார்க்கின் மன்னரானார். ஆனால் டென்மார்க்கின் மன்னராக கிறிஸ்டியனைப் பிராஸ்பர்ட் பாராளுமன்றம் ஏற்கவில்லை. மேலும் ஸ்லெ'விக் - ஹோல்ஸ்டீன் பகுதியின் அரசராக பிராஸ்பர்ட் பாராளுமன்றம் ஜெர்மனியரான அகஸ்டன்பர்க் கோமகனான பிரடெரிக் என்பவரை ஆதரித்தது. பிஸ்மார்க் சிற்றரசுகள் இரண்டையும் பிர'யாவோடு இணைக்கத் தீர்மானித்தார். அதற்கு வேண்டிய வாய்ப்பு வந்தது. சிற்றரசுகளின் தன்னாட்சியை மதிக்காத 9 ஆம் கிரிஸ்டியன் அவற்றை டென்மார்க் அரசுடன் இணைத்துக் கொண்டார். அதனால் சிற்றரசுகளின் அமைதியின்மை நிலவியது. இராஜதந்தியான பிஸ்மார்க் ஆஸதிரியாவுடன் ஃர் உடன்பாடு செய்து கொண்டார். ஆஸ்திரியாவும் பிர'யாவும் டென்மார்க்கின் ஆட்சியிலிருந்து இரண்டு சிற்றரசுகளையும் விடுவிக்க முடிவு செய்தன. 48 மணி நேரத்தில் டென்மார்க் அதனுடனான சிற்றரசுகளின் இணைப்பை ரத்து செய்யுமாறு எச்சரித்தார். ஆனால், டென்மார்க்கின் அரசர் எந்த எச்சரிக்கையை நிராகரித்தார். உடனடியாக 1864இல் பிர'யாவும், ஆஸ்திரியாவும் சிற்றரசுகள் இரண்டையும் கைப்பற்றின. உடனே பிர'யாவும், ஆஸ்திரியாவும் சிற்றரசுகளைப் பங்கிடுவதில் சச்சரவில் ஈடுபட்டன. 1865ஆம் ஆண்டு கேஸ்டீன் உடன்பாட்டின்படி ஆஸ்திரியா, கோல்ஸ்டீனையும், பிர'யா செலஸ்வீக்கையும் எடுத்துக் கொண்டன. பிஸ்மார்க் ஜெர்மனியின் ஐக்கியத்திற்கான 2ஆம் போருக்கு வேண்டிய வித்தை டென்மார்க்குடனான போரில் தூவிவிட்டார். ஏனெனில், ஆஸ்திரியாவின் நிர்வாகத்தின் கீழ் வைக்கப்பட்ட கோல்ஸ்டீனின் மக்களில் பெரும்பான்மையினர் ஜெர்மானியர். ஆஸ்திரியா, ஜெர்மன் மக்கள் பெருமளவில் வாழும் கோல்ஸ்டீன் பகுதியைச் சரியாக நிர்வகிக்கவில்லை எனும் நொண்டிச் சாக்கைக் காரணமாக வைத்து 1866இல் ஆஸ்திரியாவை வம்புக்கு இழுத்தார்.

(ஆ) ஆஸ்திரிய-பிர'யப் போர் (1866)

ஜெர்மானிய ஐக்கியம் நிறைவுற வேண்டும் எனில் ஜெர்மானியப் பகுதியிலிருந்து ஆஸ்திரியாவை, பிர'யா வெளியேற்ற வேண்டிய கட்டாயத்தில் இருந்தது. எனவே ஆஸ்திரியாவை எதிர்த்துப் போரிடுவது மிகவும் அவசியமான ஒன்று என்பதை பிஸ்மார்க் உணர்ந்தார். ஆஸ்திரியாவை வெல்ல நன்கு திட்டமிட்டார். ஆஸ்திரியா, பிர'யாவின் வளர்ச்சியைக் கண்டு பொறாமைப்பட்டது போல பிர'யாவும் ஆஸ்திரியா மீது அழுக்காறு கொண்டது. ஆகையினால், இரு நாடுகளுக்கும் இடையே போர் தவிர்க்க முடியாதது ஆயிற்று. சிறந்த இராஜதந்திரியான பிஸ்மார்க் ஆஸ்திரியாவுடனான போரின் பொழுது ஐரோப்பிய நாடுகளில் நடுநிலையைப் பெறப் பெரும் முயற்சி மேற்கொண்டார். அவரது அம்முயற்சியில் வெற்றி பெற்றார். 1863ஆம் ஆண்டு போலந்தில் ஏற்பட்ட கிளர்ச்சியை அடக்க

பிர்'யாவிற்கு உதவியதன் மூலம் ர்'யா நடுநிலை நாடானது. 1863இல் பிஸ்மார்க் பியர்ட்ஸ் என்ற இடத்தில் நெப்போலியனைச் சந்தித்து அவரது நல்லெண்ணத்தைப் பெற்றார். பிரான்சிற்குப் போருக்கு பிறகு கிடைக்கும் நிலப்பகுதிகளில் சிறவற்றைத் தருவதாக உறுதியளித்து அந்நாட்டின் நடுநிலையைப் பெற்றார். பிரான்சும், பிர்'யாவும் ஐரோப்பாவின் ஒத்த கருத்துடைய 2 நட்பு நாடுகள் என்று அறிவித்தனர். ஐரோப்பாவின் அமைதியின் கர்த்தாவாகத் தன்னைக் கருதிக்கொண்டு கனவிலும் கற்பனையிலும் மிதந்த நெப்போலியன் இதைக் கேட்டவுடன் மகிழ்ச்சியில் ஆழந்தார். அது போலவே ஆஸ்திரியாவின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த இத்தாலிய பகுதியான வெனீயாவைப் போரின் இறுதியில் இத்தாலியின் ஐக்கியத்திற்காகப் பாடுபட்ட சார்டினியாவிற்குப் பெற்றுத் தருவதாக உறுதியளித்துச் சார்டினியாவையும் நடுநிலை வகிக்குமாறு செய்தார்.

இவ்வாறு ஐரோப்பாவின் பெரிய நாடுகளின் நடுநிலையைப் பெற்ற பிஸ்மார்க் தன் எதிரியான ஆஸ்திரியாவைத் தனிமைப் படுத்தினார். ஆரம்ப வேலைகளை மிகவும் நிதானமாகச் செய்துவிட்டு கோல்ஸ்டீன் பிரச்சனையில் ஆஸ்திரியவைப் போருக்கு இழுத்தார். கோல்ஸ்டீனில் ஆஸ்திரியாவின் நிர்வாகம் முறையாக இல்லையென்று ஐரோப்பிய நாடுகளுக்கு அறிவித்தார். அதை ஒரு காரணமாகக் காட்டி கோல்ஸ்டீன் விவகாரங்களில் தலையிட்டார். பிர்'யாவின் தலையீட்டை ஆஸ்திரியா எதிர்த்தது. எனவே பிர்'யா ஆஸ்திரியாவின் மீது 1866இல் போர் அறிவித்தது. ஆஸ்திரியா - பிர்'யப் போர் என்று நன்கு அறிமுகமான அப்போர் 7 வாரங்களுக்கு நீடித்தது. ஆஸ்திரியப் படைக்குப் பெனிடெக் தலைமை ஏற்க பிர்'யப் படைக்கு மால்ட்கே தலைமை ஏற்றார். பவேரியா, சாக்சனி, ஹனோவர், பேடன் ஆகிய தெற்கு ஜெர்மானிய அரசுகள் ஆஸ்திரியாவுக்கு ஆதரவு தந்தன. பிர்'யப் படைபோல் ஆஸ்திரியப் படை இரு மடங்கு இருந்தது. நிலைமை ஆஸ்திரியாவுக்குச் சாதகமாக இருந்த போதிலும் ஆஸ்திரியர்கள் சடோவா (அ) கோனிகிராட்ஸ் என்ற போர்க்களத்தில் தோற்கடிக்கப்பட்டனர். சடோவா போர்களத்தில் வெற்றிபெற்ற பிர்'யப்படை ஆஸ்திரியாவின் தலைநகர் வியன்னாவை நோக்கி விரைந்தது. பிரரெஞ்சு மன்னன் 3ஆம் நெப்போலியன் அப்போரிலிருந்து தனக்கு ஆதாயம் ஏற்படும் என்று எண்ணிக்கொண்டிருந்தார். ஆனால், நெப்போலியன் வியக்கும் வண்ணம் அவர் அப்போரில் தலையிடுவதற்கு முன்பாக, பிஸ்மார்க் வியன்னாவை நோக்கி விரைந்த படையைத் தடுத்த நிறுத்தி ஆஸ்திரியாவுடன் 1866ஆம் ஆண்டு ஆகஸ்டில், பிரேக் உடன்பாட்டைச் செய்து கொண்டார். போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

பிரேக் உடன்பாட்டின்படி பிர்'யாவிற்கு செலஸ்விக - ஹோல்ஸ்டீன் ஆகியன கொடுக்கப்பட்டன. மேலும், பிர்'யா, ஹனோவர், ரஹஸ்ஸி - ஹேசல் நாசா, பிராஸ்பர்ட் ஆகியவற்றைத் தன்னுடன் இணைத்துக்

கொண்டது. செலஸ்விக் மக்கள் விரும்பினால் ஒரு பொது ஜன வாக்கெடுப்பு அங்கே நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. 1919இல் வார்சே உடன்பாட்டின்படி (வெர்செயில்ஸ்) வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட்டது. அதன் விளைவாகச் செலஸ்விக்கின் வடபகுதி மட்டும் டென்மார்க்குடன் இணைக்கப்பட்டது. இத்தாலி ஆஸ்திரியாவிடமிருந்து வெனீயாவைப் பெற்றது. அதன் மூலம் இத்தாலியிலிருந்து ஆஸ்திரியா முழுவதுமாக வெளியேற்றப்பட்டது. அது போலவே ஜெர்மனியிலிருந்து ஆஸ்திரியா வெளியேற்றப்பட்டது. 1815ஆம் ஆண்டு வியன்னா மாநாட்டில் ஏற்படுத்தப்பட்ட ஜெர்மானியக் கூட்டிணைவு கலைக்கப்பட்டது. ஒரு புதிய வடக்கு ஜெர்மானியக் கூட்டிணைவு தோற்றுவிக்கப்பட்டது. இவ்வாறாக ஜெர்மனியின் வடபகுதியைச் சேர்ந்த 22 அரசுகள் பிர்'யாவுடன் சேராமல் விலகி நின்றன. பேடன், வர்ட்டம்பர்க், கெஸ்ஸி, பவேரியா ஆகிய தெற்கு அரசுகளைக் கூட்டிணைவுடன் சேருமாறு பிஸ்மார்க் கேட்டுக்கொண்டார். சில ஆண்டுகளுக்குப்பின் அவர் விரும்பியவாறு அவ்வரசுகளும் கூட்டிணைவில் சேர்ந்தன.

(,)பிராங்கோ - பிர்'யப் போர் (1870-71)

ஜெர்மானிய ஐக்கியத்தை பிராங்கோ - பிர்'யப் போர் நிறைவு செய்தது. பிஸ்மார்க் ஜெர்மானிய ஐக்கியம் எனும் தனது சாதனையின் இறுதி நடவடிக்கையாக அவரது கடைசி எதிரியான பிரான்சின் 3ஆம் நெப்போலியனுக்கு எதிராக போர் தொடுத்தார். நெப்போலியன் பிரான்சின் எழுச்சி கண்டு பொறாமை கொண்டார். முன்பு நடந்த போர்களின் போதுதான் நடுநிலை வகித்தற்கு விலையாக பேலட்டினேட், லக்சம்பர்க், பெல்ஜியம் ஆகியவற்றைக் கேட்டிருந்தார். ஆனால், பிஸ்மார்க் நெப்போலியனுக்கு எதையும் தர விரும்பவில்லை. அவர் பிரான்சைத் தோற்கடித்து அதன் மூலம் ஜெர்மனியின் ஐக்கியத்தை நிறைவு செய்யத் தக்க வாய்ப்பை எதிர்நோக்கி இருந்தார். அவர் நினைத்தது போல் ஒரு ஸ்பானிய விவகாரத்தின் மூலம் அவ்வாய்ப்பு அவருக்கு வந்தது. 1869இல் ராணி இசபெல்லாவின் ஆட்சிக்கு எதிராக ஸ்பெயினில் புரட்சி ஒன்று ஏற்பட்டது. இசபெல்லா ஸ்பெயினை விட்டு வெளியேறினார். பிர்'ய மன்னர் முதலாம் வில்லியத்தின் தூரத்து உறவினர் லியோபால்ட் என்பவருக்கு ஸ்பானிய அரியணை வழங்கப்பட்டது. வில்லியம் 1, லியோபால்ட் ஆகிய இருவரும் கோகனஸோலன் மரபினைச் சேர்ந்தவர்கள் எனவே, அம்முடிவைப் பிர்'யத் தலைமை அமைச்சர் பிஸ்மார்க், போர்த்துறை அமைச்சர் வான்ரூன் தலைமைத் தளபதி வான்மால்ட்கே ஆகியோர் ஏற்றுக்கொண்டனர். ஆனால், ஐரோப்பாவின் சக்தி சமநிலை அம்முடிவால் பாதிக்கப்படும் என்று கருதிய நெப்போலியன் அதை எதிர்த்தார். ஒரே வம்சத்தின் ஆட்சிக்கு உட்படும் ஸ்பெயினும், பிர்'யாவும் இணைந்து ஒரே நாடாக உருவாகுமேயானால் ஐரோப்பிய அரசியலில் சக்தி சமநிலைக்கே கேடு விளைவிக்கும் என்பது உண்மையே. எனவே,

நெப்போலியன் பிர்'யா மன்னர் முதலாம் வில்லியத்தை ஸ்பானிய அரியணைக்கு கோகன்ஸோலன் வம்சத்தை சேர்ந்தவரை ஆதரிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார். நெப்போலியன் வேண்டுகோளை நிராகரித்த பிர்'ய மன்னர் அச்செய்தியைத் தன் அமைச்சர் பிஸ்மார்க்கிற்குத் தெரிவித்தார்.

அக்காலத்தின் சிறந்த ராஜதந்திரியாகக் கருதப்படும் பிஸ்மார்க் தக்க வாய்ப்பினை எதிர்நோக்கிக் காத்திருந்தார். அவர் எம்ஸ் தந்தி என்று அழைக்கப்படும் செய்தியை மிகவும் இராஜதந்திரமாகப் பிர்'யா, பிரான்ஸ் ஆகிய இவ்விரு நாடுகளுக்கும் வெளியிட்டார். பிரான்சின் தூதரால் பிர்'ய மன்னர் பிர்'யத் தூதல் அவமதிக்கப்பட்டார் என்றும், பிர்'ய மன்னர் பிரெஞ்சுத் தூதரை அவமதித்தார் என்றும் அச்செய்தி மூலம் தெரிவிக்கப்பட்டது. அச்செய்தி அறிந்தவுடன் இரு நாட்டு மக்களும் கொதித்தெழுந்தனர்.

(ஈ)போரின் போக்கு

பிரான்சு பிர்'யாவின் மீது போர் அறிவித்தது. அப்போர் ஜெர்மானியர்களின் நாட்டுப்பற்றைத் தூண்டியது. புதிய ஜெர்மானியக் கூட்டிணைவில் சேராது ஒதுங்கி இருந்த தெற்கு ஜெர்மானிய அரசுகள் கூட்டிணைவில் சேரத் தீர்மானித்தன. பிர்'யப் படைக்கு வான்மால்ட்கே தலைமை ஏற்க, பிரெஞ்சுப் படைக்கு நெப்போலியன் தலைமை ஏற்றார். போரில் தொடக்கத்திலிருந்தே பிர்'யப் படை வெற்றியை நோக்கிச் சென்றது. செடான் என்ற போர்களத்தில் பிரான்சைத் தோற்கடித்து 3ஆம் நெப்போலியனைப் பிர்'யப் படை கைது செய்தது. வெற்றி பெற்ற பிர்'யப் படை பிரான்சின் தலைநகர் பாரிஸ் நகரை நோக்கி விரைந்தது. பிரான்சில் புரட்சி ஒன்று ஏற்பட்டுக்குழப்பம் நிலவியது. பிரான்சின் குடியாட்சி அகற்றப்பட்டு முடியாட்சி நிறுவப்பட்டது. பிரான்சின் புதிய அரசாங்கம் தொடர்ந்து போரை நடத்தியது. 1871ஆம் ஆண்டு ஜனவரியில் பிர்'யா பாரிஸ் நகரைக் கைப்பற்றியது. (உ) போரின் முடிவு

பாரிஸ் நகரின் வீழ்ச்சிக்குப் பின் 1871இல் ஜெர்மனியும் பிரான்சும் பிராஸ்பர்ட் உடன்பாட்டைச் செய்து கொண்டது. போர் முடிவுற்று அமைதி நிலவியது.

### 3.5.3 பிராஸ்பர்ட் உடன்படிக்கை (1871)

பிராங்பர்ட் உடன்படிக்கையின்படி பிரான்சு செர்மனிக்கு அல்சேஸ் - லொரைன் ஆகிய பகுதிகளைக் கொடுத்தது. மேலும், பிரான்சுக்க 500 கோடி பிராங்ஸ் தொகையை ஜெர்மனிக்கு ந'ட ஈடாகக் கொடுக்க வேண்டி இருந்தது. ஜெர்மனிக்கு,, போர் ந'ட ஈட்டுத் தொகையைப் பிரான்ஸ் தரும் வரையில் பிரான்சில் 30,000 ஜெர்மானியத் துருப்புகளை நிறுத்தி வைக்க உடன்பாடு முடிவு செய்தது.

(அ) போரின் விளைவுகள்

1871 ஆம் ஆண்டு போரின் ஒரு முக்கியமான விளைவாக ஜெர்மனியில் ஐக்கியம் நிறைவு பெற்றது. பிர'யாவின் முதலாம் வில்லியம் ஐக்கிய ஜெர்மனியின் முதல் பேரரசராக பிரான்சின் வார்சேயில் 14ஆம் லூயியினால் உருவாக்கப்பட்ட கண்ணாடி மண்டபத்தில் பிரகடனம் செய்யப்பட்டார். பிஸ்மார்க் ஐக்கிய ஜெர்மனியின் முதல் தலைமை அமைச்சரானார். இந்தப் போர் இத்தாலி ஐக்கியம் நிறைவு பெறவும் வழிவகுத்தது. பிரான்சின் 3ஆம் நெப்போலியன் 1849 முதல் போப்பின் உதவிக்காக நிறுத்தி வைத்திருந்த படையை பிஸ்மார்க்கிற்கு எதிராகப் பயன்படுத்த விலக்கிக்கொண்டவுடன் இத்தாலியப் படைகள் ரோமாபுரியைக் கைப்பற்றின. ரோம் இத்தாலியின் தலைநகராக்கப்பட்டது. அத்துடன் இத்தாலியின் ஐக்கியமும் முழுமையடைந்த செடான் போர்க்கள்த்தில் நெப்போலியனைத் தோற்கடித்த பிர'யப் படை பிரான்சின் தலைநகர் பாரிஸ் நகரில் நுழைந்தது. அதை அடுத்துக் குழப்பமான சூழ்நிலை பிரான்சில் நிலவியது. முடியாட்சி அகற்றப்பட்டுக் குடியாட்சி நிறுவப்பட்டது. 1871இல் தோற்றுவிக்கப்பட்ட அக்குடியரசு பிரான்சின் 3ஆம் குடியரசு ஆகும். போரின் முடிவில் பிராங்பர்ட்உடன்பாடு செய்து கொள்ளப்பட்ட நேரத்தில் பிரான்சிடம் ஜெர்மனி கொடுமையாக நடந்து கொண்டது. அதனால் பிரெஞ்சுக்காரர்கள் கொதிப்படைந்தனர். பிரெஞ்சுக்காரர்களின் கோபம் 1914ஆம் ஆண்டு முதல் உலகப் போருக்கு ஒரு முக்கியமான காரணமாயிற்று. பிரான்சு அதன் செல்வாக்கை இழக்க அடுத்த சில 10 ஆண்டுகளுக்கு ஐரோப்பிய அரசியலின் மையமாக ஜெர்மனி திகழ்ந்தது.

## 3.6 பிஸ்மார்க் (1815-1898)

பல வரலாற்று ஆசிரியர்களின் கருத்துப்படி ஆட்டோ வான் பிஸ்மார்க் 19ஆம் நூற்றாண்டின் மிகச் சிறந்த இராஜதந்திரி ஆவார். நவஜெர்மனியை உருவாக்கியவர் என்று சிறப்பிக்கப்படும் அவர் அந்நாட்டு வரலாற்றில் ஒரு முக்கியமான இடத்தை வகிக்கின்றார். ஐரோப்பாவின் சில நாடுகளுடன் அவர் செய்து கொண்ட இரகசிய உடன்பாடுகள் மனிதகுல வரலாற்றின் முதல் பெரும் போராகக் கருதப்படும் 1914ஆம் அண்டு முதல் உலகப் போருக்கு முக்கியக் காரணம் என்பது பல கருத்தாகும். அவர் 1862ஆம் ஆண்டிலிருந்து பிர'யாவிற்கு அருந்தொண்டாற்றி ஜெர்மனியின் ஐக்கியத்தைச் சாதித்தார். ஐக்கிய ஜெர்மனியின் முதல் தலைமை அமைச்சராகப் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்ற அவர் 1890ஆம்ஆண்டு வரை அப்பதவியில் நீடித்தார். அவர் தலைமை அமைச்சராகப் பணியாற்றிய ஜெர்மனியின் வரலாற்றில் மட்டும் அல்லாமல் ஐரோப்பிய வரலாற்றிலும் ஒரு பெரும் சக்தியாகத் திகழ்ந்தார்.. அவரது அரசியல் வாழ்க்கை அக்கால உலக அரசியலிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது எனலாம்.

### 3.6.1 பிஸ்மார்க்கின் வாழ்க்கைக்குறிப்பு

பிஸ்மார்க் 1815ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாள் சோன்ஹாசன் எனும் சிற்றூரில் செல்வச் சிறப்புமிகு உயர்குடியில் பிறந்தார். அவரது தந்தை பிர’ய நாட்டு ∴ர் இளங்கோமான் ஆவார். பிஸ்மார்க் தம் தந்தையிடமிருந்து திடமான உடலமைப்பைப் பெற்றார். அவரது தாயார் புகழ்பெற்ற ∴ர் அரசு எழியரின் மகளும் பேராசிரியர் ஒருவரின் பேத்தியும் ஆவார். அவரது அறிவுத்திறனுக்கு அவருடைய தாய் வழியே காரணம் என்பர். பெர்லின் கோட்டிஞ்சன் ஆகிய பல்கலைக் கழகங்களில் சட்டம் பயின்றார். சட்டம் பயிற்ன அவர் அரசியல் சூழ்ச்சியிலும் பயிற்சி பெற்றார். இராணுவப் பயிற்சியும் அவர் பெற்றார். குதிரை ஏற்றத்திலும் தேர்ச்சி பெற்றார். இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாடுகளுக்கு பயணித்த அனுபவமும் அவருக்கு உண்டு. தேவையான கல்வியைக் கற்ற பின் பிர’ய அரசுப்பணியில் அவர் சேர்ந்தார். பின் அரசுப்பணியை விட்டு வெளியேறிய பிஸ்மார்க் அரசியலில் சேர்ந்தார். 1845ஆம் ஆண்டு போமரேனியா சட்டமன்றத்தின் உறுப்பினர் ஆனால். 1847இல் பெர்லின் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1849இல் பிர’யாவின் சட்டமன்றக் கீழ்சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1851இல் பிராங்பர்ட் பாராளுமன்றத்திற்குப் பிர’யாவின் சார்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதை அடுத்து ர’யாவில் பிர’யாவின் தூதுவராகப் (1859-62) பணியாற்றினார். 1862இல் பிரான்சில் பிர’யாவின் தூதுவராகப் பணியாற்றினார். அதே ஆண்டில் பிர’ய மன்னர் முதலாம் வில்லியத்தால் அந்நாட்டின் தலைமை அமைச்சராக (சான்சலர்) நியமிக்கப்பட்டார். அப்பதவியில் 1890இல் பதவியை இராஜினாமா செய்யும் வரை நீடித்தார். 1898இல் பிஸ்மார்க் காலமானார்.

### 3.6.2 பிஸ்மார்க் கொள்கை

பிர’யா மற்றும் ஜெர்மனியின் தலைமை அமைச்சராகப் பிஸ்மார்க் பணியாற்றிய காலம் ஐரோப்பிய வரலாற்றில் ஒரு புதிய சகாப்தம் எனலாம். அவர் மக்களாட்சி, தாராளக் கோட்பாடு, பாராளுமன்ற ஆட்சிமுறை ஆகியவற்றில் நம்பிக்கை இல்லாதவர். அவர் இரத்தமும் இரும்பும் என்ற கொள்கையில் பெரும் நம்பிக்கை உடையவர். முடியாட்சியின் தீவிர ஆதரவாளர். தெய்வீக உரிமைக் கோட்பாட்டில் நம்பிக்கை உடையவர். இருப்பினும் தன்னை அரசரின் ஏவலனாகக் கருதிக் கொண்டார். வெற்றுப் பேச்சும், வெறும் கோ’ங்களும் ஜெர்மனியை ஐக்கியப்படுத்த உதவா என்று தீர்மானித்தார். பிர’யாவின் தலைமையே ஜெர்மனியை உருவாக்கும் என்று நம்பினார். பிஸ்மார்க் முன் இருந்த பெரும்பணி, ஜெர்மனியின் ஐக்கியமே ஆகும். ஜெர்மானிய ஐக்கியத்தை நிலைநாட்ட வலுவான நிதியும், பெரும்படையும் தேவைப்பட்டன. புதிய வரிகள் மூலம் பிர’யாவின் நிதிநிலையைப் பெருக்கினார். அதைக் கொண்டு ஒரு மாபெரும் வலுவான

படையை உருவாக்கினார். அப்படையின் உதவியுடன் ஜெர்மனியின் ஐக்கியத்தைச் சாதித்தார்.

### 3.6.3 பிஸ்மார்க்கும் ஜெர்மானியின் ஐக்கியமும்

ஜெர்மனியின் ஐக்கியம் எனும் தலைப்பின் கீழ் முன்பே விவரமாகக் குறிப்பிட்டிருப்பது போல ஜெர்மானியின் ஐக்கியத்தை 3 போர்கள் மூலம் 1871 இல் பிஸ்மார்க் நிறைவேற்றினார். 1864இல் பிஸ்மார்க் டென்மார்க்கைத் தோற்கடித்தார். அப்போரின் மூலம் ஆஸ்திரியாவை 1866 இல் 2 ஆம் போருக்கு இழுத்தார். 1866இல் சடோவா எனும் இடத்தில் ஆஸ்திரியாவைத் தோற்கடித்து அந்நாட்டை ஜெர்மானியிலிருந்து வெளியேற்றி பிர'யாவின் தலைமையில் புதிய ஜெர்மானியக் கூட்டிணைவை நிறுவினார். 1870-71இல் 3ஆம் போரில் செடான் என்ற போர்க்களத்தில் பிரான்சைத் தோற்கடித்து அதன் மூலம் ஜெர்மனியின் தெற்குப் பகுதி அரசுகளையும் வடக்கு ஜெர்மானிய கூட்டிணைவுடன் சேர்த்துக் கொண்டார். 1871 இல் பிர'ய மன்னர் முதலாம் வில்லியம் ஜெர்மானியின் முதல் பேரரசராகப் பிரகடனம் செய்யப்பட்டார்.

(அ)உள்நாட்டுக் கொள்கை

1871இல் பேரரசர் முதலாம் வில்லியத்தால் பிஸ்மார்க் ஜெர்மானியின் தலைமை அமைச்சராக (சான்சலர்) நியமிக்கப்பட்டார். 1890 வரை அவர் அப்பதவியில் நீடித்தார். புதிய பேரரசர் 2 ஆம் வில்லியத்திற்கும் பிஸ்மார்க்கிற்கும் இடையே தோன்றிய கருத்து வேறுபாடு காரணமாக பிஸ்மார்க் பதவியை இராஜினாமா செய்தார். அவர் பதவியில் இருந்தவரை உள்நாட்டு நிர்வாகத்தில் அவரே முக்கியப் பங்காற்றினார்.

3.6.4 அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்கள்

1871ல் புதிய அரசியல் சட்டம் தயாரிக்கப்பட்டது. புதிய அரசியல் சட்டத்தின்படி 1871ஆம் ஆண்டு புதிய ஜெர்மானியக் கூட்டிணைவு கூட்டாட்சி அந்தஸ்தைப் பெற்றது. ஜெர்மானிய மாநிலங்களில் பிர'யாவிற்கு முதன்மை இடம் தரப்பட்டது. அந்நாட்டுப் பாராளுமன்றத்தின் மேலவையில் (பந்ரெஸ்ரட்) பிர'யாவிற்கு அதிக இடங்கள் ஒதுக்கப்பட்டன. மேலவையே அதிக அதிகாரங்கள் படைத்தவை ஆகும். அரசியல் சாசனத்தின்படி உருவாக்கப்பட்ட ஈரங்க பாராளுமன்றத்தின் கீழ்சபைக்கு (ரெய்ஸ்டாக்) என்று பெயர்.

(அ) சட்டம்

நவின ஜெர்மனியில் பிஸ்மார்க் பல சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டார். எனவே அவர் நவீன ஜெர்மனியின் சிற்பி என்று

பாராட்டப்படுகிறார். ஐக்கியத்திற்கு முன் ஜெர்மனி பல அரசுகளாகப் செயல்பட்டு வந்ததால் வெவ்வேறு அரசுகளில் வெவ்வேறு சட்டங்கள் பின்பற்றுபட்டு வந்தன. அதனால் சட்டத் துறையில் குழப்பங்கள் நிலவின. எனவே பிஸ்மார்க் ஜெர்மானியப் பேரரசில் புதிய சட்டத் தொகுப்பு ஒன்றைக் கொண்டு வந்தார்.

(ஆ) நாணய முறை

ஜெர்மனியில் ஒரே மாதிரியான நாணய முறையைக் கொண்டுவந்த பெருமைக்கு உரியவர் பிஸ்மார்க் ஆவார்.

(,) வங்கி

வங்கித் துறையிலும் சில சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டார். வங்கி முறையை ஒழுங்குபடுத்தும் நோக்கில் 1876இல் தேசிய வங்கி ஒன்றை நிறுவினார்.

(ஈ) போக்குவரத்தும் தகவல் தொடர்பும்

1871இல் தேசிய இருப்புப் பாதை (ரயில்வே) அலுவலகம் ஒன்றைத் திறந்தார். இதன் மூலம் நாட்டின் இருப்பு வழிப் போக்குவரத்து முழுதும் இணைக்கப்பட்டது. பிஸ்மார்க்கின் இருப்புப் பாதை முறை, இராணுவ அமைப்புகள், தபால், தந்தி போன்ற முக்கியமான தகவல் தொடர்பு சாதனங்களுடன் இணைக்கப்பட்டது. பொருளாதாரத் துறையில் பிஸ்மார்க் பெருமளவில் சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டார். இரும்பு, எஅகு இம்ஹணப்ற்ர்:எஅகு, மற்றும் வுளித் தொழில்கள் நன்கு எக்குவிக்கப்பட்டன. பிஸ்மார்க் மூலம் நன்கு அமைக்கப்பட்ட இருப்பு வழிப்பாதை இணைப்பு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது. பிஸ்மார்க் தடையிலா வணிகக்கொள்கைக்குத் தடை விதித்தார். நவ ஜெர்மனியின் புதிய தொழில்களைக் காக்க தீர்மானித்தார். 1879இல் அதற்காகச் சட்டம் ஒன்றை கொண்டு வந்தார். அச்சட்டத்தின் மூலம் காப்புவரி பெருமளவில் வசூலிக்கப்பட்டது. அதன் காரணமாகக் குறுகிய காலத்தில் ஜெர்மனி தொழில்மயமாக்கப்பட்டது. உலக நாடுகளில் ஜெர்மனி உற்பத்தி துறையில் ஒரு முன்னோடி நாடாக உருவாயிற்று, உலகச் சந்தையில் ஜெர்மானியின் பொருட்களுக்குப் பெரும் வரவேற்பு இருந்தது. சுருங்கக் கூறின் பிஸ்மார்க் மேற்கொண்ட பொருளியில் நடவடிக்கைகளால் அந்நாடு பெரும் பொரளாதார வளர்ச்சி பெற்றது.

(உ) ஜெர்மானியும் ஏகாதிபத்தியமும்

ஜெர்மனியின் பொருளாதார வளர்ச்சி அந்நாட்டை ஆப்பரிக்கக் கண்டத்தில் குடியேற்றங்களை அமைக்கத் தூண்டியது. மேலும் அந்நாட்டின் மக்கள் பெருக்கமும் குடியேற்றங்கள் ஏற்படுத்துவதற்கு ஒரு காரணம் ஆயிற்று. கேமரூன், டோகோலேண்ட், கிழக்கு ஆப்பிரிக்கா, தென்

மேற்கு ஆப்பிரிக்கா, மார்‘ல் தீவுகள், கினியாவின் ஒரு பகுதி ஆகிய இடங்களில் ஜெர்மனி பல குடியேற்றங்களை நிறுவியது. இக்குடியேற்றங்கள் ஜெர்மனியின் தொழிற்சாலைகளுக்கு கச்சாப் பொருட்களைப் பெறுவதற்குப் பெரிதும் பயன்பட்டன. அதுபோலவே செய்பொருள்களை (உற்பத்திப் பொருள்களை) விற்பதற்கு அக்குடியேற்றங்கள் சந்தைகளாகவும் பயன்பட்டன.

(எ) பிஸ்மார்க்கும் சமயமும்

நெப்போலியன் போனபார்ட்டைப் போல பிஸ்மார்க்கும் ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையிடம் விரோதக் கொள்கையைப் பின்பற்றினார். பிஸ்மார்க்கிற்கும் திருச்சபைக்கும் இடையே பிணக்கு ஏற்படப் பல காரணங்கள் இருந்தன. ஆஸ்திரியாவிற்கும் பிர‘யாவிற்கும் இடையே 1866இல் போர் நிகழ்ந்தபொழுது திருச்சபை ஆஸ்திரியாவை வெளிப்படையாக ஆதரித்தது. போப்பாண்டவர் பிர‘யாவை ஆட்சி செய்த பிராட்டெஸ்டெண்ட் வம்சத்தினரை வெறுத்தார். எனவே, 1866ஆம் ஆண்டுப் போரில் ஆஸ்திரியாவின் வெற்றிக்குப் பிரார்த்தனை செய்தார். மேலும் ரோமாபுரிக் கத்தோலிக்கத் திருச்சபை புதிய ஜெர்மானியப் பேரரசை விரும்பவில்லை. அதே நேரத்தில் ரோமாபுரியில் இருந்த திருத்தந்தை ஜெர்மனி நாட்டு மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தார்.

ஜெர்மனியில் இருந்த கத்தோலிக்கர் கட்சி பிஸ்மார்க்கையும் தேசியத்தையும் எதிர்த்தது. மேலும் கத்தோலிக்கக்கட்சி ஜெர்மனிக்கும் இத்தாலிக்கும் இடையே எதிர்ப்புணர்வை வளர்த்தது. 1870இல் போப்பின் பிரகடனம் வெளியிடப்பட்டது. அது பிஸ்மார்க்கிற்கும் போப்பிற்கும் இடையே மோதலுக்கு வழிவகுத்தது. ஜெர்மனியில் போப்பாண்டவரின் தலையீட்டைப் பிஸ்மார்க் விரும்பவில்லை. எனவே போப்பின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடப் பிஸ்மார்க் தீர்மானித்தார். அதற்கு குல்துர்காம்ப் (அ) நாகரிகத்திற்கான போராட்டம் என்று பெயர். ஜெர்மனியின் கத்தோலிக்கர்கள் தம்மைக் காப்பாற்றிக்கொள்ளும் நோக்கிலும் பிஸ்மார்க்கிற்கு எதிராகச் செயல்படவும் மையக்கட்சி (சென்டர்) எனும் புதிய கட்சி ஒன்றைத் துவங்கினர். கத்தோலிக்கத் திருச்சபையை அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர பிஸ்மார்க் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டார். அதற்காகத் தொடர்ந்து பல சட்டங்களை 1872இல் இயற்றி இயேசு சபையினரை (ஜெசூட்ஸ்) ஜெர்மனியை விட்டு வெளியேற்றனார். போப்பாண்டவருடன் நிலவிய அரசயில் உறவை முறித்துக்கொண்டார். மேலும் மேச்சட்டங்களை நிறைவேற்றினார். அச்சட்டங்கள் 1873, 1874, 1875 மே மாதங்களில் கொண்டுவரப்பட்டன. அச்சட்டங்களுக்கு பாக் சட்டங்கள் என்று பெயரும் உண்டு. ஏனெனில் ஜெர்மனியின் கல்வி அமைச்சர் அடால்பர்ட் பாக் என்பவர் அச்சட்டங்கள் இயக்கப்படுவதற்குக் காரணமாக இருந்தார். அச்சட்டங்களின் நோக்கம் கத்தோலிக்கர்களை அரசுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதே ஆகும்.

கல்வி, திருச்சபையின் கட்டுப்பாட்டில் இருந்து அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. கத்தோலிக்க பாதிரியார்கள் ஜெர்மானியப் பல்கலைக் கழகம் ஒன்றை இறைறயியலில் 3 அண்டு காலப் பயிற்சி பெருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். திருமணம் கட்டாயமாக்கப்பட்டது.

1875இல் நோயாளிகளுக்கு பணிபுரியும் சமய நிறுவனங்களைத் தவிர ஏனைய சமய நிறுவனங்கள் அனைத்தும் கலைக்கப்பட்டன. கத்தோலிக்கத் திருச்சபைக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை பிஸ்மார்க் மேற்கொண்டபோது போப்பாண்டவர் மே மாதச் சட்டங்களை எதிர்த்தார். இறுதியில் சமதர்மவாதிகளின் எதிர்ப்பு போன்ற சில எதிர்பாராத அரசியல விவகாரங்கள் காரணமாகப் பிஸ்மார்க் தனது நாகரிகத்திற்கான போராட்டத்தைக் கைவிட்டார். தாராளக் கட்சியின் செல்வாக்கை இழந்த பிஸ்மார்க் சட்டமன்றத்தின் கீழ்அவையில் கத்தோலிக்கர்களின் சென்டர் கட்சியின் ஆதரவைப் பெற்றார். இறுதியில் திருச்சபைக்கு எதிரான போராட்டத்தில் தோல்வியுற்றார். 1879இல் மே மாதச் சட்டங்களை தற்காலிகமாக நிறுத்தி வைத்த பிஸ்மார்க் 1886இல் முழுவதுமாக ரத்து செய்தார்.

### 3.6.5 பிஸ்மார்க்கும் சமதர்மக்கொள்கையும் (சோசலிசம்)

ஜெர்மனியின் தொழில்புரட்சி அந்நாட்டில் சமதர்ம இயக்கத்திற்கு வழிவகுத்தது. கார்ல்மார்க்சும் பெர்டிணாண்ட் லாஸ்சேலும் சமதர்ம மக்களாட்சி கட்சியை 1875இல் ஜெர்மனியில் தோற்றுவித்தனர். சமதர்ம பிரச்சாரம் விரைவாகத் தொழிலாளர்கள் மத்தியில் பரவியது. 1875, 77ஆம் ஆண்டுத் தேர்தலில் அக்கட்சி ஃரளவு வெற்றிபெற்றது. பாராளுமன்றத்துக் கீழ்சபையில் அதற்குக் கணிசமான இடங்கள் கிடைத்தன. பிஸ்மார்க் சமதர்ம கோட்பாட்டை எதிர்த்தார். அதற்கு எதிராகச் செயல்படத் தீர்மானித்தார் 1878இல் அரசர் முதலாம் வில்லியத்தைக் கொலை செய்ய முயற்சி ஒன்று நடந்து, தோல்வியடைந்தது. பிஸ்மார்க் கொலை முயற்சிக்குச் சோசலிஸ்ட் கட்சித்தான் காரணம் என்று கருதினார். சமதர்மக்கோட்பாடு தொடர்பான நூல்கள், செய்தித் தாள்கள், விளம்பரச் சீட்டுகள் ஆகியன தடைசெய்யப்பட்டன. சமதர்ம வாதிகளின் கூட்டங்களைக் கலைக்க காவல்தறையைப் பயன்படுத்தினார். 1890இல் பிஸ்மார்க் பதவி விலகிய பின்னும் சமதர்மவாதிகளுக்கு எதிராக சட்டங்கள் நடைமுறையில் இருந்தன. ஆனால் சமதர்மவாதிகள் மேலும் மேலும் வளர்ந்தார்கள். அவர்கள் தியாகிகளாக கருதப்பட்டார்கள். பாராளுமன்றத்தின் கீழ்சபையில் அவர்களின் எண்ணிக்கை பெருகத் தொடங்கியது. 1881இல் 12 இடங்களை மட்டுமே பெற்ற அவர்கள் 1912ஆம் ஆண்டு தேர்தலில் 110 இடங்களை வென்றனர்.

(அ) பிஸ்மார்க்கும் சமூகச் சட்டங்களும்

சமதர்மவாதிகளை ஒடுக்குவதில் தோலிவிகண்ட பிஸ்மார்க் தொழிலாளர்களின் ஆதரவைப் பெரும் நோக்கில் பல சட்டங்களை இயற்றினார். ஐரோப்பாவின் தொழிலாளர்களின் நன்மைக்காக நடவடிக்கைகளை மேற்கொண்ட முதல் நிர்வாகி பிஸ்மார்க்கே என்பர். அதன் மூலம் உழைக்கும் வர்க்கத்தின் மனத்தாங்கலை அகற்றி அவர்களின் ஆதரவைப் பெற்று சமதர்மவாதிகளின் பிரச்சாரத்தைத் தோல்வியடையச் செய்தார். தொழிலாளர் வர்க்கத்திலிருந்து ராணுவத்திற்கு திடமான போர்வீரர்களைத் தேர்ந்தெடுக்கவும் தீர்மானித்தார். எனவே தொழிலாளர்களின் நன்கைக்காக பல நன்மைகளைச் செய்தார். 1863இல் தொழிலாளர்கள் நோக்கு எதிராகக் காப்பீடு செய்யும் வகையில் பாதுகாப்புச் சட்டம் ஒன்றை இயற்றினார். 1884இல் முதலாளிகள் விபத்துக்ளுக்கு எதிராக காப்பீடு செய்யமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். 1887ஆம் ஆண்டுச் சட்டங்களின் மூலம் பெண்கள்,. சிறார் பணி வரையறைக்கு உட்படுத்தப்பட்டது. அவர்களின் வேலை நேரம் நிர்ணயம் செய்யப்பட்டது. அரசாங்கம் தொழிற்சாலைகளை மேற்பார்வையிட்டது. ஞாயிறு விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டது. மேலும் 1889இல் வயோதிகம், இயலாமை ஆகியவற்றிற்கு எதிராகத் தொழிலாளர்களுக்கு காப்புறுதி அளிக்கப்பட்டது. இன்சூரன்ஸ் பிரிமியத் தொகையை அரசு, முதலாளி, தொழிலாளி ஆகிய மூவரும் பங்கிட்டுச் செலுத்தினர். பிஸ்மார்க்கின் இச்சீர்த்திருத்ங்கள் ஜெர்மனியைத் தொழில்துறையில் உலகின் முன்னோடி நாடுகளுள் ஒன்றாக ஆக்கின.

(ஆ) வெளிநாட்டுக்கொள்கை

பிஸ்மார்க் அவருடைய உள்நாட்ட நிர்வாகம் திறமையான வெளிநாட்டக்கொள்கை ஆகியவை காரணமாக வரலாற்றில் என்றும் நினைவில் கொள்ளப்படுவார். 1871 இல் இரும்பு மனிதர் பிஸ்மார்க் ஜெர்மனியின் ஐக்கியத்தை நிறைவேற்றினார். ஜெர்மனி ஐக்கியம் நிறைவேறியதும் தனது ரத்தமும் இரும்பும் கொள்கையைக் கைவிட்டார். தொடக்கத்தில் அவர் தன் நாட்டை மேலும் விரிவாக்க விரும்பவில்லை. ஆனால் பிறகு சில தேவைகள் காரணமாகச் சில குடியேற்றங்களை நிறுவ முடிவு செய்தார். ஜெர்மனியின் வெளிநாட்டுக் கொள்கையின் முக்கிய அம்சம் ஜெர்மனியின் அந்தஸ்தைக் காப்பாற்றுவதும் ஐரோப்பாக் கண்டத்தில் அமைதியை நிலைநாட்டுவதும் ஆகும். மேலும் ஜெர்மனிக்கு எதிராக ஏனைய நாடுகள் கூட்டணி அமைப்பதைத் தடுப்பதும் அவரது வெளிநாட்டக்கொள்கையின் முக்கிய அம்சமாக இருந்தது.

## 3.7 பேரரசர்களின் உடன்படிக்கை (1872)

பிஸ்மார்க் பல வெளிப்படையான மற்றும் இரகசிய உடன்பாடுகளை ஐரோப்பாவின் முக்கிய நாடுகளுடன் செய்து கொண்டார். 1872இல் ர்'யா,

ஆஸ்திரியா ஆகிய நாடுகளுடன் பிஸ்மார்க்கின் முயற்சியினால் ஜெர்மனி ஒரு உடன்பாடு செய்து கொண்டது. ஜெர்மனி, ஆஸ்திரியா, ர'யா ஆகிய நாடுகளின் பேரரசர்கள் செய்து கொண்ட அவ்வுடன்பாடு 3 பேரரசர்கள் உடன்படிக்கை (டிரெய்கெய்சர்பண்ட்) என்று அழைக்கப்படுகிறது. ஐரோப்பாவின் சக்தி சமநிலையைக் காப்பாற்றுவதும், பால்கன் விவகாரத்தைத் தீர்ப்பதும் அந்த உடன்படிக்கையின் முக்கிய நோக்கங்களாகும். அதே நேரத்தில் பிரான்சை தனிமைப்படுத்தும் நோக்கத்தையும் கொண்டிருந்தார். ர'யாவின் ஆதரவைப் பெறுவதில் ஆர்வம் காட்டினார். ஜெர்மனி மீது ஆஸ்திரியா கொண்டுள்ள பகைமையை நீக்கவும் விரும்பினார். 3 பேரரசுகளின் உடன்படிக்கை பெருமளவிற்கு வெற்றி பெற்றது என்று சொல்வதிற்கில்லை. பால்கன் பகுதியில் ஆஸ்திரியாவிற்கும், பிர'யாவிற்கும் ஏற்பட்ட ஆதிக்க வெறி காரணமாக உடன்படிக்கை வலுவிழந்தது.

(அ) ஆஸ்திரியா ஜெர்மானிய உடன்பாடு (1879)

பிஸ்மார்க், ஆஸ்திரியா, ஜெர்மனியிடத்தில் கொண்டுள்ள வெறுப்பை மறக்குமாற செய்வதில் என்றும் ஆர்வமுடையவராகவே இருந்தார். 1879இல் அவர் ஆஸ்திரியாவுடன ∴ர் உடன்பாடு செய்து கொண்டார். அந்த உடன்பாட்டின்படி ஜெர்மனி, ஆஸ்திரியா ஆகிய இருநாடுகளில் ஏதேனும் ஒன்று ர'யாவால் தாக்கப்பட்டால், மற்றொரு நாடு ர'யாவிற்கு எதிராக உதவிக்கு வரவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. ர'யா தவிர ஏனைய நாடுகளால் ஆஸ்திரியா (அ) ஜெர்மனி தாக்கப்படுமேயானால் தாக்கப்படாத மற்றொரு நாடு நடுநிலை வகிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால், தாக்கும் 3வது நாட்டை ர'யா ஆதரிக்கமேயானால் தாக்கப்படாத நாடு கூட்டணியைச் சார்ந்த நட்பு நாடுடன் சேர்ந்து எதிரியைத் தாக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

(ஆ) மீண்டும் ஒரு உடன்பாடு (1881)

3ஆம் அலெக்சாண்டர் 1881இல் ர'ய மன்னரானார். அவர் பிரெஞ்சுக் குடியரசிற்கு எதிராக செயல்பட்டார். பல ஆண்டுகளாக ர'யாவிற்கும் பிரான்சிற்கும் இடையே பகைமை இருந்து வந்தது. அச்சூழ்நிலையை பிஸ்மார்க் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட 1881இல் 3 பேரரசர் உடன்பாட்டைப் புதுப்பித்தார். 3 நாடுகளும் அவற்றுள் ஏதேனும் ஒன்று நான்காவது நாட்டால் தாக்கப்படுவதாக இருந்தால், ஏனைய இரண்டு நாடுகளும் நடுநிலை வகிக்க வேண்டும் என்று தீர்மானித்தன. இந்த 3 பேரரசர்களின் உடன்படிக்கை 1884ஆம் ஆண்டு 3 ஆண்டு காலத்திற்கு புதுப்பிக்கப்பட்டது. மீண்டும் 1887இல் மேலும் 3 ஆண்ட காலத்திற்கு மறுகாப்புறுதி உடன்படிக்கை என்னம் பெயரில் புதுப்பிக்கப்பட்டது. 1890இல் 3 பேரரசர்களின் உடன்படிக்கை முடிவிற்கு வந்தது.

(,) முக்கூட்டு உடன்படிக்கை

பிஸ்மார்க்கை அவரது உடன்படிக்கைக்காகப் போறுவாரும் உண்டு, தூற்றுவாரும் உண்டு. சிறந்த ராஜதந்திரியான அவர் இத்தாலியும்

பிரான்சும் உடன்பாடு செய்துகொள்வதைத் தடுக்க தீர்மானித்தார். இரண்டு நாடுகளுக்கும் கருத்து வேற்றுமையை உருவாக்குவதில் வெற்றி கண்ட அவர் இரு நாடுகளினுடைய உறவை அதன் மூலம் கெடுத்தார். டூனிஸ் பகுதியை (ஆப்பிரிக்கா) தன்வசப்படுத்த இத்தாலி மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தது. ஆனால் பிஸ்மார்க்கால் எக்குவிக்கப்பட்ட பிரான்சு டூனிசை கைப்பற்றியது. ஏமாற்றமடைந்த இத்தாலி, ஆஸ்திரியா ஜெர்மானிய உடன்பாட்டில் சேர்ந்தது. அதன் மூலம் 1879ஆம் ஆண்ட இரு நாடுகள் (ஆஸ்திரியா ஜெர்மனி) உடன்பாடு 1882இல் முக்கூட்டு உடன்படிக்கை ஆயிற்று.

(ஈ) ருமேனியா

1883இல் ருமேனியா மன்னர் கரோல் ஜெர்மனிக்கு விஜயம் செய்தார். ஆஸ்திரியாவின் அனுமதியுடன் 1883 அக்டோபரில் ஜெர்மனிக்கும் ருமேனியாவுக்கும் இடையே ஒரு பாதுகாப்பு உடன்பாடு கையொப்பமாயிற்று.

(உ) ஜெர்மானியும் இங்கிலாந்தும்

பிஸ்மார்க் இங்கிலாந்தை நீர் எலியாகக் கருதினார். 1885இல் ஜெர்மனிக்கும் இங்கிலாந்திற்கும் இடையே போர் தோன்றுவதற்குக் காரணம் ஏதுமில்லை என்று குறிப்பிட்டார். அவர் தன்னுடைய நாட்டை மிகவும் சரியாக தலை எலியாகவும் இங்கிலாந்தைக் கடல் எலியாகவும் கருதினார். எனவே இங்கிலாந்துடனான நட்புறவை மேற்கொள்ள விரும்பினார். பிஸ்மார்க் தனது மகனை ஜெர்மனியின் தூதுவராக இங்கிலாந்திற்கு அனுப்பினார். அதிலிருந்து இங்கிலாந்திற்கு அவர் அளித்த முக்கியத்துவம் வெளிப்படும்.

## 3.8 பிஸ்மார்க்கின் வீழ்ச்சி

1862 முதல் ஜெர்மனி ஐக்கியமாகும் வரை பிர'யாவின் அரசியல் அவரை மையமாகக் கொண்ட இயங்கியது. அதுபோலவே 1870 முதல் 1890 வரை ஐக்கிய ஜெர்மனியின் விவகாரங்களில் அவரே முக்கியமானவராகப் பணியாற்றினார். 1888 இல் ஜெர்மனியின் பேரரசர் முதலாம் வில்லியம் காலமானார். அவரை அடுத்து ஜெர்மனியின் மன்னராகப் பதவியேற்ற பிரெடரிக்கின் ஆட்சி 3 மாதங்களுக்கே நீடித்தது. அதே ஆண்டில் இரண்டாம் வில்லியம் ஜெர்மனியின் பேரரசர் ஆனார். அவர் பதிவியேற்றவுடன் அவருக்கும், பிஸ்மார்க்கிற்கும் இடையே கருத்து வேற்றுமை தோன்றியது. ஜெர்மனி என்னும் கப்பலை பல புயல்களுக்கும் வேறு ஆபத்துக்ளுக்கும் இடையே செலுத்தி சென்ற பிஸ்மார்க் பதவியிலிருந்த அகற்றப்பட்டார். 1890இல் அவர் தன் பதவியை ராஜினாமா செய்ததை அடுத்து அவரது அரசயில் வாழ்க்கை முடிவுற்றது. 1898இல் காலத்தின் மாமனிதராகக் கருதப்பட்ட அவர், தமது 83 வயதில் காலமானார்.

3.7.1 மதிப்பீடு

19ஆம் நூற்றாண்டின் இராஜதந்திரிகளுள் பிஸ்மார்க்கும் ஒருவர். ஜெர்மனியில் தோன்றிய வெகுசில மாமனிதர்களுள் அவரும் ஒருவர். ஜெர்மானிய ஐக்கியத்திற்கான பெருமை பெருமளவில் அவரையே சேரும். பிர்'யாவின் தலைமையில் இரத்தமும், இரும்பும் கொள்கையின் மூலமும் ஜெர்மனியின் ஐக்கியத்தைச் சாதித்தார். தனது கடின உழைப்பின் மூலமும் நேர்மையான பணியின் மூலமும் அவர் மிக உயர்ந்த நிலையை அடைந்தார். தனது எஜமானர் பேரரசர் முதலாம் வில்லியத்திடம் மிகவும் உண்மையாகப் பணியாற்றினார். அவரது தொழில்மயமாக்கும் கொள்கையின் மூலம் ஜெர்மனி உலக அளவில் ஒரு முண்ணனி உற்பத்தி நாடாயிற்று. சிறந்த ராஜதந்திரியான அவர் பன்னாட்டு அரசியலில் பெரும் வெற்றி கண்டார். இரகிசிய உடன்பாடுகள் மூலம் 1914ஆம் ஆண்டு முதல் உலகப்போருக்கு பிஸ்மார்க் ஒரு முக்கியக் காரணம் என்ற குற்றச்சாட்டும் அவர் மீது உண்டு.

உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்

1. ரிசார்ஜிமென்டோ என்றால் என்ன?

2. இத்தாலியின் பிஸ்மார்க் என்பவர் யார்?

## 3.9 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

- ரிசார்ஜிமென்டோ என்பது புத்துயிர்ப்பு இயக்கம் ஆகும். விடுதலை மற்றும் ஐக்கியம் ஆகியவற்றை இலட்சியமாகக் கொண்டு இயங்கியது. ரோமானியர்களின பழம் பெருமையை மக்கள் மத்தியில் எடுத்து இயம்பி ஆதரவு திரட்டியது. மக்கள் உள்ளத்தில் தேசப்பற்றையும், நாட்டுணர்வையும் எட்டியது. தாராள மக்களாட்சி அரசையும், பாராளுமன்ற ஆட்சியையும் ஆதரித்தது.

- இத்தாலியின் ஐக்கியத்திற்கு அரும்பணி ஆற்றியவர்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கவர்களுள் கவூர் ஒருவர். அவர் சார்டினிய மன்னர் 2ஆம் விக்டர் இமானுவேலுக்கு, 1861 முதல் தலைமை அமைச்சராகத் திறமையாக செயல்பட்டார். கவூர் இத்தாலியின் பிஸ்மார்க் என்று அழைக்கும் பேரினைப் பெற்றார்.

## 3.10 சுருக்கவுரை

- 1830ஆம் ஆண்டு ஜுலைப் புரட்சி இத்தாலியன் பல பகுதிகளின் மீது அதன் தாக்கத்தை ஏற்படுத்தியது. போப்பின் அரசுகளிலிருந்து பீடமாண்ட், பார்மா மொடேனா ஆகிய இத்தாலியப் பகுதிகளுக்கு புரட்சி பரவியது. போப் ஆஸ்தியரியாவின் உதவியை நாடினார். ஆஸ்திரியப்

படையின் உதவியுடன் மெட்டர்னிக்கின் கருணையால் போப் மீண்டும் ஆட்சியில் அமர்த்தப்பட்டார்

☐ 1850ஆம் ஆண்டிற்குப்பின் இத்தாலியில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் 1870ஆம் ஆண்டில் இத்தாலிய ஐக்கியத்தில் முடிந்தன

☐ 1854இல் துருக்கிக்கும், ர'யாவிற்கும் இடையே போர் தொடங்கியது. 1856வரை அப்போர் கிரிமியாவில் நடந்தது. அதற்கு கிரிமியப் போர் என்று பெயர்.

☐ கவூர் அவரது திட்டப்படி ஆஸ்திரியாவுக்கு எதிராக வலுவான படை ஒன்றை உருவாக்கினார். அப்படையின் உதவியுடன் ஆஸ்திரியாவின் ஆட்சியின் கீழ் இருந்த வெனிீயா லம்பார்டி ஆகியவற்றை விடுவிக்க தீர்மானித்தார்.

☐ 19ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் ஜெர்மானிய இணைவு முக்கியமான ஒன்றாகும்.

☐ பிரான்சின் குடியாட்சி அகற்றப்பட்டு முடியாட்சி நிறுவப்பட்டது. பிரான்சின் புதிய அரசாங்கம் தொடர்ந்து போரை நடத்தியது. 1871ஆம் ஆண்டு ஜனவரியில் பிர'யா பாரிஸ் நகரைக் கைப்பற்றியது.

☐ 19ஆம் நூற்றாண்டின் இராஜதந்திரிகளுள் பிஸ்மார்க்கும் ஒருவர். ஜெர்மனியில் தோன்றிய வெகுசில மாமனிதர்களுள் அவரும் ஒருவர். ஜெர்மானிய ஐக்கியத்திற்கான பெருமை பெருமளவில் அவரையே சேரும். பிர'யாவின் தலைமையில் இரத்தமும், இரும்பும் கொள்கையின் மூலமும் ஜெர்மனியின் ஐக்கியத்தைச் சாதித்தார்

## 3.11 முக்கிய வார்த்தைகள்

இத்தாலியின் ஐக்கியம், ரிசார்ஜிமென்டோ, கவூர், கரிபால்டி, கிரிமியப்போர் (1854-56), ஆஸ்திரிய - சார்டினிய போர் (1859-60), நேப்பிள்ஸ் - சிசிலி இணைப்பு (1860) வெனிீயா இணைப்பு, டென்மார்க்குடன் போர் (1864), ஆஸ்திரிய - பிர'யப் போர் (1866), பிராங்கோ - பிர'யப் போர் (1870-71), பிராஸ்பர்ட் உடன்படிக்கை (1871) பிஸ்மார்க்

## 3.12 தன்மதிப்பீட்டு வினாக்கள்

சுருக்கமான கேள்விப் பதில்கள்

3. கிரிமியப்போர் பற்றி விளக்குக?

4. பிராஸ்பர்ட் உடன்படிக்கை பற்றி குறிப்பு வரைக?

விரிவான கேள்விப் பதில்கள்

3. பிஸ்மார்க்கின் சாதனைகளைப் பற்றிக் கட்டுரை வரைக?

4. இத்தாலியின் ஐக்கியம் பற்றி மதிப்பிடுக?

## 3.13 மேலும் படிக்க


- C.J.H. Hayeset.(1916). History of Europe. New York: Macmillan Company
- C.D.M. Ketelbey. (1994). A History of Modern Times from 1789. Oxford: Oxford University Press
- V.D.Mahajan. (1975). History of Modern Europe Since 1789. New Delhi: S.Chand& Co(Pvt LTD)

# அலகு 4 கிழக்குப் பிரச்சினை

4.0 அறிமுகம்

4.1 நோக்கங்கள்

4.2 கிழக்குப் பிரச்சினைக்கான காரணங்கள்

4.3 கிரேக்க விடுதலைப்போர்

4.3.1 கிரேக்க விடுதலைப் புரட்சிக்கான காரணங்கள்

4.4 ஏட்ரியாநோபிள் உடன்பாடு

4.5 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

4.6 சுருக்கம்

4.7 முக்கிய கருத்துப்படிமங்கள்

4.8 தன்மதிப்பீட்டு வினாக்கள்

4.9 மேலும் படிக்க

## 4.0 அறிமுகம்

பேராசிரியர் மில்லர், ஐரோப்பாக் கண்டத்திலிருந்து துரக்கிப் பேரரசு படிப்படியாக மறையத் தொடங்கியதால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பும் விவகாரமே துருக்கிப் பேரரசின் அழிவை கிழக்கத்தியப் பிரச்சனை என்பார். துருக்கிப் பேரரசின் அழிவைக் கிழக்கத்தியப் பிரச்சனை எனலாம். துருக்கிப் பேரரசின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த பால்கன் பகுதி மக்களின் தேசிய உணர்வின் வெளிப்பாட்டை கீழைச்சிக்கல் எனலாம். ஐரோப்பாவின் முக்கிய நாடுகளான ர்'யா, ஆஸ்திரியா, பிரான்ஸ், பிர்'யா (ஜெர்மனி) இங்கிலாந்து ஆகியன பால்கன் பகுதியில் தமது மேலாண்மையை நிலைநாட்ட முயற்சி செய்தன. அதனால் பிரச்சனை மேலும் பெரிதாகியது. மேலும் துருக்கியின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட கருங்கடன் பகுதியில் ஐரோப்பிய நாடுகள் செல்வாக்குப் பெற முயன்றன

## 4.1 நோக்கங்கள்

இந்த அலகை படித்து முடித்த பின்பு உங்களால்

☐ கிழக்குப் பிரச்சனைக்களுக்கான காரணங்களை அறிய இயலும்

☐ கிரேக்க சுதந்திரப்போருக்கான காரணங்களைத் திரனாய்வு செய்ய இயலும்.

## 4.2 கிழக்குப் பிரச்சினைக்கான காரணங்கள்

துருக்கியின் ஆதிக்கம் அதன் உச்சநிலையில் இருந்தபொழுது துருக்கி பால்கன் பகுதி சிறிய ஆசியா - ஆசிய மைனர் (துருக்கியின் ஆசியப்பகுதி) சிரியா, மெசப்பட்டோமியா (ஈராக்) அரேபியா, எகிப்து, ஆப்பிரிக்காவின் வடகரை ஆகியவற்றைத் தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டிருந்தது. துருக்கிப் பேரரசில் பெரும் நிலப்பகுதி இருந்து வந்தது. துருக்கியின் கட்டுப்பாட்டில் இருந்த பால்கன்பகுதியில் மட்டும கிரீஸ் (கிரேக்க நாடு) பல்கேரியா, ருமேனியா, செர்பியா, மாண்ட்நெக்ரோ, மாசிடோனியா, அல்பேனியா, போஸ்னியா, ஹெர்ஸிகோவினா ஆகியவை அடங்கி இருந்தன. துருக்கி முஸ்லீம் சுல்தானால் ஆளப்பட்டது.

துருக்கிக்கு உட்பட்ட பால்கன் பகுதியில் வாழ்நத மக்கள் கிறித்துவர்கள் எனவே சுல்தானின் ஆட்சிக்கு உடபட்ட கிறித்தவ மக்கள் அவரது அடக்குமுறை ஆட்சிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கத் துவங்கினர். ர'யா போன்ற ஐரோப்பிய நாடுகள் முஸ்லீம் ஆட்சியை எதிர்த்து கிறித்துவ மக்களின் உதவிக்கு வந்தன. ஆனால் அவர்களது உண்மையான நோக்கம் வேறு. துருக்கிப் பேரரசின் சிதைவைப் பயன்படுத்திக் கொண்டு அவை தம் செல்வாக்கை வளர்த்துக்கொள்ள முயற்சித்தன. ர'யா பால்கன் பகுதியில் வேறு ஒரு உரியமையைக் கொண்டாடும் வாய்ப்பையும் பெற்றிருந்தது. அதாவது பால்கன் பகுதியின் பெரும்பான்மையான மக்களும், ர'யர்களும் ஸ்லாவ் இனத்தைச் சேர்ந்தவர்கள், ஐரோப்பிய நாடுகள் மத்தியில் இருந்த ஆதிக்கப் போட்டி கிழக்குப் பிரச்சனைக்குத் தீர்வு காண நீண்டகாலமாகவே ஒரு பெரும் தடையாக இருந்தது. கருங்கடன் பகுதியில் ர'ய ஆர்வத்திற்கு எதிராக இங்கிலாந்து இருந்தது. அதுபோலவே இங்கிலாந்து தன் வியாபாரத்தை வளர்த்துக் கொள்ளும் நோக்கில் மத்திய தரைக்கடலில் ஆர்வம் காட்டியது. அதுபோலவே பிரான்ஸ், ஆஸ்திரியா, பிரான்ஸ், ஆஸ்திரியா பிர'யா (ஜெர்மனி) ஆகிய பெரும் நாடுகள் துருக்கியின் ஆளுமைக்கு உட்பட்ட பகதியில் அக்கறை கொண்டிருந்தன. சுயநலத்திற்காக ஐரோப்பிய நாடுகள் கொண்டிருந்த ஆர்வமும் பால்கன் பகதியில் ஏற்பட்ட தேசிய எழுச்சியும் பல பிரச்சனைகளை உருவாக்கின. அவைகீழைச்சிக்கல் என்று அழைக்கப்படுகின்றன. கீழைப்பிரச்சனையை 6 பிரிவுகளாக பிரிக்கலாம் அவை,

- ☐ கிரேக்க விடுதலைப்போர்
- ☐ துருக்கி - எகிப்தியப் போர் (அ) மகமத் அலி விவகாரம்
- ☐ கிரீமியப் போர்
- ☐ ர'ய - துருக்கிப் போர்

- இளம் இத்தாலியர் இயக்கம்
- பால்கன் போர்

## 4.3 கிரேக்க விடுதலைப்போர் (1820-1832)

துருக்கிக்கு எதிராக விடுதலைப் போரில் இறங்கிய முதல் பால்கன் நாடு செர்பியா ஆகும். 1804இல் செர்பியர் காராஜார்ஜ் தலைமையில் சுல்தானின் ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். செர்பியாவை ர'யா ஆதரித்தது. 1812இல் துருக்கி சுல்தான் செர்பியாவிற்குச் சுய ஆட்சி அளிப்பதாக உறுதி அளித்தார். ஆனால் ர'யாவின் மீது நெப்போலியன் படை எடுக்க, துருக்கி அதைச் சாதாகமாக பயன்படுத்திக்கொண்டு தன் கொள்கையை மாற்றிக்கொண்டது. செர்பியாவை விடுவிக்க சுல்தான் மறுத்துவிட்டார். ஆகவே செர்பியர் மிலாஸ் அப்ரினோவிச் என்பார் தலைமையில் மீண்டும் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். 1830 ஆம் ஆண்டு அளவில் செர்பியாவுக்கும் துருக்கிக்கும் இடையே தொடர்பு பெயரளிவிலேயே இருந்தது. அடுத்துக் கிளச்சியில் இறங்கியவர்கள் கிரேக்கர்கள்.

### 4.3.1 கிரேக்க விடுதலைப் புரட்சிக்கான காரணங்கள்

(அ)கிரேக்கம்

செர்பிய விடுதலைப் புரட்சி கிரேக்க நாட்டிற்குப் பரவியது. கிரேக்கர் 1820இல் தம் விடுதலைப் போரைத் துவங்கினர். 1832இல் விடுதலைப் பெற்றனர் என்பதுக் குறிப்பிடத்தக்கது

துருக்கி சுல்தானின் அடக்குமுறை ஆட்சி கிரேக்க விடுதலைப் போருக்கு ஒரு முக்கிய காரணமாகும் கிரேக்கர்கள் துருக்கிப் பேரரசின் ஆளுகைக்கு உட்பட்ட காலம் தொட்டே துருக்கி அவர்களிடததில் மாற்றாந்தாய் மனப்போக்குடன் நடந்து கொண்டது. துருக்கி சுல்தான், கிரேக்கர்கள் நலனில் அக்கறை காட்டவில்லை. அவர்கள் மீது கடுமையான வரி திணிக்கப்பட்டது. வருவாய்த்துறை அலுவலர்களும் எழல்வாதிகளாக இருந்தனர். எனவே கிரேக்கர்கள் பெரும் துன்பத்திற்கு ஆளாயினர். துருக்கி உதுமானியப் பேரரசு ∴ர் இஸ்லாமிய அரசு ஆகும். ஆனால், கிரேக்க மக்கள் கிறித்துவர்கள். எனவே அவர்கள் முஸ்லீம் ஆட்சியிலிருந்து தம்மை விடுவித்தக்கொள்ள முயற்சி செய்தனர்.

1789ஆம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சி ஐரோப்பாவின் பல பகுதிகளில் தேசிய உணர்வை தூண்டியது. பழைய காலத்தில், நாகரிகங்கள் பிறந்த முக்கியமான நாடுகளுள் ஒன்றான கிரீஸ் சிறப்பாகத் திகழ்ந்தது. 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிரேக்க நாட்டில் அதன் பழம்பெருமை பற்றிய சிந்தனை தூண்டிவிடப்பட்டது. துருக்கியின் ஆட்சியிலிருந்து விடுபடும் நோக்கில் கிரேக்கர் 1814இல் ஹிடேரியாஅபிலைக் என்னும் இரகசிய

சங்கத்தை நிறுவினர். கிரேக்கத் திருச்சபை கிரேக்க மக்களுக்கு நாட்டுப்பற்றை எட்டுவதில் பெரும் பங்காற்றியது. கிரேக்க சமயத்தலைவர்களால் எக்குவிக்கப்பட்டு மேல்படிப்பிற்காக மேற்கு நாடுகள் சென்று திரும்பிய கிரேக்க இளைஞர்கள் தேசப்பற்றைப் பரப்பினார்கள். துருக்கிப் பேரரசும் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே பால்கன் மீது இருந்த தன் செல்வாக்கை இழக்கத் தொடங்கியது. கிரேக்கர்களும் இதை நல்ல வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு விடுதலைப் போரில் இறங்கினர்.

(ஆ)விடுதலைப் போர்

1820 முதல் கிரேக்கர் விடுதலைப் போரைத் தொடங்கினர். ஹிட்டேரியாஅபிலைக் என்னும் விடுதலைக் கழகம் விடுதலைப் போராட்டத்தில் பெரும்பங்கு ஆற்றியது. 1821இல் அலெக்சாண்டர் யப்சிலண்டி என்பவர் தலைமையில் புரட்சி நடைபெற்றது. ர்'யா போன்ற நாடுகள் ஆஸ்திரியாவின் தலைமை அமைச்சர் மெட்டர்நக்கின் செல்வாக்கால் புரட்சியாளர் அலெக்சாண்டருக்கு உதவிக்கு வரவில்லை. ஆகையினால் துருக்கிப்புரட்சியை அடக்கி அலெக்சாண்டரைக் கைது செய்தது. 1821இல் மீண்டும் மோரியா என்ற இடத்தில் புரட்சி வெடித்தது. ர்'யா கிரேக்கர்களுக்கு உதவ தீர்மானித்து அதற்கு முக்கிய காரணம் காண்ஸ்டாண்டிநோபிள் நகரில் கிறித்துவத் திருச்சபையின் தலைவர் சிரச்சேதம் செய்யப்பட்டார். கிறித்துவர் பலர் கொல்லப்பட்டனர் எனவே கிறித்துவ நாடான ர்'யா கிரேக்க கிறித்தவர்களுக்க உதவ முன் வந்தது. ஆனால் ர்'ய தலையீட்டை இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாடுகள் விரும்பவில்லை. ஏனெனில் பால்கன் பகுதியில் ர்'யாவின் ஆதிக்க வளர்ச்சி ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு அச்சத்தை உண்டு பண்ணும் என்று அவை அஞ்சின. ஆகையினால், அரசியல் சூழ்ச்சிக்கு பெயர் பெற்ற இங்கிலாந்தின் வெளியுறவு அமைச்சர் ஜார்ஜ் கானிங் கிரேக்க விவகாரத்தில் ஆங்கில ர்'யா கூட்டுத் தலையீட்டை முன்மொழிந்தார். அதைப் பிரான்சும் ஏற்றுக்கொண்டது.

(,)இலண்டன் உடன்பாடு

1827ஆம் ஆண்டு இலண்டனின் பிரான்சு, ர்'யா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் சந்தித்தன. அவை இலண்டன் உடன்பாட்டில் கையெழுத்திட்டன. அவ்வுடன்பாட்டின் மூலம் கிரேக்கர்களுக்கு சுய ஆட்சி அளிக்கமாறு துருக்கியை வற்புறுத்துவது என அம்மூன்று நாடுகளும் முடிவு செய்தன. கிரேக்கர்களுக்கு சுய ஆட்சி அளிக்கச் சுல்தான் மறத்தால் அவருக்கு எதிராகப் போர் தொடுக்கவும் தீர்மானித்தனர்.

துருக்கியின் சுல்தான் இலண்டன் உடன்பாட்டை ஏற்க மறுத்தார். உடனே 1827 ஆகஸ்டில் 3 நாடுகளும் சுல்தானுக்கு எதிராக தம் கூட்டுப்படையை அனுப்பின. அப்படை, துருக்கி எகிப்து ஆகிய நாடுகளின்

கடற்படையை நவாரினோ போரில் அழித்து நாசப்படுத்தியது. திடீரென இங்கிலாந்தும், பிரான்சும் தொடர்ந்து போரிட மறுக்க ர'ய மன்னர் முதலாம் அலெக்சாண்டர் போரைத் தொடர்ந்து நடத்தினார். 1828 (வாலேச்சியா - மால்டேவியா) ஏப்ரலில் ர'யா துருக்கியின் சில பகுதிகளை ஆக்கிரமித்தது. ர'யக் கடற்படை டார்டெனல்ஸ் நீர் இணைப்பில் நுழைந்தது. ர'யா துருக்கிக்கு எதிராகத் தொடர்ந்து போரிடுமேயானால் சிறந்த இராஜதந்திரிகளும் இங்கிலாந்தின் திறன்மிகு வெளியுறவு அமைச்சர்களுமான காசில்ரே, கானிங் ஆகியோர் மேற்கொண்ட முயற்சிகள் பயன் அற்றுப் போகும் என்று இங்கிலாந்து அஞ்சியது. 1829இல் ர'யப் படை கான்ஸ்டாண்டிநோபிளை நெருங்கியதை அடுத்தத் துருக்கி அமைதியை விரும்ப இரு நாடுகளும் ∴ர் அமைதி உடன்பாடு செய்து கொண்டன. அதற்கிடையில் இங்கிலாந்தும் பிரான்சும் எகிப்தின் சுல்தான் மெக்மத் அலி மற்றும் அவருடைய மகன் இருவருடனும் வெற்றிகரமாகப் பேச்சுவார்த்தை நடத்தின. மோரியாவை விட்டு வெளியேற எகிப்து ஒத்துக்கொண்டது. எகிப்தியப் படை எகிப்பிதி விட்டு வெளியேறிய பின் இலண்டனில் ஓர் அமைதி உடன்பாடு கையொப்பம் ஆயிற்று. 1829இல் அந்த அமைதி உடன்பாடு துருக்கியினால் ஏட்ரியாநோபிள் என்ற இடத்தில் உறுதி செய்யப்பட்டது.

## 4.4 ஏட்ரியாநோபிள் உடன்பாடு

ஏட்ரியாநோபிள் உடன்பாட்டின்படி கிரேக்க நாட்டின் சுய ஆட்சியை துருக்கி ஏற்றுக்கொண்டது டான்யூப் நதிப்பகுதியில் இருந்த கோட்டைகளை அழிக்க ஒத்தக்கொண்டது. மேலும், துருக்கி போர் ந'ட ஈட்டுத் தொகை தரச் சம்மதித்தது. மால்டோவியா, வாலேச்சியா சிற்றரசுகளின் சுய அட்சி அங்கீகரிக்கப்பட்டு அவை ர'யப் பாதுகாப்பின் கீழ் வைக்கப்பட்டன. பிர'க் கப்பல்கள் பாஸ்பரஸ், நீரிணைப்பில் வியாபாரக் காரணங்களுக்காகச் செல்ல அனுமதிக்கப்பட்டன. கிரேக்கர்கள் சுய ஆட்சி அந்தஸ்து பெற்றும் திருப்தி அடையவில்லை எனவே கிரேக்கர்கள் முழு விடுதலை பெறத் தீர்மானித்தனர். 1832ஆம் ஆண்டு இலண்டன் மாநாட்டில் பங்கு கொண்ட இங்கிலாந்து, பிரான்சு, பிர'யா ஆகிய நாடுகள் கிரேக்க நாட்டிற்கு முழுச்சுதந்திரம் அளிக்கத் தீர்மானித்தன. இவ்வாறாக 1832இல் கிரேக்க நாடு விடுதலை பெற்றது.

உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்

1. ஏட்ரியாநோபிள் என்றால் என்ன?

2. கிரேக்கம் விடுதலைப் பெற்ற ஆண்டு எப்போது?

## 4.5 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

☐ கிரேக்க நாட்டின் சுய ஆட்சியை துருக்கி ஏற்றுக்கொண்டது டான்யூப் நதிப்பகுதியில் இருந்த கோட்டைகளை அழிக்க ஒத்தக்கொண்டது. மேலும், துருக்கி போர் நஷ்ட ஈட்டுத் தொகை தரச் சம்மதித்தது. மால்டோவியா, வாலேச்சியா சிற்றரசுகளின் சுய அட்சி அங்கீகரிக்கப்பட்டு அவை ரஷ்யப் பாதுகாப்பின் கீழ் வைக்கப்பட்டன. பிரஷ்க் கப்பல்கள் பாஸ்பரஸ், நீரிணைப்பில் வியாபாரக் காரணங்களுக்காகச் செல்ல அனுமதிக்கப்பட்டது என்பது ஏட்ரியாநோபிள் உடன்பாட்டின் மூலம் என்பதுக் குறிப்பிடத்தக்கது

☐ செர்பிய விடுதலைப் புரட்சி கிரேக்க நாட்டிற்குப் பரவியது. கிரேக்கர் 1820இல் தம் விடுதலைப் போரைத் துவங்கினர். 1832ஆம் ஆண்டு இலண்டன் மாநாட்டில் பங்கு கொண்ட இங்கிலாந்து, பிரான்சு, பிரஷ்யா ஆகிய நாடுகள் கிரேக்க நாட்டிற்கு முழுச்சுந்திரம் அளிக்கத் தீர்மானித்தன. இவ்வாறாக 1832இல் கிரேக்க நாடு விடுதலை பெற்றது.

4.6 சுருக்கவுரை

☐ துருக்கிக்கு எதிராக விடுதலைப் போரில் இறங்கிய முதல் பால்கன் நாடு செர்பியா ஆகும். 1804இல் செர்பியர் காராஜார்ஜ் தலைமையில் சுல்தானின் ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். செர்பியாவை ரஷ்யா ஆதரித்தது.

☐ 1812இல் துருக்கி சுல்தான் செர்பியாவிற்குச் சுய ஆட்சி அளிப்பதாக உறுதி அளித்தார். ஆனால் ரஷ்யாவின் மீது நெப்போலியன் படை எடுக்க, துருக்கி அதைச் சாதாகமாக பயன்படுத்திக்கொண்டு தன் கொள்கையை மாற்றிக்கொண்டது.

☐ செர்பியாவை விடுவிக்க சுல்தான் மறுத்துவிட்டார். ஆகவே செர்பியர் மிலாஸ் அப்ரினோவிச் என்பார் தலைமையில் மீண்டும் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

☐ 1830 ஆம் ஆண்டு அளவில் செர்பியாவுக்கும் துருக்கிக்கும் இடையே தொடர்பு பெயரளிவிலேயே இருந்தது. அடுத்துக் கிளச்சியில் இறங்கியவர்கள் கிரேக்கர்கள்.

## 4.7 முக்கிய வார்த்தைகள்

கிரேக்க விடுதலைப்போர், துருக்கி - எகிப்தியப் போர் (அ) மகமத் அலி விவகாரம் ,கிரீமியப் போர், ரஷ்ய - துருக்கிப் போர், இளம் இத்தாலியர் இயக்கம், பால்கன் போர்.

## 4.8 தன்மதிப்பீட்டு வினாக்கள்

சுருக்கமான கேள்விப் பதில்கள்

5. மகமத் அலி விவகாரம் பற்றி விளக்குக?

6. இளம் இத்தாலியர் இயக்கம் பற்றி குறிப்பு வரைக?

விரிவான கேள்விப் பதில்கள்

5. கிரேக்க விடுதலைப்போர் பற்றிக் கட்டுரை வரைக?

6. ர்'ய - துருக்கிப் போர் பற்றி மதிப்பிடுக?

## 4.9 மேலும் படிக்க


- C.J.H. Hayeset.(1916). History of Europe. New York: Macmillan Company
- C.D.M. Ketelbey. (1994). A History of Modern Times from 1789. Oxford: Oxford University Press
- V.D.Mahajan. (1975). History of Modern Europe Since 1789. New Delhi: S.Chand&Co(Pvt LTD)

# அலகு 5 துருக்கி - எகிப்தியப் போர்

**கட்டமைப்பு**

5.0 முன்னுரை

5.1 நோக்கங்கள்

5.2 மெகமத் அலி விவகாரம்

5.3 உன்கையர்ஸ்கெலசி உடண்பாடிக்கை

5.4 இலண்டன் உடன்படிக்கை

5.5 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

5.6 சுருக்கவுரை

5.7 முக்கிய கருத்துப்படிமங்கள்

5.8 தன்மதிப்பீட்டு வினாக்கள்

5.9 மேலும் படிக்க

## 5.0 முன்னுரை

1833லிருந்து துருக்கி, மெகமத் - அலியின் ஆளுகையின் கீழ் இருந்தது. இஸ்லாமிய நாடுகளின் சிறந்த நிர்வாகிகளுள் அவரும் ஒருவர் அவர் தன்னுடைய முயற்சியின் காரணமாகப் படிப்படியாக உயர்ந்து எகிப்தினுடைய அரசரானார். ஒரு அநாதையாகத் தன் வாழ்க்கையைத் தொடங்கிய அவர் எகிப்தின் போர் வீரராகப் பணியாற்றினார். நெப்போலியன் எகிப்தின் மீது படையெடுத்த பொழுது அவரை எதிர்த்து மெகமத் அலி போரிட்டார்.

## 5.1 நோக்கங்கள்

இந்த அலகை படித்து முடித்த பின்பு உங்களால்

☐ மெகம்மது அலியின் விவகாரங்களை அறிய இயலும்

☐ உன்கியர் ஸ்கெலசி உடன்படிக்கை பற்றி அறிய இயலும்.

## 5.2 மெகமத் அலி விவகாரம்

நெப்போலியன் எகிப்து படையெடுப்பை முடித்துக் கொண்டு எகிப்தை விட்டு வெளியேறிய பின் மெகமத் அலி கெய்ரோவைக் கைப்பற்றி அங்கு தன் ஆட்சியை நிறுவினார். அவரது எழுச்சி கீழைச்சிக்கலில் மேலும் ஒரு

புதிய பிரச்சனையை உருவாக்கியதோடு அல்லாமல் ஐரோப்பிய அரசியலில் சில மாற்றங்களையும் செய்தது. துருக்கிச் சுல்தானின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டு மெகமத் அலி எகிப்தின் ஆட்சியாளராகச் செயல்பட்டார். எகிப்தில் அமைதியை நிலைநாட்டிய அவர் அந்நாட்டின் பரப்பை விரிவாக்கத் தீர்மானித்தார். அந்நோக்கத்தில் வெற்றி பெற பெரும்படை ஒன்றைத் திரட்டினார். படைவீரர்களுக்குப் பிரெஞ்சு நிபுணர்களைக் கொண்டு பயிற்சியளித்தார்.மெகமத் அலி தன் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள கிரேக்க விடுதலைப் போர் (1820-32) வாய்ப்பைத் தந்தது. ஏனெனில் துருக்கிச் சுல்தான் கிரேக்க விடுதலைப் போரை அடக்க மெகமத் அலியின் உதவியை நாடினார்.

மெகமத் அலி தொடக்கத்திலிருந்தே சிரியா, ஆசியா மைனர் மற்றும் துருக்கியையும் கூடத் தன் ஆட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர ஆசைப்பட்டார். எனவே, துருக்கி சுல்தானின் வேண்டுகோளை ஏற்று 1824இல் அவருடன் ஓர் உடன்பாடு செய்து கொண்டார். உடன்பாட்டின்படி சுல்தான் பா'ாவிற்கு சிரியா, கிரீட் ஆகியவற்றைத் தர சம்மதித்தார். இப்ராஹிம் தலைமையில் சென்ற எகிப்தியப் படை மோரியாவில் நடைபெற்ற கிரேக்கர்களின் கிளர்ச்சியை 1824-1825இல் ஒடுக்கியது. இப்ராஹிம் நவாரினோ எனும் இடத்தில் நிலை கொண்டு அங்கிருந்து பல இடங்களைத் தாக்கினார். கிரேக்க நாட்டில் நடைபெற்ற அந்நிகழ்ச்சிகளை கேள்வியுற்ற ஐரோப்பிய நாடுகள் எகிப்தியப் படைக்கு எதிராக கிரேக்கர்களுக்கு உதவி செய்ய தீர்மானித்தன. இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நடுகளின் கூட்டப்படை 1827ல் நாவாரினோ போரில் எகிப்துப் படையைத் தோற்கடித்தது.

துருக்கி - எகிப்தியப் போர்

கிரேக்க விடுதலைப் போரின் போது தான் செய்த உதவிக்காக துருக்கி சுல்தானிடம் எகிப்து பா'ா உடன்பாட்டின்படி சேர வேண்டிய நிலப்பகுதிகளைக் கேட்டார். சுல்தான் பா'ாவின் வேண்டுகோளை ஏற்க மறுத்ததர். பா'ா கோபமுற்றார். சிரியா போன்ற நிலப்பகுதிகளை ஆக்கிரமிக்கும் நோக்கில் துருக்கியைத் தாக்க தீர்மானித்தார். 1831இல் இப்ராஹிம் தலைமையில் எகிப்திய இராணுவம் சிரியாவை வென்றது.

1832இல் ஆசியா மைனர் மீது படையெடுத்த இப்ராஹிம், கான்ஸ்ட்டான்டிநோபிளை நோக்கி படையெடுத்து சுல்தானை அச்சுறுத்தினார். அது கண்டு வியப்பில் ஆழ்ந்த சுல்தான் எகிப்தியப் படைக்கு எதிராக ஐரோப்பிய நாடுகளின் உதவியை நாடினார். உதவிக்காக ர'யாவை அணுகிய பொழுது துருக்கிப் பேரரசுக்கு உட்பட்ட பகுதியில் தன் ஆதிக்கத்தை நிலைநாட்ட விரும்பிய ர'யா சுல்தானின் வேண்டுகோளை நல்வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு உதவ முன் வந்தது. 1831 இல் ர'ய மன்னர் முதலாம் நிக்கோலஸ் துருக்கிக்கு

ஆதரவாக எகிப்தை எதிர்த்து படை ஒன்றை அனுப்பி வைத்தார். துருக்கியின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட பகுதியில் ர'யா செல்வாக்குப் பெறுவதை விரும்பாத பிர'யா, இங்கிலாந்து போன்ற நாடுகள் சுல்தானிற்கு எதிராக கடற்படையை அனுப்பத் தீர்மானித்தன.

எகிப்தின் அரசர் பா'ா, இங்கிலாந்து, பிரான்சு, ர'யா ஆகிய 3 ஐரோப்பிய வல்லரசுகளையும் எதிர்த்து போரிடுவது இயலாது என்பதை உணர்ந்தார். ஃரளவிற்குத் தன் நட்பு நாடாக இருந்த பிரான்சின் அறிவுரையின்படி அமைதி உடன்பாடு செய்து கொள்ளத் தீர்மானித்தார். 1833இல் மெகமத் அலி சுல்தானுடன் ஃர் அமைதி உடன்பாடு செய்து கொண்டார். அந்த உடன்பாட்டின்படி எகிப்து, சிரியா, கிரீட், டிரிப்போலி (இன்றைய லிபியா) ஆகிய நாடுகளின் அரசராக மெகமத் அலி அங்கீகரிக்கப்பட்டார். அதனால், அவர் வெற்றியின் சிகரத்தை அடைந்தார். அரச உரிமை அவருக்கு மட்டுமே வழங்கப்பட்டது. ஆனால் அவரது மகனுக்கு அல்ல.

## 5.3 உன்கியர் ஸ்கெலசி உடன்படிக்கை (1833)

துருக்கி சுல்தான் இரண்டாவது முகமது ர'ய உதவிக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக அந்நாட்டு மன்னர் முதலாம் நிக்கோலசுடன் 1833ஆம் ஆண்டு ஜுலை மாதம் ஃர் அமைதி உடன்பாடு செய்து கொண்டார். அதற்கு உன்கியர் ஸ்கெலசி உடன்பாடு என்று பெயர். கான்ஸ்டாண்டிநோபிள் நகரில் இருந்த ர'ய தூதர் ஆர்லோவின் முயற்சியால் உருவான அவ்வுடன்பாடு ர'யாவிற்கு கிடைத்த அரசியல் சூழ்ச்சி வெற்றியாகும். அவ்வுடன்பாட்டின்படி ர'யாவின் கப்பல்கள் டார்டெனல்ஸ் நீரிணைப்பில் சுதந்திரமாக உலாவர அனுமதிக்கப்பட்டன. ர'யா துருக்கியின் தலைநகர் இஸ்தான்புல் நகரில் இருந்த (கான்ஸ்டான்டின்நோபிள்) தன் படையை விலக்கிக் கொண்டது. தேவை ஏற்படுமேயானால் ர'யா பாஸ்பரசுக்கு, அதன் படையை அனுப்பவும் சலுகை வழங்கப்பட்டது. டால்டெனல்ஸ் வழியாக ர'யாவைத் தவிர மற்ற ஐரோப்பிய நாடுகள் தம் கப்பல்களை அனுப்ப அனுமதி வழங்கப்படவில்லை.

உடன்பாட்டின் முக்கியத்துவம்

உன்கியர் ஸ்கெலசி உடன்பாடு கருங்கடலை ஒரு ர'ய ஏரியாக மாற்றியது. உடன்பாட்டின் விளைவாக மத்திய தரைக்கடல் பகுதியில் ர'யா மிகவும் வலுவான நாடாக உருவாயிற்று. அவ்வுடன்பாடடின் விளைவாக துருக்கி சுல்தான் ஏறக்குறைய ர'யாவின் முழுக்கட்டுப்பாட்டில் வந்ததை அறிந்த இங்கிலாந்தும் பிரான்சும் அதிர்ச்சியடைந்து அஞ்சின. சிறந்த இராஜதந்திரியும் நிறைந்த நிர்வாகத் திறனும் உடையோருமான

இங்கிலாந்தின் வெளியுறவு அமைச்சர் பால்மெர்ஸ்டன், உன்கியர் ஸ்கெலசி உடன்பாட்டை வன்மையாகக் கண்டித்தார்.

துருக்கி - எகிப்தியப் போர் (1838)

1838இல் எகிப்தின் அரசரான மெகமத் அலி துருக்கி சுல்தானின் தலைமையை ஏற்க மறுத்தார். தான் செலுத்த வேண்டிய கப்பத்தையும் நிறுத்தினார். அது போலவே சுல்தானும் 1833இல் பா'ாவுடன் தான் செய்து கொண்ட உடன்பாடு தனக்குப் பாதகமாக அமைந்ததால் தவறானதாக என்பதை தாமதமாக உணர்ந்தார். எனவே சிரியாவை மீண்டும் பெரும் நோக்கில் 1839இல் பா'ாவுக்கு எதிராக சுல்தான் போர் தொடுத்தார். பா'ாவின் மகன் இப்ராஹிம் அலி துருக்கியின் படையை 1839 ஜுனில் நெசிப் என்ற இடத்தில் தோற்கடித்தார். பா'ா, துருக்கி சுல்தான் தன்னுடைய வாரிசுகளை தனக்குப்பின் எகிப்தின் பரம்பரை ஆட்சியாளர்களாக ஏற்றுக்கொண்டால் தான் சுல்தானுடன் அமைதி உடன்பாடு செய்து கொள்ள தயார் என்று அறிவித்தார். ஆனால் புதிய சுல்தான் அப்துல் மஜீத் மகமது அலியின் ஆதிக்கத்தை முழுதும் அழிக்கத் தீர்மானித்தார். அத்தருணத்தில் ஐரோப்பிய நாடுகள் சுல்தானுக்கும் பா'ாவிற்கும் இடையேயான விவகாரத்தைக் கூர்ந்து கவனித்து வந்தன. இங்கிலாந்து, பிரான்சு, பிர்'யா, ர்'யா, ஆஸ்திரியா ஆகிய நாடுகளின் தூதுவர்கள் பா'ாவின் நிபந்தனைகளை ஏற்க வேண்டாமென்று சுல்தானுக்கு அறிவுரை கூறினார்.

1840இல் இங்கிலாந்து, ர்'யா ஆஸ்திரியா ஆகிய 3 நாடுகளும் சிரியாவை விட்டு வெளியேறுமாறும், சுல்தானுக்குப் பணியுமாறும் பா'ாவை எச்சரித்தன. எச்சரிக்கைக்குப் பணிந்தால் மெகமத் அலியின் வாரிசுகளை அவருக்குப் பின் ஆட்சியாளர்களாக அங்கீகரிக்க முடியும் என்று கூறின. அவ்வாறு மெகமத் அலி அதை ஏற்கவில்லையென்றால் மெகமது அலியை எதிர்த்து போர் தொடுப்பதாகவும் கூறின. எச்சரிக்கையை மெகமது அலி புறக்கணிக்கவே 3 நாடுகளும் தனது கப்பற்படையை சிரியாவிற்கு அனுப்பினர். ஆங்கில கடற்படை தளபதி நேப்பியர் ஏக்ரே என்னும் இடத்தில் இப்ராஹிம் அலியைத் தோற்கடித்தார். அதை அடுத்து மெகமத் அலி அமைதியை விரும்பினார். செய்து கொள்ளப்பட்ட அமைதி உடன்பாட்டின்படி மெகமத் அலி எகிப்தின் பா'ாவாக அங்கீகரிக்கப்பட்டார். இந்த விவகாரத்தில் தலையிட்டதன் மூலம் இங்கிலாந்து, துருக்கி, எகிப்து ஆகிய நாடுகளில் தன் செல்வாக்கை வளர்த்துக் கொண்டது.

## 5.4 இலண்டன் உடன்பாடு

அவ்வெற்றிகள் மூலம் திருப்தி அடையாத இங்கிலாந்து உன்கியர் ஸ்கெலசி உடன்பாட்டை மாற்றி அமைக்க விரும்பியது. 1841 ஜுலையில் இலண்டனில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. அம்மாநாட்டில் ர்'யாவும் கலந்து

கொண்டது. இலண்டன் உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது. மெகமத் அலி சிரியாவின் மீது உரிமையை துறந்தார். அவர் எகிப்தின் மன்னராக மட்டும அங்கீகரிக்கப்டப்டார். சுல்தானுக்குக் கப்பம் கட்டவும், சிரியாவிலிருந்து தன் படையை விலக்கிக் கொள்ளவும் சம்மதித்தார். டார்டெனல்ஸ் நீர் இணைப்பு அனைத்து நாடுகளின் கப்பல் போக்குவரத்திற்கு திறந்துவிடப்பட்டது. ர்'யப் போர்க்கப்பல்கள் அங்கு செல்லத் தடை விதிக்கப்பட்டது.

இறுதியில் நடந்தவை அனைத்து மெகமத் அலிக்கு எதிராகவே இருந்தன. அவரது வாழ்நாளில் இறுதியில் அவர் பெரிதும் கவலையுற்று நோயுற்றார். அவரது மகன் இப்ராஹிம்மின் மரணம் மேலும் அவரது உடல் நிலையைப் பாதித்தது. மெகமத் அலி 1841இல் காலமானார். இலண்டன் உடன்பாட்டினால் ர்'யா கீழைப்பிரச்சனையில் தன் செல்வாக்கை இழந்தது. கிரேட் பிரிட்டன் தன் செல்வாக்கை வளர்த்துக் கொண்டது. ர்'யாவிற்கும், இங்கிலாந்திற்கும் ஏற்பட்ட வேற்றுமை உணர்வு கிரிமியப் போருக்கு இட்டுச் சென்றது.

உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்

1. உன்கியர் ஸ்கெலசி என்றால் என்ன?

2. மெகமத் அலி என்பவர் யார்?

## 5.5 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

☐ துருக்கி சுல்தான் இரண்டாவது முகமது ர்'ய உதவிக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக அந்நாட்டு மன்னர் முதலாம் நிக்கோலசுடன் 1833ஆம் ஆண்டு ஜுலை மாதம் ஓர் அமைதி உடன்பாடு செய்து கொண்டார். அதற்கு உன்கியர் ஸ்கெலசி உடன்பாடு என்று பெயர்.

☐ மெகமத் அலி என்பவர் எகிப்தின் மன்னராவார். நெப்போலியன் எகிப்து படையெடுப்பை முடித்துக் கொண்டு எகிப்தை விட்டு வெளியேறிய பின் மெகமத் அலி கெய்ரோவைக் கைப்பற்றி அங்கு தன் ஆட்சியை நிறுவினார். அவரது எழுச்சி கீழைச்சிக்கலில் மேலும் ஒரு புதிய பிரச்சனையை உருவாக்கியதோடு அல்லாமல் ஐரோப்பிய அரசியலில் சில மாற்றங்களையும் செய்தது. துருக்கிச் சுல்தானின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டு மெகமத் அலி எகிப்தின் ஆட்சியாளராகச் செயல்பட்டார்.

## 5.6 சுருக்கவுரை

☐ 1833இல் மெகமத் அலி சுல்தானுடன் ∴ர் அமைதி உடன்பாடு செய்து கொண்டார். அந்த உடன்பாட்டின்படி எகிப்து, சிரியா, கிரீட்,

டிரிப்போலி (இன்றைய லிபியா) ஆகிய நாடுகளின் அரசராக மெகமத் அலி அங்கீகரிக்கப்பட்டார். அதனால், அவர் வெற்றியின் சிகரத்தை அடைந்தார்.

□ உன்கியர் ஸ்கெலசி உடன்பாடு கருங்கடலை ஒரு ர்'ய ஏரியாக மாற்றியது. உடன்பாட்டின் விளைவாக மத்திய தரைக்கடல் பகுதியில் ர்'யா மிகவும் வலுவான நாடாக உருவாயிற்று. அவ்வுடன்பாடின் விளைவாக துருக்கி சுல்தான் ஏறக்குறைய ர்'யாவின் முழுக்கட்டுப்பாட்டில் வந்ததை அறிந்த இங்கிலாந்தும் பிரான்சும் அதிர்ச்சியடைந்து அஞ்சின.

□ 1838இல் எகிப்தின் அரசரான மெகமத் அலி துருக்கி சுல்தானின் தலைமையை ஏற்க மறுத்தார். தான் செலுத்த வேண்டிய கப்பத்தையும் நிறுத்தினார்.

## 5.7 முக்கிய வார்த்தைகள்

மெகமத் அலி, உன்கியர் ஸ்கெலசி, துருக்கி - எகிப்தியப் போர் (1838)

## 5.8 தன்மதிப்பீட்டு வினாக்கள்

**சுருக்கமான கேள்விப் பதில்கள்**

1. நெப்போலியனின் சட்டத்தொகுப்பு பற்றி விளக்குக?

2. டில்சிட் உடன்படிக்கை பற்றி குறிப்பு வரைக?

**விரிவான கேள்விப் பதில்கள்**

1. நெப்போலியனின் சாதனைகளைப் பற்றிக் கட்டுரை வரைக?

2. கண்டத்திட்டத்தைப் பற்றி மதிப்பிடுக?

## 5.9 மேலும் படிக்க

• C.J.H. Hayeset.(1916). History of Europe. New York: Macmillan Company

• C.D.M. Ketelbey. (1994). A History of Modern Times from 1789. Oxford: Oxford University Press

• V.D.Mahajan. (1975). History of Modern Europe Since 1789. New Delhi: S.Chand&Co(Pvt LTD)

# அலகு 6 கிரிமியப் போர்

**கட்டமைப்பு**

6.0 அறிமுகம்

6.1 நோக்கங்கள்

6.2 கிருமியப் போர்

6.3 ர்'ய-துருக்கியப் போர்

6.4 1878ஆம் ஆண்டு சான்ஸடெபானோ உடன்பாடு

6.5 1878 ஆம் ஆண்டு பெர்லின் ஏற்பாடு (மாநாடு)

6.6 இளம் துருக்கியர் இயக்கம்

6.7 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

6.8 சுருக்கவுரை

6.9 முக்கிய வார்த்தைகள்

6.10 தன்மதிப்பீட்டு வினாக்கள்

6.11 மேலும் படிக்க

## 6.0 முன்னுரை

கிழக்கத்தியப் பிரச்சனையில் கிரிமியப் போர் ஒரு திருப்புமுறை ஆகும். அது ஒரு முக்கியமான நிகழ்ச்சி என்பது பலரது கருத்து. ஐரோப்பிய நாடுகளுக்கான ஆதிக்க ப்போட்டியின் விளைவாக எழுந்த ச்ச்சரவுகளே இதற்கு காரணமாகன் அமைந்தன. 1841 க்கும் 1854 க்கும் இடையில் முதலாம் நிக்கோலஸ் இங்கிலாந்துடன் இணைந்து துருக்கியின் பகுதிகளைக் கைப்பற்ற இரண்டு முறை முயற்சிகளை மேற்கொண்டார். அவர் துருக்கியை ஐரோப்பாவின் நோயாளி என வர்ணித்தார். ஆனால் கிழக்குப் பகுதிகளில் இங்கிலாந்து நடுநாயகமாக செயல்பட விழைந்தது. துருக்கியை ர்'யாவிற்கு எதிராகப் பயன்படுத்த அரணாக இங்கிலாந்து மாற்ற நினைத்து. இதன் மூலம் பால்கன் நாடுகளில் ர்'யாவின் ஆதிக்கத்தை தடுக்க இயலும் என அந்நாடு கருதியது. கிரிமியப் போர் இவ்விரு நாடுகளின் ஆதிக்கப்போட்டியின் விளைவாகவே எழுந்தது.

## 6.1 நோக்கங்கள்

இந்த அலகை படித்து முடித்த பின்பு உங்களால்

☐ கிரிமியப்போருக்கான காரணங்களை அறிய முடியும்

☐ பாரிஸ் உடன்பட்க்கையின் சிறப்புகளை விளக்க இயலும்

☐ ர'ய- துருக்கிப் போரினைப் பற்றி விவரமாக அறிய இயலும்

☐ சான் ஸ்டிபனோ உடன்படிக்கையின் சிறப்புகளை அறிய இயலும்

☐ இளம் துருக்கியர் இயக்கத்தின் செயல்பாடுகளை சீர்தூக்க இயலும்

## 6.2. கிருமியப் போர்

(அ)காரணங்கள்

ஐரோப்பிய நாடுகள் மத்தியில் நிலவிய அரசியல் ஆர்வமும், அதனால் அந்நாடுகளுக்கிடையே ஏற்பட்ட கருத்து மோதலும் கிரிமியப் போரில் ஐரோப்பாவின் முக்கிய நாடுகளை இறக்கின. சிதைந்து கொண்டிருந்த துருக்கிப் பேரரசின் நிலப்பகுதிகளின் தன் ஆதிக்கத்தை வளர்த்துக் கொள்ள ர'யா ஆசைப்பட்டது. ர'ய மன்னர் முதலாம் நிக்கோலஸ் துருக்கியை ஐரோப்பாவின் நோயாளி என்று வர்ணித்தார். அவர் துருக்கியை இங்கிலாந்தோடு சேர்ந்து கொண்டு பங்கிட்டுக்கொள்ள முயற்சித்தார். இங்கிலாந்திற்கு எகிப்தையும், கிரீட்டையும் கொடுத்துவிட்டு தான் துருக்கியின் தலைநகரான கான்ஸ்டான்டிநோபிளை தன் நாட்டுடன் இணைத்துக் கொள்ளலாம் என எண்ணினார். ஆனால் இங்கிலாந்து அவருடைய கருத்தை நிராகரித்தது. ஏனைய ஐரோப்பிய நாடுகளின் எண்ணத்திற்கு மாறாக துருக்கிக்கு உதவியாக ஐரோப்பிய நாடுகள் இருக்குமேயானால் துருக்கி வலிமை பெறும் என்று நம்பியது. இவ்வாறாக கீழைப்பகுதியில் துருக்கியை மீண்டும் வலிமையான நாடாக்குவதன் மூலம் பால்கன் பகுதியில் ர'யா ஆக்கிரமிப்பை எதிர்த்து சக்திச் சமநிலையை (அதிகாரச்சமநிலை) கட்டிக்காக்க முடியும் என்று இங்கிலாந்து எண்ணியது. இவ்வாறு ர'யாவிற்கும் இங்கிலாந்திற்கும் இடையே ஏற்பட்ட பிணக்கு கிருமியப் போருக்கு காரணமாயிற்று. பிரெஞ்சு மன்னர் 3ஆம் நெப்போலியன் பிரெஞ்சு மாவீரன் முதலாம் நெப்போலியனின் பெருமையை மீண்டும் நிலைநாட்ட விரும்பினார். அவருக்குக் கிடைக்கும் ஒரு வெற்றி ஐரோப்பிய நாடுகள் மத்தியில் அவரது பெருமையை உயர்த்தும் என்று எண்ணினார். பால்கன் பகுதியில் நிலவிய சூழ்நிலை நெப்போலியன் நினைத்தவாறு வாய்ப்பை அவருக்குத் தந்தது. துருக்கியின் பெரும் பகுதியை அவரும் அபகரிக்கத் தீர்மானித்தார்.

பாலஸ்தீனத்தின் புனித இடங்களை நிர்வகிப்பதில் ரோமன் கத்தோலிக்கத் திருச்சபைக்கும், கிரேக்க வைதீகத் திருச்சபைக்கும் ஏற்பட்ட சமயம் சார்ந்த போட்டியே கிரிமியப் போருக்கு மிகவும் முக்கியமான காரணமாகும். இப்போட்டியில் ரோமன் திருச்சபையை ர'யா ஆதரித்தது.

எப்பொழுதும் பேராசை கொண்ட 3ஆம் நெப்போலியன் தன் பெருமையை மேலும் பரப்பும் கர்வத்துடன பாலஸ்தீனத்திலுள்ள புனித இடங்களை நிர்வகிக்கும் உரிமையை அப்பகுதியின் ஆட்சியாளராகிய சுல்தானிடமிருந்து பெற்றார். ர‘ய மன்னர் முதலாம் நிக்கோலஸ் அதைக் கடுமையாக எதிர்த்தார். ர‘ய அரசர் தன்னுடைய தூதுவர் மென்சிகோ என்பவரை சுல்தானிடமிருந்து துருக்கி பேரரசு முழுவதும் இருக்கக்கூடிய வைதீக கிறித்துவ திருச்சபைகளை நிர்வகிக்கும் உரிமைகளை துருக்கிடமிருந்து பெரும் நோக்கில் கான்ஸ்டாண்டிநோபிளுக்கு அனுப்பி வைத்தார். பால்கன் பகுதியிலிருந்து ர‘யாவின் செல்வாக்கை அகற்றுவதில் விழிப்புடன் இருந்த பிரிட்டன், பிரான்சுக்கு தன் ஆதரவை தெரிவித்ததோடு அல்லாமல் ர‘யாவின் ஆட்சிக்கு இணங்க வேண்டாம் என்று சுல்தானுக்கு ஆலோசனையும் வழங்கியது.

(ஆ)உடனடிக் காரணம்

பால்கன் பகுதியில் ர‘யா மேற்கொண்ட ஆக்கிரமிப்புச் செயலே கிருமியப் போருக்கு உடனடிக் காரணமாகும். கிறித்துவர்களின் பாதுகாவலனாகச் செயல்படும் உரிமை தனக்கு மறுக்கப்படவே, ர‘யா துருக்கியின் மீது படையெடுத்தது. 1853 ஜுலை மாதம் துருக்கிக்குச் சொந்தமான வாலேச்சியா, மால்டேவியா ஆகிய பகுதிகளை ஆக்கிரமித்தது. சுல்தான் ர‘யாவின் மீது போர் அறிவித்தார்.

(,)போரின் போக்கு

ர‘யா சினோப் என்ற போர்க்களத்தில் துருக்கிக் கடற்படையை அழித்தது. ர‘யாவை ஆக்கிரமிப்பு நாடு என்று அறிவித்து இங்கிலாந்தும், பிரான்சும் ர‘யாவிற்கு எதிராகப் போர்பிரகடனம் செய்தன. இத்தாலியப் பகுதியின் வலுவான நாடாகத் திகழ்ந்த சார்டினியா, ஆஸ்திரியாவிற்கு எதிரான தன் விடுதலைப் போரில் முக்கியமாக ஐரோப்பிய நாடுகளின் ஆதரவைப் பெரும் நோக்கில் ர‘யாவிற்க எதிராகத் துருக்கிக்கும் அதன் நட்பு நாடுகளுக்கும் உதவும் வகையில் படை ஒன்றை அனுப்பியது. இந்தியாவில் இருந்து டல்ஹௌசியினால் இங்கிலாந்துக்கு ஆதரவாகப் படை ஒன்றும் அனுப்பப்பட்டது. பல ஐரோப்பிய நாடுகள் ர‘யாவை எதிர்த்து துருக்கிக்கு ஆதரவாக ஒன்று சேர்ந்தன. ர‘யா, மால்டேவியா, வாலேச்சியா பகுதிகளை விட்டு வெளியேறியது.

(ஈ)முக்கியப் போர்க்களங்கள்

முக்கிய போர்கள் கிருமியத் தீபகற்பத்தில் நடைபெற்றன. 1854இல் இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாடுகளின் கூட்டுப்படை கிருமியாவில் இறங்கியது. கூட்டணிப்படை ர‘யாவை எதிர்த்து அல்மா, பாலக்கிளாவா, மற்றும் இன்கர்மேன் போர்களங்களில் வெற்றி பெற்றது. அதே நேரத்தில் கூட்டு நாடுகளின் படை 1854-1855 குளிர்காலத்தில் செபஸ்டபூல் நகரத்தை

முற்றுகையிட்டது. ர்'ய மன்னர் முதலாம் நிக்கோலஸ் என்னிடம் இரண்டு தளபதிகள் இருக்கின்றார்கள் அவர்கள் எனக்கு தோல்வி தரமாட்டார்கள் என்று கூறினார் என்று சொல்லப்படுகிறது. அவர்கள் தளபதிகள் ஜனவரியும் பிப்ரவரியும். ர்'ய மன்னர் முதலாம நிக்கோலஸ் கிருமியாவின் குளிர்காலம் (ஜனவரியும், பிப்ரவரியும்) தனது போர்வீரர்களுக்கு பழக்கத்தின் காரணமாக சாதகமாக அமைந்த, தனக்கு வெற்றி கிடைக்கும் என்று நம்பினர். திடீரென கடும்புயல் வீசியது. அதை அடுத்து வாந்திபேதி போன்ற நோய்கள் பரவின. போர் வீரர்கள் பலர் மாண்டனர். பெருமளவில் பொருட்சேதமும் ஏற்பட்டது. 9000 போர்வீரர்கள் மாண்டனர். நோய் காரணமாக 13000 போர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இஸ்குட்டாரி என்ற இடத்தில் உள்ள மருத்துவமனையில் காயமுற்ற போர் வீரர்களுக்குப் பிளாரென்ஸ் நைட்டிங்கேல் அம்மையார் கையில் ஏந்திய விளக்குடன் இணையற்ற மருத்துவ சேவை செய்தார். அவர் கைவிளக்கு ஏந்திய காரிகை என்று புகழப்பெற்றார்.

பிரிட்டி' போர் வீரர்கள் சொல்லொணாத்துயரம் அடைந்தனர். ஆங்கிலேயர், போர்ச்செயல் பற்றிய நிர்வாகத்தைக் கடுமையாகச் சாடினர். மக்கள் கொதித்தெழுந்தனர். அதன் விளைவாக அரசாங்கத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. தலைமை அமைச்சர் ரஸ்ஸல் தம் பதவியை ராஜினாமா செய்தார். அவரை அடுத்து பிரதம அமைச்சர்களாக பதவியேற்ற அபர்தீன், டெர்பி ஆகியோரும் பதவி விலகினர். அதன் பின் அவர்களை அடுத்து தலைமை அமைச்சராகப் பதவியேற்ற பால்மர்சன் போர் அலுவலகத்தைச் சீர்படுத்தி செபஸ்டபோல் முற்றுகை தொடர்பாகச் சிறப்பான ஆணைகளைப் பிறப்பித்தார்.

அதே நேரத்தில் வியன்னாவில் பேச்சுவார்த்தைகள் துவங்கின. கூட்டணி நாடுகள் ர்'யாவிற்கு 4 நிபந்தனைகளை விதித்தன. ர்'யா திருப்தி அடையவில்லை. அதே நேரத்தில் 2 முக்கிய நிகழ்ச்சிகள் நடந்தன. சார்டினியா அனுப்பிய படை 1855 ஜனவரியில் கூட்டணிப்படைகளுடன் வந்து சேர்ந்தது. 1855 ஏப்ரலில் ர்'ய மன்னர் முதலாம் நிக்கோலஸ் காலமானார். அவரை அடுத்து பதவியேற்ற 2ஆம் அலெக்ஸாந்தர் சமாதானத்தை நாடினார்.

வியன்னா மாநட்டை அடுத்து ஐரோப்பிய நாடுகள் பாரிஸ் நகரில் சந்தித்தன. போர் மேலும் ஓர் ஆண்டிற்கு நீடித்தது. 1855 செப்டம்பரில் செபஸ்டபூல் கூட்டணி நாடுகளால் வெல்லப்பட்டது. மீண்டும் ர்'யாவைக் கூட்டணிப்படை நவம்பர் திங்களில் கார்ஸ் என்ற இடத்தில் வெற்றி கொண்டது.1856இல் பாரிஸ் நகரில் பேச்சு வார்த்தை நடைபெற்றது. இரு தரப்பினரும் உடன்பாடு செய்து கொண்டனர். உடன்பாட்டின்படி கருங்கடல் அனைத்து நாடுகளுக்கும் திறந்து விடப்பட்டது. ர்'யா உட்பட எந்த ஒரு நாடும் கருங்கடலில் போர்க்கப்பலை நிருத்த அனுமதிக்கப்படவில்லை. டான்யூப் நதி அனைத்து நாடுகளுக்கும் போக்குவரத்திற்கு

திறந்துவிடப்பட்டது. துருக்கி ஐரோப்பியக் கூட்டிணைவில் சேர்த்துக்கொள்ளப்பட்டது. துருக்கி சுல்த்தான் தன் நாட்டு கிற்த்துவக் குடிமக்களை முறையாக நடத்துவதாக உறுதியளித்தார்.

(உ)போரின் விளைவுகள்

கிரிமியப் போர் பல முக்கியமான விளைவுகளை ஏற்படுத்தியது. பால்கன் பகுதி மற்றும் கருங்கடல் ஆகியவற்றில் இருந்து ர்'யாவின் செல்வாக்கு ஏனைய ஐரோப்பிய நாடுகளால் அகற்றப்பட்டது. அப்பகுதியில் ர்'யாவின் இராணுவ வலிமை பெருமளவு குறைக்கப்பட்டது. மால்டேவியா, வாலேச்சியா எனும் 2 சுயாட்சி அரசுகளை உருவாக்கியதன் மூலம் ர்'யாவிற்கும் துருக்கிக்கும் இடையே தேவையான தடுப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. பின் அவ்விரண்டு அரசுகளும் இணைந்து ருமேனியா (1861) என்ற நாடு உருவாயிற்று. இங்கிலாந்து தன் நோக்கத்தில் வெற்றி அடைந்தது. நெப்போலியன் பாரிஸ் மாநாட்டிற்குத் தலைமை தாங்கியதன் மூலம் திருப்தியடைந்தார். கிரிமியப் போரில் பங்கு கொண்டதன் மூலம் சார்டினியா ஒரு பெரிய நாடாக ஐரோப்பிய நாடுகளின் அங்கீகாரத்தைப் பெற்றது. துருக்கி பெரும் பயன் அடைந்தது. துருக்கி ஐரோப்பியக் கூட்டிணைவில்சேர்த்துக் கொள்ளப்பட்டு ஐரோப்பிய வல்லரசுகளின் உதவியுடன் மேலும் சில ஆண்டுகளுக்குத் தன் பேரரசு நிலையைக் காப்பாற்றிக் கொண்டது. துருக்கி சுல்தான் பால்கன் மக்களுக்கு தாராளச் சீர்திருத்தங்கள் செய்வதாக உறுதி அளித்தார். பால்கன் போரின் பொழுது மனித நேயத்துடன் அரும்பணி ஆற்றிய பிளாரென்ஸ் நைட்டிங்கேல் அம்மையார் உலகப் புகழ்பெற்றார். அவரது பணி செவிலியர் பணிக்கும், செஞ்சிலுவைச் சங்கத்திற்கும் முன்மாதிரியாக இருந்தது. பிரிட்டி' இந்தியப் படை கிரிமியப் போரில் பங்கு கொண்டது. 1857ஆம் ஆண்டு இந்திய விடுதலைப் போருக்கு ஒரு தூண்டுகோலாக அமைந்தது.

## 6.3 ர்'ய - துருக்கியப் போர் (1876-78)

கிரிமியப்போர் தேவை இல்லாமல் நடத்தப்பட்ட ஒரு போர் என்பது பலரது கருத்து. ஏனெனில், போரின் முடிவில் 1856 செய்துகொள்ளப்பட்ட பாரீஸ் உடன்பாட்டைச் செயல்படுத்தவேயில்லை. ஆகையினால், கீழைசிக்கலுக்கு விடை காணவும் இயலவில்லை. தன் பேரரசுக்கு உட்பட்ட கிறித்துவ மக்களுக்கு சில தாராள சீர்திருத்தங்களை நிறைவேற்றுவதாகத் தானாக முன்வந்து உறுதி அளித்த துருக்கி அம்மக்களைப் பற்றி ஒரு போதும் கவலைபட்டதில்லை. எனவே துருக்கிப் பேரரசின் பல்வேறு பகுதிகளில் கிளர்ச்சிகள் தோன்றின. கிரிமியப்போரும் (அ) வேறு ஏதேனும் ஒன்றும் துருக்கிப்பேரரசைக் காப்பாற்ற இயலவில்லை. 1856 லிருந்து 87 வரை துருக்கிப்பேரரசில் நடைபெற்ற பல நிகழ்ச்சிகள் அப்பகுதியின் 2 பரம எதிரிகளான ர்'யாவிற்கும், துருக்கிக்கும் இடையே ஒரு போருக்கு வழிவகுத்தன. அப்போருக்கு ர்'ய துருக்கிப்போர் என்று பெயர்.

(அ)காரணங்கள்

ர்'ய-துருக்கி போருக்கு காரணங்கள் பல. வழக்கம் போல துருக்கியின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியில் தம் செல்வாக்கைப் பெருக்க ர்'யா விரும்பியது. ர்'யப் பேரரசர் 2ஆம் அலெக்ஸாண்டர் கிரிமியப் போரின் பொழுது ர்'யா இழந்த கௌரவத்தை மீண்டும் நிலைநாட்டத் தீர்மானித்தார். 1871 ஆம் ஆண்டுப் பிரெஞ்ச் - ர்'யப் போரைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு கிரிமியப் போரின் இறுதியில் செய்து கொள்ளப்பட்ட பாரிஸ் உடன்பாட்டை (1856) மீறிச் செயல்பட முயற்சித்தார். ஜெர்மானியத் தலைமை அமைச்சர் பிஸ்மார்க்கின் உதவியுடன் செபஸடபூல் என்னுமிடத்தில் ர்'யாவின் கடற்படைத் தளம் ஒன்றை அமைத்தார். 1856இல் சுயாட்சி பெற்ற மால்டேவியாவும், வாலேச்சியாவும் ஒன்றாக இணைந்து 1861இல் ருமேனியா என்ற பெயரில் ஒரு புதிய நாடு உருவாயிற்று. அது பாரிஸ் உடன்பாட்டை மீறிய செயல் ஆகும்.

1867இல் செர்வியாவும் தம் முழு விடுதலையை அறிவித்தது. பாரிஸ் உடன்பாட்டிற்கும்புறம்பாக ர்'யாவும் கருங்கடல் பகுதியைக் கைப்பற்ற முயற்சித்தது. துருக்கி சுல்தானும் பாரிஸ் மாநாட்டில் அளித்த உறுதிமொழிகளை மீறி ஒரு சர்வதிகாரியாகவே ஆட்சி செய்தார். அவர் எந்தச் சீர்திருத்தங்களையும் செய்யவில்லை. வரிவிதிப்பு மிக அதிகமாகவே இருந்தது. பால்கன் வாழ் கிறித்துவ மக்களின் மனங்களில் தேசிய உணர்வு ஆழப்பதிந்தது. சமயத்தாலும், இனத்தாலும் பால்கன் மக்களுடன் பிணைக்கப்பட்ட ர்'யா அங்கு நிலவிய சூழ்நிலையை பயன்படுத்திக் கொண்டு கிழக்கு விவகாரத்தில் தலையிட்டது. செர்பியாவைப்போல் கிரீஸ், ருமேனியா, போஸ்னியா-ஹெர்சிகோவினா ஆகியன 1875இல் தம் விடுதலைக்காகத் துருக்கியை எதிர்த்துக் கிளர்ச்சியில் ஈடுபட்டன. புரட்சி ஏனைய பகுதிகளுக்கும் பரவியது. 1876இல் பல்கேரியாவிலும் புரட்சி தோன்றியது.

புரட்சியாளர்கள் நூற்றுக்கணக்கான துருக்கிய அலுவலகர்களைக் கொன்றனர். அதற்குப்பதிலாக துருக்கிச் சுல்தான் பல்கேரியர்களைப் படுகொலை செய்தார். பல கிராமங்கள் அழிக்கப்பட்டன. சில கிராமங்களில் அனைத்து மக்களும் கொல்லப்பட்டனர். அதற்கு குழந்தைகளும் விதிவிலக்கு அல்ல. பல்கேரியப் படுகொலையே ர்'ய - துருக்கிப் போருக்கு மிக முக்கியமான காரணமாகும். இங்கிலாந்தின் முன்னாள் பிரதமமந்திரி கிளாட்ஸ்டோன் அன்றைய தலைமை அமைச்சர் டிஸ்ரேலியிடம் பால்கன் பகுதியிலிருந்து துருக்கியர்களை வெளியேற்றத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். டிஸ்ரேலி துருக்கிக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ள மறுத்தார். ர்'யா சகசமயத்தினரான பால்கன் பகுதி மக்களைத் துருக்கிகக்கு எதிராக்ககாப்பாற்றத் தீர்மானித்தது. இங்கிலாந்து கிறித்துவ மக்களின் சார்பாகப் பால்கன் விவகாரத்தில் தலையிட மறுக்கவே ர்'யா சக

கிறித்துவர்களைக் காப்பாற்றத் துணிந்தது. 1877ஆம் ஆண்டு ஜுன் மாதம் ர்'யா துருக்கிக்கு எதிராக போர் செய்தது. செர்பியா மாண்டிநெக்ரோ, ருமேனியா, பல்கேரியா ஆகியனவும் ர்'யாவுடன் சேர்ந்து கொண்டன. துருக்கியர் ஆஸ்மான் பா'ா தலைமையில் கடுமையான எதிர்ப்பைத் தந்தபோதிலும் பிளெங்னா கோட்டையில் தோற்கடிக்கப்பட்டன. ர்'யர்கள் கார்ஸ் கோட்டையைக் கைப்பற்றினர். 1878 ஜனவரியில் சோபியா மற்றும் ஏட்ரியா நோபிள் நகரங்களையும் ர்'யர்கள் வென்றனர்.. ர்'யப்படை கான்ஸ்டாண்டிநோபிளை நோக்கி முன்னேறியது. அப்படையிடம் துருக்கியத் தளபதி ஆஸ்மன் பா'ா சரணடைந்தார். 1878இல் கான்ஸ்டாண்டிநோபிளுக்கு அருகே சான்ஸ்டெபானோ என்ற இடத்தில் ர்'யாவும், துருக்கியும் உடன்பாடு செய்து கொண்டன.

## 6.4 1878ஆம் ஆண்டு சான்ஸடெபானோ உடன்பாடு

இவ்வுடன்பாடு முக்கியமான ஒன்றாகும். இது சிறிது காலத்திற்கு மட்டுமே இருந்தது. உடன்பாட்டின்படி துருக்கி சுல்தான், செர்பியா, ருமேனியா, மாண்டிநெக்ரோ ஆகிய நாடுகளின் சுதந்திரத்தை அங்கீகரித்தார். பல்கேரியா ஒரு தன்னாட்சி பெற்ற கிறித்துவ நாடாக அங்கீகரிக்கப்பட்டது. ர்'யா, ஆஸ்திரியா நாடுகளின் மேற்பார்வையின் கீழ் துருக்கி சுல்தான் போஸ்னியா, ஹெர்சிகோவினா ஆகிய பகுதிகளில் விரிவான சீர்திருத்தங்களைச் செய்ய சம்மதித்தார். ர்'யா, பெசரேபியாவை மீண்டும் பெற்றது. மேலும் ர்'யாவிற்கு பாட்டம், கார்ஸ் ஆகிய நகரங்கள் கிடைத்தன. ர்'யாவிற்கு ஒரு பெரும் தொகையைத் தரத் துருக்கி சம்மதித்தது. பாஸ்பரஸ், டார்டெனல்ஸ் நீரிணைப்புக்களை வியாபார நோக்கத்திற்காகத் திறந்துவிட முடிவெடுக்கப்பட்டது. டான்யூப் பகுதியில் இருந்த துருக்கியின் அனைத்து கோட்டைகளையும் தகர்த்து விட நடவடிக்கை மேற்க்கொள்ள சுல்தான் சம்மதித்தார். பல்கேரியாவின் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டன. டான்யூப் நதி, கருங்கடன், ஈஜியக்கடல், அல்பேனியா ஆகியன பல்கேரியாவின் எல்லைகளாக வரையறுக்கப்பட்டன.

## 6.5 1878 ஆம் ஆண்டு பெர்லின் ஏற்பாடு (மாநாடு)

1878ஆம் ஆண்டு மார்ச் மாத சான்ஸ்ஸ்டெபானோ உடன்பாட்டை மாற்றி அமைத்த பெர்லின் மாநாடு கிழக்கத்திய விவகாரத்தின் முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்று. ஆஸ்திரியா சில நன்மைகளைப் பெற்றிருந்த போதிலும் சான்ஸ்டேபானோ உடன்பாட்டை அது எதிர்த்தது. ஏனெனில், ஈஜியக் கடற்பகுதியில் தன் செல்வாக்கைப் பெருக்கி அதன் மூலம் பால்கன் பகுதியில் ஆதிக்கம்செலுத்த ஆஸ்திரியா ஆர்வம் காட்டியது. கிளாட்ஸ்டோன் கோரியபோது அதை மறுத்த பிரிட்டிஸ் பிரதமமந்திரி டிஸ்ரேலி பின் பால்கன் பகுதியில் ர்'யாவின் செல்வாக்கைத் தடைசெய்யத் தீர்மானித்தார். எனவே, சான்ஸ்டெபானோ உடன்பாட்டின் 'ரத்துக்களை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று அறிவித்தார். மேலும் அவரது

அறிவிப்பை ஏற்க ர'யா எதிர்த்ததால் அந்நாட்டிற்கு எதிராக இங்கிலாந்து போர் தொடுக்கும் என்று அறிவித்தார். ஆஸ்திரிய மன்னர், ஜோசப் சான்ஸ்டெபானோ உடன்பாட்டை எதிர்த்தார். அதற்குக் காரணம் பால்கனில் வளரும் ர'ய செல்வாக்கு அங்குள்ள ஸ்லாவ் மக்கள் ஆதரவுடன் ஆஸ்திரியாவுக்குப் பரவி ஆஸ்திரியாவில் உள்ள ஸ்லால் மக்களைத் தூணடித் தனக்கு எதிராகத் திருப்பும் என்று அவர் அஞ்சினார். ஆனால் ர'ய மன்னர் 2ஆம் அலெக்சாண்டர் சான்ஸ்டேபானோ உடன்பாட்டில் கருத்துக்களை மாற்றுவது ர'யாவின் நன்மைக்குப் பாதகமாக அமையும் என்று நினைத்தார். அதே நேரத்தில் தான் எதிர்பார்த்தவாறு ஜெர்மனியின் பிரதமர் பிஸ்மார்க் ர'யாவின் உதவிக்கு வராததால் அலெக்ஸாண்டர் ஏமாற்றமடைந்தார். பிஸ்மார்க் ர'யாவிற்கு உதவ விரும்பவில்லை. மேலும், அவர் தான் ஒரு நேர்மையான தரகராக செயல்படபோவதாக அறிவித்தார். ர'ய மாமன்னர் அலெக்ஸாண்டர் இறுதியில் வேறு வழி இல்லாமல் பெர்லின் மாநாட்டில் பங்குகொள்ள சம்மதித்தார்.

(அ)பெர்லின் உடன்படிக்கை

1878ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள், ஜெர்மனியின் பிரதமர் (சான்சலர்) பிஸ்மார்க் தலைமையில் பெர்லின் நகரில் மாநாடு கூடியது. பெர்லின் மாநட்டில் ஐரோப்பாவின் பெரும் நாடுகள் கூடின. இங்கிலாந்தின் சார்பாக அந்நாட்டுத் தலைமை அமைச்சர் டிஸ்ரேலியும் வெளியுறவு அமைச்சர் சாலிஸ்பரியும் கலந்து கொண்டனர். அம்மாநாட்டில் பங்கு கொண்ட ஏனைய முக்கிய நாடுகள் ர'யா (கார்ட்ஸ் சாகோப்) பிரான்ஸ் (வேடிங்டன்) ஆஸ்திரியா (அண்ட்ரசி) இத்தாலி (கோர்ட்) ஆகியன ஆகும். கார்ட்ஸ் சாகோப், வேடிங்டன், அண்ட்ரசி, கோர்ட் ஆகிய தலைவர்கள் பங்கு கொண்ட போதிலும் மாநாட்டு நடவடிக்கைகளில் பிரிட்டி' பிரதமர் பெஞ்சமின் டிஸ்ரேலியே பெரும் பங்கு ஆற்றினார். அம்மாநாட்டில் கிழக்கத்திய விவகாரத்தைத் தீர்க்க இறுதிவழி காணப்படும் என்று அறிவிக்கப்பட்டது. சான்ஸ்டேபானோ உடன்பாடு மாற்றி அமைக்கப்பட்டு பெர்லின் உடன்பாடு கையொப்பமாயிற்று.

(ஆ)உடன்படிக்கையின் அம்சங்கள்

சான்ஸ்டெபானோ உடன்பாட்டின்படி ர'யாவுக்கு கொடுக்கப்பட்ட பெசரேவியாவை அந்நாடு வைத்துக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டது. மேலும் ர'யா ஆர்மேனியாவின் ஒரு பகுதி (பாதூம், கார்ஸ்) வைத்துக் கொள்வதற்கு அனுமதி தரப்பட்டது. பல்கேரியா, கிழக்கு ருமேலியா, மாசிடோனியா, பல்கேரியா என்று 3 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. கிழக்கு ருமேரியா துருக்கிக்குத் தரப்பட்டது. ஒரு கிறித்துவரே அதன் ஆட்சியாளராக நியமனம் செய்யப்பட்டார். பல்கேரியாவின் வடபகுதி பல்கேரியா என்னும் பெயரிலேயே இருக்க அனுமதிக்கப்பட்டது. மீதியுள்ள

பல்கேரியாவின் பகுதி மாசிடோனியா எனும் பெயரில் சுல்தானின் ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டது. கிரேட் பிரிட்டன் சைப்ரசைப் பெற்றது. கிரேட் பிரிட்டன் ஆர்மேனிய மக்களின் பாதுகாப்பைக் கண்காணிக்கும் உரிமையைப் பெற்றது. துருக்கி ஆர்மேனியாவில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளவதாக உறுதிஅளித்தது. ஆஸ்திரியாவுக்கு போஸ்னியாவும் ஹெர்சிகோவினாவும் தரப்பட்டன. ஆனால் பேரளவில் துருக்கியின் மேலாண்மையை அவை ஏற்கவேண்டியதாயிற்று. 1908இல் ஆஸ்திரியா போஸ்னியாவையும், ஹெர்சிகோவினாவையும் இணைத்துக்கொண்டது. செர்பியா விடுதலைப் பெற்ற்து. செர்பியாவிற்குப் பல்கேரியாவின் சில பகுதிகள் கிடைத்தன. மாண்டிநெக்ரோவின் விடுதலை முறையாக அங்கீகரிக்கப்பட்டது. ருமேனியா விடுதலையும் முறைப்படி அங்கீகரிக்கப்பட்டது. ருமேனியா பல்கேரியாவின் ஒரு பகுதியைப் பெற்றது. ருமேனியா அந்நாட்டு யூதர்களைச் சமமாக நடத்தச் சம்மதித்தது. துருக்கி தன் நாட்டுக் குடிமக்கள் அனைவருக்கும் சமயச்சுதந்திரம் வழங்க உத்திரவாதம் அளிக்கக் கட்டாயப்படுத்தப்பட்டது. மேலும், துருக்கி அல்பேனியா, கிரீட், மாசிடோனியா ஸிரஸ் ஆகிய நாடுகளில் சீர்திருத்தங்களைச் செய்வதாக உறுதி அளித்தது.

(,)மதிப்பீடு

பெர்லின் உடன்பாட்டின்படி பிரிட்டன் சைப்ரசைப் பெற்றது. சைப்ரஸ் இங்கிலாந்திற்கு இராணுவத்தளமாக அமைந்தது. ஆசியா மைனரில் ர‘யாவினுடைய ஆதிக்கம் பரவாமல் தடை செய்ய இங்கிலாந்திற்குச் சைப்ரஸ் பயன்பட்டது. துருக்கி அதன் நிலப்பகுதியைச் சிறிது இழக்க வேண்டி இருந்தது. பெர்லின் ஏற்பாடு பிரிட்டிஸ் அரசியல் சூழ்ச்சிக்குக் கிடைத்த பெரும் வெற்றி ஆகும். பால்கனில் ர‘யாவின் வளர்ச்சி இவ்வுடன்பாட்டால் தடை செய்யப்பட்டது. பால்கன் பகுதியில் தான் மட்டுமே தலையிட வேண்டும் எனும் ர‘யாவின் எண்ணம் முறியடிக்கப்பட்டது. ரங்யாவிற்குப் பல இழப்பகள் ஏற்பட்டன. மூன்றாகப் பிரிக்கப்பட்டு பல்கேரியா ஒரு சிறு நாடாயிற்று. பால்கன் பகுதியில் தன் செல்வாக்கை இழந்த ர‘யா, இந்தியா, ஆப்கானிஸ்தான் ஈரான் மஞ்சூரியா ஆகிய நாடுகளில் கவனம் செலுத்த தொடங்கியது. இந்தியாவின் மீது ர‘யா காட்டிய ஆர்வம் பிரிட்டி‘ இந்தியா அரசாங்கத்திற்கு ஆபத்தாகும் என்று இங்கிலாந்து உணர்ந்தது. பெர்லின் ர‘யாவிற்கும், ஜெர்மனிக்கும் இடையே கசப்புணர்வு தோன்ற ஒரு முக்கிய காரணமாயிற்று. அதனால் ஐரோப்பா இரண்டு அணிகளாகப் பிளவுப்பட்டது. பால்கன் பகுதியில் தோன்றிய அனைத்து ஸ்லாவ் இன மக்கள் இயக்கம் பெறும்ட தோல்வியை சந்திக்க வேண்டியிருந்தது ஏனென்றால் ஆஸ்திரியாவின் செல்வாக்கு செர்பியா, போஸ்னியா, மான்டிநெக்ரோ ஆகிய நாடுகள் ஒன்றுபடுவதற்கு தடையாக இருந்தது.

## 6.5 இளம் துருக்கியர் இயக்கம்

(அ)தோன்றக் காரணங்கள்

பெர்லின் மாநாடு பால்கன் விவகாரத்திற்கு தீர்வு காணவில்லை. பெர்லின் மாநாடு பல ஐரோப்பிய நாடுகளுக்கு திருப்தி அளிக்கவில்லை. 1885ல் கிழக்கு ருமேனியா பல்கேரியாவுடன் சேர்ந்தது. சுல்தானிடமிருந்து (துருக்கி) கிரேக்க நாடு தெசாலியைப் பெற்றது. ஆர்மீனியர்கள் 1894இல் ஆசியாமைனரில் கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள். அக்கிளர்ச்சி 1896 வரை நீடித்தது. 1896இல் கிரீட்டில் (தீவு) ஒரு புரட்சி ஏற்பட்டது. கிரீட்டிற்கு கிரேக்க நாடு ஆதரவு தெரிவித்தது. அதனால் கிரேக்கத்திற்கும் துருக்கிக்கும் இடையே போர் ஏற்பட்டது. அப்போரின் விளைவாக 1908இல் கிரீட் கிரேக்கத்தோடு இணைக்கப்பட்டது. துருக்கி இளைஞர்கள் சில சீர்திருத்த நடவடிக்கைகள் மூலம் துருக்கிப் பேரரசு காப்பாற்ற தீர்மானித்தார்கள். அவர் தம் நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள அவர்கள் ஒரு இயக்கத்தை தொடங்கினார்கள். அதற்கு இளம் துருக்கியர் இயக்கம் என்று பெயர்.

(ஆ)இளம்துருக்கியர் இயக்கம்

முன்பே சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டிருப்பதுபோல பெர்லின் ஏற்பாடு கிழக்குச் சிக்கலை தீர்க்கத் தவறியது. 1878ஆம் ஆண்டிற்குப்பின் பால்கன் பகுதியில் பெரும் குழப்பம் நிலவியது. பால்கன் நாடுகள் துருக்கியை எதிர்த்து போரிட்டதோடு தமக்குள்ளேயும் போரிட்டுக்கொண்டன. துருக்கியில் ஒரு தேசிய இக்கம் தோன்றியது. 1908இல் துருக்கி இளைஞர்கள் சுல்தான் அப்துல் ஹமிதின் (1876 -1909) பிற்போக்கு ஆட்சிக்கு எதிராக ஒரு இயக்கத்தைத் தொடங்கினார்கள்.

துருக்கியின் பிரதம மந்திரி கியாமில் பா'ா மிகவும் ராஜதந்திரமாக ஒரு தாராள அரசியல் சட்டத்திற்கு உட்பட்ட அரசாங்கத்தை (கிரேட் பிரிட்டனைப் போல) உருவாக்குவதன்மூலம் துருக்கிப பேரரசைக் காப்பாற்ற முடியும் என எண்ணினர். இளம் துருக்கியர் இயக்கம் தோன்றுவதற்கு முன்பாகவே அவர் சீர்திருத்தக் கருத்துக்களை ஆதரித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. 1896 இல் கியாமில் பா'ாவின் சீர்திருத்தக் கருத்துகளை விரும்பாத சுல்தான் அவரை பதவியிலிருந்து விலக்கினார். தாராள சிந்தனை உடையவர்கள் அவருக்குத் தம் ஆதரவைத் தெரிவித்தனர். அத்தருணத்தில் துருக்கியின் இளைஞர்கள் தாராள சீர்திருத்தங்களை ஆதரித்தனர். துருக்கி இளைஞர் ரகசிய சங்கங்களை நிறுவினர். துருக்கி தேசிய அரசு ஒன்றை நிறுவ அவர்கள் பிரச்சாரம் செய்தார்கள். அவர்கள் ஐரோப்பிய நாடுகளின் பிடியிலிருந்து துருக்கியைக் காப்பாற்ற எண்ணினர். அவர்தம் நாட்டை முழுவதும் துருக்கி மயமாக்க விரும்பினர். இளைஞர்களின் சீர்திருத்தம் 1905இல் முழுவதும் உதுமானிய

(ஆட்டோமென்) இயல்பினதாக மாறியது. மாசிடோனியாவில் கொந்தளிப்பு ஏற்பட்டது. ஐரோப்பிய நாடுகள் மாசிடோனியாவில் தலையிட ஆசை கொண்டன. ஆனால் இளம் துருக்கியர் மாசிடோனியாவிலும் ஏனைய பால்கன் நாடுகளிலும் துருக்கியர்களே சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்தனர். ஐரோப்பியர் தலையீட்டை அவர்கள்வெறுத்தனர். துருக்கியில் ஜனநாயக அரசாங்கம் ஒன்றை அமைக்க அவர்கள் ஆதரவாக நின்றனர்.

(,)புரட்சி

இளம் துருக்கியரின் தலைவர்களுள் மிகவும் முக்கியமானவராகக் கருதப்படுபவர் என்வர்-பே என்பவர் ஆவர். தொடக்கத்தில் அவர் ∴ர் இராணுவத் தளபதியாக இருந்தார். அவர் இளம் துருக்கியர் இயக்கத்திற்கு வழிகாட்டும் நோக்கில் ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் ஆன குழு என்ற அமைப்பை நிறுவினர். 1908ல் இளம் துருக்கியர் சலோமிகர் என்ற இடத்தில் புரட்சியில் இறங்கினார். அவர்கள் துருக்கியின் நிர்வாகத்தில் 1876ஆம் ஆண்டு அரசியல் சட்டம் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்தினர். புரட்சியைக் கண்டு அஞ்சிய ஹமீது ஹயாமில் பா'ாவை மீண்டும் பிரதமராக நியமனம் செய்தனர். அதன் மூலம் சில சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள யோசித்தார். அத்தருணத்தில் துருக்கிப் பேரரசின் அல்போனியா, அரேபியா, மாசிடோனியா, மெசபடோமியா ஆகிய பகுதிகளில் புரட்சி வெடித்தது. 1908ஆம் ஆண்டு புரட்சியைத் (இளம் துருக்கியர்) தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்ட ஆஸ்திரியா போஸ்னியா, ஹெர்சிகோவினா ஆகியவற்றைத் தன்னுடன் இணைத்துக் கொண்டது. பல்கேரியா, கிழக்கு ருமேலியாவை இணைத்துக்கொண்டதோடு விடுதலையையும் அறிவித்துக்கொண்டது.

1909இல் இளம் துருக்கியர் இராணுவத்தின் உதவியுடன் பிரச்சனையை சமாளிக்கத் தீர்மானித்தனர். அவர்கள் துருக்கிய அரசாங்கத்தை கவிழ்க்க திட்டமிட்டனர். சுல்தான் அப்துல் ஹமீதை சிறை வைத்தனர். அவரை அடுத்து அவரது சகோதரர் ஐந்தாம் முகமது சுல்தான் ஆனார். புதிய சுல்தான் முகமது ய , கியாமில் பா'ா தலைமையில் ∴ர் அமைச்சரவையை நிறுவினர். அந்த அமைச்சரவையில் இளம் துருக்கியர் செல்வாக்குப்பெற்றனர். துருக்கி 1909லிருந்து 1918 வரை (முதல் உலகப்போர் முடியும் வரை) அவர்கள் கட்டுப்பாட்டில் இருந்தது. அந்த காலத்தில் இளம் துருக்கியரின் தலைவர் என்வர்-பே துருக்கியின் அரசியலில் முக்கியமான ஒருவராக திகழ்ந்தனர். இளம் துருக்கியர் நிர்வாகம் 1909 லிருந்து 1918 வரை இளம் துருக்கியர் துருக்கியை சர்வதிகாரிகளாக ஆண்டனர். அவர்கள் தீவிர தேசப்பற்று உடையவர்களாக இருந்தனர். அவர்கள் திட்டமிட்டது போல துருக்கி மொழி, பேரரசின் ஆட்சி மொழி ஆக்கப்பட்டது. நாடு முழுவதும் பல பள்ளிகளை நிறுவினர். கட்டாய ராணுவச் சேவை அறிமுகப்படுத்தப்பட்டது.

உதுமானியப் பேரரசு முழுவதும் துருக்கிய மயமாக்க முயற்சியை மேற்கொண்டனர். ஆனால் அக்கருத்து ஐரோப்பியக் கிறித்துவர்களுக்கும் ஆசிய அரேபியர்களுக்கும் குறிப்பாக பால்கன் பகுதியை சேர்ந்த கிறித்தவர்களுக்கும் ஏற்புடையதாக இல்லை. இளம் துருக்கியரின் தீவிர நாட்டுப்பற்றுக்கு எதிர்ப்பு தோன்றியது. இளம் துருக்கியர் அடக்குமுறையைத் தொடங்கினர். பால்கன நாடுகள் இடம் துருக்கியரின் நிர்வாகத்தை எதிர்க்க தீர்மானித்தன. அவை துருக்கிக்கு எதிராக ஒன்றுபட்டன. அது பால்கன் போருக்கு இட்டு சென்றது.

உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்

1. கைவிளக்கு ஏந்திய காரிகை எனபவர் யார்?

2. ஐரோப்பாவின் நோயாளி என்பதன் காரணம் என்ன?

6.7 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

இஸ்குட்டாரி என்ற இடத்தில் உள்ள மருத்துவமனையில் கிருமியப் போரில் காயமுற்ற போர் வீரர்களுக்குப் பிளாரென்ஸ் நைட்டிங்கேல் அம்மையார் கையில் ஏந்திய விளக்குடன் இணையற்ற மருத்துவ சேவை செய்தார். அவர் கைவிளக்கு ஏந்திய காரிகை என்று புகழப்பெற்றார்.

ஐரோப்பிய நாடுகள் மத்தியில் நிலவிய அரசியல் ஆர்வமும், அதனால் அந்நாடுகளுக்கிடையே ஏற்பட்ட கருத்து மோதலும் கிரிமியப் போரில் ஐரோப்பாவின் முக்கிய நாடுகளை இறக்கின. சிதைந்து கொண்டிருந்த துருக்கிப் பேரரசின் நிலப்பகுதிகளின் தன் ஆதிக்கத்தை வளர்த்துக் கொள்ள ர்'யா ஆசைப்பட்டது. ர்'ய மன்னர் முதலாம் நிக்கோலஸ் துருக்கியை ஐரோப்பாவின் நோயாளி என்று வர்ணித்தார்.

6.8 சுருக்கவுரை

பாலஸ்தீனத்தின் புனித இடங்களை நிர்வகிப்பதில் ரோமன் கத்தோலிக்கத் திருச்சபைக்கும், கிரேக்க வைதீகத் திருச்சபைக்கும் ஏற்பட்ட சமயம் சார்ந்த போட்டியே கிரிமியப் போருக்கு மிகவும் முக்கியமான காரணமாகும்.

கிரிமியப் போரில் பங்கு கொண்டதன் மூலம் சார்டினியா ஒரு பெரிய நாடாக ஐரோப்பிய நாடுகளின் அங்கீகாரத்தைப் பெற்றது. துருக்கி பெரும் பயன் அடைந்தது. துருக்கி ஐரோப்பியக் கூட்டிணைவில்சேர்த்துக் கொள்ளப்பட்டு ஐரோப்பிய வல்லரசுகளின் உதவியுடன் மேலும் சில ஆண்டுகளுக்குத் தன் பேரரசு நிலையைக் காப்பாற்றிக் கொண்டது.

துருக்கி சுல்தான் பால்கன் மக்களுக்கு தாராளச் சீர்திருத்தங்கள் செய்வதாக உறுதி அளித்தார். பால்கன் போரின் பொழுது மனித நேயத்துடன் அரும்பணி ஆற்றிய பிளாரென்ஸ் நைட்டிங்கேல் அம்மையார் உலகப் புகழ்பெற்றார். அவரது பணி செவிலியர் பணிக்கும்,

செஞ்சிலுவைச் சங்கத்திற்கும் முன்மாதிரியாக இருந்தது. பிரிட்டீ‘ இந்தியப் படை கிரிமியப் போரில் பங்கு கொண்டது.

## 6.9 முக்கிய வார்த்தைகள்

கிருமியப் போர், ர‘ய - துருக்கியப் போர் (1876-78), 1878ஆம் ஆண்டு சான்ஸடெபானோ உடன்பாடு, 1878ஆம் ஆண்டு சான்ஸடெபானோ உடன்பாடு இளம் துருக்கியர் இயக்கம்,

## 6.10 தன்மதிப்பீட்டு வினாக்கள்

சுருக்கமான கேள்விப் பதில்கள்

1. ர‘ய - துருக்கியப் போர் பற்றி விளக்குக?

2. சான்ஸடெபானோ பற்றி குறிப்பு வரைக?

விரிவான கேள்விப் பதில்கள்

1. கிருமியப் போர் பற்றிக் கட்டுரை வரைக?

2. இளம் துருக்கியர் இயக்கம் பற்றி மதிப்பிடுக?

## 6.11 மேலும் படிக்க

• C.J.H. Hayest.(1916). History of Europe. New York: Macmillan Company

• C.D.M. Ketelbey. (1994). A History of Modern Times from 1789. Oxford: Oxford University Press

• V.D.Mahajan. (1975). History of Modern Europe Since 1789. New Delhi: S.Chand&Co(Pvt LTD)

# தொகுதி -III முதலாம் உலகப்போர், சர்வதேசச் சங்கம்

# அலகு -7 பால்கன் போர்கள், முதலாம் உலகப்போர்

**கட்டமைப்பு**

7.0 அறிமுகம்

7.1 நோக்கங்கள்

7.2 முதல் பால்கன் போர் (1912-13)

7.2.1 இலண்டன் உடன்பாடு (1913)

7.3 இரண்டாம் பால்கன் போர் (1913)

7.3.1 புகாரெஸ்ட் உடன்பாடு (1913)

7.3.2 பால்கன் போரின் விளைவுகள்

7.4 முதல் உலகப்போர்

7.4.1 இரகசிய உடன்படிக்கைகள்

7.4.2 இராணுவக் கொள்கை

7.4.3 ஜெர்மனியின் எழுச்சி

7.4.5 குறுகிய தேசப்பற்று

7.4.6 ஏகாதிபத்தியம்

7.4.7 பத்திரிகைகள்

7.4.8 மொராக்கோ நெருக்கடி

7.4.9 ர'யா போரிலிருந்து விலகுதல்

7.4.10 போரின் விளைவுகள்

7.5 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

7.6 சுருக்கவுரை

7.7 முக்கிய வார்த்தைகள்

7.8 தன்மதிப்பீட்டு வினாக்கள்

7.9 மேலும் படிக்க

## 7.0 அறிமுகம்

இளம் துருக்கியரின் அடக்கு முறைக்கொள்கையின் விளைவாக 1912 - 13 இல் இரு பால்கன் போர்கள் நடந்தன.

## 7.1 நோக்கங்கள்

இந்த அலகை படித்து முடித்த பின்பு உங்களால்

☐ முதல் பால்கன் போரின் காரணங்களை பற்றி அறிய இயலும்

☐ பால்கன் போர்களின் விளைவுகளைப் பற்றி அறிய இயலும்.

☐ முதலாம் உலகப் போர் குறித்து விரிவாக அறிய இயலும்

☐ முதலாம் உலகப் போரின் விளைவுகளை அறிய இயலும்

## 7.2 முதல் பால்கன் போர் (1912-13)

1908ஆம் ஆண்டு இளம் துருக்கிய இயக்கத்தின் மிக முக்கிய விளைவு 1912இல் வெடித்த பால்கன் போர் ஆகும்.

(அ)போரின் காரணங்கள்

இளம் துருக்கியர், துருக்கிப் பேரரசு முழுவதையும் துருக்கியமயமாக்க மேற்கொண்ட முயற்சி முதல் பால்கன் போருக்கு முக்கியமான காரணமாகும். பேரரசில் வாழ்ந்த அனைத்து மக்களும் துருக்கியில் பேசக்கட்டாயப்படுத்தப் பட்டனர். அதுபோலவே அவர்கள் பலவந்தமாக ராணுவத்தில் சேர்க்கப்பட்டனர். பால்கன் வாழ் கிறித்துவர் அவற்றை விரும்பாதவராய் சினம் கொண்டனர். பால்கன் நாடுகள் துருக்கிப்பேரரசின் நிலவிய சூழ்நிலையை சாதகமாக்கிகொண்டு துருக்கிய சர்வாதிகார ஆட்சியிலிருந்து விடுதலை பெறத் தீர்மானித்தன. துருக்கியின் குழப்பத்தை பால்கன் மக்கள் மிகவும் சரியாகவே பயன்படுத்திக்கொண்டனர். இளம் துருக்கியர் தம் துருக்கிமயமாக்குதல் முயற்சியல் பால்கன் பகுதியில் வாழ்ந்த கிறித்துவர்களை பெருமளவில் படுகொலை செய்தனர். அச்சம் கொண்ட கிறித்துவ மக்கள், துருக்கி முஸ்லீம்களுக்கு எதிராக ஒரு அணியை உருவாக்கினர். ஐரோப்பா கண்டத்திலிருந்து முஸ்லீம்களை (துருக்கியர்) வெளியேற்ற முடிவு செய்தனர். அவர்களுக்கு நன்மை அளிக்கும் வகையில் உலகின் வேறு பகுதிகளில் சில நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஐரோப்பாவைச் சார்ந்த இத்தாலி ஆப்பிரிக்கா கண்டத்தில் டிரிப்போலி (லிபியா) வைக் கைப்பற்றியது. அப்பகுதி துருக்கிப் பேரரசின் ஒரு மாநிலம் ஆகும். அதனால் 1911-12இல் துருக்கிக்கும் இத்தாலிக்கும் இடையே போர் நடந்தது. அத்தருணத்தில் சூழ்நிலையை பயன்படுத்திக்கொண்ட பால்கன் நாடுகள், பால்கன் அணி ஒன்றை நிறுவின.

துருக்கிய இளைஞர்கள் கிறித்துவர்களைப் படுகொலை செய்ததால் சினம் கொண்ட பால்கன் பகுதி கிறிஸ்தவர்கள் தமக்குள் இருந்த வேற்றுமைகளை மறந்து துருக்கியருக்கு எதிராக ஃர் அணியை உருவாக்கினர்.

(ஆ)போரின்போக்கு

பால்கன் நாடுகள் இறுதியாக அயல்நாட்டு சக்தியான துருக்கியை எதிர்த்து போரிடத் தீர்மானித்தன. 1912ஆம் ஆண்டு அக்டோபரில் மாண்டிநெக்ரோ, செர்பியா, பல்கேரியா, கிரீஸ் (கிரேக்கம்) ஆகிய நான்கு பால்கன் நாடுகளும் துருக்கிக்கு எதிராக போர் அறிவித்தன. குறுகிய காலமே நடந்த அப்போர் பால்கன் நாடுகளின் வெற்றியில் முடிந்தது. கிரேக்கர் மாசிடோனியா மீது படையெடுத்து சலோனிகாவைக் கைப்பற்றினர். செர்பியா, மாண்டிநெக்ரோ, பல்கேரியா ஆகிய துருக்கிக்கு எதிராகப் பல வெற்றிகளை பெற்றன. துருக்கியின் இராணுவ வலிமை முழுவதும் நசுக்கப்பட்டது. பல்கேரியா படை தலைநகர் காண்ஸ்டாண்டிநோபிளை நெருங்கியது. அது கண்டு துருக்கியும் பெரிய ஐரோப்பிய நாடுகளும் வியந்தன. 1912 டிசம்பரில் பல நாடுகளின் தூதுவர்கள் பிரச்சனையை தீர்த்து அமைதியை ஏற்படுத்தும் நோக்கில் லண்டனில் கூடினர். பல்கேரியா ஏட்ரியாநோபிள் நகரைக் கோரியது. ஆனால், துருக்கி அதனைத் தர மறுத்தது. எனவே மீண்டும் சண்டை தொடங்கியது. துருக்கி ஜெனீனா, ஏட்ரியாநோபிள் (1913) ஸ்கூட்டாரி ஆகியவற்றை எதிரியிடம் இழந்தது. எனவே துருக்கி அனைத்தையும் இழந்ததை அடுத்து அமைதியின் நிபந்தனைகளை ஏற்க சம்மதித்தது. அதை அடுத்து 1913 மே மாதத்தில் லண்டன் உடன்பாடு கையொப்பமாயிற்று.

### 7.2.1 இலண்டன் உடன்பாடு (1913)

இலண்டன் உடன்பாட்டின் மூலம் சுல்தானின் செல்வாக்கு ஐரோப்பாவின் குறைக்கப்பட்டது. ஏறக்குறைய அவர் ஐரோப்பாவில் இருந்து வெளியேற்றப்பட்டார். உடன்பாட்டின்படி இனாசில் இருந்து (ஈஜியக்கடல்) மடியா வரை (கருங்கடன்) ஒரு கோடு வரையப்பட்டது. அக்கோட்டிற்கு மேற்குப்பகுதி முழுவதும் அல்பேனியா நீங்கலாக ஐரோப்பிய நாடுகளுக்கு அளிக்கப்பட்டது. 1913ஆம் ஆண்டு டிசம்பரில் ஐரோப்பிய பெரும் நாடுகள் தம் கட்டுப்பாட்டில் இருந்த கிரீட்டை கிரீட்டிற்குத் தர தீர்மானித்தன. எஞ்சியிருந்த துருக்கியின் பகுதியை பால்கன் நாடுகள் பங்கிட்டுக் கொண்டன. கிரீஸ், பல்கேரியா, செர்பியா ஆகியன மாசிடோனியாவை பங்கிடடுக்கொண்டன.

துருக்கி, அதன் தலைநகர் காண்ஸ்டாண்டிநோபிளையும் அதனைச் சுற்றியிருந்த ஒரு சிறு பகுதியையும் தவிர தன் ஆட்சிக்குட்பட்ட பெரும் நிலப் பகுதியை இழந்தது. தனது பால்கன் பகுதியைச் சேர்ந்த நட்பு நாடுகள் அடைந்த பெரு வெற்றியால், ர'யாவின் செல்வாக்கு உயர்ந்தது. ஆஸ்திரியா காங்கேரி, ஜெர்மனி ஆகியன தம் பெருமையை இழந்தன.

முதல் பால்கன் போர் ஆஸ்திரியா செர்பிய நாடுகளின் உறவைப் பாதித்தது. இர்'யாவின் நாடான செர்பியா, தனக்கு கடல்வழியைப் பெற முயன்று, ஆஸ்திரியாவின் குறிக்கீட்டால் தோல்வியுற்றது. ஆஸ்திரியா, பால்கன் பகுதியில் ஒரு வலுவான நாடாக உருவாகுமேயானால் அது அனைத்து ஸ்லாவ் இனமக்களுக்கும் தலைமை ஏற்று ஆஸ்திரியாவுக்கு ஆபத்தை உண்டாக்குமென்று எண்ணியதால் கடல் வழியைப் பெறாமல் தடை செய்தது. எனவே ஆஸ்திரியா அல்பேனியா என்னும் புதிய நாட்டை உருவாக்கத் தன் ஆதரவைத் தெரிவித்தது. அக்காலம் தொட்டே ஆஸ்திரியாவுக்கும் செர்பியாவுக்கும் போர் தோன்றும் சூழல் உருவாயிற்று. முதல் பால்கன் போரில் கிடைத்த ஆதாயங்களைப் பங்கிடுவதில் பால்கன் நாடுகள் காட்டிய போட்டியே இரண்டாம் முதன்மைக் காரணமாகும்.

## 7.3 இரண்டாம் பால்கன் போர் (1913)

முதலாம் பால்கன் போர் முடிந்த சில மாதங்களிலேயே இரண்டாம் பால்கன் போர் தொடங்கியது. 1913இல் நடைபெற்ற இப்போரே கிழக்குப் பிரச்சினையில் நிகழ்ந்த இறுதி முக்கிய நிகழ்ச்சியாகும். 2ஆம் பால்கன் போரின் நிகழ்ச்சிகளில் ஒன்று முதல் உலகப்போருக்கு உடனடிக் காரணமாக அமைந்தது.

(அ)காரணங்கள்

இரண்டாம் பால்கன் போருக்கு முக்கியமான காரணம் முதலாம் பால்கன் போரில் கிடைத்த ஆதாயங்களை பங்கிட்டுக்கொள்வதில் பால்கன் நாடுகளுக்கிடையே ஏற்பட்ட பிணக்கே ஆகும். செர்பியாவிற்கு தான் விரும்பிய நிலப் பகுதி கிடைக்கவில்லை. அப்பகுதியில் தான் அல்பேனியா எனும் புதிய நாடு உருவாக்கப்பட்டது. எனவே, செர்பியா சினமுற்றது. திரேசைப் பங்கீட்டுக் கொள்வதில் பல்கேரியாவிற்கும் கிரீஸிற்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. முதன் பால்கன் போரின் விளைவாக அதிக நிலப் பகுதிகளைப் பெற்று ஆதாயம் அடைந்த பல்கேரியா பால்கன் பகுதியில் முக்கியப் பங்காற்ற முயற்சி செய்தது. ஆனால், மற்ற பால்கன் நாடுகள் பல்கேரியாவை எதிர்த்தன. எனவே கிரீஸ், ருமேனியா, செர்பியா ஆகியன பல்கேரியாவை எதிராக ஒன்று திரண்டன.

(ஆ)போரின் போக்கு

1913ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் செர்பியாவை பல்கேரியா தாக்கியது. இவ்வாறு 2ஆம் பால்கன் போர் தொடங்கியது. கிரீஸ், ருமேனியா இரண்டும் சொர்பியாவிற்கு ஆதரவாகப் பல்கேரியா மீது போர் பிரகடனம் செய்தன. முதல் பால்கன் போரின் இறுதியில் பெரும் நிலப்பகுதியை இழந்த துருக்கி, தான் இழந்த பகுதிகளைப் பெறும் நோக்கத்தில் பல்கேரியாவிற்கு எதிராக போரில் ஈடுபட்டது. பல்கேரியாவை

அதன் எதிரி நாடுகள் அனைத்தும் சூழ்ந்து கொண்டன. ஜுலை மாத மத்தியில் பல்கேரியா அமைதியை விரும்பியது. 1813ஆம் ஆண்டு ஆகஸட் மாதத்தில் செய்து கொள்ளப்பட்ட புகாரெஸ்ட் உடன்பாட்டின் மூலம் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

### 7.3.1 புகாரெஸ்ட் உடன்பாடு (1913)

புகாரெஸ்ட் உடன்பாட்டின்படி செர்பியா, மாஸிடோனியாவின் பெரும்பகுதியைப் பெற்றது. திரேசின் அதற்கு கிரீட், தெற்கு மாசிடோனியா, மேற்கு பகுதி ஆகியன கிட்டின. ருமேனியாவிற்கு டோப்ரூட்ஜா கொடுக்கப்பட்டது. துருக்கி ஏட்ரிநோபிளை உள்ளிட்ட ஒரு கணிசமான நிலப்பகுதியை பெற்றது. ஆனால் பல்கேரியா தனது கட்டுப்பாட்டில் இருந்த நிலப்பகுதியின் பெரும் பகுதியை இழந்தது.

### 7.3.2 பால்கன் போரின் விளைவுகள்

துருக்கி உதுமானிய (ஆட்டோமென்) பேரரசின் வீழ்ச்சிக்கு பால்கள் போர்கள் முதன்மையான காரணமாகும். துருக்கி காண்ஸ்டாண்டிநோபிள், ஏட்ரியா நோபிள், பாஸ்பரஸ், நீரிணைப்பு, டார்டனல்ஸ் ஆகியவற்றை மட்டும் கொண்ட ஒரு சிறிய நாடாக ஆக்கப்பட்டது. பால்கன் போரினால் இழப்பிற்குண்டான ஒரே நாடு துருக்கியே ஆகும். அதிக பயன்பெற்ற நாடு கிரேக்க நாடு ஆகும். பால்கன் போரின் விளைவாக கிரேக்க நாட்டின் பரப்புடன் அதன் மக்கள் தொகையும் அதிகமாயிற்று. செர்பியாவும் பெரும் பயன் அடைந்தது. அந்நாட்டின் பரப்பளவு அநேகமாக இரு மடங்காயிற்று. ருமேனியப் பால்கன் பகுதியில் அதிக மக்கள் தொகை உள்ள நாடாயிற்று. அத்துடன் பல்கேரியாவிலிருந்து அது பெரும் நிலப்பகுதியைப் பெற்றது.

மாண்டிநெக்ரோவின் மக்கள் தொகையும், பரப்பளவும் அதிகமாயின. 1914ஆம் ஆண்டு முதல் உலகப்போருக்கு 1912-1913 ஆண்டு பால்கன் போர்களே முக்கியமான காரணம் என்று கிராண்ட் மற்றும் டெம்பர்லி என்பார் கருதுவர். பால்கன் பகுதியில் செர்பியா வலுவான நாடாக உருவெடுத்தது. தனக்கு கடல்வழி கிடைக்கதாததற்கு ஆஸ்திரியா காரணமென்று நினைத்த செர்பியா அந்நாட்டின் மீது பழவாங்கும் எண்ணத்திலிருந்தது. அதுபோலவே பல்கேரியாவும் செர்வியாவின் மீது பழிதீர்த்துக்கொள்ள தக்க சூழ்நிலைக்காக காத்திருந்தது. பால்கன் பகுதியில் நிலவிய இச்சூழலே முதல் உலகப்போருக்கு வழிவகுத்தது.

## 7.4 முதல் உலகப்போர்

முதல் உலகப்போர் 1914-18 வரை 1565 நாட்களுக்கு நடைபெற்றது. 1939ஆம் ஆண்டு இரண்டாம் உலகப்போருக்கு அடுத்தப்படியாக மனிதகுல வரலாற்றின் நிகழ்ந்த மிக முக்கியமான நிகழ்ச்சி முதல் உலகப்போரை

ஆகும். உலகப்போர் நடைபெற பல காரணங்கள் இருந்தன. அவற்றுள் சில,

### 7.4.1 இரகசிய உடன்படிக்கைகள்

முதல் உலகப்போர் தொடங்கும் நேரத்தில் ஐரோப்பிய நாடுகள் செய்து கொண்டிருந்த ரகசிய உடன்படிக்கைகளே முதல் உலகப்போருக்கு மிகவும் முக்கியமான காரணமாகக் கருதப்படுகிறது. போர் ஆரம்பித்த நேரத்தில் ஐரோப்பாக் கண்டம் ஆயுதம் ஏந்திய இரு அணிகளாகப் பிரிந்து நின்றது. 1882 ஆம் ஆண்டு ஜெர்மனி இத்தாலி, ஆஸ்திரியா-கங்கேரி ஆகியன ஒரு முக்கூட்டு உடன்படிக்கை அமைத்துகொண்டன. இதை எதிர்த்து 1895இல் பிரான்சும் ர்'யாவும் இருவர் உடன்படிக்கை செய்து கொண்டன. 1904இல் பிரான்ஸ் பிரிட்டனுடன் ஒரு நட்பு உடன்பாட்டைச் செய்து கொண்டது. 1907இல் இந்த உடன்பாட்டில் ர்'யாவும் சேர அது மூவர் நட்பு உடன் படிக்கையாக மாறியது. இவ்வாறு பெரும் ஐரோப்பிய நாடுகள் இரு அணிகளாக உருவெடுக்க ஐரோப்பா இரு ஆயுதம் தரித்த முகாம்களாக மாறியது. இந்த இரு அணிகளுக்கிடையே நிலவிய பொறாமையும் பூசல்களும் 1914ஆம் ஆண்டு முதல் பெரும் போருக்கு இட்டுச் சென்றன.

### 7.4.2 இராணுவக் கொள்கை

முதல் உலகப்போருக்கு (1914) ஐரோப்பிய நாடுகள் பின்பற்றி வந்த ராணுவக் கொள்கையும் ஒரு முக்கியமான காரணமாகும். ஒவ்வொரு நாடும் ஒரு தரைப்படை கடற்படையை வைத்திருந்தன. அவை திறன்மிகு ஒற்றர்படையையும் வைத்திருந்தன. ஐரோப்பிய நாடுகளின் மத்தியில் ஒரு கடுமையான ஆயுதப்போட்டி நிலவியது. இங்கிலாந்திற்கும், ஜெர்மனிக்கும் இடையே கடலாதிக்கப்போட்டி மிகவும் கடுமையாக இருந்தது. தன் எதிரியான ஜெர்மனி ஒரு கப்பல் கடடினால் இங்கிலாந்து இரு கப்பல்களைக் கட்டியது.

### 7.4.3 ஜெர்மனியின் எழுச்சி

1871இல் தன் பெரும் முயற்சியான பிஸ்மார்க் ஜெர்மனியை ஐக்கியப்படுத்தினார். ஐரோப்பாவில் அது ஒரு வலுவான நாடாக உருவாயிற்று. பேரரசர் முதலாம் வில்லியத்தை அடுத்து 1888இல் ஜெர்மனியின் பேரரசராகப் பதிவியேற்ற 2ஆம் வில்லியம் மிகவும் தீவிரமான வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றினார். அவர் உலகை ஆள ஜெர்மனி மட்டுமே மிகவும் தகுதியான நாடு என்று நம்பினார். கதிரவன் பிரிட்டி' பேரரசில் ஒரு போதும் மறைவதில்லை எனும் கருத்தை சகிக்க முடியாதவராக இருந்தார். அளவுக்கு அதிகமாகப் பெருகி வந்த ஜெர்மனியின் மக்கள் தொகைப் பெருக்கத்தைச் சரி செய்யும் நோக்கில் ஜெர்மானிக்காகப் பல குடியேற்றங்கள் நிறுவதில் அதிக ஆர்வம் காட்டினார்.

அந்நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் ஜெர்மனியின் கடற்படை வலிமையை அதிகரித்தார். 2ஆம் வில்லியத்தின் ஆக்கிரமிப்பு மிக்க அயல்நாட்டுக் கொள்கையும் ஆவணப்போக்கும் முதல் உலகப் போருக்கு ஒரு காரணமாகும்.

### 7.4.5 குறுகிய தேசப்பற்று

1914ஆம் ஆண்டு பெரும் போருக்கு குறுகிய தேசப்பற்றும் ஒரு காரணமாகும். ஐரோப்பாவின் அநேக நாடுகள் குறுகிய நோக்குடன் தற்பெருமைக்காகத் தேவையற்ற செயல்களில் ஈடுபட்டன. ஒரு நாட்டு மக்கள் தன் நாட்டின் மீது கொண்ட அன்பு மற்றொரு நாட்டின் வெறுப்பைச் சம்பாதித்தது. ஜெர்மானியர் ஜெர்மனியை நேசித்தனர். பிரான்சைப் பெரிதும் வெறுத்தனர். அது போலவே பிரான்சின் மீது பெரும் அன்பு கொண்ட பிரெஞ்சுக்காரர் ஜெர்மனியை வெறுத்தனர். செர்பியா, ஆஆஸ்திரியா, ஹங்கேரி, பல்கேரியா, இத்தாலி போன்ற நாடுகளில் எழுச்சியுற்ற போட்டி மனப்பான்மை கொண்ட குறுகிய நாட்டுப்பற்று முதல் உலகப்போருக்கு இட்டுச் சென்றது.

### 7.4.6 ஏகாதிபத்தியம்

பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட ஏகாதிபத்திய உணர்வை ஐரோப்பிய நாடுகள் தம் தேசியக் கொள்கையின் ஒரு முக்கியமான கருவியாகப் பின்பற்றின. அக்கொள்கையின் விளைவாக நாடுகளுக்கு இடையேயான பன்னாட்டு உறவு போதலுக்கு வழிவகுத்து, முதல் உலகப் போரில் முடிந்தது. தொழிற்புரட்சியின் ஒரு முக்கிய விளைவாக ஐரோப்பாவின் பெரும் நாடுகள் உலக சந்தையைக் கைப்பற்றப் பெரும் முயற்சியை எடுத்தன. ஜெர்மனி இங்கிலாந்து வசம் இருந்த சந்தையைக் கைப்பற்ற முயல இங்கிலாந்து ஜெர்மனிக்கு எதிராகச் செயல்படத் தொடங்கியது.

### 7.4.7 பத்திரிகைகள்

சட்டமன்றத்தின் நான்காம் அவை (எஸ்டேட்) என்று வர்ணிக்கப்படும் பத்திரிகைகள் முதல் உலகப்போருக்குத் தம் பங்கை ஆற்றின. போர் தொடங்கிய நேரத்தில் உலகின் பெரும்பாலான நாடுகளின் செய்தித் தாள்கள் ஏனைய நாடுகளின் நிலைமையைப் பற்றித் தவறான, பொய்ப்பிரச்சாரங்களைச் செய்து, தம் நாட்டு மக்கள் மனதில் குறுகிய நாட்டுப் பற்றையும் சுயநல எண்ணத்தையும் வளர்த்தாகவும் சொல்லப்டுகிறது. இரண்டு நாடுகளைச் சேர்ந்த செய்தித்தாள்கள், தம்மிடையே நிலவிய கருத்து வேறுபாடு காரணமாக, ஒரு குறிப்பிட்ட செய்தியை அச்செய்தி பிரச்சனைக்கு உரியது என்பதால் அதைப்பற்றிய கற்பனைச் செய்திகளைக் கலந்து மக்கள் மனதில் வி'த்தைக் கொட்டின.

(அ)பிரான்சின் ஆசை

1871இல் நடைபெற்ற பிராங்கோ பிர'யப் போரின் இறுதியில், ஜெர்மனியிடம் தான் இழந்த அல்சேஸ்- லொரைன் பகுதிகளை மீண்டும் பெற பிரான்ஸ் விரும்பியது. அப்பகுதியை இழந்த காலந்தொட்டுப் பிரெஞ்சுக்காரர்கள் ஜெர்மனியைப் பழிவாங்கும் எண்ணத்திலேயே இருந்தனர். பிரெஞ்சுக்காரர்களின் ஆசைக்குப் புறம்பாக, ஜெர்மானியர் மொராக்கோ விவகாரத்தில் தலையிட்டனர். பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கிடையே கசப்புணாவு மேலும் வளர்ந்தது.

(ஆ)இத்தாலியின் ஆசை

டிரென்டினோ மற்றும் ட்ரெஸ்டியைச் சுற்றியுள்ள பகுதிகளில் இத்தாலியர் பெருமளவில் குடியேறி இருந்தனர். ஆனால், அப்பகுதி முதல் உலகப்போர் தொடங்கிய நேரத்தில் கூடி ஆஸ்திரியா-ஹங்கேரியின் ஆட்சிக்குட் பட்டிருந்தது. அப்பகுதி மக்கள் இத்தாலியுடன் இணையத் தம் விருப்பத்தைத் தெரிவித்தனர். இதன் காரணமாக இத்தாலிக்கும் ஆஸ்திரியாவிற்கும் இடையேயான கசப்புணர்வு அதிகமாயிற்று. இதுவும் முதல் உலகப் போருக்கு ஒரு முக்கியமான காரணமாகும்.

(,)பன்னாட்டு நிறுவனம் இன்மை

20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பன்னாட்டு உறவில் பெருங்குழப்பம் நிலவியது. ஐரோப்பாவின் வளரும் நாடுகள் அனைத்துச் செய்திகளையும் மிகவும் இரகசியமாகவே வைத்திருந்தன. அநேக நாடுகளில், மக்கள், தம் நாட்டில் நிகழ்ச்சிகளை அறிய முடியாமலேயே இருந்தார்கள். சில நாடுகளில் அந்நாட்டு அரசியல் விவகாரங்கள் அவற்றின் சட்ட மன்றங்களுக்குத் தெரிவிக்கப்படாமலேயே இருந்தன. இன்னும் சில நாடுகளில் அந்நாடுகளின் அமைச்சர்களுக்குகூட முக்கியமான அரசியல் விவகாரங்கள் தெரிவிக்கப்டாமல் இருந்தன. இராஜதந்திர (வெல்திறன்) நடவடிக்கைகள் மிகவும இரகசியமாக வைக்கப்பட்டதால், பன்னாட்டு உறவில் பெரும் குழப்பம் நிலவி, அதுவே முதல் உலகப் போருக்கு ஒரு முக்கியமான காரணமாயிற்று. பன்னாட்டு அரசியலில் நிலவிய குழப்பத்தை நீக்கி அமைதியை நிலைநாட்ட ஒரு பன்னாட்டு ஸ்தாபனம் இருந்திருக்குமேயானால், முதல் உலகப் போரைத் தவிர்த்திருக்கலாம் என்று பலர் கருதுவர்.

### 7.4.8 மொராக்கோ நெருக்கடி

மேற்கு ஆப்ரிக்காவில் மொராக்கோ ஒரு சுதந்திர நாடு. மொராக்கோவின் அண்டை நாடான அல்ஜீரியாவில் பிரான்ஸ் குடியேற்றங்களை நிறுவி இருந்தது. அல்ஜீரியாவைத் தன் தளமாக வைத்துக்கொண்டு, மொராக்கோவையும் தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று பிரான்ஸ் விரும்பியது. ஆனால் ஜெர்மனியின்

இரண்டாம் வில்லியம், பிரான்ஸின் கொள்கையை எதிர்த்தார். மொராக்கோ விவகாரம், ஜெர்மனியையும், பிரான்சையும் எதிர் எதிர் முகாம்களில் நிறுத்தியது.

(அ)அண்மைக் கிழக்கு விவகாரம்

பால்கன் போர்கள் என்னும் தலைப்பில் விரிவாக விளக்கப்பட்டிருப்பதுபோல், பால்கன் விவகாரம் 1914ஆம் ஆண்டு பெரும் போருக்கு ஒரு முக்கியமான காரணமாகும். பல்வேறு இன மக்களைக் கொண்டிருந்த மாஸிடோனியாவை தம் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர கிரீஸ், செர்பியா, பல்கேரியா ஆகிய பால்கன் நாடுகள் போட்டியிட்டன. இம்முயற்சியில் செர்பியாவிற்கு ர'யா தன் ஆதரவைத் தெரிவித்தது. அனைத்து ஸ்லாவ் இன மக்களின் தலைமை நாடாக செர்பியா வளர்ந்து வந்ததை ஆஸ்திரியா எதிர்த்தது. சுருங்கச்சொல்லின் பால்கன் நெருக்கடி ஐரோப்பிய நாடுகளை 1914ஆம் ஆண்டு போருக்கு தள்ளியது.

(ஆ)போஸ்னியா மற்றும் ஹெர்ஸிகோவினா பிரச்சனை

1878ஆம் ஆண்டு பெர்லின் உடன்படிக்கை மூலம் போஸ்னியா - ஹெர்ஸிகோவினா, ஆஸ்திரியாவின் நிர்வாகத்தின் கீழ்வைக்கப்பட்டன. ஆஸ்திரியா அவற்றை இணைத்துக்கொள்வதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை. அப்பகுதிகள் மீது துருக்கி சுல்தானின் மேலாண்மை அங்கீகரிக்கப்பட்டது. ஆனால் 1908ல் ஆஸ்திரியா பெர்லின் ஏற்பாட்டிற்கு எதிராக அந்த இரண்டு பகுதிகளையும் இணைத்துக்கொண்டது. தன்னுடன் அவற்றை இணைத்துக்கொள்ள ஆர்வமாக இருந்த செர்பியா அதற்குத் தன் எதிர்ப்பைத் தெரிவித்தது. ஆனால் போஸ்னியா - ஹர்ஸிகோவினா மக்களோ அந்நாடுகளின் பிடியிலிருந்து விடுபட்டுச் சுதந்திரமாக வாழ விரும்பினர். ஆஸ்திரியாவிற்கும்-செர்பியாவிற்கும் இடையே போஸ்னியா - ஹெர்ஸிகோவினா விவகாரம் தொடர்பாக நிலவிவந்த போட்டி முதல் உலகப் போராக வெடித்தது.

(,)உடனடிக்காரணம்

முதல் உலகப்போருக்கு, இதுவரை கூறப்பட்டுள்ளது போல் பல காரணங்கள் இருந்திருந்த போதிலும், ஆஸ்திரியாவின் பட்டத்து இளவரசர் பிரான்சிஸ் பெர்டினாண்டும் அவரது மனைவி இளவரசி இஸ்பெல்லாவும் கொலையுண்டதே முதல் உலகப்போருக்கு உடனடிக்காரணமாகும். மேலே சுருங்க விளக்கியிருப்பதுபோல், பால்கன பிராந்தியத்தில் ஆஸ்திரியாவிற்கும் செர்பியாவிற்கும் இடையே ஒரு தீவிரமான போராட்டம் நடந்து கொண்டிருந்தது. போஸ்னியா - ஹெர்ஸிகோவினாவை ஆஸ்திரியா தன்னுடன் இணைத்துக்கொண்டது.



பால்கன் பகுதியில் 1912-13 ஆம் ஆண்டு பால்கன் போர்களை அடுத்து செர்பியா ஒரு பெரும் நாடாக வளர்ச்சியுற்றதும் ஆஸ்திரியாவிற்கும்

செர்பியாவிற்கும் இடையே இருந்த இடைவெளி மேலும் அகலக்காரணமானது. செர்பியா அனைத்து ஸ்லாவ் இனமக்களின் ஐக்கியம் ஒன்றை ஏற்படுத்த முயற்சி செய்தது. அநநோக்கத்தை அடைய செர்பியா கரும்கரம் (அ) ஐக்கியம் (அ) மரணம் எனும் இரகசியக் கழகம் ஒன்றை நிறுவியது. அது ∴ர் தீவிரவாத இயக்கம் ஆகும். அவ்வமைப்பு போஸ்னியாவின் ஆளுநர் ஆஸ்கர் பாடியாரேக் என்பவரைக் கொலை செய்ய தீர்மானித்தது. அத்தருணத்தில் ஆஸ்திரியா அரசு வாரிசு, இளவரசர் பெர்டினான்டின் போஸ்னிய விஜயத்தை அது அறிந்தது.

1914 ஆம் ஆண்டு ஜுன் 28ஆம் நாள் இளவரசர் பொர்டினான்ட் தன் மனைவியுடன் போஸ்னியாவின் சராயோ (சாராஜிவோ) நகரில் பயணம் செய்து கொண்டிருந்தார். அந்நாளைச் செர்பியர்கள் வருத்தம் தோய்ந்த நாளாகக் கருதி வந்தனர். ஏனெனில், அதே நாளில் தான் (ஜுன் 28) 1399ஆம் ஆண்டு கொசோவா என்னும் போர்களத்தில் துருக்கியர்கள் செர்பியாவை வென்றனர். தனது சுதந்திரத்தை இழந்த செர்பியா அன்று முதல் துருக்கியின் ஒரு பகுதி ஆயிற்று. ஆஸ்திரிய இளவரசர் முதல் கொலை முயற்சியிலிருந்து தப்பித்துக் கொண்டாலும் கொலைகாரர்களின் 2ஆம் முயற்சியில் அவரது மனைவி இசபெல்லாவுடன் பிரின்ஸ்செப் எனும் செர்பியத் தீவிரவாதி ஒருவனால் கொல்லப்பட்டார்.

(உ)போரின் தொடக்கம்

இளவரசர் பெர்டினாண்ட் கொலை செய்யப்பட்டதை அறிந்தவுடன், தனது நிபந்தனைகளை ஏற்காததால் செர்பியாவின் மீது ஆஸ்திரியா போர்பிரகடனம் செய்தது. ர்'யா செர்பியாவிற்கு ஆதரவு அளித்தது. ஜெர்மனி ர்'யாவின் மீது போர் அறிவித்தது. பிரான்ஸ் ர்'யாவின் உதவிக்குச் சென்றது. பிரான்சிற்கு எதிராக ஜெர்மனி போர் அறிவித்தது. பெல்ஜியத்தின் நடுநிலையை ஜெர்மனி மீறியதை அறிந்த பிரிட்டன், ஜெர்மனியின் மீது போர் அறிவித்தது. இவ்வாறு முதல் உலகப் போர் 1914இல் தொடங்கியது.

(ஊ)போரின்போக்கு

முன்பே சுருக்கமாக குறிப்பிட்டிருப்பது போல 1914 ஜுன் 28 இல் ஆஸ்திரியா இளவரசர் பெர்டிணான்ட் கொலை செய்யப்பட்டார். பால்கன் விவகாரத்தைத் தீர்த்துக் கொள்ள ஆஸ்திரியாவின் நிபந்தனைகளை ஏற்கச் செர்பியா மறுத்தது. எனவே 1914ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 28ஆம் நாள் செர்பியாவின் மீது ஆஸ்திரியா போர்ப் பிரகடனம் செய்தது. அடுத்து 2 மாதங்களில் ஐரோப்பாவின் பெரும் நாடுகள் அனப்த்தும் போரில் குதித்தன. இவ்வாறு போர் உலகப் போராயிற்று. அப்போர் 1918இல் முடிந்தது. ஆஸ்திரியாவுக்கு ஆதரவாகப் போரிட்ட நாடுகள் (பிரான்ஸ், இங்கிலாந்து, ர்'யா, அமெரிக்கா) ஆகியன நேச நாடுகள் என்று

அழைக்கப்பட்டன. இத்தாலி போரின் இடையில் நேச நாடுகளுக்கு ஆதரவாகப் போரிட்டது.

போரில் இங்கிலாந்து பிரான்ஸ் ஆகியன ஜெர்மனியின் கப்பல்களால் தாக்கப்பட்டது. இதை கேள்வியுற்ற பிரிட்டி' வெளியுறவுச் செயலர் (அமைச்சர்) எட்வர்டு கிரே பிரெஞ்சுத் துறைமுகங்களை ஜெர்மானிய கடற்படை தாக்குவதைப் பார்த்துக்கொண்டு இங்கிலாந்து சும்மாயிருக்க இயலாது என்று கூறினார். மேலும் பெல்ஜியத்தின் மன்னரின் முடிவுக்கு மாறாகப் பெல்ஜியத்தின் வழியாக ஜெர்மனியின் படை பிரான்சிற்குள் நுழைந்தது. இவ்வாறு பெல்ஜியத்தின் நடுநிலை ஜெர்மனியால் மீறப்பட்டது. எனவே இங்கிலாந்து ஜெர்மனியின் மீது போர் அறிவித்தது.

(எ)போரில் ஜப்பான்

சீனாவில் தன் செல்வாக்கை நிறுவ நினைத்த ஜப்பான் சீனத் துறைமுகங்களிலிருந்து தன் கப்பல்களை விலக்கிக் கொள்ளுமாறு ஜர்மனியை கேட்டுக்கொண்டது. ஜெர்மனி ஜப்பானின் வேண்டுகோளை ஏற்க மறுக்கவே 1914 செப்டம்பரில் ஜப்பான் ஜெர்மனிக்கு எதிராகப் போர் செய்தது.

(ஏ)துருக்கி

கிழக்கு விவகாரம் என்ற தலைப்பின்கீழ் விளக்கமாக விவரிக்கப்பட்டிருந்தது போல துருக்கிப் பேரரசின் சிதைவிற்கு ர'யாவே முக்கியமான காரணமாகும். எனவே ர'யாவின் மீது பழிதீர்த்துக்கொள்ளும் நோக்கில் துருக்கி ஜெர்மனியுடன் ஓர் இரகசிய உடன்பாடு (அக்டோபர் 1914) செய்து கொண்டு ர'யாவிற்கு எதிராக போர்ப்பிரகடனம் செய்தது.

(உ)இத்தாலி

மூவர் உடன்பாட்டில் (ஜெர்மனி ஆஸ்திரியா, இத்தாலி) ∴ர் உறுப்பினராக இருந்த இத்தாலி நண்பர்களை விட்டு வெளியேறி 1915இல் டிரெண்டினோ டிரெஸ்ட்டி பகுதிகளைப் பெறும் நோக்கில் நேச நாடுகளுடன் ∴ர் இரகசிய உடன்பாடு செய்து கொண்டு போரில் இறங்கியது.

(ஊ)மார்ன் மற்றும் வெர்டுன் போர்கள்

பெல்ஜியத்திற்குள் நுழைந்த ஜெர்மானிய இராணுவம் பெல்ஜியத்தின் தலைநகர் பிரஸ்சல்ஸ் நகரைக் கைப்பற்றியது. பெல்ஜியம் சரண் அடைந்தது. அடுத்து ஜெர்மானியர் பிரான்சின் மீது படையெடுத்தனர். பிரான்சின் தலைநகர் பாரிசை ஜெர்மானியர் நெருங்கினர். பாரிசில் இருந்து 20 அமைல் தூரத்திலுள்ள மான் என்ற போர்களத்தில் பிரான்ஸ் இங்கிலாந்து நாடுகளின் கூட்டுப்படை ஜெர்மனியின் இராணுவம்

முன்னேறுவதைத் தடுத்து நிறுத்தியது. வெர்டுன் போர் நேசநாடுகளுக்கு சாதகமாகவே அமைந்தது.

(எ)ஆங்கிலக் கால்வாயில் போர் நடவடிக்கை

ஜெர்மனி பிரெஞ்சுத் தாக்குதலை நிறுத்திக் கொண்டு தன் திட்டத்தை மாற்றி அமைத்து ஆங்கிலக் கடற்படையை அழிக்கத் தீர்மானித்தது ஆங்கில துறைமுகங்களான டன்கர்க்கலே, ஆஸ்டென்ட், ஆண்ட்வெர்ப் ஆகியவற்றை கைப்பற்றுவதன் மூலம் ஆங்கிலக் கடற்படையின் வலிமையைக் குறைக்க முடியும் என்று ஜெர்மனி தீர்மானித்தது. ஜெர்மனி ஆன்ட்வெர்ப்பை மட்டுமே கைப்பற்றியது. ஆங்கிலேயர் ஜெர்மனியின் ஆக்கிரமிப்பைத் தடுப்பதில் வெற்றிபெற்றனர்.

(ஏ)கிழக்கு ஐரோப்பாவில் போர்

ர'யா, ஜெர்மனியையும், ஆஸ்திரியாவையும் தாக்கியது. ர'யர்கள் டெனன்பர்க் என்ற இடத்தில் தோற்கடிக்கப்பட்டனர். ர'யா ஹங்கேரியைத் தாக்கி ஆஸ்திரியாவிற்கு உதவிக்கு வந்தது. ர'யா ஆஸ்திரியாவில் இருந்து வெளியேற்றப்பட்டது. அண்மைக் கிழக்கில் போர் அப்பகுதியில் மத்திய நாடுகளுக்கு ஆதரவாக துருக்கிப்போரில் ஈடுபட்டது. ர'யாவிற்கும், நேச நாடுகளுக்கும் இடையேயான தகவல் தொடர்பு முழுவதும் துண்டிக்கப்பட்டது. அதன் மூலம் கல்லிப்போலித் தீபகற்பத்தை பிடித்து டார்டெனல்சைத்தம் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தது. துருக்கியின் தலைநகர் கான்ஸ்டாண்டிநோபிலைக் கைப்பற்றும் இங்கிலாந்தின் எண்ணத்தை மத்திய நாடுகள் தோல்வியுறச் செய்தன. அதனால் பிரிட்டி'காரர் மெசபட்டோமியாவைக் (ஈராக்) கைப்பற்றினர். அடுத்து அவர்கள் பாலஸ்தீனத்தை வென்றனர். பாலஸ்தீனத்தை வெல்வதில் ஆங்கிலத் தளபதி ஆலன்பி தலைமையில் இந்தியப் போர் வீரர்கள் (பிரிட்டிஸ் இந்தியா) முக்கியப் பங்காற்றினர்.

(ஐ)ஆப்பிரிக்கக் கண்டத்தில் போர்

மேற்கு ஆப்பிரிக்காவில் ஜெர்மானியின் ஆதிக்கத்திலிருந்து கேமரூன், டோகோலேண்ட் ஆகியவற்றை நேச நாடுகள் கைப்பற்றின. சீனாவில் ஜப்பான் ஜெர்மானியரின் கட்டுப்பாட்டில் இருந்த சீனாவை சேர்ந்த கெய்ச்சோவைக் கைப்பற்றியது. நியூசிலாந்து சமோவாவைக் கைப்பற்றியது. ஆஸ்திரேலியா, நியூகினியாவைக் கைப்பற்றியது.

போரில் ருமேனியா

நேச நாடுகளுக்கு ஆதரவாக 1916இல் ருமேனியபோரில் இறங்கியது. டிரான்ஸ்சில்வேனியா மீதான ருமேனியப் படையெடுப்பு மத்திய நாடுகளால் முறியடிக்கப்பட்டது.

(ஒ)கடற்பகுதிப்போர்

போரின் தொடக்கத்திலிருந்தே கடற்பகுதியிலும், போர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பிரிட்டன் ஜெர்மனியை வாணிக முற்றுகையிட்டது. ஜெர்மானியும தன் நீர்முழ்சி கப்பல்கள் மூலம் எதிரிகள் கடற்படையைத் தாக்கியது. பிரிட்டி‘ர் டோக்கர்பேங்க் என்ற போர்க்களத்தில் ஜெர்மனியின் அதிவேகப் போர்க்கப்பல் ஒன்றை அழித்தனர். ஜட்லேண்ட் போர்க்களத்தில் 1916 நேசநாடுகளும் மத்திய நாடுகளும் பெரும் இழப்பிற்கு உள்ளாயின. எப்படி இருப்பினும் ஆங்கிலேயர் ஜெர்மானியரைப் பின்வாங்கச் செய்வதில் வெற்றி கண்டனர்.

(ஓ)போரில் அமெரிக்க ஐக்கிய நாடுகள்

அமெரிக்கக் குடியரசுத் தலைவா உட்ரோ வில்சன் முதல் உலகப்போர் தொடங்கிய உடனேயே தன்னாட்டின் நடுநிலையை அறிவித்தார். முதல் குடியரசுத்தலைவர் ஜார்ஜ் வாஷிங்டன் காலம் தொட்டே அமெரிக்கா நடுநிலைக்கொள்கையை தன் வெளிநாட்டுக் கொள்கையின் முக்கிய அம்சமாக கொண்டிருந்தது என்பது குறிப்பிடத் தக்கது. அதே நேரத்தில் அமெரிக்கர்கள் நேச நாடுகளுக்கு தம் வருகையைக் காட்டினர் என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும். ஜெர்மனியின் நீர்மூழ்கிக் கப்பல்கள் பல நாடுகளின் கப்பல்களை அவை எதிரிகள் உடையனவா என்று கூடப் பார்க்காமல் தாக்கி வந்தன.

1915இல் பலபா எனும் நீர்மூழ்கிக் கப்பல் இங்கிலாந்தின் லூசிட்டானியா எனும் கப்பலை நீரில் மூழ்கடிக்க அதில் பயணம் செய்த 1198 பேரும் இறந்தனர். அவர்களுள் 128 போர் ஆங்கிலேயர். அதை அறிந்த அமெரிக்கர் கடும் சினம் கொண்டனர். ஆனால் ஜெர்மானியர்கள் தம் தவறை ஏற்றுக் கொண்டு அது போல் நிகழ்ச்சி மீண்டும் நிகழாது என்று கூறி உறுதி அளித்ததை அடுத்து அமெரிக்கக்குடியரசுத் தலைவர் தம் மக்களை சமாதானப்படுத்தினார். 1916இல் வில்சன் மீண்டும் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அமெரிக்கர்கள் அமைதியை நிலைநாட்ட நேசநாடுகளுக்கு உதவ எண்ணினர். ஜனாதிபதி வில்சன் வெற்றி இல்லாத அமைதியை ஆதரித்தார். 1917 ஜுனில் ஆங்கிலேயரை தோற்கடிக்க ஜெர்மனி நீர்மூழ்கிக் கப்பல்களை மிகவும் தீவிரமாக பயன்படுத்தத் தொடங்கியது. அதை அறிந்த அமெரிக்கா ஜெர்மனியின் உறவைத் துண்டித்துக்கொண்டது. ஜெர்மானிய நீர்மூழ்கிக்கப்பல்கள் அமெரிக்க வர்த்தகக்கப்பல்களை நாசப்படுத்தின. மேலும், அமெரிக்காவிற்கு எதிராகப் போரிடுமாறு அதன் அண்டை நாடான மெக்ஸிகோவை ஜெர்மனி தூண்டியது. 1917இல் அமெரிக்கப் பாராளுமன்றத்தின் (காங்கிரஸ்) அங்கீகாரத்துனட வில்சன் ஜெர்மனிக்கு எதிராகப் போர்பிரகடனம் செய்தார். அது முதல் உலகப்போரில் மிக முக்கியமான திருப்பமாக அமைந்தது. அமெரிக்க ராணுவம் 1917 ஜுனில்

பிரான்ஸில் இறங்கியது. அமெரிக்க உதவியுடன் நேச நாடுகள் ஜெர்மனியை தோற்கடித்தன.

### 7.4.9 ர்'யா போரிலிருந்து விலகுதல்

முன்பே குறிப்பிடப்பட்டுள்ளதுபோல் ர்'யா போரில் பெரும் இழப்பிற்கு உட்படுத்தப்பட்டது. அது போர்வீரர்களையும் பொருளாதாரத்தையும் பெருமளவில் இழந்தது. ர்'யர்கள் உள்நாட்டு நிர்வாகம் வெளிநாட்டுக்கொள்கை இரண்டும் தோல்வியுற்றதிற்கு ர்'யா மன்னர் மீது அதிருப்தி அடைந்தனர். புரட்சியாளர்கள் இரண்டாம் நிக்கோலஸைப் பதவி நீக்கம் செய்தனர். கெரன்ஸ்கியின் தலைமையில் இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட்டது. பொதுவுடைமைப் புரட்சி கெரன்ஸ்கியின் இடைக்கால அரசாங்கத்தை தூக்கி எறிந்தது. புதிய சோவியத் அரசாங்கம் உள்நாட்டுப் பிரச்சனை காரணமாக ர்'யாவை போரிலிருந்து விலக்கிக் கொண்டது. ர்'யா 1918இல் ஜெர்மனியுடன் பிரஸ்ட்லிட்டோவஸ்க் என்னும் உடன்பாட்டைச் செய்து கொண்டு போரிலிருந்து முழுவதும் விலகியது.

(அ)போரின் முடிவு

ஜெர்மனியைச் சூழ்ந்து கொண்டு நேச நாடுகள் தாக்கின. வெற்றி வாய்ப்பு தோன்றியவுடன் வில்சன் 14 அம்சத் திட்டம் ஒன்றைச் சமர்ப்பித்தார். அத்திட்டத்தின் அடிப்படையில் அமைதியை நிலைநாட்ட அவர் விரும்பினார். அதற்கிடையில் ஜெர்மனிக்கு ஆதரவாக போரிட்ட நாடுகள் சரணடையத் தொடங்கின. 1918இல் செப்டம்பர் துருக்கியும், பல்கேரியாவும் சரணடைந்தன. ஆஸ்திரியா நவம்பரில் சரணடைந்தது. தம் அரசர் இரண்டாம் வில்லியம் தம்மைத் தவறான பாதையில் அழைத்துச் சென்றதாக எண்ணிய ஜெர்மானியர் கோபமுற்றனர். 1918ஆம் ஆண்டு நவம்பரில் வில்லியம் பதவி விலகினார். ஜெர்மனி அமைதியை விரும்பியது. இவ்வாறாக 1918ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 11 ஆம் நாள் முதல் உலகப் போர் முடிவுக்கு வந்தது. போரின் இறுதியில் இரு அணியினரும் பல உடன்பாடுகளை செய்து கொண்டனர்.

### 7.4.10 போரின் விளைவுகள்

1565 நாட்கள் நடைபெற்ற முதல் உலகப் போர் பல முக்கியமான விளைவுகளைக் கண்டது. இலட்சக்கணக்கான மக்கள் மாண்டனர். அது வரையில்லாத அளவிற்கு மிகப் பெருமளவில் பொருட்சேதம் ஏற்பட்டது. பல நாடுகளில் மக்கள் சொல்லமுடியாத துன்பம் அடைந்தனர். சுமார் 8000000 போர் வீரர்கள் மாண்டனர். அதுபோல் இருமடங்கு பொதுமக்கள் மடிந்தனர். லேங்சம் என்பவர் கருத்துப்படி 1890 முதல் 1913 வரையில் நடைபெற்ற கிருமியப்போர் ஜெர்மன் ஐக்கியப்போர் போயர்போர் ருஃ'ய-ஐப்பானியப்போர், அமெரிக்க உள்நாட்டுப் போர் ஆகிய போர்களின் போது ஏற்பட்ட இறப்பைவிட முதல் உலகப்போரின் இழப்பு, இருமடங்குக்கும்

அதிகமாகும். அமெரிக்க 1,15,000 மக்களை இழந்தது. ர'யாவின் இழப்பு 2000000 மக்களை இழந்தது. ஆஸ்திரியா கங்கேரி 12.5 லட்சம் மக்களை இழந்தது. ஜெர்மனி இருபது இலட்சம் பேரை இழந்தது. பிரிட்டி' பேரரசு சுமார் பத்து லட்சம் மக்களையும் இழந்தது. இறந்தவர்களில் பெரும்பான்மையான மக்கள் 40 வயதிற்குட்பட்டவர். இறந்தவர்களைப்போன்று இரு மடங்குக்கும் கூடுதலானோர் எனமுற்றனர். இத்தாலி, பிரான்சு கிழக்கு மற்றும் மத்திய ஐரோப்பிய நாடுகள் பிரிட்டி' பேரரசு ஆகியவற்றில் குடும்பம் ஒன்றிற்கு குறைந்தது ஒருவர் போரின் காரணமாக மாண்டதாகச் சொல்லப்படுகிறது.

பொருளாதாரத் துறையில் மிகப்பெருமளவில் அழிவு ஏற்பட்டது. பல தொழிற்சாலைகள் அழிந்தன. 20000000 டாலர் சொத்து அழிந்ததாகக் கருதப்படுகிறது. எனவே ஒவ்வொரு நாட்டின் பொருளாதார நிலைமையும் பாதிப்பிற்கு உள்ளாயிற்று. வெற்றிபெற்ற நாடுகள் 1860000000 டாலர் தொகையைப் போருக்காகச் செலவு செய்தன. அதனால் ஐரோப்பிய நாடுகள் பொருளாதார சக்தியை இழந்தன. முதல் உலகப்போர் பல ஐரோப்பிய நாடுகளின் அரசியல் மீது முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தியது. ஆஸ்திரியா, ஜெர்மனி, ர'யா ஆகிய நாடுகளின் குடியாட்சி அகற்றப்பட்டது.

முதல் உலகப்போரின் விளைவாக ஐரோப்பாவில் பல தேசிய நாடுகளாக உருவாயின. அவை போலந்து, பின்லாந்து, யுகோஸ்லாவியா, எஸ்தோனியா, லாதாவியா, லிதவேனியா, செக்கோஸ்லோவாக்கியா ஆகியன.

இந்தியா போன்ற சில நாடுகளின் தேசிய இயக்கத்தின் மீது முதல் உலகப்போர் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. சில நாடுகளில் முடியாட்சி அகற்றப்பட்டு மக்களாட்சி நிறுவப்பட்டது.

தூரக்கிழக்கில் ஜப்பான் ஒரு வல்லரசு நாடாக உருவாயிற்று. அதன் வளர்ச்சி பசிபிக் பிராந்தியத்தின் ஐக்கிய அமெரிக்காவிற்கு இரண்டு உலகப்போர்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் பெரும் சவாலாக அமைந்தது.

ர'யாவின் அரசியல் முறையில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. 1613ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ரோமன்னோவ் வம்சம் தூக்கியெறியப்பட்டது. அதற்குப் பதிலாக பொதுவுடைமை அரசாங்கம் நிறுவப்பட்டது.

உலக வரலாற்றில் ஒரு புதிய நிகழ்ச்சியாகும். பொதுவுடைமைத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய அரசாங்கம் உலக வரலாற்றில் ஒரு புதிய பிரச்சனையை உருவாக்கியது. அதுவே நெகிழும் போர் எனப்பட்டது.

முதல் உலகப்போரின் முக்கியமான விளைவு உலகில் அமைதியைக் காக்க அமைக்கப்பட்ட பன்னாட்டுக்கழகம் (சர்வதேச சங்கம்) ஆகும். இது 1920இல் நிறுவப்பட்டது.

எப்படியிருப்பினும் தோல்வியுற்ற நாடுகளை, வெற்றிபெற்ற நாடுகள் அமைதி உடன்படிக்கை, பேச்சுவார்த்தையின் பொழுது நடத்திய விதம் நாஸிசம பாஸிசம் ஆகியவை தோன்றி 1939இல் இரண்டாம் உலகப்போர் தோன்றக் காரணமாயிருந்தது.

உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்

1.முக்கூட்டு உடன்படிக்கை என்றால் என்ன?

2.மொராக்கோ நெருக்கடி என்றால் என்ன?

## 7.5 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

மேற்கு ஆப்ரிக்காவில் மொராக்கோ ஒரு சுதந்திர நாடு. மொராக்கோவின் அண்டை நாடான அல்ஜீரியாவில் பிரான்ஸ் குடியேற்றங்களை நிறுவி இருந்தது. அல்ஜீரியாவைத் தன் தளமாக வைத்துக்கொண்டு, மொராக்கோவையும் தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று பிரான்ஸ் விரும்பியது. ஆனால் ஜெர்மனியின் இரண்டாம் வில்லியம், பிரான்ஸின் கொள்கையை எதிர்த்தார். மொராக்கோ விவகாரம், ஜெர்மனியையும், பிரான்சையும் எதிர் எதிர் முகாம்களில் நிறுத்தியது.

முதல் உலகப்போர் தொடங்கும் நேரத்தில் ஐரோப்பிய நாடுகள் செய்து கொண்டிருந்த ரகசிய உடன்படிக்கைகளே முதல் உலகப்போருக்கு மிகவும் முக்கியமான காரணமாகக் கருதப்படுகிறது. போர் ஆரம்பித்த நேரத்தில் ஐரோப்பாக் கண்டம் ஆயுதம் ஏந்திய இரு அணிகளாகப் பிரிந்து நின்றது. 1882 ஆம் ஆண்டு ஜெர்மனி இத்தாலி, ஆஸ்திரியா-கங்கேரி ஆகியன ஒரு முக்கூட்டு உடன்படிக்கை அமைத்துகொண்டன.

## 7.6 சுருக்கவுரை

☐ முதல் உலகப்போர் 1914-18 வரை 1565 நாட்களுக்கு நடைபெற்றது. 1939ஆம் ஆண்டு இரண்டாம் உலகப்போருக்கு அடுத்தப்படியாக மனிதகுல வரலாற்றின் நிகழ்ந்த மிக முக்கியமான நிகழ்ச்சி முதல் உலகப்போரை ஆகும். உலகப்போர் நடைபெற பல காரணங்கள் இருந்தன.

☐ உலக வரலாற்றில் ஒரு புதிய நிகழ்ச்சியாகும். பொதுவுடைமைத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய அரசாங்கம் உலக வரலாற்றில் ஒரு புதிய பிரச்சனையை உருவாக்கியது. அதுவே நெகிழும்

போர் எனப்பட்டது. முதல் உலகப்போரின் முக்கியமான விளைவு உலகில் அமைதியைக் காக்க அமைக்கப்பட்ட பன்னாட்டுக்கழகம் (சர்வதேச சங்கம்) ஆகும். இது 1920இல் நிறுவப்பட்டது.

## 7.7 முக்கிய வார்த்தைகள்

☐ முதல் உலகப்போரின் விளைவாக ஐரோப்பாவில் பல தேசிய நாடுகளாக உருவாயின.

☐ போலந்து, பின்லாந்து, யுகோஸ்லாவியா, எஸ்தோனியா, லாதாவியா, லிதவேனியா, செக்கோஸ்லோவாக்கியா ஆகியன என்பதுக் குறிப்பிடத்தக்கது

## 7.8 தன்மதிப்பீட்டு வினாக்கள்

சுருக்கமான கேள்விப் பதில்கள்

1. புகாரெஸ்ட் உடன்பாடு பற்றி குறிப்பு வரைக?

2. பால்கன் போரின் விளைவுகள் பற்றிக் குறிப்பு வரைக?

விரிவான கேள்விப் பதில்கள்

1. முதல் உலகபடபோரைப் பற்றிக் கட்டுரை வரைக?

2. ,ரகசிய உடன்படிக்கைகளைப் பற்றிக் குறிப்பு வரைக?

## 7.9 மேலும் படிக்க

• C.J.H. Hayes>et.(1916). History of Europe. New York: Macmillan Company

• C.D.M. Ketelbey. (1994). A History of Modern Times from 1789. Oxford: Oxford University Press

• V.D.Mahajan. (1975). History of Modern Europe Since 1789. New Delhi: S.Chand&Co(Pvt LTD)

# அலகு 8 பாரிஸ் உடண்படிக்கை

**கட்டமைப்பு**

8.0 முன்னுரை
8.1 நோக்கங்கள்
8.2 வெர்சைல்ஸ் உடன்படிக்கை
8.3 அமைதி உடண்படிக்கைகள்
8.3.1 ஜெயிண்ட் ஜெர்மன் உடன்படிக்கை (1919)
8.3.2 நியூலி உடன்படிக்கை (1919)
8.3.3 டிரயனான் உடன்படிக்கை 1920
8.3.4 செவ்ரஸ் உடன்படிக்கை 1920
8.3.5 லாசன்னே உடன்பாடு (1923)
8.4 உட்ரோ வில்சனின் 14 அம்சக்கொள்கை
8.5 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்
8.6 சுருக்கம்
8.7 தன்மதிப்பீட்டு வினாக்கள்
8.8 கருத்துப்படிமங்கள்
8.9 மேலும் படிக்க

## 8.0 முன்னுரை

முதல் உலகப்போரின் இறுதியில் வெற்றி பெற்ற நேசநாடுகள் ஜெர்மனி மற்றும் அதன் கூட்டணி நாடுகளுடன் அமைதி உடன்பாடு செய்துகொள்ளத் தீர்மானித்தன. பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் அமைதி மாநாடு கூட்டப்பட்டது. 14ஆம் லூயியால் உருவாக்கப்பட்ட வெர்சே இடத்தில் அழகிய கண்ணாடி மாளிகையில் பிரான்சின் பிரதம மந்திரி கிளமன் ே'ா மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். பிரிடடி' பிரதம மந்திரி டேவிட் லாயிட் ஜார்ஜ், அமெரிக்க ஜனாதிபதி உட்ரோ உல்சன், இத்தாலியின் ஆர்லண்டோ, ஜப்பானின் நுப்பிகின் மகினோ ஆகியோர் மாநாட்டில் பங்க கொண்ட முக்கியமான தலைவர்கள். பிரிட்டி' இந்தியர் சார்பாக லார்டு சின்காவும் பிகானிர் ராஜாவும் கலந்து கொண்டனர். மாநாட்டில் ஆர்மினியா, கொரியா, தாய்லாந்து, எஸ்தோனியா, குருதிஸ்தான், அசர்பெய்சான் உள்ளிட்ட 32 நாடுகள் கலந்து கொண்டன. தோல்வியுற்ற ஜெர்மனி, ஆஸதிரியா, கங்கேரியா, பல்கேரியா, துருக்கி ஆகிய நாடுகள்

மாநாட்டில் பங்கேற்கவில்லை. போரின் இடையில் விலகிய ர்'யாவும் மாநாட்டில் பங்கேற்கவில்லை. கிளமன் ே'ா, லாயிட் ஜார்ஜ், உட்ரோ வில்சன் ஆகியோரே முக்கியமான முடிவுகளை எடுத்தனர். .

8.1 நோக்கங்கள்

இந்த அலகை படித்து முடித்த பின்பு உங்களால்

☐ கிரிமியப்போருக்கான காரணங்களை அறிய முடியும்

☐ பாரிஸ் உடன்பட்க்கையின் சிறப்புகளை விளக்க இயலும்

☐ ர்'ய- துருக்கிப் போரினைப் பற்றி விவரமாக அறிய இயலும்

☐ சான் ஸ்டிபனோ உடன்படிக்கையின் சிறப்புகளை அறிய இயலும்

☐ இளம் துருக்கியர் இயக்கத்தின் செயல்பாடுகளை சீர்தூக்க இயலும்

## 8.2 பாரீஸ் அமைதி மாநாடு

பாரீஸ் மாநாட்டில் பங்கு கொண்ட தலைவர்கள் ஆறு மாத காலம் விவாதித்து உடன்பாட்டின் ஆவணத்தைத் தயார் செய்தனர். 1919ஆம் ஆண்டு மே மாதம் ஜெர்மனியின் வெய்மார் அரசாங்கத்திற்கு உடன்பாட்டு ஆவனங்கள் தெரிவிக்கப்பட்டன. வெற்றி பெற்ற நேச நாடுகள் குறிப்பிட்ட தேதிக்குள் உடன்பாட்டை ஏற்குமாறு ஜெர்மானியைக் கேட்டுக்கொண்டன. இறுதியில் வேறு வழி இல்லாத காரணத்தால் ஜெர்மானிய சார்பார்கள் பாரீஸ் நகரில் கைதிகளைப் போல் நடத்தப்பட்ட போதிலும் உடன்பாட்டில் கையொப்பமிட வெர்சை மாளிகைக்குச் சென்றனர். 14919ஆம் ஆண்டு ஜுன் மாதம் 28ஆம் நாள் ஜெர்மானியின் சார்பாளர்கள் வெர்சே கண்ணாடி மண்டபத்தில் உடன்பாட்டில் கையொப்பமிட்டனர். கையொப்பமிட்ட அந்நாள் 28.06.1919 சராயோ நகரில் ஆஸ்திரியா இளவரசர் கொலையுண்ட 5 ஆம் நாள் நினைவு நாள் என்பது மிகக்குறிப்பிடத்தக்கது.

## 8.3 வெர்சே (வெர்சைல்ஸ்) உடன்படிக்கை

முன்பே குறிப்பிடப்பட்டுள்ளது போல வெர்சே உடன்பாடு ஒரு திணிக்கப்பட்ட உடன்பாடு ஆகும். அவ்வுடன்பாடு 1919ஆம் ஆண்டு ஜுன் 28ஆம் நாள் கையொப்பமாயிற்று. உடன்பாட்டில் 15 பகுதிகளும் 440 சரத்துகளும் உள்ளன.

1. உடன்பாட்டின்படி ஜெர்மனி அல்சேஸ் லொரைன் பகுதிகளைப் பிரான்சிற்குத் தரவேண்டியதாயிற்று. 1871ஆம் ஆண்டில் ஜெர்மனி பிராங்கோ பிர்'யப் போரின் இறுதியில் பிரான்சிடமிருந்து அப்பகுதிகளை அபகரித்துக் கொண்டதை இங்கே குறிப்பிட வேண்டும். மேலும் ஜெர்மனி, யூபென்,

மால்மெடி ஆகியவற்றை பெல்ஜியத்திற்கும், மெமல் பகுதியை லித்வேனியாவிற்கும் மேற்குப் பிர'யாவையும் போசனின் பெரும்படையையும் போலந்திற்கு தரவேண்டியதாயிற்று.

2. ஜெர்மனியிடமிருந்து விடுவிக்கப்பட்ட டான்சிக் சர்வதேச சங்கத்தில் கட்டுப்பாட்டில் ஒரு சுதந்திர நகரமாக அங்கீகரிக்கப்பட்டது. பால்டிக் கடலைச் சேர்ந்த டான்சிக்கில் போலந்திற்குச் சில உரிமைகள் வழங்கப்பட்டன.

3. உடன்பாட்டின் 'ரத்துக்களால் ஜெர்மனி பெருமளவிற்குத் துன்புறுத்தப் பட்டது. ஜெர்மனியின் ரைன்லான்ட் பகுதி ராணுவ மயமாக்கப்படுவதிலிருந்து விடுவிக்கப்பட்டது. ஜெர்மனி ரைன் நதிக்கரையில் கோட்டைகளைக் கட்ட உடன்பாடு தடை விதித்தது. இந்த கோட்டைகளையும் ஜெர்மனி இழக்கவேண்டியிருந்தது.

4. மேலும் ஜெர்மனி சார் சமவெளியிலிருந்த நிலக்கரிச் சுரங்களைப் பன்னாட்டு கழகத்திடம் 15 ஆண்டுகளுக்கு ஒப்படைக்க வேண்டியதாயிற்று.

5. ஆஸ்திரியாவின் சுதந்திரத்தை மதிப்பதாக ஜெர்மனி உறுதியளித்தது. ஹெலிகோலாண்ட், டின்ட் ஆகிய தீவுகளில் தான் வைத்திருந்த கோட்டைகளை தகர்த்தெறிய ஜெர்மனி உடன்பட்டது.

6. ஜெர்மனி தன் குடியேற்ற நாடுகளை நேச நாடுகளிடம் ஒப்படைக்குமாறு கட்டாயப்படுத்தப்பட்டது. அக்குடியேற்ற நாடுகள் போரில் வெற்றி பெற்ற ஐரோப்பிய நாடுகளால் பங்கீடு செய்யப்பட்டன. இங்கிலாந்திற்கு காமரூனின் ஒரு பகுதி கிடைத்தது. நியூஸிலாந்து சமோவா தீவீன ஒரு பகுதியைப் பெற்றது. ஜப்பான் சீனாவில் கியா'ோவைக் குத்தகையாகப் பெற்றது. மேலும் சீனாவின் 'ாண்டாங் மாநிலத்தில் ஜப்பான் பல சலுகைகளைப் பெற்றது.

7. பெல்ஜியத்தின் முழுச்சுற்றும் அங்கீகரிக்கப்பட்டது. அது ஒரு நடுநிலை நாடாக அங்கீகரிக்கப்பட்டது.

8. போலந்தும் செக்கோஸலாசியாவும் சுதந்திரமான இறைமை பெற்ற நாடுகளாக அஙகீகரிக்கப்பட்டன. சீனா, தாய்லாந்து, எகிப்து, மொராக்கோ ஆகிய நாடுகளால் தன் சிறப்பு உரிமைகளையும், சலுகைகளையும் ஜெர்மனி துறந்தது.

9. 1919ஆம் ஆண்டு உடன்பாடு ஜெர்மனியின் ராணுவ பலத்தை நசுக்க முயற்சி செய்தது. ஜெர்மனியின் போர் வீரர்களின் எண்ணிக்கை ஒரு லட்சமாகக் குறைக்கப்பட்டது. அப்படை சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும் எல்லைப் பகுதியைக் காக்கவும் மட்டும் பயன்படுத்தப்பட வேண்டாமென்று ஜெர்மனிக்கு அறிவுறுத்தப்பட்டது. போர்க் கருவிகள் உற்பத்தியும் போர் தொடர்பான ஏனைய தடவாடங்களின் உற்பத்தியும் ஒரு குறிப்பிட்ட

வரையறைக்கு உட்படுத்தப்பட்டன. ஜெர்மனியின் காலாள்படை ஜெர்மனியின் மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப அதிகரிக்கப்படலாமென உடன்பாடு முடிவு செய்தது. ஜெர்மனியின் கடற்படையும் குறைக்கப்பட்டது. ஜெர்மனி 6 பெரும் போர்க்கப்பல்களையும் அதுபோல மிகக்குறைந்த அளவு நீர்மூழ்கிக்கப்பல்களையும் மட்டுமே வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது. கப்பல்படையில் 15 ஆயிரம் போர் வீரர்களை மட்டும் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது.

10. ஜெர்மானியப் பேரரசர் இரண்டாம் வில்லியத்தின் மீது பன்னாட்டு அறத்திற்கு எதிராகவும் உடன்பாடுகளின் புனிதத் தன்மைக்கு புறம்பாகவும் நடந்து கொண்டதாக பெரும் குற்றம் சாட்டப்பட்டது. இரண்டாம் வில்லியத்தை நீதிமன்றத்தில் விசாரிக்க முடிவு செய்யப்பட்டது. ஆனால் நேச நாடுகளிடம் இரண்டாம் வில்லியத்தை ஒப்படைக்க அவருக்கு புகலிடம் அளித்த ஹாலந்து மறுத்து விட்டது. சாதாரண முக்கியமற்ற 12 ஜெர்மானியக் குற்றவாளிகளே விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டனர். நேச நாடுகள் ஜெர்மனிதான் முதல் உலகப்போருக்குக் காரணம் என்று முடிவு செய்தன. அதை ஜெர்மனி ஏற்க வேண்டியிருந்தது.

11. ஜெர்மனி தரவேண்டிய போர் ந'ட ஈட்டுத் தொகையை நிர்ணயம் செய்யப்போர் ந'ட ஈட்டு ஆணையம் ஒன்றை ஏற்படுத்தவும் உடன்பாடு வழி ஏற்படுத்தியது. 1921இல் ஜெர்மனி 500 மில்லியன் டாலர் தொகையைப் போர் ந'ட ஈடாகத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. பிறகு போர் ந'ட ஈட்டு ஆணையம் அத்தொகையை 54 பில்லியன் டாலராக நிர்ணயம் செய்தது. 1870-71இல் கிரான்ஸிலிருந்து ஜெர்மனி அபகரித்து வந்த கலைப் பொருட்களை மீண்டும் பிரான்ஸிற்குத் தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

12. டான்யூப், ∴டர், எல்ப், நெமின் ஆகிய ஆறுகள் பன்னாட்டு மயமாக்கப்பட்டன. ரைன் நதி பன்னாட்டு ஆணையத்தின் கீழ் வைக்கப்பட்டது. உடன்பாட்டின் சரத்துக்களைச் செயல்படுத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டது. நேச நாடுகள் ரைன் நதிக்கு மேற்கே ஜெர்மனி பகுதியை 15 ஆண்டு காலத்திற்கு ஆக்கிரமிக்க அனுமதிக்கப்பட்டன. மேலும் ஜெர்மனி சரியாக நடந்துகொள்ளவில்லையென்றால் 15 ஆண்டுகளுக்கு மேலும் அப்பகுதியை தம் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள நேச நாடுகள் தீர்மானித்தன. ஆனால் 1930இல் நேச நாடுகளில் அனைத்துப் படைகளும் ஜெர்மனியிலிருந்து வெளியேறின.

## 8.4 அமைதி உடண்படிக்கைகள்

1919ஆம் ஆண்டு ஜெர்மனியுடன் நேச நாடுகள் வெர்சே உடன்பாடு செய்துகொண்டது போல, போரில் தோற்றுப்போன பிற நாடுகளுடன் தனித்தனி உடன்பாடுகளைச் செய்து கொண்டன.

### 8.4.1 ஜெயிண்ட் ஜெர்மன் உடன்படிக்கை (1919)

நேச நாடுகள் ஜெர்மனியோடு சேர்ந்து போரிட்ட ஆஸ்திரியாவுடன் 1919இல் செயிண்ட் ஜெர்மன் என்ற இடத்தில் உடன்படிக்கை செய்து கொண்டன. அவ்வுடன்பாட்டின்படி ஆஸ்திரியா - கங்கேரி, செக்கோஸ்லோவியா, போலந்து, யுகோஸ்லேவியா ஆகிய நாடுகளின் சுதந்திரத்தை அங்கீகரித்தது. ஆஸ்திரியா மற்றும் ஹங்கேரி என்ற இரு நாடுகளாகப் பிரிக்கப்பட்டது. ஆஸ்திரியா பெரும் நிலப்பகுதியை இழந்தது. அது சிறு குடியரசாக ஆக்கப்பட்டது. மக்கள் தொகையிலும் பரப்பளவிலும் போர்ச்சுகலை விட ஆஸ்திரியா சிறு நாடாயிற்று. அது பல துறைமுகங்களை இழந்தது. அதனுடைய ராணுவ வீரர்களின் எண்ணிக்கை 30000 ஆயிரமாகக் குறைக்கப்பட்டது.

### 8.4.2 நியூலி உடன்படிக்கை (1919)

நேச நாடுகள் 1919இல் பல்கேரியாவின் நியூலி உடன்படிக்கை செய்து கொண்டன. பால்கன் போர்களின்போதும் முதல் உலகப்போரின் போதும் பிற நாடுகளிடமிருந்து பல்கேரியா பெற்ற நிலப்பகுதிகளை திருப்பித்தருமாறு அது கட்டாயப்படுத்தப்பட்டது. பல்கேரியாவினுடைய ராணுவமும் 33000 போர் வீரர்கள் அளவிற்கு குறைக்கப்பட்டது. அது போர் ந்'ட ஈட்டுத்தொகையாக 500000 டாலர் தொகையை தரவேண்டியிருந்தது.

### 8.4.3 டிரயனான் உடன்படிக்கை 1920

1919ஆம் ஆண்டு இந்த உடன்படிக்கை டிரயனான் மளிகையில் (வெர்சேயில் உள்ள) ஹங்கேரியுடன் செய்து கொள்ளப்பட்டது. ஹங்கேரி பெரும் நிலப்பகுதியை இழந்தது. அது யுகோஸ்லேவியாவிற்குக் குரோசியாவைத் தந்தது. அதனுடைய ராணுவ வீரர்கள் எண்ணிக்கை 35 ஆயிரம் போர் வீரர்களாகக் குறைக்கப்பட்டது. அது பெரும் நிலப்பகுதியை இழந்ததால் அதன் மக்கள் தொகை 8 மில்லியனாகவும் பரப்பளவு 35 ஆயிரம் சதுர மைலாகவும் குறைந்தன. அதன் கப்பல்களில் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டது. அது போர் ந்'ட ஈட்டுத்தொகையும் தரவேண்டியிருந்தது.

### 8.4.4 செவ்ரஸ் உடன்படிக்கை 1920

ஜெர்மனிக்கு எதிராக போரிட்ட துருக்கி 1920இல் நேச நாடுகளுடன் இவ்வுடன்படிக்கை செய்து கொண்டது. இந்த உடன்பாட்டின் மூலம் துருக்கியிடமிருந்து ஹெட்சாஸ் எனும் ஐரோப்பிய நாடு பேரளவில் விடுவிக்கப்பட்டு பிரிட்டனின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டது. ஆர்மோனியா ஒரு கிறிஸ்தவ குடியரசு உருவாக்கப்பட்டது. மெசபடோமியா, சிரியா, பாலஸ்தீனம் முதலியன துருக்கியிடமிருந்து பிரிக்கப்பட்டன. அவை சர்வதேச சங்கத்தின் மண்டேட்ட முறையின் கீழ் வைக்கப்பட்டன. பிரான்ஸ், இத்தாலி ஆகிய ஐரோப்பிய நாடுகள் துருக்கிப் பகுதிகளில் தன்

செல்வாக்கு மையங்களை ஏற்படுத்த அனுமதிக்கப்பட்டன. துருக்கி பெருமளவு போர் ந'ட ஈட்டுத்தொகையை தரவேண்டியிருந்தது. செவ்வரஸ் உடன்படிக்கை மிகவும் கொடுமையான ஒன்றாக இருந்ததால் துருக்கியர் நேச நாடுகள் மீது சினம் கொண்டனர்.

**8.4.5 லாசன்னே உடன்பாடு (1923)**

செவ்ரஸ் உடன்படிக்கை மிகவும் தங்களுக்குப் பாதகமாக இருந்தால் துருக்கியர் கொதிப்படைந்தனர். முஸ்தபா, கமல்பா'ா, தலைமையில் கிரீஸ்க்கு எதிராக போரிட்டனர். அப்போரின் இறுதியில் துருக்கியுடன் லாசன்னே உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது. துருக்கிக்கு சாதகமாக உடன்பாட்டின் சில அம்சங்கள் அமைந்தன. ஆர்மேனியா ஏட்ரியாநோபிள் போன்ற சில பகுதிகளை துருக்கி தக்க வைத்துக்கொண்டது. பாலஸ்தீனம், மெசபடோமியா, சிரியா போன்ற நாடுகளை விட்டுக்கொடுக்க அது சம்மதித்தது. டார்டனல்ஸ், பாஸ்பரஸ் ஆகியன பல நாடுகளுக்குப் பொதுவாக ஆக்கப்பட்டன.

(அ) உடன்பாடு பற்றிய மதிப்பீடு

போரின் இறுதியில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் உட்ரோவில்சனின் 14 அம்ச திட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டன. பன்னாட்டுக்கழகம் வில்சனின் கோட்பாட்டு அடிப்படையில் அமைக்கப்பட்டது. உடன்படிக்கை அநேக அம்சங்களின் வில்சனின் கோட்பாடுகளை பின்பற்றவில்லை என்ற குற்றச்சாட்டும் உண்டு. ஜெர்மனி மிகவும் மோசமாகப் பலி வாங்கப்பட்டது. ஜெர்மானிய மக்கள் வெர்சைல்ஸ் உடன்படிக்கையை கார்த்தேஜியன் அமைதி திணிக்கப்பட்ட அமைதியும் அவமானமும் அழிவும் கேள்விப்படாத அளவிற்கு ஜெர்மானியர் கொள்ளையடிக்கப்பட்டனர் என்று ஜெர்மானியர் பலவிதமாகக் கருதினர். ஜெர்மானியின் சார்பாளர்கள் கத்தி முனையில் கையொப்பமிட்டதாகச் சொல்லப்படுகிறது. உடன்படிக்கையில் கையொப்பமிட்ட ஜெர்மானியப் பிரதிநிதி ஸ்கிட்மான் என்பார் உடன்படிக்கையில் கையொப்பமிட்ட என்கை அழியட்டும் என்று கூறியதாகக் கூறுவர். அமைதி ஏற்பாடு பழிவாங்கும் உணர்வோடு செய்யப்பட்டது. உலகப்போரில் வெற்றி பெற்ற நாடுகள் வெற்றியின் பலன் வென்றவரையே சாரும்.

நேச நாடுகள் வெற்றியாளர்கள் எனும் கோட்பாட்டைப்பின்பற்றினர். மேலும் உடன்படிக்கை தவறான இடங்களில் கடுமையாக இருந்ததாகவும் தவறான வழிகளில் தயாளமாக இருந்ததாகவும் சொல்லப்படுகிறது. அமைதி உடன்படிக்கைகள் ஐரோப்பாவைப் பல சிறுநாடுகளாத் துண்டாடியது என்ற குற்றச்சாட்டும உள்ளது. 1914இல் 19 ஆக இருந்த ஐரோப்பிய நாடுகளின் எண்ணிக்கை 1919ஆம் ஆண்டுக்குப்பிறகு 26 ஆக உயர்ந்தது. ஆர்மீனியக் கிறித்துவர்கள் 1923ஆம் ஆண்டு லாசன்னே உடன்படிக்கைக்குப்பிறகும் துருக்கியரின் தயவில் விடப்பட்டனர். அவர்கள் கடும் துன்பம்

அடைந்தனர். ஜெர்மனியைப் போல் அதன் நட்பு நாடுகளான பல்கேரியா கங்கேரி துருக்கி ஆகியனவும் நேச நாடுகளுக்ம் நேச நாடுகளால் மிகவும் மோசமாக நடத்தப்பட்டது. அடுத்து அவை மிகச்சிறு நாடுகளாகவும் ஆக்கப்பட்டன.

உட்ரோவில்சன் அமைதிக்கான தனது பொதுக்கொள்கைகளை 1818இல் ஆறுமாதக்காலத்திற்கு மேல் விலக்கினார். அவரது 14 அம்ச திட்டத்தை அமைதி ஏற்பாட்டிற்கு வழிகாட்டும் நோக்கில் நேச நாடுகளிடம் சமர்ப்பித்தார். 1919ம் ஆண்டு அமைதி ஏற்பாட்டில் உட்ரோவில்சன் பங்கு மிகவும் முக்கியமானதாக இருந்தபோதிலும் அவரது நாடான ஐக்கிய அமெரிக்கா வெர்சைல்ஸ் உடன்பாடடை அங்கீகரிக்கவில்லை. அவரது கட்சியான ஜனநாயகக் கட்சி அமைதி உடன்பாட்டுக்கு ஆதரவு தந்தாலும் கூட குடியரசுக் கட்சி தன் கண்டனத்தைத் தெரிவித்தது. எப்படியிருப்பினும் அமெரிக்காவின் புதிய அரசாங்கம் ஜெர்மனி ஆஸ்திரியா, கங்கேரி ஆகிய நாடுகளுடன் தனித்தனி உடன்பாடுகளைச் செய்து கொண்டது. அந்த உடன்பாடுகள் அமெரிக்காவின் பாராளுமன்றத்தின் மேலவையான செனட்டால் அங்கீகரிக்கப்பட்டன. பழிவாங்கும் எண்ணத்துடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையே இரண்டாம் உலகப்போருக்கு முக்கியக் காரணம் என்பது உண்மையே என்பர் பலர். எனவே, அனைத்து போர்களையும் முடித்துக்கொள்வதற்காக செய்துகொள்ளப்பட்ட வெர்சே உடன்பாடு அனைத்து அமைதியையும் முடித்தது என்று சொல்லப்படுகிறது.

## 8.5 உட்ரோ வில்சனின் 14 அம்சக்கொள்கை

முதல் உலகப்போரின் போது ஐக்கிய அமெரிக்காவின் குடியரசுத் தலைவராக இருந்த உட்ரோவில்சன் முதல் உலகப் போர் தொடங்கிய போது தன் நாட்டினர் தொடர்ந்து பின்பற்றி வந்த நடுநிலைக் கொள்கையைப் பின்பற்றத் தீர்மானித்தார். 1917இல் ஜெர்மானியப் போர்க்கப்பல்கள் அமெரிக்கக்கப்பல்களைத் தாக்கியதால் அவர் போரில் அமெரிக்காவை ஈடுபடுத்தும் நிலைமைக்குத் தள்ளப்பட்டார். முதல் உலகப் போரில் அமெரிக்கா நுழைந்தது. அப்போர் ஒரு பெரும் திருப்புமுனையாகும். ஏனெனில் அமெரிக்காவின் உதவியுடன் நேச நாடுகள் ஜெர்மனியை எதிர்த்து வெற்றி பெற முடிந்தது. உட்ரோவில்சன் வெற்றி இல்லாத அமைதியை விரும்பினார். ஜெர்மனிக்கு எதிராக அவர் போர் அறிவித்த போது, அமெரிக்கா உலகைக் காப்பதற்காக போரில் பங்குபெறுவதாக அறிவித்தார். 1918இல் ஜனவரியில் அமெரிக்கக் குடியரசுத்தலைவர் அமெரிக்கப் பாராளுமன்றத்தில் உரையாற்றியபோது தனது 14 அம்ச திட்டத்தை அறிவித்தார். அவையாவன.

☐ உலக நாடுகள் அனைத்தும் ஒப்பந்தங்களை வெளிப்படையாகச் செய்து கொள்ள வேண்டும். இரகசிய உடன்பாடுகளைச் செய்து கொள்ளக்கூடாது.

☐ அமைதிக்காலத்திலும் போர்க்காலத்திலும் கடலில் கப்பல் செலுத்திட அனைத்து நாடுகளிலும் முழுச்சுதந்திரம் கிடைக்க வேண்டும்.

☐ நாடுகளுக்கிடையேயான வர்த்தகத்திற்கு எதிரான தடைகள் நீக்கப்படவேண்டும்.

☐ உள்நாட்டுப்பாதுகாப்பிற்குத் தேவையான போர்க்கருவிகளை மட்டும் உலகநாடுகள் உற்பத்தி செய்து கொள்ள வேண்டும்.

☐ குடியேற்ற ஆதிக்கம் விரும்பும் நாடுகள் குடியேற்ற நாட்டு மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப பாரபட்சமில்லாமல் திறந்த மனதுடன் குடியேற்றங்களைப் பங்கீட்டுக்கொள்ள வேண்டும்.

☐ ர்'யாவிடமிருந்து கைப்பற்றப்பட்ட பகுதிகளை மீண்டும் ர்'யாவிடம் கொடுத்துவிட வேண்டும்.

☐ பெல்ஜியத்திற்கு முழு சுதந்திரமும் கொடுத்துவிட வேண்டும்.

☐ 1871இல் ஜெர்மனி பிரான்சிடமிருந்து கைப்பற்றிய அல்சேஸ் லொரைன் உட்பட அனைத்து பகுதிகளும் அந்நாட்டிற்கு மீண்டும் தரப்படவேண்டும்.

☐ இத்தாலியின் எல்லைகள் வரையறுக்கப்பட வேண்டும்.

☐ ஆஸ்திரியா கங்கேரியா நாட்டு மக்களுக்கு தன்னுரிமை வழங்கப்படவேண்டும்.

☐ ருமேனியா, செர்பியா, மாண்டிநெக்ரோ ஆகிய பால்கன் நாடுகளில் இருந்து பிற நாட்டினர் வெளியேற வேண்டும்.

☐ துருக்கியைச் சார்ந்த துருக்கிப்பேரரசின் பகுதிக்கு இறைமை அளிக்கப்படவேண்டும். துருக்கியின் கட்டுப்பாட்டில் இருந்த பிற பகுதிகளுக்கு சுய ஆட்சி வழங்க வேண்டும். டார்டனால்ஸ் நீர் இணைப்பு அனைத்து நாட்டின் வாணிகத்திற்கும் திறந்துவிடப்படவேண்டும்.

☐ போலந்திற்குச் சுதந்திரம் அளிக்கப்படவேண்டும். கடல்வழி ஏற்பாடு செய்ய வேண்டும்.

☐ உலக நாடுகளின் பிரச்சனைகளைத் தீர்த்து உலகில் அமைதியை நிலைநாட்ட பன்னாட்டுக் கழகம் ஒன்று உருவாக்கப்படவேண்டும்.

உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்

1. நியூலி என்றால் என்ன?

2. டிரயனான் என்றால் என்ன?

## 8.5 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

☐ நேச நாடுகள் 1919இல் பல்கேரியாவின் நியூலி உடன்படிக்கை செய்து கொண்டன. பால்கன் போர்களின்போதும் முதல் உலகப்போரின் போதும் பிற நாடுகளிடமிருந்து பல்கேரியா பெற்ற நிலப்பகுதிகளை திருப்பித்தருமாறு அது கட்டாயப்படுத்தப்பட்டது.

☐ 1919ஆம் ஆண்டு இந்த உடன்படிக்கை டிரயனான் மளிகையில் (வெர்சேயில் உள்ள) ஹங்கேரியுடன் செய்து கொள்ளப்பட்டது. ஹங்கேரி பெரும் நிலப்பகுதியை இழந்தது. அது யுகோஸ்லேவியாவிற்குக் குரோசியாவைத் தந்தது. அதனுடைய ராணுவ வீரர்கள் எண்ணிக்கை 35 ஆயிரம் போர் வீரர்களாகக் குறைக்கப்பட்டது.

## 8.6 சுருக்கவுரை

அமெரிக்காவின் புதிய அரசாங்கம் ஜெர்மனி ஆஸ்திரியா, கங்கேரி ஆகிய நாடுகளுடன் தனித்தனி உடன்பாடுகளைச் செய்து கொண்டது. அந்த உடன்பாடுகள் அமெரிக்காவின் பாராளுமன்றத்தின் மேலவையான செனட்டால் அங்கீகரிக்கப்பட்டன. பழிவாங்கும் எண்ணத்துடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையே இரண்டாம் உலகப்போருக்கு முக்கியக் காரணம் என்பது உண்மையே என்பர் பலர். எனவே, அனைத்து போர்களையும் முடித்துக்கொள்வதற்காக செய்துகொள்ளப்பட்ட வெர்சே உடன்பாடு அனைத்து அமைதியையும் முடித்தது என்று சொல்லப்படுகிறது.

## 8.7 முக்கிய வார்த்தைகள்

வெர்சைல்ஸ் உடன்படிக்கை, அமைதி உடண்படிக்கைகள், ஜெயிண்ட் ஜெர்மன் உடன்படிக்கை (1919), நியூலி உடன்படிக்கை (1919), டிரயனான் உடன்படிக்கை 1920, செவ்ரஸ் உடன்படிக்கை 1920, லாசன்னே உடன்பாடு (1923), உட்ரோ வில்சனின் 14 அம்சக்கொள்கை

## 8.8 தன்மதிப்பீட்டு வினாக்கள்

சுருக்கமான கேள்விப் பதில்கள்

1. லாசன்னே உடன்பாடு பற்றி விளக்குக?

2. செவ்ரஸ் பற்றி குறிப்பு வரைக?

விரிவான கேள்விப் பதில்கள்

1. உட்ரோ வில்சனின் 14 அம்சக்கொள்கையின் சாதனைகளைப் பற்றிக் கட்டுரை வரைக?

2. அமைதி உடண்படிக்கைகள் பற்றி மதிப்பிடுக?

## 8.9 மேலும் படிக்க


- C.J.H. Hayeset.(1916). History of Europe. New York: Macmillan Company
- C.D.M. Ketelbey. (1994). A History of Modern Times from 1789. Oxford: Oxford University Press
- V.D.Mahajan. (1975). History of Modern Europe Since 1789. New Delhi: S.Chand&Co(Pvt LTD)

# அலகு 9 1917ஆம் அண்டு ர‘யப்புரட்சி

**கட்டமைப்பு**

9.0 முன்னுரை

9.1 நோக்கங்கள்

9.2 புரட்சிக்கான காரணங்கள்

9.2.1 ரோமனோ மரபினரின் வல்லாட்சி

9.3 பெப்ரவரிப் புரட்சியின் போக்குகள்

9.4 அக்டோபர் புரட்சி

9.4 லெனினின் வருகை

9.5 ர‘யப்புரட்சியின் விளைவுகள்

9.6 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

9.7 சுருக்கம்

9.8 முக்கிய கருத்துப்படிமங்கள்

9.9 தன்மதிப்பீட்டு வினாக்கள்

9.10 மேலும் படிக்க

## 9.0 முன்னுரை

1917ஆம் ஆண்டு ர‘யப்புரட்சி 20 ஆம் நூற்றாண்டு உலக வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். புதிய பொது உடைமைச் சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டதைக் கருத்தில் கொண்டால் ர‘யப் புரட்சி ஒரு தனிச்சிறப்புடையது. ஏஞ்சல்ஸ், காரல்மார்க்ஸ் போன்ற சிந்தனையாளர்களால் பொதுவுடைமைக் கருத்துக்கள் (கொள்கைகள்) மிகவும் பிரபலம ஆயின. ஆனால், பொதுவுடைமை அரசாங்கத்தை முதன்முறையாக அமைத்ததன் மூலம் லெனின் குறிப்பிடத்தக்க ஒரு சாதனையை நிகழ்த்தினார். மனித குல வரலாற்றில் லெனின் சாதனை மகத்தான ஒன்று. இரசியப்புரட்சி ஏனைய புரட்சிகளில் இருந்து பெரிதும் மாறுபட்டது. 1688ஆம் ஆண்டு மாண்புறு புரட்சி (இங்கிலாந்து) 1776 ஆம் ஆண்டு அமெரிக்கப்புரட்சி, 1789 ஆம் ஆண்டு பிரெஞ்சுப்புரட்சி, தொழில்புரட்சி, வேளாண்மைப்புரட்சி ஆகியவற்றைவிட ரசியப் புரட்சி உலகில் ஏறக்குறைய அனைத்து நாட்டு மக்களின் அரசியல், சமூக மற்றும் பொருளாதார வாழ்க்கையில் அதிகத்

தாக்கத்தை ஏற்படுத்தியது. ர்'யப் புரட்சி முடியாட்சிக்கு முடிவு கட்டி உழைப்பாளர்களின் ஆட்சியை அந்நாடடில் நிறுவியது.

## 9.1 நோக்கங்கள்

இந்த அலகை படித்து முடித்த பின்பு உங்களால்

☐ ர்'யப் புரட்சிக்கான காரணங்களைப் பற்றி அறிய இயலும்

☐ பிப்ரவரிப் புரட்சியின் போக்கைப் பற்றி அறிய இயலும்.

☐ ர்'யப் புரட்சியின் விளைவுகளைப் பற்றி அறிய இயலும்

☐ போல்ஸ்விக் தலைவர் லெனின் பங்களிப்பைப் பற்றி விரிவாக அறிய முடியும்

## 9.2 புரட்சிக்கான காரணங்கள்

1917 ஆம் ஆண்டு ரசியப் புரட்சிக்குக் காரணங்கள் பல. அவை

### 9.2.1 ரோமனோ மரபினரின் வல்லாட்சி (1613-1917)

ரோமனோ வம்சத்து அரசர்கள் (சார்ஸ்) வல்லாட்சியாளர்களாக இருந்தனர். அவர்களது எதேச்சதிகாரப் போக்கு ரசியப் புரட்சிக்கான முக்கியமான காரணங்களுள் ஒன்று. ரோமனோ வம்சாவழியினர் 1613 முதல் 1917 வரை ஆட்சி செய்தனர். அவ்வம்சத்தின் கடைசி மன்னரான 2ஆம் நிக்கோலஸ் 1917 இல் புரட்சியினால் பதவியை இழக்கும் வரை அந்த வம்சா வழியினரின் ஆட்சி இருந்தது. ரசியாவின் கடைசி 2 மன்னர்களாகிய 3ஆம் அலெக்ஸாண்டர் 2ஆம் நிக்கோலஸ் ஆகியோர் அவர்களது முன்னோர்களை விட அதிக அடக்குமுறை ஆட்சியை நடத்தினர். அதே நேரத்தில் அவாகள் மக்களின் நலனுக்காகப் பயன் தரும் சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. அன்றைய உலகின் மாற்றத்திற்கு ஏற்பத் தம்மை மாற்றிக் கொள்ள அவர்கள் தவறிவிட்டனர். மேலும், பிற்போக்குவாதிகளாக அவர்கள் ரசிய மக்கள் அந்நாட்டு சீர்திருத்த இயக்கங்களை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கினர். பத்திரிக்கைகள் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டுத் தவறான தணிக்கையால் கருத்து சுதந்திரம் பாதிக்கப்பட்டது. ஒற்றர்களைப் பெருமளவு பயன்படுத்திய ரீய மன்னர்கள் மக்கள் கருத்தை மண்ணில் புதைத்தனர். மக்கள் உரிமையைப் பாதுகாக்க அரசியல் அமைப்புச் சட்டம் ஏதுமில்லை. சுருங்கச் சொல்லின் முன்னேற்றமடைந்த மேற்கு ஐரோப்பாவை விட ரசியா 200 ஆண்டுகள் பின்தங்கியிருந்தது. ரசியாவில் முடியாட்சி அகற்றப்பட்டாலன்றி அந்நாடு வளர்ச்சி பெறாது என்று மக்கள் உணர்ந்தனர்.

(அ)சமூகக் காரணம்

பண்டைக்காலம் தொட்டு இன்று வரை ரசியா வேளாண்மையை ஒரு முக்கியத் தொழிலாகக்கொண்ட நாடு. 1789இல் பிரெஞ்சுப் புரட்சி வெடித்த

நேரத்தில் பிரான்சில் இருந்தது போலவே ர்'யாவிலும் நிலப் பிரபுக்கள் அந்நாட்டின் பெரும் நிலப்பகுதியின் உரிமையாளர்களாக இருந்தனர். ர்'ய மன்னர்களில் 2 ஆம் அலெக்ஸாண்டர் (1855-1881) குடியானவர்களுக்காகச் சில சீர்திருத்தங்களைச் செய்தார். அவர் 1861இல் அடிமைகள் விடுதலை அறிக்கையை வெளியிட்டார். அந்த அறிக்கையின் மூலம் குடியானவர்கள் தாம் உழும் நிலங்களின் விலையைத் தவணை முறையில் செலுத்தி விட்டால், அந்நிலங்களுக்கு அவர்கள் உரிமையாளர்கள் ஆவர் என்று அறிவித்தார். ஆனால், ர்'யக் குடியானர்வர்கள் வறியவர்களாக இருந்தனர். அவர்களால் நிலத்தின் கிரயத்தைத் தர இயலாத அளவிற்கு அவர்களை வறுமை வாட்டியது. 3ஆம் அலெக்ஸாண்டர், 2ஆம் நிக்கோலஸ் ஆகியோர் அடிமைகள் விடுதலை அறிக்கையைச் செயல்படுத்த முயலவில்லை.

சுருங்கக் கூறின் ர்'ய விவசாயிகள் வறுமை, மனிதாபிமானமற்ற அவமதிப்பு ஆகியவற்றால் சொல்லொன்னாத் துயரத்தில் ஆழ்ந்தனர். ஐரோப்பாவில் ஏற்பட்ட தொழிற்புரட்சியின் ஒரு விளைவாக ர்'யாவில் தொழிற்சாலைகள் திறக்கப்பட்டன. புதிதாகத் திறக்கப்பட்ட தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்பட்ட புதிய இயந்திரங்களின் காரணமாக ர்'யாவில் தொழில்துறை மேம்பாடு திருப்திகரமாக இருந்தது. தொழில்புரட்சி சமூகத்தில் தொழிலாளர் என்னும் புதிய வர்க்கம் தோன்றுவதற்கு காரணமாக இருந்தது. விவசாயிகளைப் போலத் தொழிலாளர்களும் துன்பத்திற்கு ஆளாயினர். அவர்களது வாழ்க்கை பரிதாபத்திற்குரியதாக இருந்தது. தொழிலாளர்கள் அதிக எதியமும், நிர்ணயிக்கப்பட்ட வேலை நேரமும் நல்ல பணியாற்றுவதற்கு ஏற்ற சூழ்நிலையும் வேண்டினர். தொழிலாளர் வர்க்கத்தினர் அரசியல் ரீதியாக விழிப்புணர்வு பெற்றிருந்தனர். அவர்கள் தம் விடுதலைக்காவும் சுதந்திரத்திற்காகவும் போராடினர். 1789ஆம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சிக்கு மத்திய தர வகுப்பினர் தலைமை ஏற்றது போல 1917 ஆம் ஆண்டு ர்'யப் புரட்சிக்குத் தொழிலாளர்கள் தலைமை ஏற்றனர்.

(ஆ)சமயக் காரணம்

இர்'ய கிறித்துவத் திருச்சபை மேற்கத்தியக் கிறித்துவத் திருச்சபையில் இருந்து வேறுபட்டு நின்றது. அது வைதீகத் திருச்சபை என்று அழைக்கப்பட்டது. மேற்கத்திய ஐரோப்பியத் திருச்சபையைப்போல இர்'யத் திருச்சபையும் எழல் நிறைந்து காணப்பட்டது. வைதீக அந்நிலை மார்ட்டின் லூதர் சமய சீர்திருத்த இயக்கத்தைத் தொடங்கியபோதே இருந்தது. எழல் நிறைந்த ர்'யத் திருச்சபை மூட நம்பிக்கை உடையதாகவும் பிற்போக்குவாதக் கருத்துடையதாகவும் இருந்தது. தாராளச் சீர்திருத்தங்களை எதிர்த்தது. எனவே ர்'ய மக்கள் ர்'யாவின் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பதாகக் கருதித் திருச்சபையின் செல்வாக்கை ஒடுக்க விரும்பினர்.

(,)புரட்சிக்கருத்துக்களும் அறிஞர் பெருமக்களும்

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் ஐரோப்பாவின் பெரும்பான்மையான நாடுகளிலும், உலகின் அநேக நாடுகளிலும் இருந்தது போல ர்'யாவிலும் அறிவுத் தாகம் நிறைந்து காணப்பட்டது. ர்'ய இளைஞர்கள் ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளில் ஏற்பட்ட தேசிய இயக்கங்களால் பாதிக்கப்பட்டனர். ர்'ய இளைஞர் சமுதாயம், கல்வி நிறுவனங்களையும் குறிப்பாகப் பல்கலைக் கழகங்களையும் தொழிற்சாலைகளையும், அரசியல் சமூகம், பொருளியல் ஆகியவற்றின் அடிப்படையில் விவாதிக்கப் பயன்படுத்தியது. ர்'ய இளைஞர்களினுடைய சிந்தனை ஆங்கில, பிரெஞ்சு, ஜெர்மானிய அறிஞப் பெருமக்களால் தூண்டப்பட்டது. ர்'யப் புரட்சி தோன்றிய நேரத்தில் ர்'யாவில் மிகச்சிறந்த எழுத்தாளர் பலர் இரந்தனர்.

புரட்சி தோன்றிய நேரத்தில் அவ்வெழுத்தாளர்களே ர்'ய மக்கள் உள்ளத்தில் புரட்சிக் கருத்துக்களை தினித்தனர். ப்'கின், கார்கி, டால்ஸ்டாய், லெனின் போன்ற எழுத்தாளர்கள் பலர் ர்'யப் புரட்சி தோன்றுவதற்கும், பொது உடைமை அரசாங்கம் நிறுவுவதற்கும் காரணமாக இருந்தனர். அவர்கள் அன்றைய ர்'ய சமூகத்திலிருந்த கெடுதல்களான நில மானிய முறை, எழல், சமய முட நம்பிக்கை பொருளாதாரச் சுரண்டல் ஆகியவற்றைக் கடுமையாகத் தாக்கினார். ஏஞ்சல்ஸ், காரல்மார்க்ஸ் ஆகியோரது படைப்புக்கள் ர்'யாவின் அறிவுத் திறன் படைதத இளைஞர்களைக் கவர்ந்தன. பகுனின் லெக்கானோவ், லெனின் ஆகிய புரட்சித் தலைவர்கள் சமூக அமைப்பை மாற்ற அழைப்பு விடுத்தனர். காரல்மார்க்ஸின் மூலதனம் எனும் நூல் அன்றைய சமூகத்தைப் படம் பிடித்துக் காட்டி, ர்'ய மக்கள் உள்ளத்தில் புரட்சிக் கருத்துக்களை திணித்தது.

(ஈ)அரசியல் அமைப்பு மற்றும் அரசியல் காரணங்கள்

ர்'ய மன்னர்கள் ஏகாதிபத்தியவாதிகளாக இருந்தனர். ர்'ய சட்ட மன்றமான டூமாவின் அதிகாரங்களை அவர்கள் பறித்தனர். அரசரின் கொள்கைகளை டூமா எதிர்த்த போது அது களைக்கப்பட்டது. 1906இல் அதிகப்படியான சீர்திருத்தங்களை டூமாகோர மன்னர் 2ஆம நிக்கோலஸ் அதை வெறுத்தார். 2ஆம் நிக்கோலஸ் தாராளச் சீர்திருத்தங்களுக்கு எதிரானவர். ஆனால் ர்'ய மக்களோ பிரிட்டி' அரசாங்கத்தைப் போல ஜனநாயகக் கோட்பாடகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் அரசாங்கத்தை நிறுவ வேண்டினர். ர்'யப் பேரரசர் அதை விரும்பவில்லை. ர்'ய மக்கள் அதிருப்தி அடைந்தனர். 1917ஆம் ஆண்டு ர்'ய புரட்சிக்கு அதுவும் ஒரு முக்கிய காரணம் ஆகும்.

(உ)ர்'ய - ஜப்பானியப் போர்

1904-1905இல் ர்'யாவிற்கும் ஜப்பானிற்கும் இடையே போர் ஏற்பட்டது. ர்'யா ஜப்பானிடம் தோல்வியுற்றது. ர்'யர்கள் தம் நாடு ஒரு சிறிய நாட்டல் (ஜப்பான்) தோற்கடிக்கப்பட்டதை உணர்ந்து அவமானப்பட்டனர். ர்'யாவின் தோல்விக்கு மன்னரின் திறமையின்மையே காரணம் என்று அவர்கள் எண்ணினர். ர்'ய மக்கள் ஒரு பணிவான விண்ணப்பத்தின் மூலம் தம் எதிர்ப்பைக் காட்ட விரும்பினர். அவர்களின் அமைதியான எர்வலம் 1905இல் அரண்மனையை நோக்கிச் சென்றது. மன்னர் தம் துருப்புகளுக்கு எர்வத்தை நோக்கி சுடுமாறு ஆணையிட்டார். ஆயிரக்கணக்கான மக்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். அப்படுகொலை மக்களை வேலை நிறுத்ததிற்கு தூண்டியது. அது கண்டு கலக்கமுற்ற அரசாங்கம் விடுதலைப் பிரகடனம் ஒன்றை வெளியிட்டது. அப்பிரகடத்தின் மூலம் அரசியல் சட்டம் ஒன்று வழங்கப்பட்டது. அந்த அரசியல் சட்டம் டூமா எனும் சட்டமன்றம் அமைக்க வழி வகுத்தது. தேர்தல் நடத்தப்பட்டது. ஆனால், தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றத்தின் மூலம் மக்கள் எந்த பயனையும் அடையவில்லை.

(ஊ)அரசியல் கட்சிகள்

ர்'ய புரட்சி வெடித்த நேரத்தில் ர்'யாவில் அரசியல் கட்சிகள் பல இருந்தன. அவற்றுள் 1898இல் நிறுவப்பட்ட ர்'ய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சி முக்கியமான ஒன்றாகும். அக்கட்சியின் சிறுபான்மையினர் (மென்1விக்ஸ்) மற்றும் பெரும்பான்மையினர் (போல்1விக்ஸ்) என இரண்டாக பிளவுண்டது. மென்1விக்ஸ் படிப்படியான சீர்திருத்தங்களை விரும்பினர். தீவிரவாதிகளான போல்1விக்ஸ் சமதர்மத்தை ஆதரித்தனர். அவர்கள் லெனின் சீர்மிகு தலைமையில் இயங்கினர். 1901இல் சமதர்ம புரட்சி கட்சி நிறுவப்பட்டது. 1903இல் தாராளக் கோட்பாடு கட்சி (லிபரல்) தோற்றுவிக்கப்பட்டது. ர்'ய நிலபிரபுக்கள் அரசியல் அமைப்பு மக்களாட்சி கழகத்தை நிறுவனர். அக்கட்சிகளுள் போல்1விக்ஸ் கட்சியே ர்'ய அரசியல் நிலையை மாற்றி அமைக்கும் நோக்கில் புரட்சி ஒன்றை ஆதரித்தது.

(எ)2ஆம் நிக்கோலஸ்

முதல் உலகப் போர் காலத்தில் 2ஆம் நிக்கோலஸ் ர்'ய மன்னராக இருந்தார். அவர் திறன் குன்றியராகவும், பொறுப்பற்றவனாகவும், அலட்சியப் போக்கு உடையவனாகவும் எதேச்சதிகாரியாவும் திகழ்ந்தார். பிரெஞ்சு மன்னர் 16ஆம் லூயியின் மீது அவரது மனைவி மேரி அந்துவானே (அண்டாய்நெட்) செல்வாக்கு கொண்டிருந்தது போல நிக்கோலஸை அவரது மனைவி பேரரசி அலெக்ஸாண்டரா ஆட்டிப்படைத்தார். அரசரும் அரசியும் ர்'ய அரசியலில் மிகுந்த செல்வாக்குடன் திகழ்ந்த செர்பியத் துறவி ரஸ்புதீன் என்பரால்

ஆட்டிப்படைக்கப்பட்டனர். நிர்வாகத்தில் ரஸ்புதீனின் தலையீடு, எழல், பாகுபாடு மற்றும் அரசியல் அடக்கு முறை ஆகியவற்றிற்கு வழிவகுத்தது. இறுதியில் ர்'யாவில் நிலவிய அனைத்துச் சீர்கேடுகளுக்கும், துன்பங்களுக்கும் ரஸ்புதீனே காரணம் என்று மக்கள் எண்ணினர். 1916இல் கோபமுற்ற மக்களால் ரஸ்புதீன் கொலையுண்டார். அதற்கு பழி தீர்த்துக் கொள்ளும் வகையில் மன்னர் 2ஆம் நிக்கோலஸ் மக்களுக்கெதிராக மிகக்கடுமையான நடவடிக்கையை மேற்கொண்டார். அதுவும் புரட்சிக்கு ஒரு முக்கிய காரணம் ஆயிற்று.

(ஏ)முதல் உலகப் போர்

மூவர் நேச ஒப்பந்தத்தின் ஃர் உறுப்பனராகிய ர்'யா நேச நாடுகளின் சார்பாக முதல் உலகப் போரில் இறங்கியது. பல போர்க்காலங்களில் ர்'யா ஜெர்மனியால் தோற்கடிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான போர்வீரர்களையும் பெரும் நிலப்பகுதிகளையும் இழந்தது. இராணுவத்திலிருந்து வெளியேறிய போர்வீரர்கள் அரசாங்கத்தை எதிர்க்கத் தொடங்கினர். அரசர் 2ஆம் நிக்கோலஸ் தானே நேரடியாக இராணுவத்திற்கு தலைமை தாங்கிய போதிலும் ர்'யா அவமானத்திற்கு உள்ளாகும் வகையில் தோற்கடிக்கப்பட்டது. அதே நேரத்தில் நாட்டின் நிர்வாகம் மிகவும் மோசமாயிற்று. எனவே மக்கள் 2ஆம் நிக்கோலசிற்கு எதிராக புரட்சியில் இறங்கினர்.1917ஆம் ஆண்டு ர்'யப் புரட்சி 2 கட்டங்களாக நடந்தது. முதல் புரட்சிக்கு அபெப்ரவரிப் புரட்சி என்று பெயர்.

## 9.3 பெப்ரவரிப் புரட்சியின் போக்குகள்

1917ஆம் ஆண்டு அபெப்ரவரி மாதத்தில் (பழைய இர்'ய நாள் காடடியின் படி மார்ச் மாதம்) பெட்ரோகிராட் நகரில் புரட்சி வெடித்தது. தொழிலாளர்களும், விவசாயிகளும் உணவுப் பொருட்கள் வேண்டியும் முதல் உலகப் போரிலிருந்து விலகக் கோரியும் ஆர்ப்பாட்டம் செய்தனர். புரட்சி நாடு முழுவதும் காட்டுத் தீ போல பரவியது. புரட்சியை அடக்கச் சென்ற இராணுவம் மக்களுடன் சேர்ந்துகொண்டது. 2ஆம் நிக்கோலஸ் பெட்ரோகிராட் நோக்கி விரைந்தார். அவரை வழி மறித்த புரட்சியாளர்கள் பதவி துறக்குமாறு கட்டாயப்படுத்தினார். 2ஆம் நிக்கோலஸ் தனது சகோதரர் மைக்கேலுக்கு வழி விட்டுப் பதவி விலகினார். மைக்கேல் அதை மறுக்கவே, ர்'ய மக்கள் லிவோவ் என்பார் தலைமையில் இடைக்கால அரசாங்கம் ஒன்றை நிறுவினர். லிவோவ் ஒரு புதிய அமைச்சரவையை அமைத்தார். அதில் மில்யுகோ(வெளியுறவு), கெரன்ஸ்கி (நீதி) கொக்கோர் (போர்) ஆகியோர் பங்கேற்றனர்.

புதிய அரசாங்கம் மக்கள் விருப்பத்திற்கு மாறாக முதல் உலகப் போரைத் தொடர்ந்து நடத்தத் தீர்மானித்தது. மேலும், லிவோவ் ர்'யப் புரட்சியை ஒடுக்க முயற்சித்தார். அவரது போக்கு ர்'ய மக்களின்

விருப்பத்திற்கு புறம்பாக இருக்கவே அவர் மக்களின் பலமான எதிர்ப்பைச் சந்திக்க வேண்டியிருந்தது. போர் வீரர்களும் பொது மக்களும் லிவோவ்வைப் பதவியில் இருந்து இறக்கவே தீர்மானித்தனர். அந்நேரத்தில் சிறந்த பேச்சாளரும் லிவ்வோவின் அமைச்சரும் லெனினின் நம்பிக்கைக்கு உரியவருமான கெரன்ஸ்கி மக்கள் மத்தியில் செல்வாக்கு மிக்க தலைவராக விளங்கினார். ஜுலை மாதத்தில் லிவோவ் பதவி விலக கெரன்ஸ்கி புதிய அரசாங்கத்தை அமைத்தார். தலைமை மாறியதே ஒழிய ர'ய மக்களின் விருப்பம் போல அரசாங்கத்தின் கொள்கை மாறவில்லை. ர'யர்கள் மீண்டும் பல போர்களங்களில் தோற்கடிக்கப்பட்டனர். மக்கள் கோபமுற்றனர். நாடு முழுவதும் நிலவிய பஞ்சத்தால் துன்புற்ற மக்கள் தம் கிளர்ச்சியைத் தொடர முடிவெடுத்தனர். அது புரட்சியின் இரண்டாம் கட்டத்தில் முடிந்தது. அதுவே அக்டோபர் (அ) போல்ஸ்விக்ஸ் புரட்சி எனும் சிறப்பு மிகு 1917ஆம் அண்டு ர'யப்புரட்சியாகும்.

## 9.4 அக்டோபர் புரட்சி

கெரன்ஸகியின் புதிய அரசாங்கமும் மக்களின் எதிர்பார்ப்பிற்கு ஏற்பச் செயல்படவில்லை. எனவே, அக்டோபர் மாதத்தில் (பழைய ர'ய நாட்காட்டிப் படி நவம்பர்) 2ஆம் புரட்சி வெடித்தது. போல்ஸ்விக்குகளின் இணையற்ற தலைவராக அப்பொழுது லெனின் திகழ்ந்தார். சுவிட்சர்லாந்தில் இருந்த லெனின் இர'யா திரும்பி, பெட்ரோகிராட் அரசாங்கத்திற்கு (கெரன்ஸ்கியின்) எதிராக மக்களை ஒன்று திரட்டினார். அரசாங்கம் அவரை கைது செய்ய ஆணையிட அவர் மீண்டும் தலைமறைவு ஆனார். கெரன்ஸ்கியின் அரசாங்கம் லெனினின் போல்ஸ்விக் கட்சியை தடை செய்தது. ஆனால் போல்ஸ்விக்குகள் மக்களை ஒன்றுதிரட்டி பெரும் கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள். அவர்கள் அரசு அலுவலகங்கள் அனைத்தையும் தம் வசப்படுத்தினர். புரட்சியாளர்களை எதிர்கொள்ள இயலாத கெரன்ஸ்கியின் இடைக்கால அரசாங்கம் வீழ்ந்தது. புரட்சி வெற்றி பெற்றது. தொழிலாளர்களின் குடியரசு ர'யாவில் நிறுவப்பட்டது. புதிய குடியரசுக்கு லெனின் தலைமை ஏற்றார். இப்புரட்சியை 1917ஆம் ஆண்டுப் புரட்சி என்றும் ர'யப்புரட்சி, அக்டோபர் புரட்சி, பொதுவுடைமை புரட்சி, போல்விக் புரட்சி, தொழிலாளர் புரட்சி என்றும் பல்வேறு பெயர்களில் அழைப்பர். டிராட்ஸ்கி மற்றும் மேலும பலர் உதவியுடன் லெனின் உலகின் முதலாவது பொதுவுடைமை அரசாங்கத்தை ர'யாவில் நிறுவினார். புதிய குடியரசின் தலைவராகப் பதவி ஏற்ற லெனின் உடனடியாக மூன்று சட்டங்களை வெளியிட்டார். அச்சட்டங்களின் மூலம் மூன்று முக்கியமான முடிவுகளை எடுத்தார்.

☐ முதல் உலகப்போரிலிருந்து ர'யாவை விலக்கிக் கொண்டார்.

☐ பிரபுக்களிடமிருந்த நிலங்களைக் கைப்பற்றி அரசாங்கத்தின் கீழ் கொண்டு வந்தார்.

☐ தொழிற்சாலைகள் அனைத்தையும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தினார்.

9.4.1 புரட்சியின் விளைவுகள்

உலகின் முதலாம் பொதுவுடைமை அரசாங்கம் நிறுவப்பட்டது. அது உலக அரசியல் முறையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. புரட்சியின் விளைவாக உலக நாடுகள் இரு அணிகளாகப் பிரிந்தன. பொதுவுடைமை நாடுகளுக்கு ர்'யா தலைமை ஏற்க தனி உடைமை நாடுகளுக்கு (முதலாளித்துவ) ஐக்கிய அமெரிக்க தலைமை ஏற்றது. பொதுவுடைமை புரட்சியால் தோன்றிய கொள்கை வேறுபாடு கெடுபிடிப்போருக்கு (பனிப்போர் (அ) நெகிழும் போர்) வழிவகுத்தது. அதன் காரணமாக 1945 முதல் 1990 வரை உலக நாடுகள் பெரும் அளவில் அச்சம் கொண்டன.

முடியாட்சி அகற்றப்பட்டு ர்'ய மன்னர் 2ஆம் நிக்கோலஸ் குடும்பத்தாருடன் கொலையுண்டார். ர்'யப் புரட்சி அதுவரையில் கொள்கை அளவில் இருந்த பொதுவுடைமை தத்துவத்திற்கு ஒரு மாபெரும் வெற்றியாக அமைந்தது. 1917ஆம் ஆண்டு ர்'ய புரட்சியே முதன் முதலில் பொதுவுடைமைக் கருத்துக்களை அரங்கேற்றியது.

பெருமளவில் காரல்மார்க்ஸின் தத்தவத்தை அடிப்படையாக கொண்ட ர்'ய புரட்சி ர்'யாவிலும் உலகின் வேறு பல நாடுகளிலும் அரசியல், சமூக, பொருளாதார வளர்ச்சியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. ர்'ய புரட்சி ஒரு கட்சி ஆட்சி முறைக்கு வழி வகுத்தது. காலப்போக்கில் அது எதேச்சதிகார ஆட்சிக்கு வழி வகுத்தது. வரம்பிற்கு அப்பாற்பட்ட முடியாட்சியை விடப் பொதுவுடைமை ஆட்கொண்ட நாடுகளில் எதேச்சதிகாரம் கொடிகட்டிப் பறந்தது.

உழைப்பாளர்களின் வாழ்க்கை நிலை புரட்சியின் விளைவாக மேம்பட்டது. தொழிலாளர்கள் உழைப்பிற்கேற்ற எதியம் பெற்றனர். ர்'யாவில் தொடங்கப்பட்ட கூட்டுப்பண்ணை முறை வேளாண்மைப் புரட்சிக்கு வித்திட்டது. மக்களின் தேவை நிறைவேறியது. அதே நேரத்தில் ஒரு இரும்புத்திரை நாடாக செயல்பட்ட ர்'யா தனிமனித சுதந்திரத்தைப் பறித்தது. முதலாளித்துவ நாடுகள் பொதுவுடைமை ர்'யாவிற்கு எதிரா மனித உரிமையை காக்கத் தீர்மானித்தன.

1917ஆம் ஆண்டில் புரட்சியின் விளைவாக அநேகமாக அனைத்து துறைகளிலும் ர்'யா முன்னேறி ஐக்கிய அமெரிக்காவிற்கு இணையாக ஓர் உலகப் பேரரசாக வளர்ச்சியுற்றது. 2 உலகப் போர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் கூடப் பொதுவுடைமை தத்துவத்திற்கு எதிராக அதன் வளர்ச்சியைத் தடுக்கும் நோக்கில் வேறு சில இயக்கங்கள் தோன்றின. அவை ஜெர்மனியில் தோன்றிய நாசிஸமும் இத்தாலியில் தோன்றிய பாசிஸமும் ஆகும். ர்'யப்புரட்சியின் மிக முக்கியமான விளைவு கிழக்கு

ஐரோப்பிய நாடுகளிலும் சீனா போன்ற நாடுகளிலும் பொதுவடைமை அரசியல் அரங்கேற்றம் நிறைவேறியதாகும் உலகில் பல நாடுகளில் கோடிக்கணக்கான மக்களின் அடிப்படைத் தேவைகளை ∴ரளவிற்கு பொதுவுடைமை பூர்த்தி செய்தது.

## 9.5 லெனினின் வருகை (1870-1924)

ர'யப்புரட்சியின் சிற்பி என்று கருதப்படும் லெனின் உலகின் மிகச்சிறந்த தலைவர்களுள் ஒருவர். அவரது திறமையான தலைமையின் கீழ் 1917இல் உலகின் முதலாம் பொதுவுடைமை அரசாங்கம் ர'யாவில் நிறுவப்பட்டது. ர'ய புரட்சி (1917) காலம் தொட்டு 1925ல் இறக்கும் வரையில் லெனின் ர'ய அரசியலில் முதன்மைப் பெற்றிருந்தார். பீட்டரால் உருவாக்கப்பட்ட ர'யாவை புதுப்பிக்கவும் புனரமைப்பு செய்யவும் லெனின் பெரிதும் பாடுபட்டார்.

### 9.5.1 வாழ்க்கைக் குறிப்பு

இளமைக் காலத்தில் விளாடிமிர் இலியட் யூலியனோவ் என்று அழைக்கப்பட்ட லெனின் 1870இல் சிம்பிரிக்ஸ் என்ற கிராமத்தில் எளிய குடும்பம் ஒன்றில் பிறந்தார். 1887இல் அரசர் 2 ஆம் நிக்கோலஸைக் கொலை செய்ய முயன்றதாகக் குற்றம் சாட்டப்பட்ட அவரது சகோதரர் தூக்கிலிடப்பட்டார். அந்நிகழ்ச்சி லெனின் வாழ்க்கையில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. தனது சகோதரனின் மரணத்திற்கு வஞ்சம் தீர்த்துக்கொள்ள முடிவு செய்தார். 1887இல் ஹாசன் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயிலச் சேர்ந்தார். ஆனால் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதற்காகவும் வேறு சில காரணங்களுக்காகவும் பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். 1890இல் பீட்டர்ஸ்பர்க் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து பட்டம் பெற்றார். மாணவப் பருவம் தொட்டு மார்க்சியத் தத்துவங்களில் ஆர்வம் கொண்டார். பொதுவுடைமைச் சித்தாந்தத்தில் அவருக்கு இருந்த ஆர்வம் அவரைப் பற்றிய ஏனைய தகவல்கள் ஆகியவற்றை அவருடைய மனைவி கிருப்'கயா எழுதிய நினைவுக் குறிப்புகள் (மெமாயிர்ஸ்) எனும் நூலிலிருந்து அறியலாம். சுவிட்சர்லாந்து, பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.

அந்நாடுகளில் தலைவர் பலரைச் சந்தித்தார். ர'யா திரும்பிய லெனின் தொழிலாளர் விடுதலைக்காகச் சங்கம் ஒன்றை நிறுவனார். அதன் காரணமாக கைது செய்யப்பட்டு 1897இல் சைபீரியாவிற்கு நாடு கடத்தப்பட்டார். 1900இல் அவரது 30 ஆம் வயதில் மீண்டும் ர'யா திரும்பினார். சுவிட்சர்லாந்தைத் தனது அரசியல் வாழ்க்கைத் தளமாகக் கொண்டு ர'யாவில் மார்க்சின் கருத்துக்களைப் பரப்பினார். சாதகமான சூழ்நிலை உருவாகிற பொழுது புரட்சிக்கு தலைமை ஏற்று 1917

அக்டோபரில் கெரன்ஸிகியின் இடைக்கால அரசாங்கத்தை வீழ்த்தி பொதுவுடைமை அரசாங்கத்தை நிறுவினார். அவரது புதிய அரசாங்கம் (உலகின் முதல் பொதுவுடைமை அரசாங்கம்) திறன்மிகு தலைமையின் கீழ் ஸ்திரத்தன்மை உடையதாக இருந்தது. ர'யப் புரட்சியின் சிற்பியாகிய லெனின் ர'யாவை ஒரு வலுவான நாடாக ஆக்கினார். 1824இல் அவர் காலமானார்.

### 9.5.2 உள்நாட்டுக் கொள்கை

லெனினும் அவரது ஆதரவாளரும் 1917இல் ஆட்சியைக் கைப்பற்றினர். அவர்கள் ர'யாவிலும் வெளிநாடுகளிலும் பல பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. உறுதியான அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் அமைதியை நிலைநாட்டி மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வது அவர்களது கடமையைôக இருந்தது.

(அ)புதிய சட்டங்கள்

முன்பே சுருங்கக்கூறி இருப்பதுபோல லெனின் ஆட்சிக்கு வந்தவுடன் சில முக்கியமான சட்டங்களைக் கொண்டு வந்தார். அரசருடைய குடும்ப உறுப்பினர்கள், பிரபுக்கள், மத குருமார்கள் ஆகியோரது நிலப்பண்ணைகள் பறிமுதல் செய்யப்பட்டன. பிறகு அவை தேசியமயமாக்கப்பட்டன. பறிமுதல் செய்யப்பட்ட நிலங்கள் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் என்று சட்டத்தின் மூலம் அறிவிக்கப்பட்டது. அது போலவே தொழிலாளர் நலனைக் கருத்தில் கொண்டு அவர்களது வேலை நேரம் நாள் ஒன்றுக்கு எட்டு மணியாக நிர்ணயம் செய்யப்பட்டது. லெனின் சமூகத்தில் சமத்துவமின்மையை அகற்றினார். ஆண்களும் பெண்களும் சம உரிமை பெற்றனர். வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன. பிரபுக்கள் பெற்றிருந்த சலுகைகளை லெனின் ஒழித்தார் அந்நோக்கத்தை அடைய செக்கா என்ற அமைப்பின் மூலம் வன்முறையைத் துண்டினார். அதன் விளைவாக ஆயிரக்கணக்கான உயர்குடியினர் கொல்லப்பட்டனர்.

(ஆ)லெனினும் உள்நாட்டுப் போரும்

உயர்குடியைச் சார்ந்த சில தலைவர்களும் தளபதிகளும் லெனினுடைய பொதுவுடைமை அரசாங்கத்திற்கு எதிராகக் கிளர்ந்து எழுந்தனர். அவர்கள் படை ஒன்றைத் திரட்டினர். லெனின் அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்யத் தீர்மானித்தனர். அவர்கள் திரட்டிய படைக்கு வெண்சேனை என்று பெயர். அவர்களுக்கு இங்கிலாந்து, பிரான்ஸ், ஆஸ்திரியா ஆகிய நாடுகள் ஆதரவு தெரிவித்தன. அவர்களது கிளர்ச்சியை ஒடுக்க லெனினின் நண்பர் டிராட்ஸ்கி படை ஒன்றை உருவாக்கினார். அப்படைக்குச் செஞ்சேனை என்று பெயர். டிராட்ஸ்கி கிளர்ச்சியை ஒடுக்கி லெனினின் பொதுவுடைமை

அரசாங்கத்தைக் காப்பாற்றினார். எதிர்புரட்சியை (உள்நாட்டுப் போர்) அடக்குவதில் லெனின் வெற்றி பெற்றார்.

(,)போர் பொதுவுடைமை

திறன்மிகு சிறந்த தலைவராகச் செயல்பட்ட லெனின் அனைத்து எதிர்ப்புகளையும் முறியடித்து வலுவான அரசாங்கம் ஒன்றை நிறுவினார். உள்நாட்டுக் குழப்பத்தை அகற்றி நாட்டின் உற்பத்தியை அதிகரிக்க லெனின் பின்பற்றிய தீவிரப் பொருளாதாரக் கொள்கைக்கு போர் பொதுவுடைமை என்று பெயர். அவரது திட்டப்படி ர'யாவில் ராணுவ ஆட்சி நிறுவப்பட்டது. 1918 முதல் 1921 வரை போர் பொதுவுடைமைக் காலம் என்று அழைக்கபடுகிறது. அக்காலத்தில் போர்க்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பொருளாதார கொள்கைகள் வகுக்கப்பட்டன. பொருளாதார வாழ்க்கையை அரசாங்கம் கட்டுப்படுத்தும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் நலனின் பெரும் அளவிற்குக் கவனம் செலுத்தப்பட்டது. விவசாயிகள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டனர்.

தொழில் துறையில் பெரும் மாற்றம் கொண்டுவரப்பட்டது. தொழிற்சாலைகள் தேசிய மயமாக்கப்பட்டது. சுமார் 3700 பெரும் தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கு ந'ட ஈடு வழங்கப்படவில்லை. நாட்டு மக்கள் அனைவரும் உழைக்க வேண்டும் எனும் கொள்கையை அரசாங்கம் பின்பற்றியது. 1918இல் வர்த்தகம் தேசிய மயமாக்கப்பட்டது. தனியார் வர்த்தகம் ஒழிக்கப்பட்டு அதற்கு பதிலாக அரசின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட கூட்டுறவு வியாபாரப் பண்டக சாலைகள் உருவாக்கப்பட்டன. 1918ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட வெளிநாட்டு வர்த்தகம் அரசாங்கத்தின் ஏகபோக உரிமையாக்கப்பட்டது. டிராட்ஸ்கியினுடைய செஞ்சேனை, போர் பொதுவுடைமைக் கொள்கையின் பெருமளவு பங்கு கொண்டது. அரசாங்கம் இராணுவத்தின் உதவியுடன் போர் பொதுவுடைமையை வெற்றிகரமாக செயல்படுத்தியது. இராணுவம்ட பின் கிளர்ச்சியில் இறங்க லெனின் போர் பொதுவுடைமையை முடிவுக்கு கொண்டு வந்தார்.

பொதுவாக போர் பொதுவுடைமை மக்களின் துன்பங்களை அதிகப்படுத்தியதாகக் குறிப்பிடுவர். விவசாயப் பொருட்களின் உற்பத்தி பெருமளவில் குறைந்தது. தொழில் துறையைச் சார்ந்த இன்றியமையாத பொருட்களின் உற்பத்தியும் மிகவும் சரிந்தது. எனவே, லெனின் புதிய பொருளாதாரக் கொள்கை ஒன்றை பின்பற்றினார்.

(ஈ)புதிய பொருளாதாரக் கொள்கை

போர் பொதுவுடைமைக் கொள்கை எதிர்பார்த்த அளவு வெற்றி பெறாததை அடுத்து, லெனின் புதிய பொருளாதாரக் கொள்கையைத் தொடங்கினார். 1921இல் அறிமுகப்படுத்தப்பட்ட இக்கொள்கை 1924ஆம்

ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டது. இக்கொள்கையின்படி சமதர்ம வரையறைக்கு உட்பட்ட பொருளாதாரச் சுதந்திரம் அளிக்கப்பட்டது. விவசாயிகள் கூட்டுப்பண்ணைகளில் சேருமாறு கட்டாயப்படுத்தப்படவில்லை. விவசாயிகள் உபரி உற்பத்திப் பொருட்களை தம் விருப்பம் போல் விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டனர். விவசாயிகளின் ஆதரவை மீண்டும் பெறுவதே புதிய பொருளாதாரக் கொள்கையின் முக்கியமான நோக்கமாகும். ஆனால், புதிய பொருளாதாரக் கொள்கை பொதுவுடைமைத் தத்துவத்திற்குப் புறம்பாகத் தனியார் வர்த்தகத்திற்கு வழி வகுத்தது. 1925இல் விவசாயிகள் பணியாளர்களை வேலைக்கு அமர்த்திக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர். அந்த நடவடிக்கைகளின் ஒரு விளைவாக மிகப் பெரும் அளவிற்கு விவசாய உற்பத்தி அதிகரித்தது. கிராமப் பகுதிகள் மின்மயமாக்கப்பட்டன. விவசாய உற்பத்தியை அது அதிகரிக்க ஓரளவிற்கு விவசாயிகளுக்கு உதவிகரமாக இருந்தது.

தொழில்துறையில் சில மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. மத்திய ஒன்றுபடுத்தப்பட்ட தொழில் நிர்வாகத்திற்குப் பதிலாக தொழில் துறையின் நிர்வாகம் டிரஸ்ட் எனும் கூட்டு நிறுவனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. இந்தப் புதிய திட்டத்தினால் அரசாங்கம் பெரும் தொழிற்சாலைகளைத் தம் கட்டுபாட்டில் வைத்துக்கொண்டு சிறு தொழிற்சாலைகளை நடத்தத் தனியாரை அனுமதித்தது. அயல்நாட்டு வர்த்தகத்தை மேம்படுத்தும் நோக்கில் ர்'ய அரசாங்கம், பிரிட்டன், ஜெர்மனி, நார்வே போன்ற தொழில் துறையில் முன்னேறிய நாடுகளுடன் பல வர்த்தக உடன்பாடுகளைச் செய்து கொண்டது.

புதிய பொருளாதாரக் கொள்கை பெரும் வெற்றி பெற்றது. ஆனால், லெனின் பொதுவுடைமை தத்துவத்தின் முக்கியமான கோட்பாடுகளிலிருந்து விலகிச் சென்றார் என்று பலர் கருதுவர். ஏனெனில் புதிய பொருளாதாரக் கொள்கை தனியார் தொழிலை எக்குவித்ததன் மூலம் தனி உடைமையின் வளர்ச்சிக்கு வழி வகுத்தது. லெனினை அடுத்து ஆட்சிக்கு வந்த ஜோசப் ஸ்டாலின் (1924-53) புதிய பொருளாதாரக் கொள்கையை 1927இல் கைவிட்டார்.

### 9.5.3 வெளிநாட்டுக்கொள்கை

லெனின் அவரது வெளிநாட்டுக்கொள்கையில் பெருமளவு வெற்றி வெற்றார்.

(அ)பிரஸ்ட் - லிட்டோவ்ஸ்க் உடன்படிக்கை (1918)

முன்பே விளக்கமாகக் குறிப்பிட்டிருப்பது போல 1917ஆம் ஆண்டு ர்'யப் புரட்சிக்கு முதல் உலகப்போர் ஒரு முக்கியமான காரணமாகும். லெனின் ஆட்சிக்கு வந்தவுடன் ர்'ய போர் வீரர்களும் பொதுமக்களும் விரும்பியது போல மேற்கண்ட முக்கியமான நடவடிக்கை, முதல் உலகப்

போரிலிருந்து ர஺யாவை விலக்கிக் கொண்டதாகும். லெனின் தன் உறுதிமொழியைக் காப்பாற்றும் வகையில் 1918 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஜெர்மனியுடன் பிரஸ்ட் - லிட்டோவ்ஸ்க் எனும் உடன்படிக்கை செய்து கொண்டார். அவ்வுடன்பாட்டின்படி ர஺யா போரிலிருந்து விலகியது. உடன்பாட்டின்படி போலந்து, லித்துவேனியா, கூர்லாந்து, எஸ்தோனியா, பெசரேபியா, பைலோர஺யா ஆகியவற்றை இர஺யா இழந்தது. மேலும் பின்லாந்தின் சுதந்திரத்தை அங்கீகரித்தது. உக்ரைனும் விடுதலைப் பெற்றது. இவ்வாறு உடன்பாட்டினால் ர஺யா அதன் நிலப்பகுதியில் 30 இலட்சம் சதுர மைல்களை இழந்தது. மக்கள் தொகையில் 34 விழுக்காட்டை இழந்தது. இருப்பினும் முதல் உலகப்போரின் இறுதியில் ஜெர்மனி தோற்கடிக்கப்பட்டதால் அவ்வுடன்பாடு செயல்படுத்தப்படவில்லை.

(ஆ)அந்நியப்படைகளுடன் போர்

1918ஆம் ஆண்டு பிரஸ்ட் - லிட்டோவ்ஸ்க் உடன்படிக்கையை நேசநாடுகளான இங்கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான், ஆகியன விரும்பவில்லை. அவை ர஺யாவின் மீது சினம் கொண்டன. மேலும் மேற்கத்திய முதலாளித்துவ நாடுகள் பொதுவுடைமை வளர்ச்சி பெறுவதை விரும்பவில்லை. பொதுவுடைமையைத் தொடக்கத்திலேயே அழிக்கத் தீர்மானித்தன. இங்கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா, ஆகியன ர஺யாவின் மீது போர்தொடுக்க தீர்மானித்தன. 1918ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஆர்க்கேஞ்சல் துறைமுகத்தைக் கைப்பற்றிய கூட்டு நாடுகளின் வெண்சேனை ர஺யாவினுள் நுழைந்தது. ர஺யா நேசநாடுகளின் நட்பு நாடு என்பது இங்கே குறிப்பிடத் தக்கது. டிராட்ஸ்கியினால் உருவாக்கப்பட்ட செஞ்சேனை, நாட்டுப்பற்றுடன், படை எடுப்பாளர்களை எதிர்த்து வெற்றி பெற்றது. மேற்கத்திய நாடுகளின் படை முழுவதும் 1920ஆம் ஆண்டு முடிவதற்குள் ர஺யாவிலிருந்து வெளியேற்றப்பட்டது.

(,)ர஺யாவும் இங்கிலாந்து, ஜெர்மனி போன்ற நாடுகளும்

உள்நாட்டு, வெளிநாட்டுப் பிரச்சனைக்ள காரணமாக லெனின் ஐரோப்பாவின் முக்கிய நாடுகளுடன் நட்பு உடன்படிக்கைகளைச் செய்து கொள்ள தீர்மானித்தார். 1921இல் இங்கிலாந்துடன் ர஺யா ஒரு வர்த்தக உடன்படிக்கையைச் செய்து கொண்டது. அதன் மூலம் ர஺யாவின் புதிய அரசாங்கம் இங்கிலாந்தால் அங்கீகரிக்கப்பட்டது. 1922இல் ர஺யா ஜெர்மனியுடன் ரப்பெல்லோ உடன்படிக்கையைச் செய்து கொண்டது. அதன்படி இரு நாடுகளும் போர் ந஺ட ஈடு உட்பட எவ்வித நிதி உரிமையையும் கொண்டாடுவது இல்லை எனச் சம்மதித்தன. இரு நாடுகளுக்கும் இடையே ராஜதந்திர உறவுகள் தொடங்கப்பட்டன. 1922இல் ஜெனிவா மாநாட்டிற்கு ர஺யா அழைக்கப்பட்டது. 1924இல் ர஺யா சீனாவுடன் சீனக்கிழக்கு ரயில்வே தொடர்பாக (இருப்புப்பாதை) ஃர் ஒப்பந்தம் செய்து

கொண்டது. 1924இல் சோவியத் ர'யாவைப் பிரிட்டன அங்கிகரித்தது. அதை அடுத்து இத்தாலியும் பிரான்சும் ர'யாவை அங்கீகரித்தன.

லெனின் 1921இல் பின்லாந்து, லித்துவேனியா, எஸ்தோனியா ஆகிய நாடுகளின் விடுதலைமை அங்கீகரித்தார். அதன் மூலம் அண்டை நாடுகளுடன் சுமூகமான உறவுகளை ஏற்படுத்திக்கொண்டார். போலந்துடன் நட்பு உடன்பாடு ஒன்று செய்து கொண்டார். 1921இல் ஈரான், ஆப்கானிஸ்தான், துருக்கிய ஆகிய கீழை நாடுகளுடன் நட்பு உடன்பாடுகளைச் செய்து கொண்டார். ஏனைய நாடுகளுடன் உடன்பாடு செய்து கொண்டதன் மூலம் லெனின் பல நாடுகளின் அங்கீகாரத்தைப் பெற்றார். அதன் மூலம் உலக நாடுகளின் மத்தியில் ர'யாவின் செல்வாக்கை வளர்த்தார். லெனினுடைய ஆட்சிக் காலத்தில் புதிய பொதுவுடைமை நாடான ர'யா வலுவான நாடாக உருவெடுத்தது. எனவே நவீன ர'யாவின் சிற்பி என்று லெனின் போற்றப்படுகிறார்.

உங்கள் முன்னேற்றத்தைச் சரிப்பார்க்கவும்

1. பிரஸ்ட் – லிட்டோவ்ஸ்க் என்றால் என்ன?

2.டிராட்ஸ்கி என்பவர் யார்?

9.7 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

☐ லெனின் தன் உறுதிமொழியைக் காப்பாற்றும் வகையில் 1918 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஜெர்மனியுடன் பிரஸ்ட் - லிட்டோவ்ஸ்க் எனும் உடன்படிக்கை செய்து கொண்டார். அவ்வுடன்பாட்டின்படி ர'யா போரிலிருந்து விலகியது. உடன்பாட்டின்படி போலந்து, லித்துவேனியா, கூர்லாந்து, எஸ்தோனியா, பெசரேபியா, பைலோர'யா ஆகியவற்றை இர'யா இழந்தது. மேலும் பின்லாந்தின் சுதந்திரத்தை அங்கீகரித்தது.

☐ உயர்குடியைச் சார்ந்த சில தலைவர்களும் தளபதிகளும் லெனினுடைய பொதுவுடைமை அரசாங்கத்திற்கு எதிராகக் கிளர்ந்து எழுந்தனர். அவர்கள் படை ஒன்றைத் திரட்டினர். லெனின் அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்யத் தீர்மானித்தனர். அவர்கள் திரட்டிய படைக்கு வெண்சேனை என்று பெயர். அவர்களுக்கு இங்கிலாந்து, பிரான்ஸ், ஆஸ்திரியா ஆகிய நாடுகள் ஆதரவு தெரிவித்தன. அவர்களது கிளர்ச்சியை ஒடுக்க லெனினின் நண்பர் டிராட்ஸ்கி படை ஒன்றை உருவாக்கினார். அப்படைக்குச் செஞ்சேனை என்று பெயர். டிராட்ஸ்கி கிளர்ச்சியை ஒடுக்கி லெனினின் பொதுவுடைமை அரசாங்கத்தைக் காப்பாற்றினார். எதிர்புரட்சியை (உள்நாட்டுப் போர்) அடக்குவதில் லெனின் வெற்றி பெற்றார்.

## 9.8 சுருக்கவுரை

உலக நாடுகளின் மத்தியில் ர்‘யாவின் செல்வாக்கை வளர்த்தார். லெனினுடைய ஆட்சிக் காலத்தில் புதிய பொதுவுடைமை நாடான ர்‘யா வலுவான நாடாக உருவெடுத்தது. எனவே நவீன ர்‘யாவின் சிற்பி என்று லெனின் போற்றப்படுகிறார்.

## 9.9 முக்கிய வார்த்தைகள்

பிரஸ்ட் - லிட்டோவ்ஸ்க் உடன்படிக்கை (1918), அக்டோபர் புரட்சி, பெப்ரவரிப் புரட்சி, ரோமனோ மரபினரின் வல்லாட்சி (1613-1917)

## 9.10 தன்மதிப்பீட்டு வினாக்கள்

சுருக்கமான கேள்விப் பதில்கள்

1. பெப்ரவரிப் புரட்சி பற்றி விளக்குக?
2. பிரஸ்ட் - லிட்டோவ்ஸ்க் பற்றி குறிப்பு வரைக?

விரிவான கேள்விப் பதில்கள்

1. லெனின் சாதனைகளைப் பற்றிக் கட்டுரை வரைக?
2. ரோமனோ மரபினரின் வல்லாட்சி பற்றி மதிப்பிடுக?

## 9.11 மேலும் படிக்க

• C.J.H. Hayes>et.(1916). History of Europe. New York: Macmillan Company

• C.D.M. Ketelbey. (1994). A History of Modern Times from 1789. Oxford: Oxford University Press

• V.D.Mahajan. (1975). History of Modern Europe Since 1789. New Delhi: S.Chand&Co(Pvt LTD)

# அலகு 10 சர்வதேச சங்கம்

**கட்டமைப்பு**

10.0 அறிமுகம்
10.1 நோக்கங்கள்
10.2 பன்னாட்டுக் கழகம்
10.2.1 சங்கத்தின் தோற்றம்
10.2.2 பன்னாட்டுக் கழகம் நோக்கங்கள்
10.2.3 பன்னாட்டுக் கழகம் அமைப்பு
10.3 பன்னாட்டக் கழக நீதிமன்றம்
10.4 மண்டேட் முறை
10.5 பன்னாட்டுக் கழகத்தின் சாதனைகள்
10.6 பன்னாட்டுக் கழகத்தின் தோல்வி
10.7 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்
10.8 சுருக்கவுரை
10.9 முக்கிய வார்த்தைகள்
10.10 தன்மதிப்பீட்டு வினாக்கள்
10.11 மேலும் படிக்க

## 10.0 அறிமுகம்

பன்னாட்டு அரசியலில் உலகம் தழுவிய அமைப்பு என்ற முறையில் சர்வதேசச் சங்கம் (பன்னாட்டுக் கழகம்) முதன்மையானது ஆகும். 1920இல் நிறுவப்பட்ட பன்னாட்டுக் கழகம் சுமார் 20 ஆண்டுகளுக்குச் செயல்பட்டது. உலக வரலாற்றில் பன்னாட்டுக் கழகத்தின் பங்கு முக்கியமான ஒன்று ஆகும்.

## 10.1 நோக்கங்கள்

இந்த அலகை படித்து முடித்த பின்பு உங்களால்

- ☐ பன்னாட்டுக் கழகம் நடவடிக்கைகளை விவாதிக்க முடியும்
- ☐ அரசியல் சட்டத்தை நிரிவாகத்திறனை விளக்கமுடியும்

☐ தலைமைச் செயலகத்தை வரையறுக்க இயலும்

☐ பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு ஏற்பாடுகளை விவரிக்க இயலும்

## 10.2 பன்னாட்டுக் கழகம்

### 10.2.1 சங்கத்தின் தோற்றம்

1918இல் ஐக்கிய அமெரிக்காவின் குடியரசுத் தலைவர் உட்ரோ வில்சன் நேச நாடுகளுக்கு வெற்றி உறுதி என்பது தெரிந்தவுடன் உலகப் புகழ் பெற்ற அவரது 14 அமசங்களை வெளியிட்டார். ஒரு சிறந்த இராஜதந்திரியான வில்சன் அவரது 14 அம்சங்களின் அடிப்படையில் அமைதி ஏற்பாடுகளை விரும்பினார். அவரது 14வது திட்டம் உலகில் அமைதியை நிலைநாட்ட பன்னாட்டுக் கழகம் ஒன்றை நிறுவ அறிவுறுத்தியது. 1918இல் முதல் உலகப் போர் முடிவுக்கு வர பாரிஸ் நகரில் அமைதி மாநாடு கூட்டுப்பட்டது. அம்மாநாட்டில் வெற்றி பெற்ற நாடுகள் அமெரிக்க குடியரசுத் தலைவர் உட்ரோ வில்சனின் தலைமையில் பன்னாட்டுக் கழகத்தின் அரசியல் சட்டத்தை வகுக்க குழு ஒன்றை அமைத்தனர். உட்ரோவில்சனின் அறிவினால் உதித்ததே சர்வதேச சங்கம். முதல் உலகப்போரின் முடிவில் செய்து கொள்ளப்பட்ட அனைத்து உடன்படிக்கைகளிலும் பன்னாட்டுக் கழகத்தின் நெறிமுறைகள் உட்படுத்தப்பட்டன.

அமைதி உடன்பாட்டில் கையொப்பமிட்ட அனைத்து நாடுகளும் (ஜெர்மனி, ஆஸ்திரியா, துருக்கி தவிர) பன்னாட்டுக் கழகத்தின் உறுப்பு நாடுகள் ஆயின. சோவியத் ர்'யாவும் சங்கத்தில் உட்படுத்தப்படவில்லை. அமெரிக்க சட்டமன்றத்தின் மேலவையான செனட் வெர்சே உடன்படிக்கையை அறிந்து ஏற்க மறுக்கவே ஐக்கிய அமெரிக்காவும் சங்கத்தில் சேரவில்லை. சங்கத்தின் முதல் கூட்டத்தில் 42 நாடுகள் பங்கேற்றன. 1934இல் (ஈக்வெடர் உட்பட) உறுப்பினர்களின் எண்ணிக்கை 60 ஆக உயர்ந்தது. ஜெர்மனி 1926இல் சங்கத்தின் உறுப்பு நாடாயிற்று. 1933இல் அந்நாடு சங்கத்தைவிட்டு வெளியேறியது. அதே ஆண்டில் ஜப்பானும் வெளியேறியது. 1934இல் ர்'யா சங்கத்தில் சேர்ந்தது. 1937இல் இத்தாலி வெளியேறியது. 1940இல் 43 நாடுகளில் 34 மட்டுமே கடைசிக் கூட்டத்தில் பங்கு கொண்டன.

### 10.2.2 பன்னாட்டுக் கழகம் நோக்கங்கள்

1920இல் சர்வதேசச்சங்கம் நிறுவப்பட்டது. சுவிட்சர்லாந்து நாட்டில் ஜெனிவாநகரில் சங்கத்தின் தலைமை அலுவலகங்கள் செயல்படத் தொடங்கின. சர்வதேசச் சங்கத்தின் அரசியல் சட்டத்தை வரையும் பொறுப்பு 19 உறுப்பினர்களைக் கொண்ட அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. சங்கத்தின்

கொள்கைகளை அமெரிக்கா வகுக்க, பிரிட்டன் சங்கத்தின் கொள்கைகளை அமெரிக்கா வகுக்க பிரிட்டன் சங்கத்தின் சட்டவடிவத்தை அமைத்தது. சங்கத்தின் அரசியல் சட்டம் அதனுடைய நோக்கங்களை வெளிப்படுத்தும்.

சங்கம், சங்கங்களின் உறுப்பினர்களின் நோக்கங்களை விவரிக்கிறது. உலக அமைதியை ஏற்படுத்துதல், உலக நாடுகளின் ஒத்துழைப்பை நிலைநாட்டுதல், போரின்றி அமைதியை கட்டிக்காத்தல், நாடுகளுக்கு மத்தியில் நேர்மையான நியாயமான உறவுகளை ஏற்படுத்துதல், அடிமைத் தனத்தை அகற்றுதல், தொற்று நோய்களை அழித்தல், தொழிலாளர் நலன் பேணுதல் பலநாட்டு அரசாங்கங்களின் நடைமுறை நெறியாகப் பன்னாட்டுச் சட்டத்தை ஏற்றுதல், நீதியை நிலை நாட்டல், உடன்படிக்கைகளை மதித்தல், பெண்கள், குழந்தைகள் நிலையை மேம்படுத்தல் ஆகியன பன்னாட்டுக் கழக உறுப்பு நாடுகளின் நோக்கங்கள் ஆகும்.

### 10.2.3 பன்னாட்டுக் கழக அமைப்பு

சர்வதேசச் சங்கத்தில் பல அமைப்புக்களும் சில துணை சிறப்பு நிறுவனங்களும் இருந்தன. அவ்வமைப்புகளுள் முக்கியமானவை ஐந்து. அவை

- ☐ பொதுச்சபை
- ☐ பாதுகாப்பு அவை
- ☐ பன்னாட்டு நீதிமன்றம்
- ☐ தலைமைச் செயலகம்
- ☐ பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு

துணை சிறப்பு நிறுவனங்களுள் பொருளாதார மற்றும் நிதி நிறுவனம், நிரந்தர மணடேட் குழு அறிவு சார்ந்த ஒத்துழைப்புக்கான பன்னாட்டுக் கழகம் ஆகியன குறிப்பிடத்தக்கவை.

(அ)பொது அவை

பன்னாட்டுக் கழகத்தின் அரசியல் சட்டத்தின் 2 ஆம் 'ரத்து, கழகம் பொது அவை என்னும் கருவி மூலம் செயல்பட வேண்டும் என்று கூறுகிறது. அத்துடன் பாதுகாப்புக் குழு செயலகம் ஆகியனவும் முக்கியமான கருவிகளாகச் சொல்லப்படுகின்றன. கழகத்தின் உறுப்பு நாடுகளின் சார்பாளர்கள் அனைவரும் பொது அவையின் உறுப்பினர்கள் ஆவர். பெது அவையை கழகத்தின் உயர்ந்த அமைப்பாகத் திகழ்ந்தது. ஒவ்வொரு உறுப்பு நாடும் 3 சார்பாளர்களைப் பொது அவைக்கு அனுப்ப முடிவு செய்யப்பட்டது. ஆனால் ஃர் உறுப்பு நாட்டிற்கு ஒருவாக்கு மட்டுமே

இருந்தது. பொது அவை அதன் தலைவரையும் துணைத் தலைவர்களையும் (8பேர்) தேர்ந்தெடுத்தது. பொது அவையில் 6 நிரந்தரக் குழுக்கள் இருந்தன. பொது அவை ஆண்டு தோறும் ஒரு மாத காலத்திற்குக்கூடி முக்கிய பிரச்சனைகளை விவாதித்தது. பொதுச்சபை ஒரு பாராளுமன்றத்தைப் போல இருந்தது. அதன் முடிவுகள் எதிர்ப்பின்றி ஏகமனதாக இருந்தது. பொது அவைக்கு பெரும்பான்மை வாக்குமூலம் கழகத்தின் அரசியல் சட்டத்தைத் திருத்தும் அதிகாரம் இருந்தது. ஆனால் சட்டத்திருத்தம் பாதுகாப்புக் குழுவால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட வேண்டியதாயிற்று.

(ஆ) பாதுகாப்புக்குழு

தொடக்கத்தில் கிரேட் பிரிட்டன், பிரென்சு, அமெரிக்கா, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளைக் கொண்ட அதிக அதிகாரம் படைத்த ஒரு குழுவாகப் பாதுகாப்பு சபையை அமைக்க விரும்பினர். ஆனால் அம்முயற்சியைச் சிறிய நாடுகள் எதிர்த்தன. எனவே இறுதியில் 5 நிரந்தர உறுப்பினர்களையும் பொதுச்சபையால் ஆண்டு தோறும் தேர்ந்தெடுக்கப்படும் 4 தற்காலிக உறுப்பினர்களையும் கொண்ட அமைப்பாகப் பாதுகாப்பு சபை உருவாக்கப்பட்டது. 1926இல் ஜெர்மனியையும் சேர்த்து நிரந்தர உறுப்பினர்களின் எண்ணிக்கை 5 ஆக இருந்தது. 1934இல் ர்‘யா நிரந்தர உறுப்பினராகச் சேர்க்கப்பட்டது. ஆனால் ஜெர்மனியும், ஜப்பானும் சங்கத்தை விட்டு வெளியேறின. தற்காலிக உறுப்பினர்களின் எண்ணிக்கை 4 இருந்து 11 ஆக உயர்த்தப்பட்டது. ஆண்டுதோறும் 3 (அ) 4 முறை குழு கூடிற்று. உலகப்பாதுகாப்பு, உலக அமைதி போன்ற விவகாரங்களை விவாதித்தது. பன்னாட்டுக் கழகத்தின் நிர்வாக அமைப்பாக பாதுகாப்புக்குழு செயல்பட்டது. பன்னாட்டுக் கழகத்தின் தலைமைச் செயலர் பாதுகாப்புக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டார். அத்துடன் கழகத்தின் உறுப்பினர்களின் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் குழுவிற்கு இருந்தது. பொதுவாக அனைத்து முடிவுகளும் ஏகமனதாக இருக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. பாதுகாப்புக் குழு சில சிறு குழுக்கள் மூலம் திறமையாக செயல்பட்டது.

(,)தலைமைச் செயலகம்

பன்னாட்டுக் கழகத்தின் 6 ஆம் ‘ரத்து தலைமைச் செயலகத்தைப் பற்றிக் குறிப்பிட்டது. தலைமைச் செயலகம், பொது செயலரையும், ஏனைய அலவலகங்களையும் கொண்டதாக இருந்தது. அது பன்னாட்டுக் கழகத்தின் தலைமைச் செயலமாகச் செயல்பட்டது. சர்.எரிக் ட்ருமாண்ட் பன்னாட்டு கழகத்தின் முதல் பொதுச் செயலராகச் செயல்பட்டார். கழகத்தின் அனைத்து அமைப்புகளிலும் தலைமைச் செயலகமே மிகவும் முக்கியத்துவம் பெற்றதாகத் திகழ்ந்தது. தலைமைச் செயலகத்தின் அலுவலர் அனைவரும் பாதுகாப்புச் சபையின் ஆலோசனையின் பேரில்

பொதுச் செயலரால் நியமிக்கப்பட்டனர். பொதுச்செயலர் பதவி பெரிய நாடுகளின் ஏகபோக உரிமையாக இருந்தது. தலைமைச் செயலகம் சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனிவா நகரில் செயல்பட்டது. அது கழகத்தின் நிர்வாகத்தை நடத்தும் அதிகாரங்களைப் பெற்றிருந்தது. மேலும் சிறுபான்மையினர் ஆயுதக்குறைப்பு, மன்டேட்டரி அமைப்பு ஆகியவற்றைக் கவனித்தது.

(ஈ)பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு

ஐ.எல்..ஃ.. என்று சுருக்கமாக அழைக்கப்படும் பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு பன்னாட்டுக் கழகத்தின் ஃர் உறுப்பு ஆகும். தொழிலாளரின் வாழ்க்கை தரத்தை உலக தரத்திற்கு ஏற்ப உயர்த்துவதே தொழிலாளர் அமைப்பின் நோக்கம். அதன் நிர்வாகக் குழுவில் உறுப்பு நாடுகளின் அரசாங்கங்களின் சார்பாளர்களும் முதலாளிகளும், தொழிலாளர்களும் இடம் பெற்றிருந்தனர். தொழிலாளர் அமைப்பின் ஆண்டுக் கூட்டத்தில் தொழிலாளர் தரம் தொடர்பான முடிவுகள் எடுக்கப்பட்டன. உலக நீதி மன்றத்தைப் போல் பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பும் தொடர்ந்து இன்றும் செயல்படுவது குறிப்பிடத்தக்கது ஆகும். தொழிலாளர் அமைப்பின் கீழ் பல பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்புக்களும் சங்கங்களும் வைக்கப்பட்டன. இது உலகத் தொழிலாளர்களின் நலன், எதியம், உழைப்பு ஆகியவை தொடர்பான பிரச்சனைகளை ஆராய்ந்து தொழிலாளர் நலன் பேணும் சட்டங்களை இயற்றியது. இவ்வமைப்பு தொழுநோயாளிகள் பற்றி அறிந்து அவர்கள் உடல் நலனைக் காப்பதற்காகப் பன்னாட்டு தொழுநோய்ப் படிப்பு மையம் ஒன்றையும் நிறுவியது.

## 10.3 பன்னாட்டக் கழக நீதிமன்றம்

1922ஆம் ஆண்டு பன்னாட்டக் கழகம் நெதர்லாந்தின் (ஹாலந்து) தி ஹேக் நகரில் உலக நீதிமன்றத்தை நிறுவியது. அதில் 11 நீதிபதிகளும் 4 துணை நீதிபதிகளும் பணியாற்றினர். நீதிபதிகள் பொதுச் சபையாலும் பாதுகாப்புக் குழுவாலும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நீதிபதிகள் 9 ஆண்டு காலத்திற்குப் பணியாற்றினர். பன்னாட்டுச் சட்டத்தில் புலமைப்பெற்ற சட்ட அறிஞர்களே நீதிபதிகளாகத் தேர்வு செய்யப்பட்டனர். நாடுகளுக்கு இடையே ஏற்பட்ட வழக்குகளை நீதிமன்றம் தீர்த்து வைத்தது. ஆனால் உலக நீதிமன்றத்தின் தீர்ப்பு கட்டாயமானது அல்ல. பன்னாட்டுக் கழகம் மறைந்தாலும் அதன் ஓர் உறுப்பாகிய பன்னாட்டு நீதிமன்றம் இன்றும் செயல்படும் வாய்ப்பை பெற்றுள்ளது.

## 10.4 மண்டேட் முறை

பன்னாட்டுக் கழகத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்ட நிலப்பகுதிகளை நிர்வகிக்கும் அதிகாரம் மண்டேட் குழுவிற்குத் தரப்பட்டது. போர்காலத்தில் மத்திய நாடுகளிடமிருந்து (ஜெர்மனி, ஆஸ்திரியா) கைப்பற்றப்பட்ட

பகுதிகள் மீண்டும் அந்நாடுகளிடம் ஒப்படைக்கப்படவில்லை. வெற்றிபெற்ற நேச நாடுகளும் அந்நிலப்பகுதிகளை வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படவில்லை. அந்நிலப் பகுதிகள் பன்னாட்டுக் கழகத்தின் மேற்பார்வையின் கீழ் வைக்கப்பட்டன. அவ்வாறு பன்னாட்டுக் கழகத்தின் மேற்பார்வையின் கீழ் வைக்கப்பட்ட நிலப்பகுதிகளுக்கு (பிரதேசங்களுக்கு) ஆணையிடப்பட்ட நிலப்பகுதிகள் (மண்டேட்டெரிடரிஸ்) என்று பெயர். ஆவை ஆணைமுறை மூலம் (மண்டேட் சிஸ்டம்) நிர்வகிக்கப்பட்டன. பன்னாட்டுக் கழகத்தில் இல்லாமல் அந்நிலப்பகுதிகளை ஒரு நாட்டுடன் இணைக்கவோ அல்லது வேறு நாட்டிடம் ஒப்படைக்கவோ எந்த நாட்டிறகும் அதிகாரம் இல்லாமல் போயிற்று.

## 10.5 பன்னாட்டுக் கழகத்தின் சாதனைகள்

பன்னாட்டு கழகத்திற்கு எதிராக மிகக் கடுமையான குற்றச்சாட்டுகள் இருந்த போதிலும், அது குறிப்பிடத்தக்க சாதனைகளை படைத்தது என்பதை மறுக்க இயலாது. பன்னாட்டுக் கழகத்தை எண்ணங்களின் கழகம் என்றும், திருடர்களின் கழகம் என்றும் அழைத்தனர் என்று சொல்லப்படுகிறது. சங்கம் (கழகம்) குரைக்க முடிந்ததே தவிர, அதனால் கடிக்க முடியாமல் போயிற்று என்றும் சொல்லப்பட்டது அவை போன்ற குறைபாடுகள் பல சொல்லப்பட்ட போதிலும் சங்கம் அதன் 20 ஆண்டுகாலச் செயல்பாட்டில் பயனுள்ள பல சாதனைகளைப் படைத்தது. சுமார் 40 சச்சரவுகளை அது ஆய்வு செய்தது. அவற்றுள் சில.

(அ)ஆலேண்ட் ஐலேண்ட் சச்சரவு

கழகத்தின் பார்வைக்கு முதலில் கொண்டுவரப்பட்ட வழக்குகளில் இப்பிரச்சனையும் ஒன்று. அந்தத்தீவை (ஆலெண்ட் ஐலேண்ட்) பின்லாந்து தனது என்று உரிமைகொண்டாட, ஸ்வீடனும் தனது என்று உரிமை கொண்டாடிற்று. அந்தத்தீவு சுவீடன், பின்லாந்து ஆகிய இரு நாடுகளுக்குமிடையே உள்ளதாகும். 1922இல் அந்தச் சச்சரவு அமைதியாகத் தீர்த்து வைக்கப்பட்டது. பன்னாட்டுப் பாதுகாப்பின் கீழ் ஆலண்டுத் தீவிற்கு நடுநிலை உரிமைக்கு உத்திரவாதம் அளிக்கப்பட்டது.

(ஆ)மொசூல் பிரச்சனை

1925இல் மொசூல் எல்லைத் தொடர்பாக ஈராக் துருக்கி ஆகிய இரண்டு நாடுகளுக்குமிடையே நிலவிய சச்சரவு முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

(,)பல்கேரியா

1925இல் பல்கேரியாவின் ஒரு பகுதியை கிரேக்கத் துருப்புகள் ஆக்கிரமித்தன. கிரேக்கர்களின் ஆக்கிரமிப்பு நடவடிக்கை கழகத்தில்

பார்வைக்கு கொண்டு வரப்பட்டதும், கழகம் அதில் தலையிட்டது. அதன் விளைவாகக் கிரேக்கர்கள் பல்கேரியாவை விட்டு வெளியேறினர்.

(ஈ)போலந்தும் லித்துவேனியாவும்

வில்னா என்ற பகுதியின் மீது போலந்து, லித்துவேனிய நாடுகளுக்கிடையே ஏற்பட்ட சச்சரவு தீர்த்தவைக்கப்பட்டது. தீர்வு போலந்து நாட்டிற்கு சாதகமாக அமைந்தது.

(உ)கொலம்பியாவும் பெருவும்

கொலம்பியா, பெரு ஆகிய இலத்தின் அமெரிக்க (தென் அமெரிக்கா) நாடுகளுக்கு இடையே நிலவிய சிக்கலையும் கழகம் தீர்த்துவைத்தது.

1923இல் பன்னாட்டுக் கழகம் சுகாதார நிறுவனம் ஒன்றை நிறுவியது. அதன் நோக்கம் மலேரியாக் காய்ச்சல், கொள்ளை நோய் (பிளேக்) எலும்புருக்கிநோய் (டிபி) டைபாய்டு சுரம், வாந்திபேதி (காலரா) பெரியம்மை (சுமால் பாக்ஸ்) தொழுநோய் போன்றவற்றை எதிர்த்துப் போராடுவதாகும் பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் பெரும் வெற்றி அடைந்தது. மேலும் அபினி போன்ற போதை பொருட்களின் இழிவான வர்த்தகத்தைத் தடுப்பதிலும் பெண்கள் மற்றும் குழந்தைகள் உரிமையைப் பாதுகாப்பதிலும் கழகம் குறிப்பிடத்தகும் அளவிற்கு வெற்றி அடைந்தது. 1932இல் ஒரு நிரந்தர அடிமைத்தனக் குழுவை நிறுவியதன் மூலம் கழகம் அடிமைத் தனம் போன்ற சமூகக் கேடுகளை அகற்றி வெற்றிக் கண்டது. கழகத்தின் நிதிக்குழு ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி, கிரீஸ் போன்ற நாடுகளுக்கு கடன் அளித்து உதவியது. போரினால் பாதிக்கப்படட பகுதிகளில் மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பணியில் கழகத்தின் பங்கு மகத்தானதாகும், பெரும் பாராட்டிற்குரியதாகும்.

## 10.6 பன்னாட்டுக் கழகத்தின் தோல்வி

மேலே குறிப்பிட்டுள்ளது போல் கழகம் பல வெற்றிகளை அடைந்து, சாதனைகளை ஏற்படுத்தி இருந்தாலும் கழகம் மிகப் பெரும் அளவில் வெற்றி பெறவிலலை என்ற குற்றச்சாட்டும் உண்டு. எனவே பன்னாட்டுக் கழகம் காலப் போக்கில் நாடுகளின் எண்ணமாக (நோ‘ன்) மாறிற்று என்பர். அது எண்ண அளவில் மட்டுமே இருந்தது. செயல் அளவில் வெற்றி அடையவில்லை என்பர்.

கழகத்தின் தோல்விக்குக் காரணங்கள் பல இருந்தன நாடுகளின் மத்தியில் நிலவிய ஒற்றுமை இன்மையும், அவை அளித்திருந்த உறுதி மொழிகளை நிறைவேற்ற இணைந்து செயல்படாமல் போனதுமே கழகத்தின் தோல்விக்கான முதன்மையான காரணங்கள் என்று கூறுவர். அவை தம்

கடமைகளை மறந்தன. பிரிட்டன், பிரான்சு போன்ற பெரிய நாடுகள் பன்னாட்டுக் கழகத்தைத் தம் சொந்த நலனிற்காகப் பயன்படுத்த முயற்சி செய்ததும் சங்கத்தின் தோல்விக்கு காரணமாகும். ஆகையால் ஜெர்மனி போன்ற நாடுகள் கழகத்தின் மீது நம்பிக்கை கொள்ளவில்லை.

கழகம் நிறுவப்பட்ட காலந்தொட்டு பெரிய நாடுகள் அனைத்தும் அதன் உறுப்பு நாடுகளாக இருக்கவில்லை. அதுவும் கழகத்தின் தோல்விக்கு ஒரு காரணமாகும். சங்கம் (கழகம்) நிறுவப்படுவதற்குக் காரணமாக இருந்த ஐக்கிய அமெரிக்கா (தி.யு.எஸ்.ஏ) கழகத்தில் சேரவில்லை ஜெர்மனி, இர்'யா, துருக்கி, ஹங்கேரி போன்ற நாடுகள் மிகவும் தாமதமாக கழகத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டன. அனைத்து முடிவுகளும் ஏகமனதாக எடுக்கபடவேண்டும் என்ற கழகத்தின் நோக்கமும் அதன் தோல்விக்கு ஒரு காரணமாகும்.ஒரு நாடு எதிர்த்தால் கூட பல முக்கியமான பிரச்சினைகளின் மீது கூட முடிவு எடுக்க இயலாமல் போயிற்று.

கழகத்தின் ஆயுதக் குறைப்புத் தொடர்பான முய்றசியும் வெற்றி பெறவில்லை. உலக நாடுகளின் இராணுவ பலத்தைக் குறைக்கும் முயற்சியில், கழகம் பரிதாபமாகத் தோல்விக்கண்டது. சங்கத்தின் தோல்விக்கு மிக முக்கயமான காரணம் சஙகத்திடம் சொந்தமாக வலிமையான இராணுவம் ஒன்று இல்லாமல் போனதாகும். எனவே இத்தாலி, ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகளின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைக் கழகம் தடுக்க இயலாமல் தடுமாறிப் போயிற்று. இவ்வாறாக கழகம், போரைத் தவிர்க்கும் தன் முக்கியமான நோக்கத்தில் பரிதாபமாகத் தோல்வி அடைந்தது

உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்

1.ஆலேண்ட் ஐலேண்ட் சச்சரவு என்றால் என்ன?

2.மண்டேட்டெரிடரிஸ் என்பதன் பொருள் என்ன?

## 10.7 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

- ஆலெண்ட் ஐலேண்ட் என்பது ஒரு தீவு பின்லாந்து தனது என்று உரிமைகொண்டாட, ஸ்வீடனும் தனது என்று உரிமை கொண்டாடிற்று. அந்தத்தீவு சுவீடன், பின்லாந்து ஆகிய இரு நாடுகளுக்குமிடையே உள்ளதாகும். 1922இல் அந்தச் சச்சரவு அமைதியாகத் தீர்த்து வைக்கப்பட்டது. பன்னாட்டுப் பாதுகாப்பின் கீழ் ஆலண்டுத் தீவிற்கு நடுநிலை உரிமைக்கு உத்திரவாதம் அளிக்கப்பட்டது.

☐ பன்னாட்டுக் கழகத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்ட நிலப்பகுதிகளை நிர்வகிக்கும் அதிகாரம் மண்டேட் குழுவிற்குத் தரப்பட்டது. பன்னாட்டுக் கழகத்தின் மேற்பார்வையின் கீழ் வைக்கப்பட்ட நிலப்பகுதிகளுக்கு ஆணையிடப்பட்ட நிலப்பகுதிகள் மண்டேட்டெரிடரிஸ் என்று பெயர்.

## 10.8 சுருக்கவுரை

☐ 1923இல் பன்னாட்டுக் கழகம் சுகாதார நிறுவனம் ஒன்றை நிறுவியது. அதன் நோக்கம் மலேரியாக் காய்ச்சல், கொள்ளை நோய் (பிளேக்) எலும்புருக்கிநோய் (டிபி) டைபாய்டு சுரம், வாந்திபேதி (காலரா) பெரியம்மை (சுமால் பாக்ஸ்) தொழுநோய் போன்றவற்றை எதிர்த்துப் போராடுவதாகும் பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் பெரும் வெற்றி அடைந்தது.

☐ பன்னாட்டுக் கழகத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்ட நிலப்பகுதிகளை நிர்வகிக்கும் அதிகாரம் மண்டேட் குழுவிற்குத் தரப்பட்டது. போர்காலத்தில் மத்திய நாடுகளிடமிருந்து (ஜெர்மனி, ஆஸ்திரியா) கைப்பற்றப்பட்ட பகுதிகள் மீண்டும் அந்நாடுகளிடம் ஒப்படைக்கப்படவில்லை. வெற்றிபெற்ற நேச நாடுகளும் அந்நிலப்பகுதிகளை வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படவில்லை.

## 10.9 முக்கிய வார்த்தைகள்

பன்னாட்டுக்கழக நீதிமன்றம், மாண்டேட்முறை, பொதுச்சபை, பாதுகாப்பு அவை, பன்னாட்டு நீதிமன்றம், தலைமைச் செயலகம், பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு

## 10.10 தன்மதிப்பீட்டு வினாக்கள்

சுருக்கமான கேள்விப் பதில்கள்

1. மண்டேட் முறை பற்றி விளக்குக?
2. பன்னாட்டு நீதிமன்றம் பற்றி குறிப்பு வரைக?

விரிவான கேள்விப் பதில்கள்

1. பன்னாட்டுக்கழக சாதனைகளைப் பற்றிக் கட்டுரை வரைக?
2. பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு பற்றி மதிப்பிடுக?

## 10.11 மேலும் படிக்க

• C.J.H. Hayeset.(1916). History of Europe. New York: Macmillan Company

- C.D.M. Ketelbey. (1994). A History of Modern Times from 1789. Oxford: Oxford University Press
- V.D.Mahajan. (1975). History of Modern Europe Since 1789. New Delhi: S.Chand&Co(Pvt LTD)

# தொகுதி IV நாசிசக் கொள்கையின் தோற்றம், பாசிசமும் இரண்டாம் உலகப் போரும் அதன் விளைவுகளும்

# அலகு -11 ஜெர்மனியில் நாசிசத்தின் தோற்றம்

**கட்டமைப்பு**

11.0 அறிமுகம்

11.1 நோக்கங்கள்

11.2 நாசிசத்தின் தோற்றம்

11.3 ஹிட்லரின் வாழ்க்கைக் குறிப்பு

11.3.1 நாசிசம் தோன்றுவதற்கான காரணங்கள்

11.3.2 ஹிட்லரின் கொள்கைகள்

11.3.3 ஹிட்லரின் நிர்வாகம்

11.3.4 இராணுவம்

11.3.5 வெளிநாட்டுக்கொள்கை

11.3.6 வெளிநாட்டுக் கொள்கையின் நோக்கங்கள்

11.4 ரோம் பெர்லின் டோக்கியோ அச்சு ஒப்பந்தம்

11.5 இத்தாலியில் பாசிசம்

11.5.1 இத்தாலியில் பாசிசம் தோன்றுவதற்கான காரணங்கள்

11.5.2 பாஸிசத்தின் கொள்கைகள்

11.5.3 முஸோலியின் உள்நாட்டுக் கொள்கை

11.5.4 முஸோலினியின் வரலாற்று சுருக்கம்

11.5.5 முஸோலினியும் போப்பும்

11.5.6 முஸோலினியின் வெளிநாட்டுக் கொள்கை

11.5.7 ,ரண்டாம் உலகப்போரும் முஸோலினியின் வீழ்ச்சியும்

11.6 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

11.7 சுருக்கவுரை

11.8 முக்கிய வார்த்தைகள்

11.9 தன்மதிப்பீட்டு வினாக்கள்

11.10 மேலும் படிக்க

## 11.0 அறிமுகம்

முதல் உலகப்போருக்கு முக்கியமான காரணமாக இருந்த ஜெர்மனி போர்க்காலத்தில் பெரிதும் பாதிப்பிற்கு உள்ளாயிற்று. போரின் இறுதியில் அந்நாடு 1919ஆம் ஆண்டு அமைதி உடன்பாட்டினால் மிகவும் மோசமான அவமானத்திற்கு ஆளாயிற்று. வெற்றி பெற்ற நாடுகளால் ஒவ்வொரு துறையிலும் ஜெர்மனி துன்புறுத்தப்பட்டது. ஆகையினால், ஜெர்மனியர்கள் அதிருப்தி அடைந்தனர். சினம் கொண்டனர். முதல் உலகப்போரில் தம்மை எதிர்த்து வெற்றி அடைந்த நாடுகளின் மீது அவர்கள் பழிதீர்த்துக்கொள்ளத் தீர்மானித்தனர். உலகப்போரின் இறுதியில் அமைக்கப்பட்ட வெய்மார் குடியாட்சி அரசாங்கத்தால் ஜெர்மன் மக்களைத் திருப்திப்படுத்த இயலவில்லை. அச்சூழ்நிலையை நாசித் தலைவர் அடால்ப் ஹிட்லர் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு அதிகாரத்தைக் கைப்பற்றினார். ஹிட்லரின் விறுவிறுப்பான ஆக்கிரமிப்பு மிக்க வெளிநாட்டுக் கொள்கை 1939இல் 2 ஆம் உலகப்போர் தோன்றுவதற்கு முக்கியமான காரணமாயிற்று. 1945இல் மீண்டும் ஜெர்மனி நேச நாடுகளால் தோற்கடிக்கப்பட்டது. ஹிடலர் தற்கொலை செய்து கொண்டார்.

## 11.1 நோக்கங்கள்

இந்த அலகை படித்து முடித்த பின்பு உங்களால்

☐ ஜெர்மனியின் நாசிசத்தின் தோற்றத்தை அறிய இயலும்

☐ ஹிட்லரின் கொள்கைகளைப் பற்றி அறிய இயலும்.

☐ இத்தாலியில் பாசிசம் தோன்றியதற்கான கூறுகளை அறிய இயலும்

☐ ரோம்-பெர்லின் –டோக்கியோ கூட்டமைப்பு பற்றி அறிய இயலும்

## 11.2 நாசிசத்தின் தோற்றம்

முதல் உலகப்போருக்கு முக்கியமான காரணமாக இருந்த ஜெர்மனி போர்க்காலத்தில் பெரிதும் பாதிப்பிற்கு உள்ளாயிற்று. போரின் இறுதியில் அந்நாடு 1919ஆம் ஆண்டு அமைதி உடன்பாட்டினால் மிகவும் மோசமான அவமானத்திற்கு ஆளாயிற்று. வெற்றி பெற்ற நாடுகளால் ஒவ்வொரு துறையிலும் ஜெர்மனி துன்புறுத்தப்பட்டது. ஆகையினால், ஜெர்மனியர்கள் அதிருப்தி அடைந்தனர். சினம் கொண்டனர். முதல் உலகப்போரில்

தம்மை எதிர்த்து வெற்றி அடைந்த நாடுகளின் மீது அவர்கள் பழிதீர்த்துக்கொள்ளத் தீர்மானித்தனர். உலகப்போரின் இறுதியில் அமைக்கப்பட்ட வெய்மார் குடியாட்சி அரசாங்கத்தால் ஜெர்மன் மக்களைத் திருப்திப்படுத்த இயலவில்லை. அச்சூழ்நிலையை நாசித் தலைவர் அடால்ப் ஹிட்லர் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு அதிகாரத்தைக் கைப்பற்றினார். ஹிட்லரின் விறுவிறுப்பான ஆக்கிரமிப்பு மிக்க வெளிநாட்டுக் கொள்கை 1939இல் 2 ஆம் உலகப்போர் தோன்றுவதற்கு முக்கியமான காரணமாயிற்று. 1945இல் மீண்டும் ஜெர்மனி நேச நாடுகளால் தோற்கடிக்கப்பட்டது. ஹிடலர் தற்கொலை செய்து கொண்டார்.

## 11.3 ஹிட்லரின் வாழ்க்கைக் குறிப்பு

ஹிட்லர் 1889 இல் ஆஸ்திரிய சுங்க அதிகாரியின் மகனாகப் பிறந்தார். அவர் தன் பள்ளிப் படிப்பிற்குப் பின் வியன்னாவில் ஒரு சாதாரண வர்த்தகக்கலைஞராகத் தன் வாழ்க்கையைத் துவக்கினார். 1913இல் ஆஸ்திரியாவை விட்டு ஜெர்மனிக்கு சென்றார். அங்கே பவேரிய காலாட்படையில் ஒரு கார்பொரல் வீரராகச் சேர்ந்தார். முதல் உலகப்போரின் பொழுது ஜெர்மனிக்காகப் போரிடடார். போருக்கு பின் தன் இராணுவப் பணியை இழந்தார். அவருக்கு வேறு வேலை கிடைக்காத காணத்தால் அரசியலில் நுழைந்தார். 1919இல் தீவிரவாத தேசிய அமைப்பு ஒன்றில் சேர்ந்தார். அதுவே பின் நாளில் தேசிய சமதர்ம ஜெர்மனிய தொழிலாளர்கள் கட்சி (நாசி) என்று அழைக்கப்பட்டது. அவர் ஒரு சிறந்த நாவன்மை மிக்க பேச்சாளர். எனவே, புகழ்பெற்ற ஒரு மக்கள் தலைவராக விரைவில் உயர்ந்தார்.

1923இல் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற முயன்று தோல்வியுற்றார். கைது செய்யப்பட்ட ஹிட்லர் 30 மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். அவர் சிறையில் இரந்த காலத்தில் தான் மெயின் காம்ப் அல்லது எனது போராட்டம் எனும் நூலை எழுதினார். அதுவே அவரின் சுயசரிதையாகக் கருதப்படுகிறது. அந்நூல், அவரது தொண்டர்களால் நாசிக் கொள்கையின் புனித நூலாகக் (பைபிள்) கருதப்பட்டது. ஹிட்லரின் சுறுசுறுப்பான தலைமையின் கீழ் நாசிக் கட்சி வலுவாக வளர்ந்தது. ஆயிரக்கணக்கானோர் ஹிட்லரைப் பின்பற்றத் தொடங்கினர். நாசிகளின் சின்னம் ஸ்வஸ்திகா என்று அழைக்கப்பட்டது. ஹிட்லரின் தொண்டர்கள் பழுப்புச் சட்டையினர் என்று அழைக்கப்பட்டனர். ஹிட்லரின் கவர்ச்சி மிகு தலைமையினால் நாசிக்கட்சி மிகவும் பிரபலமாகி, 1933இல் ரிச்ஸ்டாக் என்று அழைக்கப்படும் ஜெர்மன் பாராளுமன்றத்தின் கீழ்சபையில் தனிப்பெரும் கட்சியாக உருவாயிற்று. 1933இல் ஹிட்லர் சான்சலர் (தலைமை அமைச்சர்) ஆனார். வெய்மாய் குடியரசு தலைவராக இருந்த ஹிண்டன்பர்க் காலமானதை அடுத்து 1934ல் ஹிட்லர் ஜெர்மனியின் ஜனாதிபதி ஆனார். வெய்மார் குடியரசு ஆட்சியைக் கலைத்த ஹிட்லர்,

ஜெர்மனியில் மூன்றாம் பேரரசை நிறுவினார். 1934 ஆம் ஆண்டு முதல் அவரே ஜனாதிபதியாவும் பிரதம மந்தியாவும் செயல்பட்டார். 1945இல் இறக்கும் வரையில் அவரே ஜெர்மனியின் இணையற்ற தலைவராக (பஹ்ரர்) திகழ்ந்தார்.

### 11.3.1 நாசிசம் தோன்றுவதற்கான காரணங்கள்

ஜெர்மனியின் அதிபர் ஹிண்டன்பர்க் ஹிட்லரைக் கடுமையாக எதிர்த்தார். அவர் ஹிட்லரை ஒரு போதும் சான்சலராக (தலைமை அமைச்சர்) ஆக்கவிருமபவில்லை. ஒருமுறை அவர் ஹிட்லரைப் பற்றி நான் அவரை (ஹிட்லர்) தலைமைத் தபால் அலுவலர் (போஸ்ட் மாஸ்டர்) ஆக்குவேன் அவர் நாள் ஒன்றுக்கு 100 தடவை என் முகத்தை நக்குவார் என்றார். இருப்பினும் முன்பே கூறியது போல் ஹிண்டன்பர்க் ஹிட்லரைச் சான்சலராக நியமனம் செய்தார். ஹிட்லரின் எழுச்சிக்கும் நாசிசத்தின் வளர்ச்சிக்கு காரணங்கள் பல இருந்தன.

1919ஆம் அண்டு வெர்சே உடன்பாட்டின் மூலம் நேச நாடுகள் ஜெர்மனியை அவமானப்படுத்தின. அதை ஜெர்மனி ஒருபோதும் மறக்கவில்லை. எனவே தன் எதிரியைப் பழிவாங்க ஜெர்மனி தக்க நேரத்திற்காக காத்திருந்தது. அச்சூழ்நிலையை ஹிட்லர் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டார். அதுவே நாசிக் கொள்கையின் எழுச்சிக்கு மிக முக்கியமான காரணமாகும். முதல் உலகப்போரின் இறுதியில் ஜெர்மனி இழந்த அனைத்த நிலப்பகுதிகளையும் மீண்டும் தான் ஜெர்மானியர்களுக்கு மீட்டுத் தருவதாக ஹிட்லர் உறுதி அளித்தார்.

ஹிட்லரின் குண இயல்புகளும், நாசிக்கொள்கையின் எழுச்சிக்கு மக்கியமான ஒரு காரணமாகும். அவர் ஒரு சக்திமிகு அரசியல்வாதியாக இருந்தார். சிறந்த பேச்சாளர், கவர்ச்சிமிகு தலைவர், இலட்சக்கணக்கான மக்களைக் கவரும் ஆற்றல் உடையவராக இருந்தார். ஜெர்மனியின் இயல்பும் நாசிசம் பரவுவதற்கு சாதகமாக இருந்தது. பொதவாக ஜெர்மானியர்களில் பெரும்பான்மையானோர் ஜனநாயக வாதிகள் அல்லர். அவர்களுக்கு எந்தக்கட்சி பாதுகாப்புடன் புகழைத் தேடி தருமோ அந்தக் கட்சியை அவர்கள் ஆதரித்தனர். அவர் தம் ஆசையை நிறைவேற்றும் வலிமைமிகு மனிதரை அவர்கள் ஆதரித்தனர்.

ஜெர்மனியின் மோசமான பொருளாதார நிலையும் நாசிஸம் தோன்றுவதற்கு மிகவும் சாதகமாக இருந்தது. டாஸ் திட்டம் மற்றும் யங் திட்டம் ஆகியன ஜெர்மனியின் பொருளாதாரப் பிரச்சனையை தீர்க்கத் தவறின. 1929ஆம் ஆண்டு உலகுத் தழுவிய பொருளாதார பெருமந்தமும் ஜெர்மனியின் பொருளாதாரத்தை பெரிதும் பாதித்தது. வேலை இல்லாத்திண்டாட்டம் அதிகமாயிற்று. வெய்மார் குடியரசு அப்பிரச்சனையைத் தீர்க்கத் தவறியது. எனவே ஜெர்மனியர்கள் தேசிய சமதர்ம கொள்கையில் நம்பிக்கை வைத்தனர் (நாஸிசம்). அதிபர்

ஹிண்டன்பார்க் தலைமை அமைச்சர்கள் புருனிங், வான்பேபன், ஸ்செலிச்சர் ஆகியோர் பொருளாதாரப் பிரச்சனையைத் தீர்க்கவில்லை.

ஜெர்மனியில் பிராடெஸ்டாண்ட் சமயத்தின் வீழ்ச்சியும், ஹிட்லரின் எழுச்சிக்கு சாதகமாக அமைந்தது. வேலைத் தேடும் முயற்சியில் ஆர்வம் காட்டிய புராடெஸ்டாண்டுகள் சமய ஆர்வத்தை இழந்து, ஹிட்லரின் தேசிய சமதர்மத்தை (நாஸிசம்) பின்பற்றினார்கள். 1917இல் ர்'யாவில் பொதுவுடைமை அரசாங்கம் நிறுவப்பட்டது. இர்'ய பொதுவுடைமை வாதிகள் தம் கொள்கையை ஜெர்மனியிலும் பரப்பத் தொடங்கினார்கள். ஜெர்மானியர்கள் பொதுவுடைமையை வெறுத்தார்கள். அதை ஹிட்லர் தனக்குச் சாதகமாகப் பயன்பட்டுத்திக்கொண்டார்.

நாஸிசத்தின் எழுச்சிக்கு, ஜெர்மனியில் நிலவிய அரசியல் நிலையும் காரணமாகும். உறுதியான அரசு முதல் உலகப்போருக்குப்பின் அமையவில்லை. வெய்மார் குடியரசு உறுதியான வலிமைமிகு அரசாங்கம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் தோல்வியுற்றது. 1919 முதல் 1933 வரை 19 முறை அமைச்சரவைகள் மாற்றப்பட்டன. எனவே, அரசாங்கத்தால் நலத்திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை. ஹிட்லர் நிலையான உறுதியான அரசாங்கம் ஒன்றை அமைப்பதாக உறுதி அளித்தார். எனவே மக்கள் அவருக்கு தம் ஆதரவை நல்கினர்.

நிலைமை அவ்வாறு இருந்த போது ஹிட்லர் மக்கள் தலைவராக வளர்ச்சி பெற்றார். முன்பு சான்சலராகப் பதவி வகித்த வான்பேபன் ஹிட்லருடன் அணி சேர்ந்தார். சான்சலராக இருந்த ஸ்லெச்சரைப் பதவியில் இருந்து அகற்றினர். பேபன், ஹிட்லரை சான்சலர் பதவியில் அமர்த்துமாறு ஹிண்டர்பர்க்கைக் கட்டாயப்படுத்தினர். இவ்வாறு 1933இல் ஹிட்லர் சான்சலர் ஆனார். 1934இல் அதிபர் ஹிண்டன் பர்க்கின் மரணத்தை அடுத்து ஹிட்லர் ஜெர்மனியின் அதிபர் ஆனார்.

### 11.3.2 ஹிட்லரின் கொள்கைகள்

ஹிட்லர் வெய்மார்ய குடியரசை அகற்றினார். ஜெர்மனியில் 3ஆம் பேரரசை நிறுவினார். 1933 முதல் 1945 வரை ஹிட்லரே ஜெர்மனியின் பெரும் சக்தியாக இருந்தார். 1945இல் தான் இறக்கும் வரையில் ஹிட்லரே நாசிஸக் கட்சியின் இணையற்ற தலைவராக இருந்தார். அவரது நண்பர் கோயபல்ஸ் நாசிக் கொள்கையைப் பரப்பும் பொறுப்பை ஏற்றார்.

நாசிகள் தனிமனிதனைவிட நாட்டையே முக்கியமாகக் கருதினார்கள். நாட்டின் நலனிற்காக அவர்கள் தம் அடிப்படை உரிமைகளைக் கூடத் தியாகம் செய்ய தயாராக இருந்தனர். ஒரு நாடு, ஒரே தலைவர் எனும் கொள்கையைப் பின்பற்றினார்கள். ஆகையினால் ஹிட்லர் பஹ்ரராக (தலைவராக) அவர்களால் போற்றப்பட்டார். ஹிட்லரே கட்சியின் தலைவராகவும், அரசாங்கத்தின் தலைவராகவும் இராணுவத்தின்

தலைவராகவும் திகழ்ந்தார். ஹிட்லர் கடவுளாக வணங்கப்பட்டார். ஜெர்மானியர் தனிநபர் வழிபாட்டில் அதிக நம்பிக்கை வைத்திருந்தனர். அவரை அவர்கள் துணிவுமிகு தலைவராக கருதினர். அதுபோலவே நாட்டின் மீது அவர்கள் பெரும் நம்பிக்கைக் கொண்டனர்.

நாசிகள் தீவிர தேசியத்தில் நம்பிக்கை வைத்தனர். விறுவிறுப்பான ஆக்கிரமிப்பு மிகு வெளிநாட்டுக்கொள்கையை அவர்கள் பின்பற்ற தீர்மானித்தனர். அவர்கள் ஜெர்மனியின் ஏகாதிபத்தியத்தை ஆதரித்தனர். நார்டிக் இனம் தான் (அவர்கள் இனம்) உயர்ந்தது என்று அவர்கள் பெருமைப்பட்டுக் கொண்டனர். யூதர்களையும் மார்க்ஸின் தொண்டர்களையும் அவர்கள் பெரிதும் வெறுத்தொதுக்கினர். பெருகிவந்த ஜெர்மானிய மக்கள் பிரச்சனையைச் சமாளிக்கப்பரந்த நிலப்பகுதியை ஹிட்லர் அவ்வப்பொழுது வலியுறுத்தினார். அவர் செயல், அடக்குமுறை, பயங்கரவாதம் ஆகியவற்றில் பெரும் நம்பிக்கை வைத்திருந்தார். அவர் அடிப்படை உரிமைகள் மற்றும் பாராளுமன்ற அமைப்புகளுக்கு எதிராக இருந்தார். சுருங்கக் கூறின் நாஸிகள் சர்வதிகாரத்தில் அதிக நம்பிக்கைக் கொண்டனர்.

### 11.3.3 ஹிட்லரின் நிர்வாகம்

1933 முதல் 1945 இல் இறக்கும் வரை ஹிட்லரே ஜெர்மனியின் நிர்வாகத்தில் முக்கிய நபராக விளங்கினார். அவரே ஜனாதிபதியாவும், பிரதம மந்திரியாவும் செயல்பட்டார். அவர் நிர்வாகத்தின் முதல் பாதி போருக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவும், இரண்டாம் பாதி போர் செய்யவும் செலவிடப்பட்டன.

(அ)உள்நாட்டுக்கொள்கை

ஹிட்லர் ஜெர்மனிக்கு ஒரு புதிய அந்தஸ்த்தை தந்தார். வெய்மார் அரசியல் சட்டத்தை ஒதுக்கி தள்ளினார். அவர் வலுவான, ஐக்கியப்படுத்தப்பட்ட அதிகாரங்கள் ஒரு முகப்படுத்தப்பட்ட அரசாங்கம் ஒன்றை நிறுவினார். அரசு ஏகாதிபத்திய ஒன்றாகவே இருந்தது. அவரது உள்நாட்டுக்கொள்கை அதிகாரம் படைத்ததாகவும் முழு சக்தி படைத்ததாகவும் திகழ்ந்தது.

(ஆ)பொருளியல் நிர்வாகம்

பொருளாதாரமும் நிதியும் அரசின் கட்டுப்பாட்டில் இருந்தன. தொழில் துறையை மேம்படுத்த அரசாங்கம் விறுவிறுப்பான வழிமுறைகளைப் பின்பற்றியது.

(,)அரசியல் கட்சிகள்

ஹிட்லர் புதிய தேர்தலுக்கு ஆணை பிறப்பித்தார். தேர்தலுக்கு முன்பே அவரது கட்சி (நாஸி)யினர் ஜெர்மன் பாராளுமன்றமான ரெய்ச்டாக்கிற்குத் தீவைத்தனர். ஆனால், தீவைப்புச் சம்பவத்திற்கு

கம்யூனிஸ்டுகளே (பொதுவுடைமை) காரணம் என்று ஹிட்லர் குற்றம் சாட்டினார். தேர்தலின் பொதுவுடைமை கட்சி பங்குகொள்ளா வண்ணம் தடை செய்தார். புதிய பாராளுமன்றம், ஹிட்லருக்கு அனைத்த அதிகாரங்களையும் வழங்க ஹிட்லர் சர்வதிகாரி ஆனார்.

(ஈ)வெய்மார் குடியரசின் முடிவு

ஹிட்லர் இயலச் செய்யும் சட்டம் ஒன்றை கொண்டு வந்தார். அதன் மூலம் வெய்மார் குடியரசின் அனைத்து அதிகாரங்களும் பறிக்கப்படடன. மாநிலச் சட்டமன்றங்கள் (டயட்ஸ்) அனைத்தம் கலைக்கப்பட்டன. மாநிலங்களில் நாசி அமைச்சரவைகள் அமைக்கப்பட்டன. ஜெர்மானிய மாநிலங்கள் இவ்வாறு தம் அதிகாரத்தை இழந்தன. வெய்மார் குடியரச கலைக்கப்பட்டது.

(உ)வேலை இல்லாத் திண்டாட்டம்

வேலை இல்லாப் பிரச்சனை தீர்க்கப்பட்டது. வேலையற்ற ஜெர்மானிய இளைஞர் அனைவர்க்கும் வேலைவாய்ப்பு வசதி ஏற்படுத்தப்பட்டது. இளைஞர்களுக்குத் தொழிலாளர் படையில் வேலைகள் தரப்பட்டன.

(ஊ)யூதர்களுக்கு எதிரான கொள்கை

ஹிட்லரின் நிர்வாகத்தின் பொழுது யூதர்கள் கொடும் துன்பங்களை அனுபவித்தனர். யூதர்கள் பலர் கொல்லப்பட்டனர். சிலர் நாடுகடத்தப்பட்டனர். யூதர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டன. அவர்களது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

(எ)ஹிட்லரும் கிறித்துவ சமயமும்

ஹிட்லரைக் கத்தோலிக்கர்களும், பிராட்டஸ்டெண்டுகளும் வன்மையாக எதிர்த்தனர். ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையைச் சேர்ந்த ஆயர்கள் பொதுவுடைமைக்கு எதிராக ஹிட்லர் மேற்கொண்ட நடவடிக்கைகளை விரும்பவில்லை. 1937இல் திருச்சபை அதன் நிதிநிலையைக் கட்டுப்படுத்தும் உரிமையை இழந்தது. ஐரோப்பிய நாடுகள் பல கடுமையாக எதிர்த்த போதிலும் ஹிட்லர் தொடர்ந்து கத்தோலிக்கர்களையும், பிராட்டஸ்டாண்டுகளையும் துன்புறுத்தினர். ஆனால் அவரது அம் முயற்சி தோல்வி அடைந்தது.

(ஏ)காவல்

ஹிட்லர் காவல்துறையை மிகுந்த எச்சரிக்கையுடன் சீர் செய்தார். அவரது ரகசியக் காவல்படை கெஸ்டபோ என்று அழைக்கப்பட்டது. ஹிட்லர் காவல்படையின் உதவியுடன் தன் எதிரிகளைக் கடுமையாகத் தண்டித்தார். நாட்டில் சுதந்திரம் என்ற பேச்சிற்கே இடமில்லாமல் போயிற்று. செய்தித்தாள்கள் கடுமையாகத்தணிக்கைச் செய்யப்பட்டன.

ஜெர்மானிய மக்கள் ஒருவரைப்பற்றி மற்றொருவர் உளவரிந்து செயல்படுமாறு எதிர்பார்க்கப்பட்டனர். பெற்றோர்களை உளவு பார்க்க பிள்ளைகள் எதிர்பார்க்கப்பட்டனர் என்று சொல்லப்படுகிறது.

(ஐ)கல்வி

நாசி அலுவலர்களின் கருத்துக்களைப் பள்ளிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் போதிக்குமாறு நாசி அரசாங்கம் பார்த்துக் கொள்ளப்பட்டது.

(ஒ)ஒலிபரப்பு

ஒலிபரப்பு நிகழ்ச்சிகள் நாசிக்கட்டிசயின் நலனைக் காக்கும் வகையில் இடம்பெற்றன.

(ஓ)வேளாண்மை

விவசாயத் துறையில் ஹிட்லர் சில முக்கியமான சீர்திருத்தங்களை மேற்கொண்டார். விவசாயிகள் எக்குவிக்கப்பட்டனர். விவசாய உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. விவசாயிகளுக்கு கடன் வழங்கப்பட்டது. 1933இல் ஒரு சட்டத்தின் மூலம் உணவுக் கட்டுப்பாட்டுக் கழகம் ஒன்று நிறுவப்பட்டது. அது உணவுப் பொருள் உற்பத்தியை ஒழுங்குபடுத்தியது. ஹிட்லர் தரிசு நிலங்களை வேளாண்மை நிலங்களாக மாற்றினார்.

(ஔ)தொழிற்சாலைகள்

தொழிற்சாலைகள் ஹிட்லரின் கவனத்தை ஈர்த்தன. ஹிட்லரின் தொழற்கொள்கை காரணமாகத் தொழிற்சாலைப் பொருட்களின் உற்பத்தி பெருமளவிற்கு அதிகரித்தது. ஜெர்மனி தன்னிறைவு பெற்ற நாடாக உருவாயிற்று ஆனால் ஹிட்லர் உழைக்கும் வர்க்கத்திற்கு எதிராகச் செயல்பட்டார். வேலை நிறுத்தங்கள் தடை செய்யப்பட்டன. தொழிற்சங்க நடவடிக்கைகள் சட்டத்திற்குப் புறம்பானவை என்று அறிவிக்கப்பட்டன. தொழிலாளர்கள் அநேகமாக அடிமைகளைப் போல நடத்தப்பட்டனர்.

### 11.3.4 இராணுவம்

ஹிட்லர் 1933ல் நடைபெற்ற ஆயுதக்குறைப்பு மாநாட்டிலிருந்து ஜெர்மனியை விலக்கிக் கொண்டார். அதிலிருந்து ஹிட்லர் மீண்டும் படைப்பெருக்கத்தில் அதிக ஆர்வம் காட்டினார். கட்டாய இராணுவ சேர்க்கையை 1935இல் நடைமுறைக்குக் கொண்டு வந்தார். விமானப்டை விரிவாக்கப்பட்டது. நீர்மூழ்கிக் கப்பலகளையும், போர்க்கப்பல்களையும் ஹிட்லர் அதிகரித்தார். பிரெஞ்சு, ஜெர்மனிய எல்லையில் கோட்டைகள் கட்டப்பட்டன.

### 11.3.5 வெளிநாட்டுக்கொள்கை

ஹிட்லரின் தீவிரவாத வெளிநாட்டுக் கொள்கை மிக மோசமான ஒன்றாக இருந்த போதிலும் 2ஆம் உலகப் போரில் பங்கு கொண்டதன் காரணமாக ஹிட்லர் வரலாற்றில் இடம் பெற்றார். அவரது தீவிர வெளிநாட்டுக் கொள்கை 2ஆம் உலகப் போருக்கு வழி வகுத்தது. ஹிட்லரின் எழுச்சி ஐரோப்பிய மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஏனெனில் ஹிட்லர் அவரது சுயசரிதையில் (மெயின் கேம்ப் எனது போராட்டம்) ஜெர்மானிய மக்கள் பெருக்கப் பிரச்சனையைத் தீர்க்க பல நிலப்பகுதிகளைத் தான் கைப்பற்றப் போவதாகக் குறிப்பிட்டிருந்தார்.

### 11.3.6 வெளிநாட்டுக் கொள்கையின் நோக்கங்கள்

- ☐ ஜெர்மானியர்களை இழிவுபடுத்திய வெர்சே உடன்பாட்டை ஹிட்லர் தகர்த்தெறியத் தீர்மானித்தார்.
- ☐ ஜெர்மானிய எல்லையை விரிவாக்கப் பல பிரரேசங்களைக் கைப்பற்ற விரும்பினார்
- ☐ ஜெர்மனிக்கு வெளியே பல குடியேற்றங்களை அமைத்து வெடித்துப் பரவிய
- ☐ ஜெர்மனியின் மக்கள் தொகை பிரச்சனையைத் தீர்க்க ஆசைப்பட்டார்.
- ☐ குடியேற்றங்கள் பலவற்றை நிறுவி அதன் மூலம் ஜெர்மனியை இங்கிலாந்திற்கு இணையாக உயர்த்த முற்பட்டார்.
- ☐ ஜெர்மன் இன மக்கள் வாழ்ந்த அனைத்த நிலப்பகுதிகளையும் ஜெர்மனியுடன் சேர்க்க விரும்பினர்.
- ☐ ஐரோப்பாவில் ஜெர்மனியை மேலான நாடாக உருவாக்கி அந்நாட்டின் புகழையும், சிறப்பையும் மீண்டும் நிலைநாட்டுவதே ஹிட்லரின் முக்கியமான நோக்கமாகும்.

இந்நோக்கங்கள் காரணமாக ஹிட்லர் ஏனைய நாடுகளின் விவகாரங்களில் தலையிட்டார். அவர் எப்பொழுதும் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்து கொண்டார். ஏனைய நாடுகளின் நம்பிக்கையைப் பெற்று, தன் நோக்கங்களை சாதிக்க ஹிட்லர் மற்ற நாடுகளுடன் நட்பாக பழகுவதைப் போலத் தன்னைக் காட்டிக் கொண்டார்.

(அ)ஹிட்லரும் ஆஸ்திரியாவும்

பிறப்பால் ஹிட்லர் ஒரு ஆஸ்திரியர் ஆவார். எனவே அவர் ஆஸ்திரிய விவகாரங்களில் பேரார்வம் கொண்டார். ஆஸ்திரியர்களும் ஜெர்மானிய இனத்தைச் சேர்ந்தவர்களே. ஹிட்லர் ஆஸ்திரியாவை ஜெர்மனியுடன்

இணைத்துக் கொள்ள ஆர்வம் கொண்டார். எனவே ஆஸ்திரியாவில் இருந்த நாசிக் கட்சியை அதிகாரத்தை கைப்பற்றுமாறு எக்கப்படுத்தினார். அவர்களுக்கு உதவும் வகையில் இரகசியமாக ஆயுதங்களை அனுப்பினார். ஆஸ்திரிய அரசாங்கம் கிளர்ச்சியை நசுக்க முயற்சி செய்தது. 1933இல் ஆஸ்திரிய அரசாங்கத்தால் நாசிக் கட்சி ஒடுக்கப்பட்டது. 1934இல் நாசிகள் மீண்டும் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

ஆஸ்திரியாவின் சான்சலர் டால்பஸ் என்பாரை உயிருக்கு ஆபத்தை உண்டாக்கும் வகையில் காயப்படுத்தினர். ஆஸ்திரிய மக்கள் நாசிகளின் கிளர்ச்சியை ஆதரிக்கவில்லை. கிளர்ச்சி தோல்வி அடைந்ததை அறிந்த ஹிட்லர் கிளர்ச்சியில் தனக்கு பங்கில்லை என்று அறிவித்தார். 1936இல் ஆஸ்திரியாவில் சாதகமான சூழ்நிலை உருவாக்கப்பட்டது. ஹிட்லர் ஆஸ்திரியாவோடு ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார். இரு நாடுகளுக்கும் இடையே உறவு சுமூகமாயிற்று. 1938ல் மீண்டும் ஆஸ்தியாவின் கலகம் ஏற்பட்டது. ஆஸ்திரியாவின் சான்சலர் செய்ஸ் இன்குவார்ட் ஆஸ்திரியாவைக் காப்பாற்றுமாறு ஹிட்லருக்கு அழைப்பு விட்டார். தரை, விமானபடைகளை ஆஸ்திரியாவிற்கு அனுப்பிய ஹிட்லர் வியன்னாவை அடைந்தார். 1938இல் ஆஸ்திரியாவை ஜெர்மனியுடன் இணைத்துக் கொண்டார்.

(ஆ) சார் பள்ளத்தாக்கு வாக்கெடுப்பு (1935)

முதல் உலகப்போரில் பிரான்ஸ்சிற்கு ஏற்பட்ட ந'்டத்தை ஈடுகட்டும் வகையில் சார் பள்ளத்தாக்கு வார்சே உடன்பாட்டின்படி பிரான்சிற்கு கொடுக்கப்பட்டது. 15 ஆண்டுகளுக்குப்பிறகு பொது வாக்கெடுப்பு நடத்த 1919 ஆம் ஆண்டு வார்சே உடன்பாட்டின்படி முடிவு செய்யப்பட்டு இருந்தது. எனவே ஜெர்மனி சார் பள்ளத்தாக்கை பெற விரும்பியது. 1935இல் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. 90 விழுக்காட்டிற்கு மேற்பட்ட மக்கள் தம் சார் பள்ளத்தாக்குப் பகுதியை ஜெர்மனியுடன் இணைக்க வாக்களித்தனர். 1935 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் வளமிகு சார் பகுதியை ஜெர்மனி பெற்றது.

(,) படைப்பெருக்கம்

ஹிட்லர் 1919 ஆம் ஆண்டு வார்சே உடன்பாட்டை மீறிச் செயல்படத் தீர்மானித்தார். வார்சே உடன்பாட்டிற்கு மாறாக கட்டாய இராணுவ சேர்க்கை மூலம் ஜெர்மனியின் படைப்பலத்தைப் பெருக்கினார்.

(ஈ) ஆங்கிலோ - ஜெர்மானிய நாவாய் ஒப்பந்தம்

1935இல் ஜெர்மனி இங்கிலாந்துடன் ஒரு கடற்படை ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது. ஜெர்மனி தனது கடற்படையைக் குறைத்துக் கொள்ள இணங்கியது. இங்கிலாந்தின் கடற்படை எண்ணிக்கையில் 35 விழுக்காடு அளவிற்குத் தன் நாட்டுக் கடற்படையை வைத்துக்கொள்ள சம்மதித்தது.

இந்த உடன்பாட்டின் மூலம் ஹிட்லர் ஜெர்மனியின் மீது பிரிட்டன் கொண்டிருந்த சந்தேகத்தைப் போக்கித் தன்னுடைய நோக்ககங்களை நிறைவேற்றிக் கொள்ள விரும்பினார். எப்படி இருந்தாலும் இந்த உடன்பாடு 1919 ஆம் ஆண்டு உடன்படிக்கைக்குப் புறம்பானதாகும். ஏனெனில் 1935 ஆம் ஆண்டு உடன்பாட்டின் படி ஹிட்லர் தனது கடற்படையின் வலிமையை அதிகரித்துக் கொண்டார்.

(உ) ரைன்லாந்தை இராணுவ மயமாக்குதல்

1919 ஆம் ஆண்டு உடன்படிக்கை ஜெர்மனியின் இராணுவ பலத்தை ஒடுக்கும் நோக்கில் ரைன் பகுதியில் ஜெர்மனி இராணுவ தளம் அமைப்பதை தடை செய்திருந்தது. அதன் மிக முக்கியமான நோக்கம் ஜெர்மனியின் ஆக்கிரமிப்பில் இருந்து பிரான்ஸ், பெல்ஜியம் ஆகிய நாடுகளைக் காப்பதேயாகும். 1936இல் ஹிட்லர் 1925 ஆம் ஆண்டு லொக்கார்னோ உடன்படிக்கையையும் மீறி (1925) ரைன்லாந்துப் பகுதியை மீண்டும இராணுவ மயமாக்கினார்.

1936இல் ஸ்பெயின் நாட்டில் உள்நாட்டுப் போர் வெடித்தது ஸ்பெயின் குடியரசு அரசாங்கத்தை ர‘யா ஆதரித்தது. அரசாங்கத்திற்கு எதிராக கலகத்தில் ஈடுபட்ட இராணுவத் தளபதி அபிராங்கோவை ஹிட்லரும் முசோலினியும் ஆதரித்தனர். ஜெர்மனியின் துருப்புகளின் உதவியுடன் குடியரசு அரசாங்கத்தை வீழ்த்தி ஸ்பெயினில் அபிராங்கோ தன் சர்வாதிகார ஆட்சியை நிலை நாட்டினார். ஸ்பெயின் நாட்டின் உள்நாட்டு போரின் பொழுது பிரான்சும் இங்கிலாந்தும் பின்பற்றிய நடுநிலைக் கொள்கை ஹிட்லரும் முசோலினியும் தம் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள உதவியது.

## 11.4 ரோம் பெர்லின் டோக்கியோ அச்சு ஒப்பந்தம்

1936இல் ர‘ய பொதுவுடைமை ஆட்சியை எதிர்த்து ஹிட்லர் ஜப்பானுடன் பொதுவுடைமை எதிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டார். 1937இல் அந்த ஒப்பந்தத்தில் இத்தாலியும் சேர்ந்தது. இவ்வாறு 1937இல் ரோம் (இத்தாலி) - பெர்லின் (ஜெர்மனி) - டோக்கியோ (ஜப்பான்) அணி உருவாயிற்று. இந்த உடன்பாடு உலகை இரண்டு அணிகளாகப் பிரித்து 1939இல் இரண்டாம் உலகப் போருக்கு வழிவகுத்தது.

(அ) மியூனிச் நெருக்கடி (1938)

1919 ஆம் ஆண்டு அமைதி உடன்படிக்கை செக்கோஸ்லோவேகியா நாட்டை உருவாக்கியது. அந்நாட்டில் சிறுபான்மை இனங்கள் பல இருந்தன. அவற்றுள் குறிப்பிடத்தக்க இனம் சுட்டன்லாந்து பகுதியில் வாழ்ந்த ஜெர்மானியர் இனமாகும். சுட்டன்லாந்து ஜெர்மானியர் செக்லோஸ்லோவேகியாவில் நல்ல முறையில் நடத்தப்படட போதிலும்

சுட்டன்லாந்தை ஜெர்மனியுடன் இணைக்க விருமபினார். ஹிட்லர் சுட்டன்லாந்து பிரச்சனையில் தலையிட்டார். அவர் செக்கோஸ்லோவேகியா முழுவதையும் ஜெர்மனியுடன் இணைக்க ஆசைப்பட்டார். சுட்டன்லாந்தில் வாழ்ந்த ஜொமானியர் ஹென்லேய்ன் என்பவர் தலைமையில் கிளர்ச்சி செய்தனர். அக்கிளர்ச்சியை ஹிட்லர் ஆதரித்தார். சுட்டன்லாந்தில் வாழ்ந்த ஜெர்மானிய இனமக்களுக்கு சுய ஆட்சி கோரினார் ஹிட்லர். 1939 செப்டம்பரில் பிரிட்டி' பிரதம மந்திரி ஹிட்லரைச் சந்தித்தார். அவரிடம் ஹிட்லர் சுட்டன்லாந்திற்கு அக்டோபர் 1 ஆம் தேதிக்குள் சுஹ ஆட்சி அளிக்கவில்லையேன்றால் செக்கோஸ்லோவேக்கியாவிற்கு எதிராக தான் போர் தொடுக்கப்போவதாக அறிவித்தார்.

ஒரு போரைத் தவிர்க்கும் நோக்கில் இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகள் மியூனிச் நகரில் சந்தித்தன. 1938 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் நாளில் அவை மியூனிச் உடன்படிக்கையை செய்து கொண்டன. அவ்வுடன்பாட்டின் மூலம் செக்கோஸ்லோவேக்கியா - ஜெர்மானியர் வாழ்ந்த சுட்டன்லாந்தையும் அதைச் சுற்றியுள்ள பகுதியையும் ஜெர்மனிக்கு தந்தது. அதன் மூலம் ஹிட்லர் 11,000 ச.மீ. பரப்பளவு நிலப்பகுதியையும் 36 இலட்சம் மக்களவையும் பெற்றார். மறுநாள் ஹிட்லர் தனது துருப்புக்கள் மூலம் சுட்டன்லாந்தைக் கைப்பற்றினார். அதிலும் அவர் திருப்தி அடையவில்லை. 1939 ஆம் ஆண்டு மார்ச் மாதம் செக்கோஸ்லோவேக்கியா அதிபர் எமில் ஹக்சாவை பெர்லினுக்கு அழைத்துச் செக்கோஸ்லோவேக்கியா நாடு முழுவதையும் ஒப்படைக்குமாறு கட்டாயப்படுத்தினார். அதன் மூலம் மியூனிச் உடன்படிக்கையின்படி செக்கோஸ்லோவேக்கியாவின் எல்லையைப் பாதுகாப்பதாகவும், மதிப்பதாகவும் தாம் அளித்திருந்த உறுதிமொழியை மீறி அந்நாட்டை தன் நாட்டுடன் இணைத்துக் கொண்டார்.

(ஆ) ஹிட்லரும் ர'யாவும்

1939ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஹிட்லர் ர'யாவுடன் ஆக்கிரமிப்பில்லா ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டதன் மூலம் தன் ராஜதந்திரத்தை வெளிப்படுத்தினார். அவ்வுடன்படிக்கையின் நோக்கம் தான் திட்டமிருந்த போலந்து படை எடுப்பின் பொழுது ர'யாவின் ஆதரவைப் பெறுவதே ஆகும். போலந்தின் மீத படையெடுத்தால் அந்நாட்டிற்கு ஆதரவாக பிரான்சும் இங்கிலாந்தும் தன்னை எதிர்க்கும் என்பதை ஹிட்லர் உணர்ந்திருந்தார்.

(,) ஹிட்லரும் போலந்தும்

அடுத்து ஹிட்லர் போலந்து பக்கம் திரும்பினார். போலீ' இடைப்பாதையை (போலந்து) டான்சிக் பகுதிகளிலிருந்து பால்டிக் கடலுக்குச் செல்லும் வழி) பெறும் நோக்கில் போலந்துடன் பேசினார். பிரிட்டி' பிரதம மந்திரி சேம்பர்லின் போலி' இடைப்பாதை விவகாரத்தில்

இங்கிலாந்து அலட்சியமாக இருக்காது என்று ஹிட்லரை எச்சரித்தார். 1939ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25ம் நாள் இங்கிலாந்து போலந்துடன் ஓர் உடன்படிக்கையை செய்து கொண்டது. மறுநாள் (01.09.1939) ஹிட்லர் போலந்தின் மீது படையெடுத்தார். இங்கிலாந்தும் பிரான்சும் அப்பிரச்சினையைத் தீர்க்க முயற்சித்து தோல்வியுற்றனர். எனவே, ஜெர்மனியை எதிர்த்து செப்டம்பர் 3 ஆம் நாள் அவை போர்ப்பிரகடனம் செய்தன. இவ்வாறு 2ஆம் உலகப்போர் வெடித்தது.

(ஈ) ஹிட்லரின் முடிவு

1939ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் நாள் 2 ஆம் உலகப் போர் தொடங்கியது. அதன் காரணமாக பெருமளவில் மக்கள் மாண்டனர். பெரும் பேரழிவு ஏற்பட்டது. 2 ஆம் உலகப் போர் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு வரை நீடித்தது. போரின் தொடக்கத்தில் ஹிட்லர் வெற்றி பெற்றாலும் இறுதியில் தோல்வியைத் தழுவ வேண்டியதாயிற்று. அவரது இறுதி வீழ்ச்சி உறுதி என்பதை அறிந்த ஹிட்லர் 1945ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் நாள் அவரது மனைவி அல்லது காதலி என்று கருதப்படும் ஈவாபிரான் என்பவருடன் தன் 57ஆம் வயதில் தற்கொலை செய்து கொண்டார். இவ்வாறு அவரது வாழ்க்கை முடிந்தது.

## 11.5 இத்தாலியில் பாசிசம்

முதல் உலகப் போரில் இத்தாலி நேச நாடுகளுக்கு ஆதரவாக பங்கு கொண்டது. போர் தொடங்கிய நேரத்தில் இத்தாலி நடுநிலை நாடாக இருந்தது. ஆனால் 1915இல் நேச நாடுகளுடன் ரகசியமாக லண்டன் உடன்படிக்கையில் கையொப்பமிட்ட இத்தாலி முதல் உலகப்போரில் இறங்கியது. போரின் இறுதியில் அமைதிப் பேச்சுவார்த்தை நடந்துபோது இத்தாலி ஏமாற்றம் அடைந்தது. ஏனெனில் நேச நாடுகள் லண்டனில் அளித்திருந்த உறுதிமொழிப்படி இத்தாலி தான் விரும்பிய நிலப்பகுதியைப் பெற இயலவில்லை. ஆகையினால் இத்தாலியர் அதிருப்தி அடைந்தனர். அதன் விளைவாக இத்தாலியில் குழப்பம் நிலவியது. அத்தருணத்தில் பாசிசக் கொள்கை வளர்ந்து கொண்டிருந்தது. அதை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட முசோலினி இத்தாலியில் பாசிச அரசாங்கத்தை நிறுவினார்.

### 11.5.1 இத்தாலியில் பாசிசம் தோன்றுவதற்கான காரணங்கள்

இத்தாலியில் பாசிசம் வளர்ந்ததற்குக் காரணங்கள் பல. அவற்றுள் சில.

(அ) பாரிஸ் அமைதி உடன்படிக்கை

முதல் உலகப்போர் 1914இல் ஆரம்பமான பொழுது இத்தாலி நடுநிலை வகித்தது. ஆனால் 1915 இல் இத்தாலி நேச நாடுகளுடன்

லண்டன் நகரில் ஓர் இரகசிய உடன்படிக்கை செய்து கொண்டு போரில் இறங்கியது. நேச நாடுகள் இத்தாலிக்கு டிரஸ்டி போன்ற சில பகுதிகளைத் தருவதாக உறுதியளித்து இருந்தன. ஆனால் இத்தாலிக்கு அப்பகுதிகள் வழங்கப்படவில்லை. எனவே, ஏமாற்றமடைந்த இத்தாலி நேசநாடுகளைப் பழிவாங்கத் தீர்மானித்தது. இத்தாலியர் மக்களாட்சியை வெறுத்தனர். பாசிசத்தில் நம்பிக்கையை வைத்தனர்.

(ஆ)மோசமான பொருளாதார நிலை

முதல் உலகப் போர் காரணமாக இத்தாலிக்குப் பெருமளவில் பொருட்சேதம் ஏற்பட்டது. அந்நாட்டின் பொருளாதார நிலை மோசமாயிற்று. வெளிநாட்டு வணிகம் பாதிக்கப்படாது. வெளிநாடடுச் சுற்றுலா பயணிகள் மூலம் கிடைத்த வருமானத்தை இழந்தது. இத்தாலியின் நாணயமான லிரா வீழ்ச்சியடைந்தது. தொழிலாளர்கள் மத்தியில் அமைதியற்ற சூழ்நிலை உருவாயிற்று. அரசாங்கத்தால் அப்பிரச்சனைகளைத் தீர்க்க இயலவில்லை. எனவே சூழ்நிலை பாசிசத்தின் எழுச்சிக்குக் காரணமாயிற்று.

(,)முஸோலினியின் பங்கு

முதல் உலகப் போருக்கு பின் இத்தாலியில் குழப்பம் நிலவியது. வீதிகளில் சண்டைகள் நடந்தன. கம்யூனிசக்கோட்பாடுகள் பரவிய காரணத்தால் இத்தாலிய அரசாங்கம் திறமையாகச் செயல்படவில்லை. சூழ்நிலையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட முஸோலினி பொதுவுடைமைக்கு எதிராக இத்தாலியத் தொழிற்சாலைகளைத்தான் காப்பாற்றுவதாக இத்தாலிய மக்களுக்கு உறுதியளித்தார். அதுவும் பாசிசத்தின் எழுச்சிக்கு சாதகமாக அமைந்தது.

(ஈ)ஏனைய காரணங்கள்

அனுன்ரீயோ எனும் இத்தாலிய தேசியவாதி பியூம் என்ற துறைமுக நகரத்தைக் கைப்பற்றினார். அதை இத்தாலிய பிரதம மந்திரி கியோலிட்டி எதிர்த்தார். பாரீஸ் அமைதி மாநாட்டில் ஏமாற்றமடைந்த இத்தாலிய தேசிய வாதிகள் பிரதம மந்திரியின் போக்கை வெறுத்தனர். இத்தாலியர் மக்களாட்சி மீது வைத்திருந்த நம்பிக்கையை இழந்தனர். வலுவான அரசாங்கம் ஒன்றை விரும்பினர். மேலும், பொதுவுடைமைக் கருத்துக்கு எதிராக இத்தாலியர்களுக்கு ஏற்பட்ட உணர்வும் பாஸிசத்தின் எழுச்சிக்கு ஒரு காரணமாயிற்று. அனைத்து சமூகததை சார்ந்த இத்தாலியரையும் கவர்ந்த பாஸிசக் கோட்பாடுகள் பாஸிசத்தின் வளர்ச்சிக்கு மிக முக்கிய காரணமாகும்.

### 11.5.2 பாஸிசத்தின் கொள்கைகள்

பாஸிசம் அரசை மிக உயர்ந்ததாகக் கருதியது. பாஸிசத்தின் கொள்கைப்படி நாடே உயர்ந்தது. நாடு தனி மனிதர்களைவிட மேலானது. நாடு ஓர் ஆன்மீக அமைப்பாகும். முஸோலினியின் கூற்றுப்படி நாமே அனைத்துமாகும். அரசு அனைத்து அதிகாரங்களையும் பெற்றிருந்தது. ஒவ்வொரு தனி மனிதனும் அரசினுடைய ஆதிக்கத்திற்குக் கட்டுப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. பாஸிசவாதிகள் போரைத் தேசியக் கொள்கையின் ஒரு கருவியாக கருதினர். முஸோலினியின் கருத்துப்படி போர் சமூக மாற்றங்களுக்குப் பொறுப்பானது ஆகும். பாஸிஸ்ட்கள் ஏகாதிபத்தியத்தில் பெரும் நம்பிக்கை வைத்தனர். நாட்டின் எல்லையை விரிவாக்குவதை முஸோலினி தன் முக்கியமான நோக்கமாகக் கொண்டார். பாஸிசம் ஜனநாயகத்திற்கு எதிரானது. பாராளுமன்ற நிறுவனங்களில் முஸோலினிக்கு நம்பிக்கை இல்லை.

### 11.5.3 முஸோலியின் உள்நாட்டுக் கொள்கை

நாட்டின் நிர்வாகத்தை முறைப்படுத்துவதில் முஸோலினி பெரும் பொழுதைச் செலவிட்டார். மக்களைத் தம் பக்கம் வெல்ல பல சீர்திருத்தங்களைச் செய்தார். ஆனால் அவரது நிர்வாகம், அவரது வெளிநாட்டுக் கொள்கை அளவிற்கு முக்கியமானது அல்ல.

### 11.5.4 முஸோலினியின் வரலாற்று சுருக்கம்

பெனிடோ முஸோலினி 1883 இல் இத்தாலியின் ரோமக்னாவில் பிராடெப்பா என்ற இடத்திற்கு அருகில் அபோரில் என்ற இடத்தில் பிறந்தார். அவரது தந்தை ஒரு கருமான், தாய் பள்ளி ஆசிரியை. முஸோலினியின் தந்தை ஒரு தீவிர சமதர்மவாதி. முஸோலினி தன் தாயின் விருப்பத்திற்கு ஏற்ப ஒரு பள்ளி ஆசிரியர் ஆனார். 1902இல் தன் ஆசிரியர் பணியை துறந்த முஸோலினி மேற்படிப்பிற்காகச் சுவிட்சர்லாந்து சென்றார். அவருக்கு அரசியலிலும், இதழியலிலும் அதிகாரம் இருந்தது. அவர் இதழியல் துறையில் சிறிது காலம் பணியாற்றினார். சமதர்ம கடசியின் தீவிர உறுப்பினர் ஆனார். அவந்தி என்ற சோஷீலிஸ்ட் நாளிதழைப் பதிப்பித்தார். முதல் உலகப்போரின பொழுது சமதர்மக் கடசியை விட்டு வெளியேறினார். ஆஸ்திரியாவுக்கு எதிராக போரை ஆதரித்தார். இராணுவத்தில் சேர்ந்த முஸோலினி காயமுற்றார். இராணுவப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட அவர் மிலான் நகரில் பத்திரிக்கைப் பதிப்பாளர் ஆனார்.

1919இல் அதிருப்தியுற்றிருந்த கிளர்ச்சியாளர்களை ஒன்று திரட்டி பாஸிசஸ்ட் கட்சியை நிறுவினார். அவரது அரசியல் கோட்பாட்டின் பெரும்பகுதியை இத்தாலியக் கவிஞர் அனுன்சியோ என்பாரிடமிருந்து கற்றார். மக்கள் உணர்ச்சிகளைத் தூண்டி ஒரு மாபெரும் மக்கள்

தலைவராக உருவானார். பழைய ரோமின் பெருமையைப் புகழ்ந்துரைத்தார். ரோமாபுரியின் பழைய பெருமையை மீண்டும் நிலைநாட்ட வேண்டுமென்றால் ஒழுங்கும் கட்டுப்பாடு மிகவும் அவசியம் என்பதை தன் தொண்டர்களுக்கு எடுத்துச் சொன்னார். முஸோலினி கருப்புச் சட்டையர் எனும் தொண்டர்படை ஒன்றை அமைத்தார். அப்படையின் முக்கிய நோக்கம் முஸோலினியின் எதிரிகளை அழிப்பதே ஆகும். 1922ல் ரோம் நகரம் நோக்கிப் படையெடுத்துச் சென்ற முஸோலினி, மன்னர் 3ஆம் விக்டர் இமானுவேலுவைத் தன்னைப் பிரதம மந்திரி ஆக்குமாறு வற்புறுத்தினார். இவ்வாறு 1922ல் பாஸிச ஆட்சி நிறுவப்பட்டது. ஹிடலரைப் போல முஸோலினியும் விறுவிறுப்பான வெளிநாட்டுக் கொள்கையை பின்பற்றினார். அது இத்தாலியை 2ஆம் உலகப்போருக்கு இழுத்துச் சென்றது. போரின் இறுதியில் முஸோலினி தொடர்ந்து தோல்வியுற்றார். 1945ல் அவர் கொல்லப்பட்டார்.

(அ) பாசிஸ்ட்களின் ஆட்சி

பாசிஸ்ட்கள் வன்முறையில் ஈடுபட்டனர். எதிரிகளைக் கொன்றனர். எதிரிகளின் சொத்துக்களை அழித்தனர். மக்கள் சுதந்திரத்திற்கு எதிராகச் செயல்பட்டனர். முஸோலினி இத்தாலியில் ஒரு சர்வாதிகாரியாக ஆட்சி செய்தார். பத்திரிக்கை, காவல்துறை, ராணுவம் ஆகிய அனைத்தும் பாசிஸ்ட்களின் கட்டுப்பாட்டில் இருந்தன. நிர்வாகம் முழுவதும் முஸோலினியின் கட்டுப்பாட்டில் இருந்தது. சமதர்ம வாதிகளும் நடுநிலைமை வகித்த ஏனையோரும் நாட்டு நிர்வாத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

1922இல் அனைத்து எதிர்ப்புகளையும் நசுக்கிய முஸோலினி பொது தேர்தல் ஒன்றை நடத்தினார். அத்தேர்தல் பெயரளவிலேயே நடத்தப்பட்டது. ஏனெனில் தேர்தலில் போட்டியிட 400 பாசிஸ்ட்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் சட்டமன்றத்திற்கு ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். பாசிஸ்ட்கள் முஸோலினியை டியூஸ் (தலைவர்) என்று அழைத்தனர். முஸோலினியையும் அவரது பாசிஸ்ட் கட்சியையும் புகழ்ந்துரைப்பது கட்டாயமாக்கப்பட்டது. செய்தித்தாள்கள், பாடநூல்கள், வானொலி ஆகியன முஸோலினியின் புகழ்பாடின. இத்தாலியர் அடிமைகளாக முஸோலினியின் ஆணைகளுக்கு பணிந்தனர்.

(ஆ)நிர்வாகம்

குறைகள் பல இருந்தாலும் முஸோலினியின் நிர்வாகம் திறமையாகச் செயல்பட்டது. பல துறைகளிலும் வளர்ச்சி ஏற்பட்டது. முஸோலினி சட்டத்தை இயற்றவும் செயல்படுத்தவும் அதிகாரம் பெற்றிருந்தார்.

(,)குடியேற்றங்கள்

முஸோலினி இத்தாலியை ஒரு ஏகாதிபத்திய நாடாக்க விரும்பினார். பல குடியேற்றங்களை நிறுவ அவர் முயற்சி செய்தார். அதில் அவர் ஓரளவு வெற்றியும் பெற்றார்.

(ஈ)பொருளாதார சீர்திருத்தங்கள்

முஸோலினியின் நிர்வாகத்தில் தொழில் துறை வளர்ச்சிப் பெற்றது. வணிகம் வளர்ச்சி அடைந்தது. பொருளாதார துறையில் தன்னிறைவு உள்ள நாடாக இத்தாலியை உருவாக்க முஸோலினி முயற்சி மேற்கொண்டார். வேளாண்மை வளர்ச்சியில் பெரும் ஆர்வம் காட்டினார். வேளாண்மை உற்பத்தியை பெருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சதுப்பு நிலங்கள் கூட விளைநிலங்களாக மாற்றப்பட்டன. இரசாயன உரங்களின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டது. விவசாயிகளுக்கு உதவுவதற்காக நிலவள வங்கி திறக்கப்பட்டது. இத்தாலி தொழில் துறையில் முன்னேறி உலக நாடுகள் மத்தியில் இடம் பிடித்தது. இத்தாலியின் தொழிற்சாலை உற்பத்திப் பொருட்கள் உலகச் சந்தைகளில் வரவேற்கப்பட்டன.

(உ)பொதுப்பணிகள்

பல பொதுப்பணிகள் செய்யப்பட்டன. சாலைகள் அமைக்கப்பட்டன. முஸோலினி பல கட்டிடங்களை உருவாக்குவதற்கு பல முயற்சிகளை மேற்கொண்டார்.

(ஊ)தொழிலாளர் நலன்

முஸோலினி எதியத்தை ஒழுங்குப்படுத்தவும் வேலை நேரத்தை நிர்ணயம் செய்யவும் சில முயற்சிகளை மேற்கொண்டார். தேசிய காப்பீட்டுத் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டது.

(எ)கல்வி

முஸோலினி கல்வி வளர்ச்சியில் கவனம் செலுத்தினார். அவரது முயற்சியின் விளைவாக இத்தாலியில் கல்லாதவர் எண்ணிக்கைக் குறைந்தது.

(ஏ)போக்குவரத்து

சாலைகள் பல அமைக்கப்பட்டன. இருப்புப் பாதைத் திட்டங்களும், நீர்மின் திட்டங்களும் முஸோலினியின் கவனத்தை ஈர்த்தன. மோட்டார் கார் உற்பத்தியிலும் நிறைவான முன்னேற்றம் காணப்பட்டது.

### 1.5.5 முஸோலினியும் போப்பும்

முஸோலினியின் சாதனைகளுள் ஒன்று அவர் போப்பாண்டவருடன் ஒத்துச் சென்றதே ஆகும். 1870 இத்தாலிய ஐக்கியம் நிறைவு பெற்றது

முதல் போப்பாண்டவர் வாடிகனில் கைதியைப் போல் வாழ்ந்து வந்தார். முஸோலினி போப்பின் ஆதரவை பெற விரும்பினார். எனவே 1929ல் போப்புடன் ஓர் உடன்படிக்கை செய்து வந்தார். அதற்கு லேட்டரன் (திருச்சபை தொடர்பான) உடன்படிக்கை என்று பெயர். அவ்வுடன்படிக்கையின்படி போப்பின் நிர்வாகம் ரோமாபுரியைத் தலைநகரமாகக் கொண்ட சவாய் வம்சத்தின் ஆட்சியில் இருந்த இத்தாலிய அரசாங்கத்தை அங்கீகரித்தது. அதற்கு கைமாறாக முஸோலினி வாடிகன் நகரில் (0.4 ச.கி.மீ.) போப்பாண்டவருடன் இறைமை அங்கீகரித்தார். வாடிகன் உலகின் மிகச் சிறிய நாடு என்பது குறிப்பிடத்தக்கது. அவ்வுடன்பாடு ரோமாபுரி விவகாரத்தை தீர்த்து முஸோலினிக்கு திருச்சபையின் ஆதரவை பெற்றுத் தந்தது.

(அ)நிர்வாகத்தில் குறைகள்

இத்தாலியில் கருத்துச் சுதந்திரம் இல்லை. பாராளுமன்ற ஆட்சி முறை மறைந்தது. பாசிஸ்ட் அரசாங்கம் சர்வாதிகாரப் போக்கில் செயல்பட்டது. எதிர்க்கட்சிகள் அனைத்தும் நசுக்கப்பட்டது. 1929இல் பாராளுமன்றத்தில் பாசிஸ்ட்கள் மட்டுமே இடம்பெற்றன. அதனால் நிர்வாகத்தில் எழல் மலிந்தது.

முஸோலினி வர்த்தகச் சங்கங்களையும் வேலை நிறுத்தங்களையும தடை செய்தார். அது உண்மையாயிலும் தொழிலாளர் வாழ்க்கை நிலையில் சற்று முன்னேற்றம் காணப்பட்டது. ஆனால் அதே நேரத்தில் அவர்கள் அடிமைகளாக வேலை வாங்கப்பட்டார்கள். பத்திரிக்கை மிகுந்த கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டு தணிக்கை செய்யப்பட்டது. மக்களின் அடிப்படை உரிமைகள் கடுமையாக கட்டுப்படுத்தப்பட்டன. பாசிஸ்ட் எதிர்ப்பாளர்கள், பாசிஸ்ட்களால் ஒரு ஜாடி விளக்கெண்ணையை குடிக்குமாறு கட்டாயப்படுத்தப்படும் அச்சத்துடனேயே வாழ வேண்டியிருந்ததாகச் சொல்லப்படுகிறது. முஸோலினியின் இரகசியக் காவல் படையான ஓவ்ரா மக்கள் மத்தியில் பயங்கரத்தை உருவாக்கியது.

**1.5.6 முஸோலினியின் வெளிநாட்டுக் கொள்கை**

முஸோலினி ஹிட்லரைப் போல விறுவிறுப்பான ஆக்கிரமிப்பு மிக்க வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றினார். அவர் வரலாற்றில் நினைவில் கொள்ளப்படுவதற்கு அவரது உள்நாட்டுக் கொள்கையோ, நிர்வாகமோ காரணம் அல்ல. ஆனால், ஆக்கிரமிப்பு மிக்க அவரது வெளிநாட்டுக் கொள்கையே அதற்கு காரணம் ஆகும்.

(அ)முஸோலினியின் வெளிநாட்டுக் கொள்கையின் நோக்கங்கள்

முஸோலினியின் வெளிநாட்டுக் கொள்கையின் மிக முக்கியமான நோக்கம் முதல் உலகப் போரின் இறுதியில் செய்துகொள்ளப்பட்ட வார்சே உடன்படிக்கையால் இத்தாலிக்கு ஏற்பட்ட அநீதியை தகர்த்தெறிவதே

ஆகும். முஸோலினி இத்தாலியின் உற்பத்திப் பொருட்களுக்கு வெளிச்சந்தை தேடுவதும் ஒரு முக்கிய நோக்கமாகக் கொண்டார். மேலும் பெருகிவந்த இத்தாலியின் மக்கள் பிரச்சனையைத் தீர்க்க இத்தாலிக்கு குடியேற்றங்கள் தேவைப்பட்டன. இத்தாலியை முஸோலினி ஒரு ஏகாதிபத்திய நாடாக்க ஆசைப்பட்டார். இத்தாலியின் பழைய பெருமையையும்,புகழையும் உயர்த்தி அதன் மூலம் ஐரோப்பிய நாடுகள் மத்தியில் இத்தாலியை முதன்மையான நாடாக்க விரும்பினார்.

இத்தாலியின் எல்லைகளை விரிவாக்கி மத்திய தரைக்கடல் பகுதியில் இந்நாட்டின் செல்வாக்கை வளர்க்க ஆசைப்பட்டார். முஸோலினி பேராசைக் கொண்டவர் அவர் ஒரு குடியேற்ற பேரரசை உருவாக்க விரும்பினார். ஏகாதிபத்திய கொள்கையை விரும்பினார். தன் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள ஒரே வழி போர் செய்வதே என்று வெளிப்படையாகக் குறிப்பிட்டார். சர்வதேச சங்கத்தின் விதிமுறைகளை மீறினார். பன்னாட்டுச் சட்டங்களை அவர் ஒரு போதும் மதிக்கவில்லை. அவர் ஏனைய நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டார். அவரது வெளிநாட்டுக் கொள்கையை இத்தாலியை இரண்டாம் உலகப் போருக்கு இட்டுச் சென்றது. முஸோலினி 1939ஆம் ஆண்டில் 2ஆம் உலகப் போர் தோன்றியதற்கு ஒரு முக்கியமான காரணம் ஆவார்.

(ஆ)கொர்பூ நிகழ்ச்சி

முஸோலினி 1922ல் அதிகாரத்தைக் கைப்பற்றினார். உள்நாட்டு நிர்வாகத்தை பாசிசமயம் ஆக்கினார். 1923 முதல் ஒரு விறுவிறுப்பான வெளிநாட்டுக்கொள்கையைப் பின்பற்றினார். 1923இல் இத்தாலிக்கும் கிரீஸ்க்கும் இடைப்பட்ட எல்லைக் கோட்டை நிர்ணயம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த இத்தாலியத் தளபதி ஒருவர் கிரேக்கத் தீவிரவாதிகளால் கொலை செய்யப்பட்டார். கோபமுற்ற முஸோலினி கிரீஸ்க்கு சொந்தமான கொர்பூ தீவைக் கைப்பற்றினார். அவ்விவகாரத்தில் சர்வதேச சங்கம் தலையீட்டு கொர்பூத் தீவை கிரீஸ்க்கு பெற்று தந்தது. 1923 ஆம் ஆண்டு லாசன்னே உடன்பாட்டின் படி டாடகேனீஸ் தீவை முஸோலினி மீண்டும் பெற்றார்.

(,) அபியூம் ஆக்கிரமிப்பு (1924)

1924ல் முஸோலினி யூகோஸ்லோவியாவுடன் ரோம் உடன்படிக்கையை செய்து கொண்டார். உடன்பாட்டின் மூலம் அபியூமை இத்தாலியுடன் இணைத்துக் கொண்டார். அபியூமை இத்தாலியுடன் இணைத்ததை அடுத்து இத்தாலியர் பெறும் திருப்தி அடைந்தனர்.

(ஈ) அல்பேனியாவின் இணைப்பு

1926இல் முஸோலினி அல்பேனியாவுடன் டிரனா உடன்படிக்கை செய்து கொண்டார். அதன் மூலம் அல்பேனியாவில் இத்தாலிக்கு பல

உரிமைகள் அளிக்கப்பட்டன. அல்பேனியா இத்தாலியை சார்ந்திருக்க வேண்டியதாயிற்று. 1939இல் அல்பேனியா இத்தாலியுடன் இணைக்கப்பட்டது. அந்நாட்டு ஆட்சியாளர் சோகு அந்நாட்டை விட்டு விரட்டப்பட்டார்.

(உ) டேன்ஜியர்ஸ் (1928)

1928இல் கிரேட் பிரிட்டன், பிரான்சு, ஸ்பெயின் ஆகிய நாடுகள் ஆப்பிரிக்கக் கண்டத்தின் மொராக்காவின் மேற்குக்கரையைச் சேர்ந்த சுதந்திர நகரமான டேன்ஜியர்ஸின் பன்னாட்டு அரசாங்கத்தில் பங்கு கொள்ள இத்தாலியை அழைத்தனர்.

(ஊ) லண்டன் மாநாடு (1930)

1930இல் லண்டனில் கூடிய கடற்படைத் தொடர்பான மாநாட்டில் இத்தாலி பங்கு கொண்டது. பிரான்சுக்கு இணையாக கடற்படையை வைத்துக் கொள்ளும் உரிமையை பெறுவதில் முஸோலினி வெற்றி பெற்றார்.

(எ) ஸ்ட்ரெஸ்ஸா முன்னனி (1935)

1935இல் வார்சே உடன்படிக்கையை மீறி ஹிட்லர் ஜெர்மனியில் கட்டாய இராணுவச் சேர்க்கைக்கு ஆணையிட்டார். அதை பிரான்ஸ், இங்கிலாந்து, இத்தாலி ஆகிய நாடுகள் எதிர்த்தனர். அதை ஸ்ட்ரெஸ்ஸாவில் கூடி ஜெர்மனிப்புயம் தன்னிச்சையாக வார்சே உடன்பாட்டை மீறிய ஏனைய நாடுகளுக்கும் கண்டனம் தெரிவித்தன.

(ஏ)இங்கிலாந்துக்கும் ஜெர்மனிக்கும் இடையேயான ஒப்பந்தம் (1935)

1935 ஜுனில் ஜெர்மனியும் இங்கிலாந்தும் செய்து கொண்ட கடற்படை ஒப்பந்தம் முஸோலினிக்கு அதிர்ச்சியளித்தது. எனவே முஸோலினி பிரான்சு, இங்கிலாந்து ஆகிய நாடுகளுடன் கொண்டிருந்த நட்பை உதறி ஜெர்மனி, ஹங்கேரி, ஆகிய நாடுகளுடன் அணிசேரத் தீர்மானித்தார்.

(உ)அபிசீனியா வெற்றி (1936)

முஸோலினியின் அபிசீனியா (எத்தியோபியா) வெற்றி இத்தாலி அல்லது ஐரோப்பியா வரலாற்றில் மட்டுமின்றி உலக வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். ஏனெனில் அது 2ஆம் உலகப் போருக்கு ஒரு முக்கியமான காரணமாக கருதப்படுகிறது. முஸோலினியின் அபிசீனியா படையெடுப்பிற்கு காரணங்கள் பல சொல்லப்படுகின்றன. 1896ல் அடோவா என்ற இடத்தில் அபிசீனியாவால் தோற்கடிக்கப்பட்ட இத்தாலியர் பழிதீர்த்துக்கொள்ள விரும்பினர். மேலும் அபிசீனியாவின் வளம் இத்தாலியை கவர்ந்தது. இத்தாலியில் பெருகி வந்த மக்கள்

பிரச்சனைக்கு அபிசீனியா தீர்வு தரும் என்று இத்தாலியர் எண்ணினர். ஐரோப்பாவின் அன்றைய சூழ்நிலை முஸோலினிக்கு சாதகமாக இருந்தது.

பேராசைக் கொண்ட முஸோலினி குடியேற்ற பேரரசு ஒன்றை நிறுவ விரும்பினார். முன்பே இத்தாலி ஆப்பிரிக்க கண்டத்தில் எரித்திரேயா சோமாலிலாந்தின் ஒரு பகுதி ஆகியவற்றை பெற்றிருந்தது. அபிசீனியா அவ்விரு நாடுகளுக்கும் இடைப்பட்ட பகுதி என்பது குறிப்பிடத்தக்கதாகும். 1934இல் முஸோலினி அபிசீனியாவை தாக்க தொடங்கினார். வால்வல் என்ற இடத்தில் 20 இத்தாலிய போர் வீரர்கள் கொல்லப்பட்டனர். அதற்கு முஸோலினி ந‍்ட ஈடு கேட்டார். அபிசீனியா அந்த விவகாரத்தை பன்னாட்டு கழகத்திடம் எடுத்துச் சென்றது. வால்வல் நிகழ்ச்சிக்கு இத்தாலியோ, அபிசீனியாவோ காரணம் இல்லை என்று தீர்மானிக்கப்பட்டது.

ஐக்கிய அமெரிக்கா போன்ற பெரும் நாடுகள் அவ்விவகாரத்தில் தலையிடவிரும்ப வில்லை. எனவே முஸோலினி மேலும் தைரியமானார். வால்வல் விவகாரத்தை பன்னாட்டு கழகம் விவாதித்துக் கொண்டிருந்த நேரத்தில் முஸோலினியின் படைகள் 1936ல் அபிசீனியாவைத் தாக்கி தலைநகர் அடிஸ்அபாபாவைக் கைப்பற்றின. அபிசீனியா ஆட்சியாளர் நாட்டைவிட்டு ஓட இத்தாலியின் மன்னர் 3 ஆம் விக்டர் இமானுவேல் அபிசீனியாவின் பேரரசராக பிரகடனம் செய்யப்பட்டார். இத்தாலியின் அபிசீனியா வெற்றி பன்னாட்டுக் கழகத்தின் விதிமுறைக்கு புறம்பானதாகும்.

(ஊ)முஸோலினியும் ஆஸ்திரியாவும்

முஸோலினி ஜெர்மனியுடன் ஆஸ்திரியா இணைக்கப்டும் கருத்தை ஆரம்பத்தில் எதிர்த்தார். 1934இல் ஜெர்மன் நாசிகள் ஆஸ்திரிய சான்சலர் டால்பஸ் என்பவரைத் தாக்கிக் கொன்றனர். முஸோலினி ஆஸ்திரியாவிற்கு உதவ தீர்மானித்தர். ஜெர்மனிய ஆஸ்திரிய இணைப்பு தவிர்க்கப்பட்டது. ஆனால் இத்தாலியின் அபிசீனிய வெற்றி ஹிட்லர் ஆதரித்ததை அறிந்த முஸோலினி 1938ல் ஜெர்மனி ஆஸ்திரியாவை தன்னுடன் இணைத்துக் கொள்வதை அங்கீகரித்தார்.

(எ)முஸோலினியும் பிரான்சும்

டான்யூப் நதிப்பகுதியில் பிரான்சின் அரசியல் செல்வாக்கு வளர்ந்ததை முஸோலினி எதிர்த்தார். இந்த விவகாரத்தில் பிரான்சுக்கு எதிராக ஜெர்மனியுடன் இத்தாலி சேர்ந்து கொண்டது. 1934இல் ஹிட்லர் வெனிஸ் நகரத்தில் முஸோலினியை சந்தித்தார். 1935ல் பிரான்சும் இத்தாலியும் ரோம் உடன்பாட்டை செய்து கொண்டனர். இரு நாடுகளுக்கும் ஆஸ்திரிய சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் கலந்து ஆலோசிப்பது என்று தீர்மானித்தன. பிரான்சு டோமொராத் மீதான இத்தாலியின் மேலாண்மையை அங்கீகரித்தது. பிரான்சு எத்தியோப்பியாவில் இத்தாலி சுதந்திரமாக செயல்பட சம்மதித்தது.

பிரான்சு இத்தாலிக்கு எதிரான பொருளாதார தடையை ஆதரித்தால் இரண்டு நாடுகளுக்கும் இடையேயான உறவு சீர்கெட்டது.

(ஏ)முஸோலினியும் கிரேட் பிரிட்டனும்

முஸோலினி கிரேட் பிரிட்டன் விசயத்தில் மிகவும் கவனமாகவே நடந்து கொண்டார். அவர் ஜெர்மனி கிரேட் பிரிட்டன் ஆகிய நாடுகளை ஒன்றை தன் கூட்டாளியாக தீர்மானிக்க வேண்டியிருந்தது. ஸ்ட்ரெஸ்ஸா மாநாட்டில் ஜெர்மனிக்கு எதிராக பிரான்சு, பிரிட்டன் ஆகிய நாடுகளுடன் சேர்ந்தார். எப்படியிருந்தாலும் அந்நாடுகளுக்குகிடைய உறவு திருப்தியாக இல்லை. 1937 இத்தாலியும் பிரிட்டனும் மத்திய தரைக்கடல் பகுதியில் நிலவிய அரசியல் சூழ்நிலையை காக்க தீர்மானித்தது. 1938 இத்தாலியும் பிரிட்டனும் மேலும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டன. 1939இல் இரண்டு நாடுகளுக்கு இடையே உறவு மோசமாகிவிட்டது.

(ஐ)முஸோலினியும் ஸ்பெயினும்

1936ல் ஸ்பெயினில் உள்நாட்டுப் போர் நடந்தது. குடியரசு அரசாங்கத்திற்கு எதிராக தளபதி பிராங்கோ தலைமையில் கிளர்ச்சி ஏற்பட்டது. முஸோலினி பிராங்கோவிற்கு ஆதரவாக தன் பாசிஸ்ட் ஆதரவாளர்களை ஸ்பெயினுக்கு அனுப்பினார். உள்நாட்டுப் போரில் வெற்றிப் பெற்ற பிராங்கோ பெரிய அரசாங்கம் ஒன்றை அமைத்தார். அந்த அரசாங்கத்தை முஸோலினி அங்கீகரித்தார்.

(ஒ)மியூனிச் நெருக்கடி (1938)

1938ஆம் ஆண்டு மியூனிச் ஒப்பந்தம் முஸோலினிக்கு ஒரு பெரும் வெற்றியாக கருதப்படுகிறது. அவ்வொப்பந்தத்தின்படி செக்கோஸ்லோவாகிய ஜெர்மனி பல ஆதாயங்களை அடைந்தது. இத்தாலி ஜெர்மனிக்கு உதவியாக இருந்தது.

(ஓ)ரோம் - பெர்லின் அச்சு ஒப்பந்தம் (இத்தாலியும் - ஜெர்மனியும்)

இத்தாலி ஜெர்மனியுடன் சுமூகமான நிதானமான உறவைக் கொண்டிருந்தது. ஜெர்மனி இத்தாலியின் ஆப்பிரிக்கப் பேரரசை அங்கீகரித்தது. 1936ல் முஸோலினியின் மருமகனும் இத்தாலியின் வெளியுறவு அமைச்சருமான கவுண்ட்சியானோ ஜெர்மனியில் ஹிட்லரை சந்தித்தார். 1937ல் ஜெர்மனிய நாசிகள் இத்தாலிக்கு விஜயம் செய்தனர். முஸோலினி ஜெர்மனிக்கு சென்றார். 1938ல் ஹிட்லர் இத்தாலிக்கு விஜயம் செய்தார். 1936ல் ஜெர்மனி ஜப்பானுடன் கம்யூனிஸ்ட் எதிர் ஒப்பந்தம் ஒன்றை செய்திருந்தது. 1937ல் அதில் இத்தாலியும் சேர்ந்தது. இவ்வாறு ரோம் - பெர்லின் - டோக்கியோ அச்சு ஒப்பந்தம் உருவாயிற்று.

(ஐ)முஸோலினியும் போலந்தும்

இத்தாலியின் வெளியுறவு அமைச்சர் சியானோ போலந்து விவகாரத்தில் ஜெர்மனியின் அணுகுமுறையை விரும்பவில்லை. 1939ல் 2ஆம் உலகப் போர் ஆரம்பமான நேரத்தில் இத்தாலி நடுநிலை வகித்தது. ஆனால் பிறகு நேச நாடுகள் களைப்படைந்த நேரத்தில் ஜெர்மனிக்கு ஆதரவாக அவற்றை தாக்க தீர்மானித்தது.

11.5.7 ,ரண்டாம் உலகப்போரும் முஸோலினியின் வீழ்ச்சியும்

1939ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் நாள் போலந்தை ஹிட்லர் தாக்கினார். போர் தொடங்கிய பொழுது முஸோலினி நடுநிலை வகித்தார். போரின் ஆரம்பக் கட்டத்தில் ஜெர்மனி வெற்றிப் பெற்றது. பிரான்சு, பிரிட்டன், ஆகிய நேச நாடுகள் சோர்வுற்றன. அத்தருணத்தில் 1940 முஸோலினி போரில் இறங்கத் தீர்மானித்தார். பிரான்சு, இங்கிலாந்து, கிரீஸ், எகிப்து, சூடான், கென்யா போன்ற நாடுகளைத் தாக்கினார். 1942இல் முஸோலினி ர்'யா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு எதிராக போர் அறிவித்தார். 1943ஆம் ஆண்டு போரில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது நேச நாடுகள் இத்தாலியை தாக்கின. இத்தாலியை நேச நாடுகள் வெல்லும் சூழ்நிலை தோன்றியது.

சூழ்நிலை அவ்வாறு இருந்த நேரத்தில் பாசிஸ்ட் கட்சியின் உயர்மட்டக் குழு இத்தாலியின் மன்னர் 3ஆம் விக்டர் இமானுவேலுவிடம் தன் அதிகாரத்தை ஒப்படைக்குமாறு முஸோலினியை வற்புறுத்தியது. முஸோலினி மன்னரை நோக்கிச் சென்ற நேரத்தில் கைது செய்யப்பட்ட சிறையில் அடைக்கப்பட்டார். ஆனால் ஜெர்மனிய போர் வீரர் அவர் தப்பிக்க உதவி செய்து ஜெர்மனிக்கு அழைத்துச் சென்றார். இத்தாலியின் வடபகுதியில் முஸோலினியின் தலைமையில் புதிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டது. சோலோ நகரை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்ட அரசாங்கம் ஹிட்லரின் கைப்பாவையாக இருந்தது. 1945ல் நேசநாட்டுப்படைகள் இத்தாலிய ஜெர்மனியப் படைகளை வட இத்தாலியாவில் தோற்கடித்தன. இத்தாலி சரணடையத் தீர்மானித்தது. முஸோலினி ஒரு ஜெர்மன் போர் வீரரைப் போல மாறுவேடத்தில் தப்பிக்க முயற்சித்தார். ஆனால் அவர் மீண்டும் கைது செய்யப்பட்டார். கொதிப்படைந்த இத்தாலியர்கள் முஸ்ஸோலினியைப் பிடித்து அவரது மனைவி கிளரட்டா பட்டாட்ச்சியுடன் டாங்கோ என்ற இடத்தில் 1945ஆம் ஆண்டு ஏப்ரல் 28ஆம் நாள் சுட்டுக்கொண்டனர். பிறகு அவர்களது உடல்கள் மிலான் நகருக்கு கொண்டு வரப்பட்டு தலைகீழாக தொங்கவிடப்பட்டன. இறுதியில் முஸாகோ என்ற இடத்தில் முஸோலினியின் உடல் அடக்கம் செய்யப்பட்டது. இத்தாலி நிபந்தனையின்றி சரணடைந்தது. பாசிஸம் மறைந்தது. முடியாட்சி

அகற்றப்பட்டது. 1946இல் இத்தாலியில் குடியரசு அரசாங்கம் ஒன்று நிறுவப்பட்டது.

உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்

1.டிரனா என்பதன் பொருள் என்ன?

2.மியூனிச் என்றால் என்ன?

## 10.7 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

1926இல் முஸோலினி அல்பேனியாவுடன் டிரனா உடன்படிக்கை செய்து கொண்டார். அதன் மூலம் அல்பேனியாவில் இத்தாலிக்கு பல உரிமைகள் அளிக்கப்பட்டன. அல்பேனியா இத்தாலியை சார்ந்திருக்க வேண்டியதாயிற்று. 1939இல் அல்பேனியா இத்தாலியுடன் இணைக்கப்பட்டது. அந்நாட்டு ஆட்சியாளர் சோகு அந்நாட்டை விட்டு விரட்டப்பட்டார்.

ஒரு போரைத் தவிர்க்கும் நோக்கில் இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகள் மியூனிச் நகரில் சந்தித்தன. 1938 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் நாளில் அவை மியூனிச் உடன்படிக்கையை செய்து கொண்டன. அவ்வுடன்பாட்டின் மூலம் செக்கோஸ்லோவேக்கியா - ஜெர்மானியர் வாழ்ந்த சுட்டன்லாந்தையும் அதைச் சுற்றியுள்ள பகுதியையும் ஜெர்மனிக்கு தந்தது.

## 11.8 சுருக்கவுரை

பெனிடோ முஸோலினி 1883 இல் இத்தாலியின் ரோமக்னாவில் பிராடெப்பா என்ற இடத்திற்கு அருகில் அபோரில் என்ற இடத்தில் பிறந்தார். அவரது தந்தை ஒரு கருமான், தாய் பள்ளி ஆசிரியை.

முஸோலினியின் தந்தை ஒரு தீவிர சமதர்மவாதி. முஸோலினி தன் தாயின் விருப்பத்திற்கு ஏற்ப ஒரு பள்ளி ஆசிரியர் ஆனார். 1902இல் தன் ஆசிரியர் பணியை துறந்த முஸோலினி மேற்படிப்பிற்காகச் சுவிட்சர்லாந்து சென்றார். அவருக்கு அரசியலிலும், இதழியலிலும் அதிகாரம் இருந்தது.

முஸோலினி ஹிட்லரைப் போல விறுவிறுப்பான ஆக்கிரமிப்பு மிக்க வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றினார். அவர் வரலாற்றில் நினைவில் கொள்ளப்படுவதற்கு அவரது உள்நாட்டுக் கொள்கையோ, நிர்வாகமோ காரணம் அல்ல. ஆனால், ஆக்கிரமிப்பு மிக்க அவரது வெளிநாட்டுக் கொள்கையே அதற்கு காரணம் ஆகும்.

## 11.9 முக்கிய வார்த்தைகள்

சார் பள்ளத்தாக்கு வாக்கெடுப்பு (1935), ஆங்கிலோ - ஜெர்மானிய நாவாய் ஒப்பந்தம், ரோம் பெர்லின் டோக்கியோ அச்சு ஒப்பந்தம், மியூனிச் நெருக்கடி (1938), பாரிஸ் அமைதி உடன்படிக்கை

## 11.10 தன்மதிப்பீட்டு வினாக்கள்

சுருக்கமான கேள்விப் பதில்கள்

3. சார் பள்ளத்தாக்கு வாக்கெடுப்பு பற்றி விளக்குக?

4. ரோம் பெர்லின் டோக்கியோ அச்சு ஒப்பந்தம் பற்றி குறிப்பு வரைக?

விரிவான கேள்விப் பதில்கள்

7. முஸோலினியின் சாதனைகளைப் பற்றிக் கட்டுரை வரைக?

8. இத்தாலியில் பாசிசம் பற்றி மதிப்பிடுக?

## 11.11 மேலும் படிக்க


- C.J.H. Hayeset.(1916). History of Europe. New York: Macmillan Company
- C.D.M. Ketelbey. (1994). A History of Modern Times from 1789. Oxford: Oxford University Press
- V.D.Mahajan. (1975). History of Modern Europe Since 1789. New Delhi: S.Chand&Co(Pvt LTD)

# அலகு 12 இரண்டாம் உலகப் போர் (1939 - 1945)

**கட்டமைப்பு**

12.0 முன்னுரை

12.1 நோக்கங்கள்

12.2 இரண்டாம் உலகப்போரிற்கான தன்மைகள்

12.3 அரசியல் கோட்பாடுகள்

12.4 வார்சே உடன்படிக்கை

12.5 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

12.7 சுருக்கவுரை

12.8 முக்கிய வார்த்தைகள்

12.9 தன்மதிப்பீட்டு வினாக்கள்

12.10 மேலும் படிக்க

## 12.0 அறிமுகம்

2ஆம் உலகப்போர் உலக வரலாற்றில் நடைபெற்ற சில முக்கியமான நிகழ்ச்சிகளுள் ஒன்றாக கருதப்படுகிறது. முதல் உலகப்போர் உட்பட ஏனைய எந்தப் போர்களையும் விட 2ஆம் உலகப்போர் பெரும் அழிவை ஏற்படுத்தியது. சிரில் என்பவர் கருத்துப்படி 2ஆம் உலகப்போர் வழிவாங்கம் நோக்கில் ஜெர்மனியால் தொடங்கப்பட்ட ஒரு போராகும். 1939இல் வெடித்த 2ஆம் உலகப்போருக்கு காரணங்கள் பல இருந்தன. அவற்றுள் முக்கியமான சில.

## 12.1 நோக்கங்கள்

இந்த அலகை படித்து முடித்த பின்பு உங்களால்

- ☐ இரண்டாம் உலகப்போரின் தன்மைகளை அறிய இயலும்
- ☐ நாடுகளின் தேசப் பற்றையும் சாந்தப் படுத்தும் கொள்கையைப்பற்றி அறிய இயலும்
- ☐ ஜெர்மனி சவால்களுக்கான காரணங்களை அறிய இயலும்
- ☐ வெர்செயில்ஸ் பற்றிய விளக்கங்கள் பற்றி அறிய இயலும்

## 12.2 இரண்டாம் உலகப்போரிற்கான தன்மைகள்

(அ)பெரிய நாடுகளின் அணுகுமுறை

பிரிட்டன், பிரான்சு போன்ற நாடுகள் முதல் உலகப்போரின் வெற்றிப்போதையால் ஆணவத்துடன் நடந்து கொண்டன. அவை ஜெர்மனியிடமிருந்து பல குடியேற்றங்களைக் கைப்பற்றின. ஜெர்மனியிடமிருந்து போர் ந‌ஷ்ட ஈடாக பெருந்தொகையைப் பெற்றன. 1922இல் ரூர் பள்ளத்தாக்கை பிரான்சு ஆக்கிரமித்தது. தாம் அளித்திருந்த உறுதியின்படி அவை தம் ஆயுதங்களைக் குறைத்துக் கொள்ளவில்லை. மேலும் அந்நாடுகள் சொந்த நலனுக்குப் பயன்படுத்தின.

(ஆ)சாந்தப்படுத்தும் கொள்கை

2ஆம் உலகப்போருக்கு மேற்கத்திய நாடுகள் பின்பற்றிய நாந்தப்படுத்தும் கொள்கையும் ஒரு காரணமாகும். முதல் உலகப்போர் முடிந்த பிறகும் ஜெர்மனியை நினைத்து பிரான்சு பீதி அடைந்தது. எனவே, ஜெர்மனிடிக்கு எதிராக பிரான்சு கூட்டுப்பாதுகாப்பிற்காக ஐரோப்பிய நாடுகளை தேடியது. ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளின் ஆக்கிரமிப்பை ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்த அது தவறியது. அதுபோலவே இங்கிலாந்து சாந்தப்படுத்தும் கொள்கையை பின்பற்றியது. இங்கிலாந்தும் மத்திய நாடுகளின் ஆக்கிரமிப்பை முளைக்கும் போதே கிள்ளி எறியத் தவறியது. இங்கிலாந்தும் பிரான்சும் பொதுவுடைமை பரவுவதைத் தடுக்க ஜெர்மனியும் இத்தாலியும் தடைகளாக இருக்கும் என தப்புக்கணக்குப் போட்டன. ஆனால் ஜெர்மனியும் இத்தாலியும் அன்றைய அரசியல் நிலையை தமக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொண்டு சிறிய நாடுகளின் பல நிலப்பகதிகளை கைப்பற்றின.

(,)பாசிஸத்தின் எழுச்சி

ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகள் பாசிஸ சக்திகளின் பிடியில் சிக்குண்டன. இத்தாலியின் பாசிஸ்ட்கள் முஸோலினியின் தலைமையில் முதல் உலகப்போரின் இறுதியில் தம்மை ஏமாற்றி இழிவுபடுத்திய பிரான்சு, இங்கிலாந்து ஆகிய நாடுகளைப் பழிவாங்கத் தீர்மானித்தனர். அவர்களுக்கு உரிய பங்கு குடியேற்ற பகுதிகளில் கிடைக்காமையால் அவர்கள் ஏமாற்றம் அடைந்தனர். ஜெர்மனியாகள் 1919இல் அவர்களுக்கு ஏற்பட்ட அவமானத்தை மறக்கவில்லை. ஜப்பான் தென்கிழக்கு ஆசியா தூரக்கிழக்கு ஆசியா ஆகியவற்றை தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர விருமபியது. ஜெர்மனியும் இத்தாலியும் தம் மக்கள் தொகை பெருக்கத்தால் ஏற்பட்ட பிரச்சினையை தீர்க்க வேறு வசிப்பிடங்களை பெற விரும்பின. பாசிஸ்ட்கள் தம் படைகளை பெருக்கினர். அவர்களது ஆக்கிரமிப்பு நடவடிக்கை 2ஆம்

உலகப்போருக்கு முக்கியமான காரணமாயிற்று 1937இல் ரோம், பெர்லின், டோக்கியா அணி உருவாயிற்று.

(ஈ)மக்களாட்சி நாடுகளின் இயலாமை

மக்களாட்சி நாடுகளின் இயலாமை போருக்கு முக்கிய காரணமாயிற்று. அதே நேரத்தில் அச்சு நாடுகள் அதிக நம்பிக்கை உடையவையாக இருந்தன. 1919ஆம் ஆண்டு அமைதி உடன்பாட்டை அடுத்து பிரிட்டனும் பிரான்சும் பிரிந்து சென்றன. கிரேட் பிரிட்டன் ஐரோப்பிய அரசியலிலிருந்து ஒதுங்கி நின்றது. ஆனால், ஜெர்மனி போன்ற நாடுகள் ஆக்கிரமிப்பில் இறங்கின.

(உ)படைப்பெருக்கம்

2ஆம் உலகப் போருக்கு படைப்பெருக்கம் ஒரு முக்கிய காரணம் ஆகும். பன்னாட்டுக் கழகம் படைப்பெருக்கத்தைக் குறைக்கும் நோக்கில் நிறுவப்பட்டது. ஆனால் பன்னாட்டுக்கழகத்தால் ஆயுதப்போட்டியைத் தடை செய்யஇயலவில்லை. பல நாடுகள் போட்டி போட்டுக்கொண்டு தம் ஆயுதத்தை பெருக்கின. பன்னாட்டுக் கழகம் உலக நாடுகள் மத்தியில் நிலவிய பரபரப்பான சூழலைக் குறைக்கும் முயற்சியில் தோற்றது. 1935இல் ஜெர்மனியில் கட்டாய ராணுவச் சேர்க்கை செயல்படுத்தப்பட்டது. 1936இல் ஜெர்மனி ரைன்லாந்தை ஆக்கிரமித்தது. 1931இல் ஜப்பான் மஞ்சூரியாவின் மீது படையெடுத்தது. 1936ல் இத்தாலி அபிசீனியாவை ஆக்கிரமித்தது.

(ஊ)பொருளாதாரத் தேவையும் ஆர்வமும்

ஐரோப்பாவின் பல நாடுகளும்ட பொருளாசை கொண்டன. அவற்றின் பொருளாதாரத் தேவை அதிகமாயிற்று. தொழிற்சாலைகளுக்கு கச்சாப்பொருட்கள் தேவைப்பட்டன. செய்பொருள்களுக்கு வெளிச்சந்தையும் தேவைப்பட்டது. பொருளாதார ஆர்வம் போட்டியாகிப் போரில் முடிந்தது.

(எ)சிறுபான்மை தேசிய இனங்கள்

ஐரோப்பிய நாடுகளில் இருந்த தேசியச் சிறுபான்மை இனங்களும் போருக்கு ஒரு முக்கிய காரணம் ஆகும். நேச நாடுகள் சிறுபான்மை இனங்களின் விருப்பத்திற்கு ஆதரவு தெரிவித்திருந்தன. ஆனால் சிறுபான்மையினர் சுயமாகத் தீர்மானிக்க நேச நாடுகள் உதவவில்லை. ஒரு நாட்டினுடைய தேசிய இடனம் இன்னொரு நாட்டில் அனுமதிக்கப்பட்ட பொழுது அங்கு அது சிறுபான்மை ஆயிற்று. அந்த சிறுபான்மை இனங்கள் அதிருப்தி அடைந்தன.

(ஏ)படைக்குறைப்பு முயற்சி தோல்வி

அதுவும் போருக்கு ஒரு காரணம் ஆகும். பன்னாட்டுக் கழகத்தின் உள்ளேயும் வெளியேயும் படைக்குறைப்பு மாநாடுகள் பல நடத்தப்பட்டன. படைக்குறைப்பிற்கு பல முறை முயற்சிகள் மேற்கொண்ட போதிலும் பயன்

ஏதும் கிட்டவில்லை. ஜெர்மனி தான் தன் படையைக் குறைந்தது போல நேச நாடுகளும் அவற்றின் படைகளைக் குறைக்க வேண்டுமென்று கேட்ட பொழுது பிரான்சு அதற்கு மறுப்பு தெரிவித்தது. 1939இல் ஹிட்லர் மீண்டும் ஜெர்மனியின் ராணுவத்தை பெருக்க அது போருக்கு முக்கிய காரணமாயிற்று.

(ஐ)தீவிர தேசப்பற்று

ஐரோப்பாவின் பல்வேறு நாடுகளில் நிலவிய தீவிர தேசிய உணர்வும் போருக்கு ஒரு முக்கியக் காரணமாகும். பல நாடுகளில் தேசிய உணர்வு சகிக்க முடியாத அளவிற்கு மோசமானதாக இருந்தது. ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி ஆகிய நாடுகள் அந்நாடுகளின் மக்களால் வணங்கப்பட்டன.

(ஒ)அமெரிக்காவின் தனித்து வாழும் கொள்கை

முதல் உலகப்போருக்குப் பின்னும் கூட அமெரிக்கா தனித்து வாழும் கொள்கையைப் பின்பற்றியது. அந்நாடு பன்னாட்டு அரசியலிருந்து ஒதுங்கி நின்றது. பன்னாட்டுக் கழகம் நிறுவப்படுவதற்கு அமெரிக்காவே பொறுப்பு என்றாலும் அந்நாடு அக்கழகத்தில சேரவில்லை. எனவே தடை ஏதும் இல்லாது இருந்ததால் சர்வாதிகார நாடுகள் தொடர்ந்து ஆக்கிரமிப்பில் ஈடுபட்டன. பிரான்ஸ், ர்'யா, பிரிட்டன் ஆகிய நாடுகளுடன் இணைந்து அச்சு நாடுகளுக்கு எதிராக அமெரிக்கா செயல்பட்டு இருந்திருக்குமேயானால் போர் தவிர்க்கப்பட்டிருக்கும் அல்லது பரவாமல் தடுக்கப்பட்டிருக்கும்.

(ஓ)ர்'யாவின் அலட்சியப் போக்கு

ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளின் வி'யத்தில் ர்'யா கொண்டிருந்த அலட்சியப்போக்கும், அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகளைத் தவறாகப் புரிந்து கொண்டதும் போருக்கு ஒரு முக்கிய காரணமாகும். ர்'யா நேச நாடுகளுடன் இணைந்து மத்திய நாடுகளுக்கு எதிராக முயற்சிகளை மேற்கொண்டிருந்தால் ஒரு வேளை போர் தவிர்க்கப்பட்டிருக்கும். 1938இல் ஆஸ்திரியாவையும், 1939இல் செக்கோஸ்வோக்கியாவையும் ஜெர்மனியுடன் இணைத்துக் கொண்ட ஹிட்லர் பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகள் அதிர்ச்சியுறும் அளவிற்குத் தன் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்தார். அவரது அடுத்த இலக்கு பேலந்து ஆகும். 1939 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல்நாள் ஹிட்லர் போலந்தைத் தாக்கினார். 2ஆம் உலகப் போர் ஆரம்பமாயிற்று. அமைதியான முறையில் போலந்திலிருந்து ஜெர்மனியை வெளியேற்றப் பிரிட்டனும் பிரான்சும் மேற்கொண்ட முயற்சிகள் தோற்றுப்போகவே, அந்நாடுகள் ஜெர்மனிக்கு எதிராக செப்டம்பர் 3ம் நாள் போர் அறிவித்தன.

## 12.3 அரசியல் கோட்பாடு

சர்வாதிகாரத்திற்கும் ஜனநாயகத்திற்கும் இடையே நிலவிய அரசியல் கோட்பாடு ரீதியான வேறுபாடுகளும் 2ஆம் உலகப் போருக்கு முக்கிய காரணம் ஆகும். ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகள் சர்வாதிகாரத்தை பின்பற்றின. கிரேட் பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா ஆகிய நாடுகள் ஜனநாயத்தைப் பின்பற்றின. இந்த இரு கோட்பாடுகளுக்கும் இடையேயான போராட்டம் எளிதாக தீர்க்கப்படக் கூடியதாக இல்லாமல் போனது.

## 12.4 வார்சே உடன்படிக்கை

1919ஆம் ஆண்டு வார்சே உடன்படிக்கை 2ஆம் உலகப்போருக்கு வேண்டிய விதையைக் கொண்டிருந்தது. அனைத்து போர்களையும் முடிவுக்கு கொண்டு வரச் செய்து கொள்ளப்பட்ட 1919ம் ஆண்டு உடன்படிக்கை அனைத்து அமைதியையும் கெடுத்தது என்று சிலர் குறிப்பிடுவர். வார்சே உடன்படிக்கை நியாயமானது அல்ல. அது ஒரு திணிக்கப்பட்ட உடன்படிக்கை. முதல் உலகப்போரில் வெற்றிப்பெற்ற நாடுகள் ஜெர்மனியை முறையாக நடத்தவில்லை. ஜெர்மனி உடன்பாட்டை ஏற்க வற்புறுத்தப்பட்டது. ஜெர்மனிக்கு அதிக அளவில் தண்டணை அளிக்கப்பட்டது. ஜெர்மனியிடமிருந்து அதன் வளமான நிலப் பகுதி பறிக்கப்பட்டது. ஜெர்மனியின் படை குறைக்கப்பட்டது. ஜெர்மனியின் சார் சமவெளி நிலக்கரிச் சுரங்கங்கள் பிரான்சிற்குத் தரப்பட்டன. ரைன் பகுதியிலிருந்து ஜெர்மனியின் ராணுவம் விலக்கப்பட்டது. ஜெர்மனி போர் ந்'ட ஈடாக ஒரு பெரும் தொகையை தருமாறு வற்புறுத்தப்பட்டது. சுருங்கக்கூறின் ஜெர்மனி இழிவாக நடத்தப்பட்டது. அதனால் அந்நாடு பழிக்குப்பழி வாங்கத் தீர்மானித்தது

## 12.4 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

1919ஆம் ஆண்டு வார்சே உடன்படிக்கை 2ஆம் உலகப்போருக்கு வேண்டிய விதையைக் கொண்டிருந்தது. அனைத்து போர்களையும் முடிவுக்கு கொண்டு வரச் செய்து கொள்ளப்பட்ட 1919ம் ஆண்டு உடன்படிக்கை அனைத்து அமைதியையும் கெடுத்தது

## 12.5 சுருக்கவுரை

சர்வாதிகாரத்திற்கும் ஜனநாயகத்திற்கும் இடையே நிலவிய அரசியல் கோட்பாடு ரீதியான வேறுபாடுகளும் 2ஆம் உலகப் போருக்கு முக்கிய காரணம் ஆகும். ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகள் சர்வாதிகாரத்தை பின்பற்றின. கிரேட் பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா

ஆகிய நாடுகள் ஜனநாயத்தைப் பின்பற்றின. இந்த இரு கோட்பாடுகளுக்கும் இடையேயான போராட்டம் எளிதாக தீர்க்கப்படக் கூடியதாக இல்லாமல் போனது.

ஜெர்மனிக்கு அதிக அளவில் தண்டனை அளிக்கப்பட்டது. ஜெர்மனியிடமிருந்து அதன் வளமான நிலப் பகுதி பறிக்கப்பட்டது. ஜெர்மனியின் படை குறைக்கப்பட்டது. ஜெர்மனியின் சார் சமவெளி நிலக்கரிச் சுரங்கங்கள் பிரான்சிற்குத் தரப்பட்டன. ரைன் பகுதியிலிருந்து ஜெர்மனியின் ராணுவம் விலக்கப்பட்டது. ஜெர்மனி போர் ந'்ட ஈடாக ஒரு பெரும் தொகையை தருமாறு வற்புறுத்தப்பட்டது. சுருங்கக்கூறின் ஜெர்மனி இழிவாக நடத்தப்பட்டது. அதனால் அந்நாடு பழிக்குப்பழி வாங்கத் தீர்மானித்தது

## 12.6 முக்கிய வார்த்தைகள்

- ☐ இரண்டாம் உலகப்போரின் தன்மைகள்
- ☐ நாடுகளின் தேசப் பற்றையும் சாந்தப் படுத்தும்
- ☐ ஜெர்மனி சவால்களுக்கான காரணங்கள்
- ☐ வெர்செயில்ஸ் பற்றிய விளக்கங்கள்

## 12.7 தன்மதிப்பீட்டு வினாக்கள்

**சுருக்கமான கேள்விப் பதில்கள்**

1. இரண்டாம் உலகபடபோரின் விளைவுகளைப் பற்றி குறிப்பு வரைக?

**விரிவான கேள்விப் பதில்கள்**

2. இரண்டாம் உலகபடபோரைப் பற்றிக் கட்டுரை வரைக?

## 12.8 மேலும் படிக்க

• C.J.H. Hayeset.(1916). History of Europe. New York: Macmillan Company

• C.D.M. Ketelbey. (1994). A History of Modern Times from 1789. Oxford: Oxford University Press

• V.D.Mahajan. (1975). History of Modern Europe Since 1789. New Delhi: S.Chand&Co(Pvt LTD)

# அலகு 13 இரண்டாம் உலகப்போர்: காரணங்களும், போக்கும் விளைவுகளும்

**கட்டமைப்பு**

13.0 அறிமுகம்

13.1 நோக்கங்கள்

13.2 இரண்டாம் உலகப்போருக்கான காரணங்கள்

13.3 போரின் போக்குகள்

13.3.1 அமெரிக்காவும் போரும்

13.3.2 கிழக்குப் பகுதியில் போர்

13.3.4 ஹிட்லரின் முடிவு

13.3.5 முஸோலினி முடிவு

13.3.6 போட்ஸ்டேம் மாநாடு

13.3.7 ஜப்பானின் தோல்வியும் போரின் முடிவும்

13.4 இரண்டாம் உலகப் போரின் விளைவுகள்

13.5 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

13.6 சுருக்கவுரை

13.7 முக்கிய வார்த்தைகள்

13.8 தன்மதிப்பீட்டு வினாக்கள்

13.9 மேலும் படிக்க

## 13.0 அறிமுகம்

ஜெர்மனியின் பழிவாங்கும் செயல்களே இரண்டாம் உலகப் போர் ஏற்பட பெரிதும் காரணமாயிற்று. இந்நாட்டின் படைப்பெருக்கத்தால் பல நாடுகள் அச்சம் கொண்டன. இதுவும் போருக்குக் காரணமாக அமைந்தது. முதல் உலகப்போரின் முடிவில் எட்டப்பட்ட அமைதி உடன்படிக்கை பயனற்ற நிலையில் இரண்டாம் உலகப்போருக்கு வித்திட்டது. முதல் உலகப் போர் நடந்த இருபது ஆண்டுகளுக்குள்ளாகவே உலக நாடுகள் மிகப்பெரிய கொடுரமான மற்றொரு போரை 1939 இல் சந்திக்க வேண்டிய சூழலுக்குத் தள்ளப்பட்டன. இப்போர் பல்வேறு நிலைகளில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

## 13.1 நோக்கங்கள்

இந்த அலகை படித்து முடித்த பின்பு உங்களால்

☐ இரண்டாம் உலகப்போருக்கான காரணங்களைஅறிய இயலும்

☐ இரண்டாம் உலகப் போரின் போக்கினை அறிய இயலும்

☐ இரண்டாம் உலகப் போரின் விளைவுகளை அறிய இயலும்

## 13.2 இரண்டாம் உலகப்போரிற்கான காரணங்கள்

(அ)வார்சே உடன்படிக்கை

1919ஆம் ஆண்டு வார்சே உடன்படிக்கை 2ஆம் உலகப்போருக்கு வேண்டிய விதையைக் கொண்டிருந்தது. அனைத்து போர்களையும் முடிவுக்கு கொண்டு வரச் செய்து கொள்ளப்பட்ட 1919ம் ஆண்டு உடன்படிக்கை அனைத்து அமைதிப்யுயம் கெடுத்தது என்று சிலர் குறிப்பிடுவர். வார்சே உடன்படிக்கை நியாயமானது அல்ல. அது ஒரு திணிக்கப்பட்ட உடன்படிக்கை. முதல் உலகப்போரில் வெற்றிப்பெற்ற நாடுகள் ஜெர்மனியை முறையாக நடத்தவில்லை. ஜெர்மனி உடன்பாட்டை ஏற்க வற்புறுத்தப்பட்டது. ஜெர்மனிக்கு அதிக அளவில் தண்டணை அளிக்கப்பட்டது. ஜெர்மனியிடமிருந்து அதன் வளமான நிலப் பகுதி பறிக்கப்பட்டது. ஜெர்மனியின் படை குறைக்கப்பட்டது. ஜெர்மனியின் சார் சமவெளி நிலக்கரிச் சுரங்கங்கள் பிரான்சிற்குத் தரப்பட்டன. ரைன் பகுதியிலிருந்து ஜெர்மனியின் ராணுவம் விலக்கப்பட்டது. ஜெர்மனி போர் ந்‘ட ஈடாக ஒரு பெரும் தொகையை தருமாறு வற்புறுத்தப்பட்டது. சுருங்கக்கூறின் ஜெர்மனி இழிவாக நடத்தப்பட்டது. அதனால் அந்நாடு பழிக்குப்பழி வாங்கத் தீர்மானித்தது.

(ஆ)பன்னாட்டுக் கழகம்

முதல் உலகப்போரின் இறுதியில் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் உட்ரோவில்சனின் 14ஆம் அம்சத் திட்டத்தின் அடிப்படையில் பன்னாட்டுக் கழகம் நிறுவப்பட்டது. அதன் முக்கியமான நோக்கம் எதிர்காலத்தில் போரைத் தடுத்து உலக நாடுகள் மத்தியில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது ஆகும். ஆனால் 1939இல் 2ஆம் பெரும் போரை அதனால் தடுக்க இயலவில்லை. பன்னாட்டுக் கழகம் தோல்வி அடைந்ததற்குக் காரணம் பிரான்சு, பிரிட்டன், போன்ற நாடுகள் சுயநலத்துடன் கழகத்தைப் பயன்படுத்தியதும் அமெரிக்கா கழகத்திலிருந்து ஒதுங்கி நின்றததும் ஆகும். பன்னாட்டுக் கழகத்தால் கூட்டப்பட்ட ஆயுதக் குறைப்பு மாநாடுகளும் எதையும் சாதிக்கவில்லை. பிரான்ஸ், பிரிட்டன், ஆகிய இரு நாடுகளும் தம் ஆயுதத்தை குறைக்க மறுத்தன. ஆகையினால் ஜெர்மனி இத்தாலி போன்ற மத்திய நாடுகள் கழகத்தின் மீது நம்பிக்கை வைக்கவில்லை.

பன்னாட்டுக் கழகம் வெற்றி பெற்ற நாடுகளின் பொழுது போக்கு இடமாகத் திகழ்ந்தது. இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் போன்ற நாடுகள் கழகத்தைப் பற்றி கவலைப்படாமல் ஆக்கிரமிப்புக் கொள்கையில் ஆர்வம் காட்டின. பன்னாட்டுக் கழகம் அச்சு நாடுகளின் ஆக்கிரமிப்பை தடுக்க தவறியது.

## 13.3 போரின் போக்குகள்

01.09.1939 அன்று தொடங்கிய 2ஆம் உலகப் போர் 09.08.1945 அன்று நாகசாயியின் மீது அமெரிக்கா அணுகுண்டு வீசியதை அடுத்து ஜப்பான் 02.09.1945 அன்று சரணடைய முடிவுக்கு வந்தது.

(அ)போலந்தில் போர்

ஹிட்லர் ஆரம்பத்திலிருந்தே போலந்தை மின்னல் வேகத்தில் தாக்கினார். போலந்தியரின் எதிர்ப்பு நசுக்கப்பட்டது. போலந்தின் தலைநகர் வார்சா வீழ்ந்தது. இதற்கிடையே பாதுகாப்பை கருத்திற்கொண்டு ர்'யா போலந்தின் கிழக்குப்பகுதியைக் கைப்பற்றியது. போலந்தின் ஏனைய பகுதி முழுவதும ஹிட்லரால் கைப்பற்றப்பட்டது.

அடுத்து ஹிட்லர் ர்'யாவின் லெனின்கிராடைத் தாக்கும் எண்ணத்தில் பின்லாந்தின் மீது படையெடுத்தார். ர்'யா ஹிட்லரின் நோக்கத்தையும் அவரது படையெடுப்பால் ஏற்படும் தாக்கத்தையும் அறிந்தது. எனவே அதனுடைய துருப்புகளை அனுப்பி பின்லாந்தின் ஒரு பகுதியையும் போலந்தையும் கைப்பற்றியது. இவ்வாறு ர்'யாவால் ஜெர்மனியிடமிருந்து தன் நாட்டு எல்லையைப் பாதுகாக்க முடிந்தது. ர்'யா மேலும் முன்னெச்சரிக்கையுடன் லித்துவேனியா, லாத்துவியா, எஸ்தோனியா ஆகியவற்றைக் கைப்பற்றியது. பன்னாட்டுக் கழகம் எதிர்ப்பு தெரிவிக்கவே ர்'யா அதன் ஆக்கிமிப்பிலிருந்து பின்வாங்கியது.

(ஆ)மேற்கு முனையில் போர்

1940இல் ஹிட்லர் ஐரோப்பிய நாடுகளை மேற்கு முனையில் தாக்கத் தொடங்கினார். 3மாதத்தில் டென்மார்க், நார்வே, ஹாலந்து, லக்ஸம்பர்க், பெல்ஜியம், பிரான்ஸ் ஆகிய நாடுகளை எளிதில் வென்றார். ஹிட்லர் அவரது வெற்றியின் உச்சியில் இருந்த நேரத்தில் பிரிட்டி' பிரதம மந்திரி சேம்பர்லின் பதவி விலக வின்ஸ்டன் சர்ச்சில் பிரதமர் ஆனார். இத்தாலி போரின் தொடக்கத்தில் போரில் இறங்காமல் ஒதுங்கியிருந்தது. சூழ்நிலை தனக்கு சாதகமாக இருந்த நேரத்தில் பிரான்சும், பிரிட்டனும் போரில் சோர்வடைந்ததை அறிந்த ஜெர்மனிக்கு ஆதரவாகப் போரில் இறங்கியது. ஜூன் மாதத்தில் பாரிஸ் வீழ்ந்தது. மிகுந்த சிரமத்திற்கு இடையில் பிரிட்டன் டன்கிர்க்கில் சிக்கிக்கொண்ட போர் வீரர்களை வெளியேற்றியது. பிரான்சில், மார்'ல் பெடைன் தலைமையில் பொம்மை அரசாங்கம் ஒன்று நிறுவப்பட்டது. அந்த அரசாங்கத்துடன் ஓர் உடன்படிக்கை செய்து

கொண்ட ஜெர்மனி, பிரான்சின் பெரும் பகுதியை இணைத்துக் கொண்டது. இவ்வாறு பிரான்சின் இராணுவ வலிமை ஒடுக்கப்பட்டு அந்நாட்டு 3ஆம் குடியரசு கலைக்கப்பட்டு பெடைன் தலைமையில் சர்வதிகார ஆட்சி நிறுவப்பட்டது.

(,)பிரிட்டன் போர்

பிரான்சின் வீழ்ச்சிக்குப் பின்னும் பிரிட்டன் ஹிட்லரை எதிர்த்து போராடியது. ஹிட்லர் தன்னுடைய விமானப்படையைக் கொண்டு பிரிட்டன் மீது குண்டு மழை பொழிந்தார். அவர் ஜெர்மானிய நீர்மூழ்கிக்கப்பல்களைப் பயன்படுத்தி பிரிட்டி' கப்பல்களைத் தாக்கினார். பிரிட்டி' பிரதம மந்திரி தன் அனல் பறக்கும் பேச்சின் மூலம் பிரிட்டி' மக்களின் உள்ளத்தில் தேசிய உணர்வைத் தூண்டி ஜெர்மானியத் தாக்குதலுக்கு எதிராக ஒன்று திரட்டினார். 1940 ஜுனில் ஜெர்மானிய விமானப்படை பிரிட்டனின் பல நகரங்களின் மீது வெடிகுண்டு மழை பொழிந்தது. இலண்டன் நகரம் வெடிகுண்டால் தாக்கப்பட்டது. ஜெர்மனியின் நீர்மூழ்கிக் கப்பல்கள் பெருமளவிற்கு பிரிட்டி' கப்பல்களை அழித்தன. பிரிட்டி'காரர்கள் அதே அளவிற்கு எதிர்த்துத் தாக்கினர். ஆங்கில விமானப்படை ஜெர்மானியத் தாக்குதலை எதிர்த்தாக்குதலின் மூலம் முறியடித்தது. ஆங்கிலேயர் ஜெர்மனியின் நகரங்களைத் தாக்கினர்.

(ஈ)ஆப்ரிக்காவில் போர்

பிரான்ஸ் வீழ்ந்ததை அடுத்து 1940 ஜுனில் இத்தாலி ஆப்பிரிக்காவின் வட பகுதியைத் தாக்கத் துவங்கியது. முசோலினி பிரிட்டி' சோமாலிலாந்து, எகிப்து ஆகிய நாடுகளைத் தாக்கினார். ஆனால் பிரிட்டி' தளபதி வேவல்லின் தலைமையில் ஆங்கிலேயர் இத்தாலியரைத் தோற்கடித்தனர். லிபியாவின் பாதிப்பகுதியைக் கைப்பற்றி சோமாலிலாந்தை நோக்கி முன்னேறினார். அதன்பிறகு ஹிட்லர் இத்தாலியின் உதவிக்கு வந்தார். தளபதி ரோம்மெல் என்பாரை வட ஆப்பிரிக்காவிற்கு அனுப்பினார். அவர் 1942இல் எகிப்தை வென்றார். இதற்கிடையில் மான்ட்கோமரி தலைமையில் செயல்பட்ட பிரிட்டி' படைகள் ஆப்பிரிக்காவை அடைந்து ரோம்மெல்லைத் தோற்கடித்தன. பிரிட்டி' படை எரித்திரேயா, சோமலிலாந்து,அபிசீனியா ஆகிய இத்தாலியக் குடியேற்றங்களை வென்றது. 1942இல் தளபதி மான்ட்கோமாரியின் போர்வீரர்கள் லிபியாவில் இருந்து ஜெர்மனியர்களையும், இத்தாலியர்களையும் வெளியேற்றினர். 1942இல் அமெரிக்க மற்றும் பிரிட்டி' படைகள் பிரெஞ்சுக் குடியேற்றமான அல்ஜீரியவைக் கைப்பற்றின. ஆப்பிரிக்கப்போர் 1944 வரை தொடர்ந்தது.

(உ)கிழக்குப் பகுதியிலும் தென்கிழக்கு ஐரோப்பாவிலும் போர்

ஹிட்லர் 1940இல் ருமேனியாவை வென்றார். ருமேனியாவை வற்புறுத்தி அந்நாட்டின் ஒரு பகுதியை பல்கேரியாவிற்கும், ஹங்கேரிக்கும்

தரச்சொல்லியதன் மூலம் அவ்விரு நாடுகளின் விசுவாசத்தை வென்றார். இதற்கிடையில் இத்தாலி கிரீசைத் தாக்கியது. ஆனால், கிரேக்கர் இத்தாலியரை விரட்டியடித்தனர். இதற்கிடையே ஜெர்மானிய படை ஒன்று இத்தாலிக்கு ஆதரவாகப் பல்கேரியாவையும் யுகோஸ்லாவியாவையும் தாக்கியது. பல்கேரியா ஜெர்மனியுடன் அமைதி ஏற்படுத்திக் கொண்டது. யுகோஸ்லாவியா ஜெர்மானியப் படையை எதிர்த்துத் தாக்கியது. ஜெர்மானியர் வெற்றி பெற்றனர். கிரீஸ், கிரீட், ஆகியன மத்திய நாடகளால் வெல்லப்பட்டன.

(ஊ)ர்'யாவில் போர்

இரண்டாம் உலகப்போரின் தொடக்கத்தில் ஜெர்மனியும், ர்'யாவும் பால்கன் பகுதிகளை வென்றன. விரைவில் வென்ற பகுதிகளைப் பங்கிடுவதில் இரண்டு நாடுகளுக்கிடையே சச்சரவு ஏற்பட்டது. ஹிட்லர் ர்'யாவின் மீது பெரும் தாக்குதலைத் தொடுத்தார். முன்பே அல்பேனியா, பல்கேரியா, யுகோஸ்லேவியா, கிரீஸ், கிரீட் ஆகிய நாடுகளை வென்று தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்ததால் ஹிட்லருக்கு ர்'யப் படையெடுப்பிற்கு சூழ்நிலை சாதகமாக இருந்தது. 1941 ஜூனில் ஹிட்லர் ர்'யாவைத் தாக்கினார். விரைவில் அவர் 5 லட்சம் சதுர மைல்கள் பரப்பளவு கொண்ட ர'யப்பகுதியை வென்றார். ர்'யாவின் தலைநகர் மாஸ்கோவைக் கைப்பற்ற 15 மைல் தூரமே இருந்தது. இருப்பினும் ஹிட்லரின் ர்'யப்படையெடுப்பு ஹிட்லருக்கு அழிவை ஏற்படுத்தியது. ஹிட்லர் சுவீடன் மன்னன் 12ஆம் சார்லஸைப்போலவும் (1712), பிரெஞ்சு மாவீரன் நெப்போலியனைப் போலவும் (1812) தோல்வியைத் தழுவவேண்டிய இருந்தது. குளிர்காலம் நெருங்க ஹிட்லரின் ர்'யப்படையெடுப்பு ஆபத்துக்குள்ளாயிற்று. ர்'யப் படை அங்கு அழிந்தது. போர் நேச நாடுகளுக்குச் சாதகமாக மாறியது. நேச நாடுகள் ஜெர்மனியை விமானப்படை கொண்டு தாக்கின.

### 13.3.1 அமெரிக்காவும் போரும்

போர் தொடங்கிய நேரத்தில் அமெரிக்கா நடுநிலை வகித்தது. விரைவில் அமெரிக்க மக்கள் நேசநாடுகளுக்குத் தன் பரிவைக் காட்டத்தொடங்கினர். 1931இல் ஆப்பிரிக்க நடுநிலைச் சட்டததை பிரகடனம் செய்தது. நேச நாடுகளுக்கு ஆயுதங்களுக்கு விற்பனை செய்வதற்கு இருந்த தடைகளை அகற்றியது. 1940-இல் நடைபெற்ற நிகழ்ச்சிகள் அமெரிக்காவை ஹிட்லருக்கு எதிராகச் செயல்படுமாறு தூண்டின. 1940 செப்டம்பர் முதல் அமெரிக்கா ராணுவ உதவி நடவடிக்கைகளில் இறங்கியது. இங்கிலாந்து பிரான்சு ஆகிய நாடுகளுக்கு போர்த்தளவாடங்களை விற்பனை செய்தது. அமெரிக்ககாவில் ராணுவச் சேவை கட்டாயமாக்கப்பட்டது.

அமெரிக்கக் குடியரசுத்தலைவர் எஅப்டி.ரூஸ்வெல்ட் நேசநாடுகளுக்கு உதவி செய்யத் தீர்மானித்தார். 1941 மார்ச்சில் அமெரிக்க நாடாளுமன்றம் ( காங்கிரஸ்) ஈட்டுக்கடன் முறைச் சட்டத்தை இயற்றியது. அச்சட்டத்தின் மூலம் அச்சு நாடுகளை எதிர்த்துப் போரிட்ட நேச நாடுகளுக்கு அமெரிக்காவின் உதவி கிடைத்தது. 1981ஆம் ஆண்டு டிசம்பர் 7 ஆம் நாள் பசிபிக் கடலைச் சார்ந்த அமெரிக்காவின் ஹவாய்த்தீவின் பேர்ல் துறைமுகத்தை ஜப்பானிய விமானங்கள் தாக்கின. அந்நிகழ்ச்சி அமெரிக்கா போரில் இறங்க காரணமாயிற்று. பசிபிக் பிராந்தியத்தில் தளபதி மேக் ஆர்தர் தலைமைத் தளபதியாக நியமிக்கப்பட்டார். மவுண்ட் பேட்டன் பிரபு தென்கிழக்கு ஆசியாவில் போருக்கு தலைமை ஏற்றார். அவர் டெல்லியைத் தலைநகராக்கொண்டு செயல்பட்டார். பல போர்க்கப்பல்களையும், பெரும் பீரங்கிப்படகுகளையும் சுமார் 2000 போர் வீரர்களையும் இழந்த அமெரிக்கா ஜப்பானுக்கு எதிராக போர் அறிவித்தது. அதுவரை ஐரோப்பா, ஆசியா ஆகிய பகுதிகளில் மட்டும் நடந்த போர் உலகப்போராக மாறியது. அமெரிக்காவின் பங்கு போரில் ஒரு முக்கியமான திருப்பத்தை ஏற்படுத்தியது.

### 13.3.2 கிழக்குப் பகுதியில் போர்

ஜப்பான் பேர்ல் துறைமுகத்தில் இருந்த அமெரிக்கக் கப்பல்களைத் தாக்கியது. தொடக்கத்தில் ஜப்பானுக்கு வெற்றி கிட்டியது. ஜப்பான் தொடர்ந்து தாக்கி பிரிப்பைன்ஸ், டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள் (இந்தோனேசியா) மலேயா தீபகற்பம ஆகியவற்றை ஆக்கிரமித்தது. மேலும் ஹாங்ஹாங், சிங்கப்பூர் ஆகிய பிரிட்டி‘ துறைமுகங்களைக் கைப்பற்றியது. பர்மாவின் (மியான்மர்) மீது படையெடுத்து ரங்கூனை (யாங்கூன்) கைப்பற்றியது. மண்டலாய் நகரையும் வென்றது. ஜப்பானியர் இந்தியாவில் விசாகப்பட்டினம், சிட்டகாங் ஆகிய இடங்களைக் குண்டுவீசித்தாக்கினர். மத்திய நாடுகள் ஆசியாவைத் தாக்கிய நேரத்தில் நேதாஜி சுபா‘ சந்திரபோஸ் அவற்றுடன் கூட்டணி அமைத்திருந்தார்.

### 13.3.4 ஹிட்லரின் முடிவு

ஜெர்மனியின் ர‘யப்படையெடுப்பை முறியடித்த ர‘யர்கள், ஜெர்மனியைத் தாக்கத் தொடங்கினர். போலந்து, ஹங்கேரி, ஆஸ்திரியா, கிழக்கு ஜெர்மனி ஆகிய நாடுகளை ர‘யர்கள் கைப்பற்றினர். 1944 ஜுனில் ர‘யர்கள் பிரான்சில் இருந்து ஜெர்மனியர்களை விரட்டியடித்தனர். 1945 ஏப்ரல் மாதத்தில் ஜெர்மானியப் படைகள் சரணடைந்தன. 1945 ஆம் ஆண்டு ஏப்ரல் 30ம் நாள் ஹிட்லர் தன் மனைவி மற்றும் அமைச்சர்கள் கோயபெல்ஸ், கிம்லர் ஆகியோருடன் தற்கொலை செய்துகொண்டார். ஜெர்மானியத் தளபதி டோனிட்ஸ் சரணாகதிப் பத்திரத்தில் கையொப்பமிட்டார். 1945ஆம் ஆண்டு மே மாதத்தில் ஐரோப்பாவில் போர் முடிந்தது.

### 13.3.5 முஸோலினி முடிவு

இதற்கிடையே 1943 ஆம் ஆண்டு ஜுலை மாதம் இத்தாலி மிக மோசமான தோல்வியைத் தழுவியது. பாசிஸ்ட் கட்சியின் உயர்மட்டக்குழு முசோலினியை மன்னர் மூன்றாம் விக்டர் இம்மானுவேலிடம் அதிகாரத்தை ஒப்படைக்குமாறு வற்புறுத்தியது. அரசரைச் சந்திக்கச் சென்ற முசோலினி கைது செய்யப்பட்டார். அவர் ஜெர்மனியின் போர்வீரனின் உதவியுடன் தப்பித்தார். இத்தாலியின் வடபகுதியில் சோலோ என்ற இடத்தில் ஹிட்லர் முசோலினி தலைமையில் பதிய அரசு ஒன்றை அமைத்தார். 1945இல் ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளின் படைகள் தோற்கடிக்கப்பட்டன. முசோலினி தப்பிக்க முயற்சித்தார். ஆனால் அவர் மீண்டும் கைது செய்யப்பட்டார். 1945 ஆம் ஆண்டு ஏப்ரல் 28 ஆம் நாள் முசோலினி அவரது மனைவியுடன் சுட்டுக்கொல்லப்பட்டார்.

### 13.3.6 போட்ஸ்டேம் மாநாடு

ஜெர்மனியின் நிபந்தனையற்ற சரணாகதியை அடுத்து பெர்லின் அருகில் போட்ஸ்டேம் என்ற இடத்தில் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. பிரிட்டி' பிரதமமந்திரி அட்லி, அமெரிக்க ஜனாதிபதி ட்ருமன், ர'யத் தலைவர் ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டனர். 1945 ஜுலை ஆகஸ்ட் மாதங்களில் அம்மாநாடு நடைபெற்றது. மாநாட்டில் பங்குகொண்ட தலைவர்கள் ஜப்பான் அப்பொழுதும் போரில் இருந்ததால் எதிர்கால நடவடிக்கை பற்றி முடிவெடுத்தனர்.

### 13.3.7 ஜப்பானின் தோல்வியும் போரின் முடிவும்

ஐரோப்பாவில் 1945 ஏப்ரல், மே மாதங்களில் போர் முடிவடைந்த போதிலும் தென்கிழக்கு ஆசியாவில், ஆகஸ்ட் 2ஆம் வாரம் வரை போர் நீடித்தது. மேக் ஆர்தர் அப்பகுதியில் நேச நாடுகளின் ராஸவத்திற்குத் தலைமை பொறுப்பு ஏற்றார். அவர் ஜப்பானியர்களை பர்மா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் தோற்கடித்தார். போட்ஸ் டேம் மாநாட்டில் கூடிய நேச நாடுகள் ஜப்பான் ஜுலை 29ஆம் தேதிக்குள் சரணடைய வேண்டும் என்று வற்புறுத்தினர். சரணடையாவிட்டால் விளைவுகள் மோசமாக இருக்கும் என்று எச்சரித்தன.

ஜப்பானிய அரசாங்கம் நேச நாடுகள் வைத்த கெடுவை நிராகரித்தது. எனவே நேச நாடுகள் ஆகஸ்ட 6ஆம் நாள் லிட்டில் பாய் என்னும் அணுகுண்டை ஹிரோசிமா நகர் மீது வீசின. முதல் அணுகுண்டு 78000 மக்கள் உயிரை பறித்தது. 5 சதுர மைல் பரப்பளவிற்கு எரிந்து சாம்பலாகியது. இருப்பினும் ஜப்பான் உடனடியாக சரணடையவில்லை. ஜப்பானின் உயர்மட்ட ராணுவக்குழு டோக்கியோவில் கூடி சரணாகதி பற்றி விவாதித்தது. ஆனால் நேச நாடுகள் ஜப்பான் மிகவும் தாமதித்ததாக உணர்ந்து ஆகஸ்ட் 9ம் நாள் நாகசாகி மீது அபேட்மேன் எனும் மற்றொரு

அணுகுண்டை வீசன. 38 பேர் உயிர் நீத்தனர். மறுநாள் ஜப்பான் சரணடையத் தீர்மானித்தது. ஜப்பான் செப்டம்பர் 2ஆம் நாள் (1945) சரணாகதி பத்திரத்தில் கையெழுத்திட்டது. இந்நிகழச்சி அமெரிக்கப் போர்க் கப்பல் மிசோரியில் நிகழ்ந்தது. அத்துடன் போர் முடிவுற்றது. ஜப்பானில் மேக் ஆர்தர் தலைமையில் புதிய அரசாங்கம் ஒன்று நிறுவப்பட்டது.

### 13.3.8 அமைதி உடன்படிக்கைகள்

போர் நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது பேச்சு வார்த்தையும் நடந்து கொண்டிருந்தது. அமெரிக்கா, ர்'யா, பிரிட்டன், பிரான்சு, சீனா ஆகிய நாடுகள் போரின் இறுதி உடன்பாடுகள் பற்றி பேசி முடிவெடுத்தன. 1947 இல் அச்சு நாடுகளுடன் (இத்தாலி, ருமேனியா, பல்கேரியா, ஹங்கேரி, பின்லாந்து) நேச நாடுகள் பாரீஸ் நகரில் அமைதி உடன்படிக்கைகளில் கையொப்பமிடடன. அச்சு நாடுகள் ஆயுதங்களைக் குறைக்கவும் தம் நாடுகளில் பாஸிசத்தை அழிக்கவும் சம்மதித்தன. 1952இல் ஜப்பானுடன் ஓர் அமைதி உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. அதையடுத்து ஜப்பானைவிட்டு அமெரிக்க ராணுவம் வெளியேறியது.

## 13.4 இரண்டாம் உலகப் போரின் விளைவுகள்

2ஆம் உலகப்போரினால் ஏற்பட்ட விளைவுகள் பல. அவற்றுள் சில.

1.மனித குல வரலாற்றில் ஏற்பட்ட போர்களில் 2ஆம் உலகப் போரே பெரும் அழிவை ஏற்படுத்தியது. முதல் உலகப்போரை விட பெருமளவில் அழிவு ஏற்பட்டது. கோடிக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். உயிர்சேதம் 5 கோடிக்கும் அதிகம் என்று சொல்லப்படுகிறது. 15 லட்சம் ர்'யர்களும் 60 லட்சம் யூதர்களும் 20 லட்சம் யூதர்கள் அல்லாத போலந்துகாரர்களுக்கும் 37 லட்சம் ஜெர்மானியர்களும் 16 லட்சம் யுகோஸ்லாவியர்களும் 12 லட்சம் ஜப்பானியர்களும் 10 லட்சம் இத்தாலியர்களும் 220 லட்சம் சீனர்களும் போரில் மாண்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 6 லட்சம் பிரிட்டி'காரர்களும் 5 லட்சம் ருமேனியர்களும், 3 லட்சம் பிரெஞ்சுக்காரர்களும், 2.92 லட்சம் அமெரிக்கர்களும் போரினால் இறந்தார்கள். ஐரோப்பாவில் 1.3 கோடி போர் வீரர்களும் 1.7 கோடி பொதுமக்களும் இறந்தனர்.

2.வீடுகளும், தொழிற்சாலைகளும் பெருமளவில் அழிந்தன. தகவல் தொடர்பு அழிந்தது. விவசாயம் பாதிப்புக்கு உள்ளாயிற்று ர்'யாவின் டோன் பகுதி மக்கள் பூனை, நாய், புல் ஆகியவற்றை தின்றதாக சொல்லப்படுகிறது.

3.போரின் விளைவாக ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளில் சர்வாதிகார அரசாங்கங்கள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டன. ஜெர்மனி 4 பகுதிகளாக பிரிக்கப்பட்டு அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, ர‘யா ஆகிய நாடுகளின் கீழ் இருந்த பகுதிகள் இணைக்கப்பட்டு மேற்கு ஜெர்மனி உருவாக்கப்பட்டது. ர‘யாவின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதி கிழக்கு ஜெர்மனி என்னும் பெயரில் கம்யூனிஸ்ட் நாடாயிற்று. 1991இல் ஜெர்மனி மீண்டும் ஒரே நாடாக ஐக்கியமாயிற்று.

4.பாசிசமும் நாசிசமும் அழிவுற்றன

5.இரண்டாம் உலகப் போருக்கு முன் ர‘யாவும், மங்கோலியாவும் மட்டுமே பொதுவுடைமை நாடுகளாக இருந்தன. 2ஆம் உலகப்போருக்குப்பின் கிழக்கு ஜெர்மனி, போலந்து, ஹங்கேரி, செக்கோஸ்லோவாக்கியா, ருமேனியா, யுகோஸ்லாவியா, பல்கேரியா, அல்பேனிô, வடகொரியா ஆகியன பொதுவுடைமை நாடுகளாயின. 1949இல் சீனாவும் கம்யூனிஸ்ட் நாடாயிற்று கம்யூனிசத்தின் வளர்ச்சி உலகை 2 குழுக்களாகப் பிரித்தது. அதனால் பனிப்போர் உருவாயிற்று.

6.பிரிட்டி‘காரர்களின் ஆதிக்கம் உலக அளவில் முடிவுக்கு வந்தது. பிரிட்டனும் பிரான்சும் 3 ஆம் தர நாடுகளாயின. அமெரிக்காவும் ர‘யாவும் உலகின் 2 வல்லரசுகளாக உருவெடுத்தன. 2ஆம் உலகப் போர் ஆசியா-ஆப்பிரிக்கா நாடுகளின் விடுதலை இயக்கத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்தியா, பர்மா, எகிபது, இலங்கை, மலேயா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, இண்டோ சீனா, பாகிஸ்தான், லிபியா, சிரியா, லெபனான் ஆகிய நாடுகள் விடுதலை அடைந்தன. இத்தாலி ஒரு குடியரசு ஆயிற்று. அது தன் ஆப்பிரிக்கக் குடியேற்றங்களை இழந்தது.

7.போரின் இறுதியில் அமெரிக்க இராணுவம் மேக் ஆர்தர் தலைமையில் ஜப்பானை ஆக்கிரமித்தது. அவரது தலைமையில் அங்கு புதிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டது. உலகில் அமைதியை நிலைநாட்டும் நோக்கில் ஐ.நா. சபை நிறுவப்பட்டது.

உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்

1.போட்ஸ்டேம் மாநாடு என்றால் என்ன?

2. இரண்டாம் உலகபடபோர் நுடைப் பெற்ற ஆண்டைக் குறிப்பிடுக?

## 13.7 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

ஜெர்மனியின் நிபந்தனையற்ற சரணாகதியை அடுத்து பெர்லின் அருகில் போட்ஸ்டேம் என்ற இடத்தில் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. பிரிட்டி‘ பிரதமமந்திரி அட்லி, அமெரிக்க ஜனாதிபதி

ட்ரூமன், ர்'யத் தலைவர் ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டனர். 1945 ஜூலை ஆகஸ்ட் மாதங்களில் அம்மாநாடு நடைபெற்றது. மாநாட்டில் பங்குகொண்ட தலைவர்கள் ஜப்பான் அப்பொழுதும் போரில் இருந்ததால் எதிர்கால நடவடிக்கை பற்றி முடிவெடுத்தனர்.

01.09.1939 அன்று தொடங்கிய 2ஆம் உலகப் போர் 09.08.1945 அன்று நாகசாயியின் மீது அமெரிக்கா அணுகுண்டு வீசியதை அடுத்து ஜப்பான் 02.09.1945 அன்று சரணடைய முடிவுக்கு வந்தது.

## 13.8 சுருக்கவுரை

போரின் இறுதியில் அமெரிக்க இராணுவம் மேக் ஆர்தர் தலைமையில் ஜப்பானை ஆக்கிரமித்தது. அவரது தலைமையில் அங்கு புதிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டது. உலகில் அமைதியை நிலைநாட்டும் நோக்கில் ஐ.நா. சபை நிறுவப்பட்டது.

## 13.9 முக்கிய வார்த்தைகள்

- ☐ பிரிட்டி'காரர்களின் ஆதிக்கம் உலக அளவில் முடிவுக்கு வந்தது.
- ☐ பிரிட்டனும் பிரான்சும் 3 ஆம் தர நாடுகளாயின.
- ☐ அமெரிக்காவும் ர்'யாவும் உலகின் 2 வல்லரசுகளாக உருவெடுத்தன.
- ☐ ,ரண்டாம் உலகப்போர் ஆசியா-ஆப்பிரிக்கா நாடுகளின் விடுதலை இயக்கத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.
- ☐ இந்தியா, பர்மா, எகிபது, இலங்கை, மலேயா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, இண்டோ சீனா, பாகிஸ்தான், லிபியா, சிரியா, லெபனான் ஆகிய நாடுகள் விடுதலை அடைந்தன.
- ☐ இத்தாலி ஒரு குடியரசு ஆயிற்று. அது தன் ஆப்பிரிக்கக் குடியேற்றங்களை இழந்தது.

## 13.10 தன்மதிப்பீட்டு வினாக்கள்

சுருக்கமான கேள்விப் பதில்கள்

1. கிழக்குப் பகுதியில் போர் பற்றி விளக்குக?
2. இரண்டாம் உலகப் போரின் விளைவுகள் பற்றி குறிப்பு வரைக?

விரிவான கேள்விப் பதில்கள்

1. இரண்டாம் உலகப் போரைப் பற்றிக் கட்டுரை வரைக?

## 13.11 மேலும் படிக்க

- C.J.H. Hayeset.(1916). History of Europe. New York: Macmillan Company
- C.D.M. Ketelbey. (1994). A History of Modern Times from 1789. Oxford: Oxford University Press
- V.D.Mahajan. (1975). History of Modern Europe Since 1789. New Delhi: S.Chand&Co(Pvt LTD)

# அலகு -14 ஐக்கிய நாடுகள் சபை

**கட்டமைப்பு**

14.0 அறிமுகம்

14.1 நோக்கங்கள்

14.2 ஐக்கியநாடுகள் சபையின் தோற்றம்

14.2.1 ஐ.நா. சபையின் நோக்கங்கள்

14.3 ஐக்கிய நாடுகள் அவை அமைப்பு முறை

14.3.1 பொதுச்சபை

14.3.2 பாதுகாப்பு சபை

14.3.3 பொருளாதார மற்றும் சமூக சபை

14.3.4 பொறுப்பாண்மைக்குழு

14.3.5 பன்னாட்டு நீதிமன்றம்

14.3.6 தலைமைச் செயலகம்

14.4 ஐக்கிய நாடுகள் அவையின் சாதனைகள்

14.5 ஐ.நா.சபையின் சிறப்பு நிறுவனங்கள்

14.5.1 பன்னாட்டுத் தொழிலாளர் கழகம்

14.5.2 உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம்

14.5.3 உலக சுகாதார நிறுவனம்

14.5.4 உலக வானிலை ஆராயச்சி நிறுவனம்

14.5.5 ஐ.நா. கல்வி அறிவியல் மற்றும் பண்பாட்டுக் கழகம்

14.5.6 ஐ.நா. சபையின் பன்னாட்டு குழந்தைகள் நெருக்கடி கால நிதியம்

14.5.7 பன்னாட்டு பொருளாதார நிதியம்

14.6 ஐ.நாவின் தோல்வி

14.7 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

14.8 சுருக்கவுரை

14.9 முக்கிய வார்த்தைகள்

14.10 தன்மதிப்பீட்டு வினாக்கள்

14.11 மேலும் படிக்க

## 14.0 அறிமுகம்

உலகில் அமைதியையும், பாதுகாப்பையும் நிலைநாட்ட உறுதிமொழி எடுத்திருக்கும் உலக நாடுகளின் மன்றமே ஐக்கிய நாடுகள் சபையாகும். அது உலக நாடுகளின் நம்பிக்கையும் மனசாட்சியும் ஆகும். ஐ.நா. சுதந்திர நாடுகளின் உலகப் பாராளுமன்றம் ஆகும். ஐ.நா. சபை 1945ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24ஆம் நாள் அதிகாரப் பூர்வமாகச் செயல்படத் தொடங்கியது. எனவே அக்டோபர் 24ஆம் நாள் ஐ.நாவிற்கான சாசனம் 50 நாடுகளால் கையொப்பமிடப்பட்டது. பின் போலந்தும் கையொப்பமிட ஐ.நாவின் பூர்வீக உறுப்பினர்களின் எண்ணிக்கை 51 ஆயிற்று. 2000 இல் ஐ.நாவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 180 ஆக உயர்ந்துள்ளது.

## 14.1 நோக்கங்கள்

இந்த அலகை படித்து முடித்த பின்பு உங்களால்

☐ ஐக்கிய நாட்டு அவை உருவாகியதற்கான சூழல்களை அறிய இயலும்

☐ ஐக்கிய நாட்டு அவையின் குறிக்கோள்களை விரிவாக அறிய இயலும்

☐ ஐக்கிய நாட்டு அவையின் சாதனைகளை அறிய இயலும்

☐ ஐக்கிய நாட்டு அவையின் பிற நிறுவன்ங்களைப் பற்றி அறிய இயலும்

## 14.2 ஐக்கியநாடுகள் சபையின் தோற்றம்

1941 ஆம் ஆண்டு ஆகஸ்டு 4 ஆம் நாள் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்ட்டும் பிரிட்டி' பிரதமர் சர்ச்சிலும் நியுபவுண்ட்லாந்து தீவுக்கு அருகே அட்லாண்டிக் கடலில் ஓர் அறிக்கையை வெளியிட்டனர். அதன் மூலம் ஐ.நா. சபையும் நிறுவும் நோக்கத்தை வெளியிட்டனர். 1942இல் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ஐக்கிய நாடுகள் மன்றம் என்னும் பெயரில் உலக மன்றத்தை உருவாக்க யோசனை தெரிவித்தார். எனவே உலக நாடுகள் கழகம், ஐக்கிய நாடுகள் சபை என்று பெயர் பெற்றது.

1943இல் அமெரிக்கா, ர்'யா, பிரிட்டன், சீனா ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மாஸ்கோவில் கூடி உலகில் அமைதியை நிலைநாட்டவும், பாதுகாப்பை ஏற்படுத்தவும் உலக நாடுகளின் சபையை நிறுவ முயற்சி எடுத்தனர். 1944இல் வாூிங்டனில் கூடிய அமெரிக்கா, ர்'யா, பிரிட்டன், சீனா ஆகிய 4 நாடுகளும் ஐ.நா. மன்றத்தின் அமைப்பை முடிவு செய்தன. அதற்கான கூட்டம் டமபர்டன் ஓக்ஸ் என்னும் மாளிகையில் நடைபெற்றது. 1945இல் யால்டா மாநாட்டிலும் (கிரிமியத் தீபகற்பம்) ஐ.நா. பற்றி சர்ச்சில், ரூஸ்வெல்ட், ஸ்டாலின் ஆகியோர் பேசினர். மீண்டும் 1945 ஏப்ரல், ஜுனில் சான்பிரான்சிஸ்கோவில் 50 நாடுகளின் கூட்டம் ஒன்று நடைபெற்றது. ஐ.நா. சாசனம் வரையப்பட்டது. 50 நாடுகள் கையொப்பமிட்டன. மாநாட்டில் பங்கேற்காத போலந்து பின் சாசனத்தில் கையொப்பமிட்டது. இவ்வாறு தொடக்ககால உறுப்பினர்களின் எண்ணிக்கை 51 ஆயிற்று. 1945 அக்டோபர் 24 முதல் ஐ.நா. மன்றம் செயல்படத் தொடங்கியது.

### 14.2.1 ஐ.நா. சபையின் நோக்கங்கள்

ஐ.நா.வின் நோக்கங்கள் பலவாகும். பன்னாட்டு அமைதியையும், பாதுகாப்பையும் பேணுதல் அதன் முக்கியமான நோக்கமாகும். உலக நாடுகளுக்கு இடையே நட்புறவுகளை வளர்த்தல், ஒற்றுமையை ஏற்படுத்துதல், பொருளாதார சமூகப் பண்புகளை வளர்த்தல், சச்சரவுகளைத் தீர்த்தல், நல்லுறவை ஏற்படுத்துதல், இராணுவ வலிமையைக் குறைத்தல், ஆக்கிரமிப்பைத் தடுத்தல் ஆகியன ஐ.நாவின் ஏனைய நோக்கங்களாகும். ஐ.நாவின் உறுப்பினர்கள் தமக்குள் ஏற்படும் பிரச்சனைகளை அமைதி வழியில் தீர்த்துக் கொள்ள வேண்டும். போரைத் தவிர்க்க வேண்டும். மனித உரிமைகளைக் காக்க வேண்டும். இவை ஐ.நா.வின் நோக்கங்களாகும். ஐ.நா.சாசனத்தின் 111ஆம் 'ரத்து ஐ.நா. மன்றத்தின் நோக்கங்கள், கொள்கைகள், அமைப்பு ஆகியவற்றைச் சுருக்கமாக விவரிக்கின்றது.

## 14.3 ஐக்கிய நாடுகள் அவை அமைப்பு முறை

பொதுச்சபை, பாதுகாப்பு அவை, பொருளாதார சமூக சபை, பொறுப்பாண்மைக் குழு, பன்னாட்டு நீதிமன்றம், தலைமைச் செயலகம் ஆகியன ஐ.நா.வின் முக்கியமான பிரிவுகளாகும்.

### 14.3.1 பொதுச்சபை

ஐ.நா.சபப்யின் உறுப்பு நாடுகள் அனைத்தும் பொதுச்சபையின் உறுப்பு நாடுகளே. பொதுச்சபை ஐ.நாவின் ஒரு முக்கியமான பிரிவு ஆகும். பொதுச்சபையின் உறுப்பினராக உள்ள ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு வாக்கு உண்டு. ஆனால் ஒவ்வொரு நாடும் பொதுச்சபைக்கு 5 சார்பாளர்களை அனுப்ப உரிமை உண்டு. பொதுச்சபை குறைந்தபட்சம் ஆண்டொன்றுக்கு ஒரு முறை கூடுகிறது. ஆனால் தலைமைச் செயலர் பாதுகாப்புச்

சபையின் வேண்டுகோளுக்கு ஏற்ப முக்கியமான அவரசமான விசயங்களை விவாதிக்கப் பொதுச்சபையின் சிறப்புக் கூட்டங்களைக் கூட்டலாம்.

பொதுச்சபை உலக நாடுகளின் பாராளுமன்றமாகக் (சட்டசபை) கருதப்படுகிறது. பொதுச்சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை தற்பொழுது 189 ஆகும். (2001 ஆம் ஆண்டு) பொதுச்சபை ஐ.நா.வின் ஏனைய உறுப்புகளின் பணிகளை மேற்பார்வையிடுகிறது. பாதுகாப்புச் சபையின் தற்காலிக உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் பொதுச்சபைக்கு உண்டு. அதுவே ஐ.நாவின் ஏனைய உறுப்புகளின் உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்கிறது. ஐ.நா.வின் சிறப்பு நிறுவனங்களின் (முகமைகள்) உறுப்பினர்களையும் பொதுச்சபையே தேர்ந்தெடுக்கிறது. ஐ.நா.வின் தலைமைச் செயலரைத் தேர்ந்தெடுப்பது பொதுச்சபையே. பன்னாட்டு நீதிமன்றங்களின் நீதிபதிகளை, பாதுகாப்புச் சபையுடன் சேர்ந்து பொதுச்சபை தேர்ந்தெடுக்கிறது. பொதுச்சபையின் தலைவரையும், துணைத் தலைவரையும் ஆண்டுதோறும் பொதுச்சபை தேர்ந்தெடுக்கிறது. சாதாரண விவகாரங்கள் பொதுவாக சாதாரணப் பெரும்பான்மையுடனும் முக்கியமான விவகாரங்கள் 3 இல் 2 பங்கு பெரும்பான்மையுடனும் பொதுச்சபையில் தீர்மானிக்கப்படுகின்றன.

### 14.3.2 பாதுகாப்பு சபை

ஐ.நா. சபையின் நிர்வாக உறுப்பாகப் பாதுகாப்பு சபை செயல்படுகிறது. இது ஐ.நா.வின மற்றோர் அதிகாரம் படைத்த முக்கியமான உறுப்பாகும். தொடக்கத்தில் இச்சபையில் 11 நாடுகள் உறுப்பு நாடுகளாக இருந்தன. தற்பொழுது இதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை 15 ஆகும். 5 நாடுகள் நிரந்தர உறுப்பினர்கள் அவை அமெரிக்கா, ர'யா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா ஆகியன. தற்காலிக உறுப்பினர்கள் எண்ணிக்கை 10. அவை இரண்டு ஆண்டுப் பதவிக்காலத்திற்குப் பொதுச்சபையால் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. ஓர் உறுப்பினருக்கு 1 வாக்கு உண்டு. நிரந்தர உறுப்பினர்கள் எந்தவொரு தீர்மானத்தையும் ரத்து செய்யும் அதிகாரத்தைப் பெற்றிருக்கின்றனர்.

ஒவ்வொரு தீர்மானத்தையும் 5 நிரந்தர உறுப்பினர்களும் அங்கீகரிக்க வேண்டும் என்பது கட்டாயம் ஆகும். உலகில் அமைதியை நிறுவுதல் பொதுக்குழுவின் முக்கியமான கடமையாகும். பொதுக்குழுவிலிருந்து ஓய்வு பெறும் உறுப்பினர்கள் மீண்டும் உடனடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் உரிமையைப் பெறவில்லை. பொதுக்குழுவின் தலைமைப் பொறுப்பை ஆங்கில எழுத்துக்களின் அகர வரிசைப்படி 1 மாத காலத்திற்கு உறுப்பு நாடுகள் ஏற்கின்றன. 1950ஆம் ஆண்டு தீர்மானத்தின்படி ரத்து அதிகாரம் காரணமாக பாதுகாப்பு சபையில் ஒரு முடிவு எடுக்க முடியாமல் போனால் (முக்கியமான விவகாரத்தின் மீது) பொதுச்சபையில் 3இல்2 பங்கு பெரும்பான்மையுடன் முடிவெடுக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.

பொதுச்சபை குறைந்தபட்சம் 14 நாட்களுக்கு ஒருமுறை கூடவேண்டி உள்ளது.

### 14.3.3 பொருளாதார மற்றும் சமூக சபை

இதில் 18 நாடுகளும் 54 உறுப்பினர்களும் உள்ளனர். இக்குழு பொதுச்சபையால் 3 ஆண்டுப் பதவி காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுகிறது. ஒவ்வொர் ஆண்டும் 3இல் 1 பங்கு உறுப்பினர் ஓய்வு பெறுவர். இந்தச்சபை ஆண்டுக்கு இருமுறை கூடுகிறது. உலகை எதிர்கொள்ளும் பொருளாதார சமூகப் பிரச்சனைகளுக்கு இது தீர்வு காண்கிறது. இது பல சிறப்பு முகமைகள் மூலம செயல்படுகிறது. அந்த சிறப்பு நிறுவனங்களுள் சில - பன்னாட்டு தொழிலாளர் நிறுவனம், ஐ.நா. கல்வி அறிவியல் மற்றும் பண்பாட்டுக் கழகம், அனைத்து நாட்டுக் குழுந்தைகள், நெருக்கடி கால நிதி நிறுவனம், உணவு மற்றும் வேளாண்மைக் கழகம், உலக சுகாதார நிறுவனம், பன்னாட்டுப் பொருளாதார நிதியம் ஆகியன. பொருளாதாரம் மற்றும் சமூகக்குழு, போக்குவரத்து தகவல் தொடர்பு, மக்கள் தொகைக் கட்டுப்பாடு, குழந்தை நலன், பெண்கள் மேம்பாடு, மனித உரிமைகள், வேலை வாய்ப்பு, கல்வி வளர்ச்சி, சமூக சமத்துவம் ஆகிய துறைகளில் பயனுள்ள வகையில் பணியாற்றி வருகிறது. திறமையாகச் செயல்படும் நோக்கில் இக்குழு 5 பிராந்தியக் குழுக்களைப் பெற்றுள்ளது. அவை ஐரோப்பா, ஆசியா, அமெரிக்கா, ஆப்பிரிக்கா, மேற்கு ஆசியா ஆகிய பகுதிகளுக்கான பிராந்தியக் குழுக்களாகும்.

### 14.3.4 பொறுப்பாண்மைக்குழு (தர்மகர்த்தா சபை)

இது சுய ஆட்சி இல்லாத ஐ.நா.வின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டுள்ள நாடுகளின் காவலனாகச் செயல்படுகிறது. இந்த அமைப்பு சுய ஆட்சி பெறாத பிராந்தியங்களின் வளர்ச்சிக்காக உருவாக்கப்பட்டது ஆகும். ஐநா. மன்றத்தின் அறக்கட்டளையின் கீழ் வைக்கப்பட்ட பிராந்தியங்களின் அரசியல், பொருளாதார சமூக வளர்ச்சிகளை மேம்படுத்தி அப்பிராந்தியங்களுக்குச் சுய ஆட்சி பெறப் பாடுபடுவது தர்மகர்த்தா சபையின் நோக்கமாகும். குழுவின் உறுப்பினர்கள் குழுவிடம் ஆண்டறிக்கைகளைச் சமர்ப்பிப்பது கட்டாயமாகும். குழு தேவையென்று உணர்ந்தால் அறக்கட்டளை பிராந்தியங்களைப் பார்வையிட அதன் சார்பாளர்களை அனுப்பலாம். பாதுகாப்பு சபையின் 5 நிரந்தர உறுப்பு நாடுகளும் குடியேற்றங்களை கொண்டுள்ள நாடுகளும் இவ்விரண்டிற்கும் சமமான அளவில் ஏனைய நாடகளும் பொறுப்பாண்மைக்குழுவின் உறுப்பு நாடுகளாகும்.

### 14.3.5 பன்னாட்டு நீதிமன்றம்

1922இல் ஹாலந்து நாட்டின் (தி நெதர்லாந்து) தி ஹேக் நகரில் பன்னாட்டு கழகத்தின் ஒரு சிறப்பு நிறுவனமாக நிறுவப்பட்டது. ஐ.நா.சபை

நிறுவப்பட்ட பின் அதன் முக்கிய அமைப்பாக செயல்படுகிறது. இதில் 15 நீதிபதிகள் உள்ளனர். அவர்கள் பொதுச்சபையாலும் பாதுகாப்பு சபையாலும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இதற்கு தனியான அரசியல் சட்டம் உண்டு. இது சுதந்திரமாக செயல்படுகிறது. ஐ.நா.வின் உறுப்பினர்கள் உலக நீதிமன்றத்தின் சட்டத்திற்கு கட்டுப்பட்டவர்கள். நீதிபதிகளின் பதவிக்காலம் 9 ஆண்டுகள். உறுப்பு நாடுகளைச் சார்ந்த சட்ட நிபுணர்கள் உலக நீதிமன்றத்தின் நீதிபதிகளாக தேர்ந்தெடுக்ப்படுகின்றனர். ஐ.நா. உறுப்பு நாடுகளுக்கிடையே ஏற்படும் வழக்குகளை உலக நீதிமன்றம் தீர்த்து வைக்கிறது. நீதிமன்றத்திற்கு ஆலோசனைக் கூறும் அதிகாரம் உண்டு.

### 14.3.6 தலைமைச் செயலகம்

இது ஐ.நா.சபையின் நிர்வாக அலுவலகமாக செயல்படுகிறது. இதன் தலைமை யிடம் அமெரிக்காவின் நியுயார்க் நகரமாகும். செயலகத்தின் தலைவருக்குத் தலைமைச் செயலர் என்று பெயர். தலைமைச் செயலர் பாதுகாப்புச் சபையின் பரிந்துரையின் பெயரில் பொதுச்சபையால் 5 ஆண்டு பதவிக் காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். இவர் ஐ.நா.வின் அன்றாடப் பணிகளை மேற்பார்வை செய்கின்றார். செயலகத்தின் ஒரு பிரிவு ஜெனிவாவில் செயல்படுகிறது. டிரிகிவ்லி என்பார் ஐ.நாவின் முதல் பொதுச்செயலராகப் பணியாற்றினார். (1948 - 53) அவரை அடுத்து டேக் ஹம்மர் ஜோல்ட் (1953-63) யூதாண்ட் (1961-71), கர்ட் வால்ட் ஹீம் (1971-81), கொய்ல்ல்ர் (1981-91), பூ..பூ.காலி (1991-96) ஆகியோர் அப்பதவியல் இருந்தனர். 01.01.1997 முதல் கானா நாட்டைச் சார்ந்த கோஅபி அன்னன் ஐ.நாவின் பொதுச்செயலராகப் பணியாற்றி வருகிறார். தலைமை செயலகத்தில் பொதுச் செயலரும் , பொதுச்சபையின் விதிமுறைக்குட்பட்டு தேர்வு செய்யப்பட்ட பன்னாட்டு அலவலர்களும் பணியாற்றி வருகின்றனர்.

## 14.4 ஐக்கிய நாடுகள் அவையின் சாதனைகள்

☐ ஐ.நா. மன்றம் பல சாதனைகளைப் புரிந்துள்ளது. அவை பெரும் பாராடடிற்குரியவை. இந்தோ-சீனா, இந்தோனேசியா, ஜெர்மனி, மத்திய கிழக்கு பகுதிகள் ஆகிய இடங்களில் நடைபெற்ற போர்களை அது திறமையுடன் முடிவுக்கு கொண்டு வந்தது.

☐ இந்தோனேசியாவில் டச்சுக்காரர்கள் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையை ஐ.நா. தடுத்து நிறுத்தியது. 1949-இல் இந்தோனேசியா நெதர்லாந்திடமிருந்து விடுதலை பெற்றது.

☐ யூதர்களுக்கும் (இஸ்ரேல்) அரேபியர்களுக்கும் நடைபெற்ற போரைத் தடுத்து நிறுத்த, பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டது.

☐ 1946-இல் ஐ.நா. சிரியா, லெபனான் ஆகிய நாடுகள் விடுதலை பெற உதவியது.

☐ 1967 மற்றும் 1973 ஆகிய ஆண்டுகளில் அரேபிய நாடுகளுக்கும் இஸ்ரேலுக்குமிடையே நடைபெற்ற் போர்களை நிறுத்தவதில் ஐ.நா. பெரும் வெற்றி கண்டது. 1950 இல் வடகொரியாவிற்கும், தென் கொரியாவிற்கும் இடையே போர் ஏற்பட்ட பொழுது, தென் கொரியாவிற்கு ஆதரவாக ஐ.நா. தன் படைகளை அனுப்பியது.

☐ கா'மீர் மீது பாகிஸ்தான் படையெடுத்த பொழுது ஐ.நா., இந்தியா, பாகிஸ்தான் ஆகிய 2 நாடுகளிடமும் பேசி போரை முடித்து வைத்தது.

☐ பால்கன் பகுதியில் போர் நிகழாமல் தடுப்பதில் வெற்றி கண்டது

☐ அல்பேனியா, பல்கேரியா, யுகோஸ்லாவியா ஆகிய நாடுகளுக்கும் கிரீஸ்க்கும் இடையே ஏற்பட்ட பிரச்சனையைத் தீர்த்து வைத்தது. கிரீஸின் எல்லையை நிர்ணயித்து அதன் ஒருமைப்பாட்டை நிலைநிறுத்தியது.

☐ சூயஸ் கால்வாய் பகுதியலிருந்த பிரிட்டி' இராணுவத்தை வெளியேற்றுவதில் ஐ.நா. வெற்றி பெற்றது.

☐ காங்கோவில் அமைதியை நிலைநாட்ட அமைதிப் படையை அனுப்பி வைத்தது. சைப்ரசில் கிரேக்கர்களும் துருக்கியர்களும் சண்டையில் ஈடுபட்ட பொழுது ஐ.நா.தலையிட்டு அமைதியை நிலைநாட்டியது.

☐ 1946இல் ர'யாவிற்கும், ஈரானிற்கும் இடையேயான பிரச்சனையைத் தீர்த்து வைத்தது.

☐ தென் ஆப்ரிக்காவில் நிலவிய அரசாங்கத்தின் இனவெறிக்கொள்கையை ஐ.நா.வின் பொதுச் சபைக்கு இந்தியா கொண்டு சென்றது. ஐ.நா. தென் ஆப்பிரிக்காவிற்கு எதிராக, பொருளாதாரத் தடை செய்ய பரிந்துரைத்தது.

☐ கார்கில் விவகாரத்தில் இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் இடையே நிலவிய பிணக்கைத் தீர்க்க ஐ.நா. முயற்சி மேற்கொண்டது. இவ்வாறாக ஐ.நா. உலக நாடுகள் மத்தியில நிலவிய பிணக்குகளைத் தீர்த்து அமைதியை நிலைநாட்ட பல நடவடிக்கைகளை மேற்கொண்டு பெருமளவில் வெற்றி பெற்றது.

மேலும் சமூக பொருளாதாரத் துறைகளில் ஐ.நா.வின் பணி போற்றுதற்குரியது ஆகும் ஐ.நா. ஐரோப்பா, தென் அமெரிக்கா, ஆசியா மற்றும் ஆப்பிரிக்கா பகுதிகளில் பொருளாதாரப் பிரச்சனைகள் ஆராயத் தனித்தனிப் பொருளாதாரக் குழுக்களை நிறுவி உள்ளது. வளர்ந்து வரும் நாடுகளின் விவசாயம் வர்த்தகம் ஆகிய துறைகளின் வளர்ச்சிக்கு ஐ.நா.

பெருமளவில் உதவியது. ஐ.நா. அதன் சிறப்பு முகாமைகள் மூலம் பொருளாதார சமூகத் துறைகளில் சிறப்பாகப் பணியாற்றி உள்ளது. உதாரணமாகப் பன்னாட்டுத் தொழிலாளர் கழகம் அதன் உறுப்பு நாடுகளின் நிலை உயரப் பணியாற்றி உள்ளது. அதுபோலவே உணவு மற்றும் வேளாண்மைக்கழகம் பல நாடுகளுக்கு அவற்றின் உணவுப்பொருட்களின் உற்பத்தியைப் பெருக்கப் பெருமளவில் உதவி உள்ளது.

உலகப் பொருளாதார நிதியமும், உலக வங்கியும் உறுப்பு நாடுகளின் பொருளாதார நிலை மேம்பட நிதி உதவி அளித்து வருகின்றன. உலகச் சுகாதார நிறுவனம் சமூக மேம்பாட்டிற்குப் பெரும் பணி ஆற்றியுள்ளது. காசநோய், வாந்திபேதி, பால்வினை நோய் போன்ற ஆட்கொல்லி நோய்களை எதிர்ததுப் போராட உலக நாடுகளுக்கு உதவி வருகின்றது. ஐ.நா.வின் கல்வி, அறிவியல், பண்பாட்டுக் கழகம் கல்வியை மேம்படுத்தவும், வெள்ளம், வறட்சி, நில நடுக்கம் போன்ற இயற்கைச் சீற்றங்களை எதிர்கொள்ளவும் உலக நாடுகளுக்கு உதவி வருகிறது. தொழிற் கல்வி வளர்ச்சியால் ஐ.நா. போற்றுதற்குரிய பெரும்பணி ஆற்றிவருகிறது. மேலும், வளர்ந்துவரும் நாடுகளின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு ஐ.நா. உதவி அளித்து வருகிறது. வளர்ந்து வரும் நாடுகளில் வாழ்க்கைத் தரம் உயர ஐ.நா.வின் பணி போற்றுதற்குரியது ஆகும்.

## 14.5 ஐ.நா.சபையின் சிறப்பு நிறுவனங்கள்

ஐ.நா.சாசனம் பல சிறப்பு நிறுவனங்களுக்கு ஏற்பாடு செய்துள்ளது. உறுப்பு நாடுகள் சேர்ந்து புதிய சிறப்பு நிறுவனங்களை உருவாக்கவும் அது ஏற்பாடு செய்தது. சிறப்பு நிறுவனங்கள் ஐ.நா. சபையுடன் இணைந்தவை வளரும் நாடுகளின் வளர்ச்சிக்காகப் பாடுபட 18 சுதந்திரமான சிறப்பு நிறுவனங்களும் 14 பெரிய திட்டங்கள் மற்றம் நிதியங்களும் தற்பொழுது உள்ளன.

### 14.5.1 பன்னாட்டுத் தொழிலாளர் கழகம்

1919இல் பன்னாட்டுக் கழகத்தின் ஓர் அமைப்பாக நிறுவப்பட்ட இந்த அமைப்பு ஐ.நாவின் ஓர் அமைப்பாகச் செயல்பட்டு வருகிறது. அது நிறுவப்பட்ட காலம் தொட்டு உலகத் தொழிலாளர் நலனுக்காகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. 300க்கும் மேற்பட்ட கூட்டங்களை நடத்தியிருக்கிறது. இதன் தலைமையிடம் சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனிவா ஆகும். தற்பொழுது இதில் 150 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். 1969இல் பன்னாட்டு தொழிலாளர் கழகம் நோபல் பரிசு பெற்றது.

### 14.5.2 உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம்

இந்த அமைப்பு சிறப்பான ஒன்றாகும். இது அமெரிக்காவில் தோற்றுவிக்கப்பட்டது. இதன் உறுப்பினர்கள் அனைவரும் ஐ.நா.வின்

உறுப்பினர்கள் அல்லர். இந்த அமைப்பு ஐ.நா.வுடன் இணைந்து செயல்படுகிறது. இதன் முக்கியமான பிரச்சனை உலகில் பட்டினியைப் போக்குவது ஆகும். 1945-இல் ரோம் நகரை இந்நிறுவனம் தலைமை இடமாகக் கொண்டது. உலக நாடுகின்ன உணவு உற்பத்தியைப் பெருக்க உதவுவதும், உணவு உற்பத்தியைப் பாதிக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதும் இதன் முக்கிய நோக்கங்களாகும்.

### 14.5.3 உலக சுகாதார நிறுவனம்

1948இல் இந்நிறுவனம் சுவிட்சர்லாந்து ஜெனிவா நகரில் அமைக்கப்பட்டது. 1946ஆம் ஆண்டிலேயே நியூயார்க் நகரில் கூடிய 61 நாடுகள் உலக சுகாதார நிறுவனத்தை உருவாக்கத் தீர்மானித்தன. இதன் முக்கிய நோக்கம் உலக மக்களின் உடல் நலனைக் காப்பது ஆகும். எகிப்து நாட்டில் பரவிய வாந்தி பேதி (காலரா) நோயை எதிர்த்து இந்த அமைப்பு ஆற்றிய பணி போற்றுதற்குரியது ஆகும். மலேரியா போன்ற நோய்களை முழுவதும் அழிக்க இது உலக அளவில் பெருமளவில் போராடியது. 1959-60இல் மொராக்கோவில் பக்கவாத நோய் சிகிச்சையில் இக்கழகத்தின் பணி மிகவும் சிறப்பாக இருந்தது. 1960இல் அகாடிர் பகுதியில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு இவ்வமைப்பு உதவிக்கரம் நீட்டியது. தற்பொழுது எய்ட்ஸ் என்னும் கொடிய ஆட்கொல்லி நோயை எதிர்த்து உலக சுகாதார நிறுவனம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

### 14.5.4 உலக வானிலை ஆராயச்சி நிறுவனம்

இந்த நிறுவனம் 1959இல் அமைக்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கம் கடல்பயணத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதே ஆகும். மேலும் காலநிலையை அறிந்து வெளியிடுவது இதன் மற்றொரு முக்கிய நோக்கமாகும்.

### 14.5.5 ஐ.நா. கல்வி அறிவியல் மற்றும் பண்பாட்டுக் கழகம்

1944ஆம் ஆண்டு இலண்டன் நேசநாடுகளின் மாநாட்டில் இருந்து இந்த அமைப்பு தோன்றியது. 1945 இல் இதன் நெறிமுறைகள் உருவாக்கப்பட்டன. இந்த அமைப்பிற்கு வேண்டிய நிதியை இதன் உறுப்பு நாடுகள் நேரிடையாகச் செலுத்துகின்றன. இந்த அமைப்பு 2 ஆண்டுக்கு ஒருமுறை கூடுகிறது. உலக ஒற்றுமையை மேம்படுத்துவதில் இதன் சாதனை பாராட்டுதற்குரியது இது பாரிசைத் தலைமை இடமாகக் கொண்டு திகழ்கிறது. உலக நாடுகளின் மக்களின் கல்வி வளர்ச்சிக்கு இவ்வமைப்பு பெரும் பணியாற்றியுள்ளது. கல்லாமையை இல்லாமை ஆக்கப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. உலகின் பல்வேறு பகுதிகளில் இவ்வமைப்பு கல்வி, அறவியல், பண்பாடு, மற்றும் தகவல் தொடர்பு மையங்களை நிறுவி உள்ளது.

### 14.5.6 ஐ.நா. சபையின் பன்னாட்டு குழந்தைகள் நெருக்கடி கால நிதியம்

இந்த அமைப்பு 1946 இல் நிறுவப்பட்டது. இதன் தலைமை அலுவலகம் நியூயார்க் நகரில் உள்ளது. இதன் முக்கிய நோக்கம் போருக்கு பிந்திய காலத்தில் குழந்தைகளுக்கு நிவாரணம் அளிப்பதாக இருந்தது. தற்பொழுது வளர்ந்து வரும் நாடுகளில் குழந்தைகளுக்கும், தாய்மார்களுக்கும் தரமான வாழ்க்கையை அளிக்கும் நோக்கில் இந்த அமைப்பு செயல்பட்டு வருகிறது. 1959இல் ஐ.நா. பொதுச்சபையில் குழந்தைகள் தொடர்பாக இந்த அமைப்பு சமர்ப்பித்த அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்த அறிக்கை உலகின் அனைத்துக் குழந்தைகளுக்கும் தன்னால் இயன்ற அளவு நன்மைகளைச் செய்வது சமுதாயத்தின் கடமை என்று கூறுகிறது. தூய குடிநீர், உடல்நலக்கல்வி, உடல் நலன் பற்றிய கவனம், மக்கள் நலன் தொடர்பாக இந்த அமைப்பு பல அரும்பணிகளைச் செய்துள்ளது. ஆண்டுதோறும் சுமார் 30 லட்சம் குழந்தைகளை இந்த அமைப்பு காப்பாற்றுகிறது என்று சொல்லப்படுகிறது. அங்கோலா, பங்களாதே`, எத்தியோப்பியா, லெபனான், ருவாண்டா மற்றும் வேறு சில நாடுகளிலும் இந்த அமைப்பு ஆற்றிய பணி பெரும் பாராட்டிற்கு உரியது ஆகும்.

### 14.5.7 பன்னாட்டு பொருளாதார நிதியம்

1945இல் நிறுவப்பட்ட இந்த அமைப்பு வாஷிங்டனைத் தலைமையகமாகக் கொண்டு 1947 முதல் செயல்படத் தொடங்கியது. இந்த அமைப்பு பல நாடுகளுக்கு நிதி உதவி அளித்து வருகிறது.

## 14.6 ஐ.நாவின் தோல்வி

உலகின் பல்வேறு நாடுகளுக்கு இடையே நிலவிய பிரச்சனையைத் தீர்த்து ஐ.நா. பெரும் சாதனையை நிலைநாட்டியுள்ள உண்மை ஒரு புறம் இருக்க, கூட்டுப்பாதுகாப்பு பிரச்சனையை தீர்ப்பதில் ஐ.நா. தோல்வியடைந்துள்ளது என்ற குற்றமும் சாட்டப்படுகிறது. மேலும் ஆயுதக் குறைப்பு முயற்சியில் தோல்வி அடைந்துள்ளது. ஐ.நா.வின் உறுப்பு நாடுகள் சுயநலத்துடன் செயல்படுவது. அதன் தோல்விக்கு ஒரு காரணம் ஆகும். ஐ.நா.வின் தோல்விக்கு மற்றொரு காரணம், உலக நாடுகளுக்கு இடையே நிலவும் ஆயுதப்போட்டி ஆகும். ஐ.நாவிடம் ஆக்கிரமிப்பு நாடுகளுக்கு எதிராக பயன்படுத்த போதிய பெரிய வலுவான படை இல்லை. அதன் நிதிநிலையும் சிறப்பாக இல்லை.

பல நாடுகள் ஐ.நாவுக்கு செலுத்த வேண்டிய உறுப்பினர் சந்தாவைச் செலுத்தவில்லை என்று சொல்லப்படுகிறது. ஐ.நா. சிறப்பாக செயல்பட வேண்டுமென்றால் அதற்கு வளமான பொருளாதார ஆதாரம் தேவை. பல நாடுகள் 5 பெரும் நாடுகளிடம் உள்ள ரத்து அதிகாரத்தை விரும்பவில்லை. அது நியாயமற்ற ஓரளவிற்குப் பன்னாட்டு சட்டத்திற்கு எதிரான ஒன்றாகவே

தோன்றுகிறது. இந்தக் குறைபாடுகள் இருப்பினும் ஐ.நா.வின் சாதனைகளைக் குறைத்து மதிப்பிடல் ஆகாது. உறுப்பு நாடுகள் உலக அமைதியை நிலைநாட்டக் கொள்ளும் ஆர்வமும், போரைத் தவிர்க்க அவை மேற்கொள்ளும் முயற்சியும் நிச்சயமாக ஐ.நா. நிறுவனர்களின் கனவை நனவாக்கும்.

உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்

1.பன்னாட்டுக் கழக தலைமைச் செயலகம் எங்கு உள்ளது?

2. தர்மகர்த்தா சபை என்றால் என்ன?

## 14.7 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

ஐ.நா.சபையின் நிர்வாக அலுவலகமாக தலைமைச் செயலகம் செயல்படுகிறது. இதன் தலைமை யிடம் அமெரிக்காவின் நியுயார்க் நகரமாகும்.

சுய ஆட்சி இல்லாத ஐ.நா.வின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டுள்ள நாடுகளின் காவலனாகச் செயல்படுகிறது. இந்த அமைப்பு சுய ஆட்சி பெறாத பிராந்தியங்களின் வளர்ச்சிக்காக உருவாக்கப்பட்டது ஆகும். ஐநா. மன்றத்தின் அறக்கட்டளையின் கீழ் வைக்கப்பட்ட பிராந்தியங்களின் அரசியல், பொருளாதார சமூக வளர்ச்சிகளை மேம்படுத்தி அப்பிராந்தியங்களுக்குச் சுய ஆட்சி பெறப் பாடுபடுவது தர்மகர்த்தா சபையின் நோக்கமாகும்.

## 14.8 சுருக்கவுரை

வளர்ந்து வரும் நாடுகளின் விவசாயம் வர்த்தகம் ஆகிய துறைகளின் வளர்ச்சிக்கு ஐ.நா. பெருமளவில் உதவியது. ஐ.நா. அதன் சிறப்பு முகாமைகள் மூலம் பொருளாதார சமூகத் துறைகளில் சிறப்பாகப் பணியாற்றி உள்ளது.

பன்னாட்டுத் தொழிலாளர் கழகம் அதன் உறுப்பு நாடுகளின் நிலை உயரப் பணியாற்றி உள்ளது. அதுபோலவே உணவு மற்றும் வேளாண்மைக்கழகம் பல நாடுகளுக்கு அவற்றின் உணவுப்பொருட்களின் உற்பத்தியைப் பெருக்கப் பெருமளவில் உதவி உள்ளது.

உலகப் பொருளாதார நிதியமும், உலக வங்கியும் உறுப்பு நாடுகளின் பொருளாதார நிலை மேம்பட நிதி உதவி அளித்து வருகின்றன. உலகச் சுகாதார நிறுவனம் சமூக மேம்பாட்டிற்குப் பெரும் பணி ஆற்றியுள்ளது.

தொழிற் கல்வி வளர்ச்சியால் ஐ.நா. போற்றுதற்குரிய பெரும்பணி ஆற்றிவருகிறது. மேலும், வளர்ந்துவரும் நாடுகளின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு ஐ.நா. உதவி அளித்து வருகிறது.

## 14.9 முக்கிய வார்த்தைகள்

- ☐ பொதுச்சபை
- ☐ பாதுகாப்பு சபை
- ☐ பொருளாதார மற்றும் சமூக சபை
- ☐ பொறுப்பாண்மைக்குழு
- ☐ பன்னாட்டு நீதிமன்றம்
- ☐ தலைமைச் செயலகம்
- ☐ ஐக்கிய நாடுகள் அவையின் சாதனைகள்
- ☐ ஐ.நா.சபையின் சிறப்பு நிறுவனங்கள்
- ☐ பன்னாட்டுத் தொழிலாளர் கழகம்
- ☐ உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம்
- ☐ உலக சுகாதார நிறுவனம்
- ☐ உலக வானிலை ஆராயச்சி நிறுவனம்
- ☐ ஐ.நா. கல்வி அறிவியல் மற்றும் பண்பாட்டுக் கழகம்
- ☐ ஐ.நா. சபையின் பன்னாட்டு குழந்தைகள் நெருக்கடி கால நிதியம்
- ☐ பன்னாட்டு பொருளாதார நிதியம்

## 14.10 தன்மதிப்பீட்டு வினாக்கள்

சுருக்கமான கேள்விப் பதில்கள்

7. பன்னாட்டுக் கழக நிறுவனம் பற்றி விளக்குக?

8. பன்னாட்டுத் தொழிலாளர் கழகம் பற்றி குறிப்பு வரைக?

விரிவான கேள்விப் பதில்கள்

11. பன்னாட்டுக் கழகத்தின் சாதனைகளைக் பற்றிக் கட்டுரை வரைக?

12. பன்னாட்டுக் கழகத்தின் தோல்விக்கான காரணங்களைப் பற்றிக் குறிப்பிடுக?

## 14.11 மேலும் படிக்க

• C.J.H. Hayeset.(1916). History of Europe. New York: Macmillan Company

• C.D.M. Ketelbey. (1994). A History of Modern Times from 1789. Oxford: Oxford University Press

• V.D.Mahajan. (1975). History of Modern Europe Since 1789. New Delhi: S.Chand&Co(Pvt LTD)